❖ இளைஞர்கள் மற்றும் வயதான வாக்காளர்களின் அரசியல் விருப்பங்கள் மாறுபடுகின்றன. இளைஞர்கள் தேர்தலில் வாக்களிக்கவில்லை என்றால் அவர்களின் தனிப்பட்ட விருப்பங்கள், கொள்கையை உருவாக்குபவர்களால் புறந்தள்ளப்படுகிறது.

**நோட்டா என்றால் என்ன?**

**மேற்கண்டவர்களுள் எவருமில்லை**

தேர்தலில் போட்டியிடும் அனைத்து வேட்பாளர்களையும் நிராகரிக்கும் வாக்களரின் உரிமை.

நமது அரசியல் முறைமையைத் தூய்மைப்படுத்தும் நோக்கில் உச்சநீதிமன்றம் கூறியது என்னவெனில் தேர்தலில் போட்டியிடும் அனைத்து வேட்பாளர்களையும் நிராகரிக்கும் உரிமை வாக்காளர்களுக்கு உள்ளது என்பதாகும். இதனால்

### செயல்பாடு


தேர்தலின் போது இளைஞர்கள் தேர்தல் நடத்தும் அலுவலரால் (RO) எந்தெந்த வழிகளில் பயன்படுத்தப்படலாம் என்பதனை விவாதிக்கவும்

உச்சநீதிமன்றம் தேர்தல் ஆணையத்திற்கு வழிகாட்டும் வகையில் மின்னணு வாக்குப்பதிவு எந்திரங்களில் 'மேற்கண்ட எவருமில்லை' (NOTA) எனும் வாய்ப்பினை வாக்காளர்களுக்குவழங்கும்படி உத்தரவிட்டது.



### செயல்பாடு

**கேலிச்சித்திரத்தின் விளக்கம்**




**நன்றி: தி இந்து நாளிதழ் 28,9,2013**

இச்சூழலை அடையாளம் காண்க. இக்கேலிச்சித்திரம் எதைப்பற்றியது என உங்களால் விளக்க முடியுமா?

'நோட்டா' அறிமுகப்படுத்தப்படுவதற்கு முன்புவரை எதிர்மறை வாக்கினை செலுத்த விரும்பும் வாக்காளர்களுக்கு தனி வாக்குச் சீட்டு தரப்படுவதுடன் ஓர் பதிவேட்டில் அவர்களின் பெயரும் பதிவு செய்யப்படும்.

தேர்தல் நடத்தை விதிமுறைகள் 1961 –ன் பிரிவு 49(0) கூறுவது என்னவெனில் ஓர் வாக்காளர் தனது வாக்காளர் வரிசை எண்ணை 17A படிவத்தில் பதிவு செய்த பின்னர் எதிர்மறை வாக்கினைச் செலுத்தலாம்.

**உங்களுக்குத் தெரியுமா?**

'நோட்டாவைப்' போன்று முன்னரே வேறொரு அம்சம் இருந்ததை நீங்கள் அறிவீர்களா? அது 'எதிர்மறை வாக்களித்தல்' (Negative Voting) என அழைக்கப்படுகிறது.

**உங்களுக்குத் தெரியுமா?**

மின்னணு வாக்குப்பதிவு எந்திரத்தில் தரப்பட்டுள்ள வேட்பாளர்கள் பட்டியலின் இறுதியில் நோட்டா வாய்ப்பு தரப்பட்டள்ளது.



11th Std Political Science Tamil Medium Vol-2_Chapter 11_22-09-18.indd 107
29-09-2018 12:41:52

உங்களுக்குத் தெரியுமா?

மேற்கண்டவர்களுள் எவருமில்லை (None of the above-NOTA)-தேர்தலில் போட்டியிடும் அனைத்து வேட்பாளர்களையும் நிராகரிக்கும் வாக்களரின் உரிமை.

உங்களுக்குத் தெரியுமா?

நோட்டாவை அனுமதிக்கும் நாடுகளை அறிவீர்களா?

கொலம்பியா, உக்ரைன், பிரேசில், வங்கதேசம், பின்லாந்து, ஸ்பெயின், ஸ்வீடன், சிலி, பிரான்ஸ், பெல்ஜியம் மற்றும் கிரீஸ் ஆகிய நாடுகள் நோட்டாவைப் பின்பற்றின. சில சமயங்களில் அமெரிக்காவும் இதனை அனுமதித்தது. 1975-ம் ஆண்டு முதல் டெக்சாஸ் மாகாணம் இந்த அம்சங்களைப் பின்பற்றி வருகிறது.



## அருஞ்சொற்பொருள்

**தேர்தல் :** ஓர் அரசாங்க பதவி அல்லது நிலைக்காக முறையாகவும், அமைப்பு ரீதியிலும் ஓர் நபரை வாக்களிப்பதன் மூலம் தேர்ந்தெடுத்தல்.

**பிரதிநிதித்துவம் :** மற்றொருவரின் சார்பாக செயல்படுதல் அல்லது பேசுதல்.

**வாக்குரிமை :** பொதுத் தேர்தலில் வாக்களிக்கும் உரிமை.

**வாக்களித்தல் :** வாக்களிக்கச் செல்வதுடன் வாக்குச்சீட்டில் ஒருவரைக் குறிப்பாக தேர்ந்தெடுக்க குறியிடுதல்.

**தேர்தல் முறைமை:** இது வாக்குகளை பிரிதிநிதிகளாக மாற்றும் முறையாகும்.

**தேர்தலியல் :** இது தேர்தல்கள் மற்றும் வாக்குப்பதிவின் போக்கினை பற்றி புள்ளி விபர அடிப்படையில் கற்பதாகும்.

**பன்மைத்துவம்:** ஓர் வேட்பாளர் பிறரை விட வாக்குகளை அதிகமாகப் பெற்றிருந்து அறுதிப் பெரும்பான்மையை பெறாததாகும்.

**பஞ்சாயத்து:** இந்தியாவிலுள்ள ஊராட்சிக் குழுவாகும்.

**சிறுபான்மையினர் பிரதிநிதித்துவம்:** சிறுபான்மை சமுகங்களை சார்ந்த தேர்ந்தெடுப்பதன் மூலம் அவர்களுக்கு பிரநிதித்துவம் தருதல்.

**பிரிவினைவாதம் :** ஓர் பெரிய குழுவினுள் உள்ள இரண்டு அல்லது அதற்கும் மேலான சிறிய குழுக்களுக்கிடையே ஏற்படும் விவாதங்கள் மற்றும் சச்சரவுகள்.

**மக்களாட்சி:** ஒட்டுமொத்த மக்களாலும், குறிப்பாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளால் நடைபெறும் அரசாங்க முறையாகும்.

**எல்லை வகுத்தல்:** சட்டமியற்றும் அமைப்பினைக் கொண்ட ஓர் நாடு அல்லது மாகாணத்தில் உள்ள நில அடிப்படையான தொகுதிகளின் வரையறைகள் அல்லது நிர்ணயம் செய்யும் செயல் அல்லது நடைமுறை.

**வாக்காளர் பட்டியல்:** தேர்தலில் வாக்களிக்கத் தகுதியுள்ளவர்களின் பட்டியல்.

**நியமனம் :** ஓர் பதவிக்கு யாரையேனும் அதிகாரப்பூர்வமாகப் பரிந்துரைத்தல்.

**தேர்தல் பரப்புரை :** இக்காலகட்டத்தில் ஓர் அரசியல்வாதியோ அல்லது கட்சியோ மக்களைத் தங்களுக்கு வாக்களிக்குமாறு இணங்க வைத்தல்.

**கட்சித்தாவல் தடைச் சட்டம் :** இச்சட்டம் 1985-ம் ஆண்டு நிறைவேற்றப்பட்டது. இச்சட்டத்தின் மூலமாக மற்றொரு கட்சிக்குத் தாவும் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் தகுதியிழப்பு செய்யப்படுகின்றனர்.

**தொகுதி:** ஓர் குறிப்பிட்ட பகுதியிலுள்ள வாக்காளர்கள் சட்டமியற்றும் அமைப்பிற்கான தங்களின் பிரதிநிதியைத் தேர்ந்தெடுத்தல்.

**வாக்குப்பதிவு :** ஓர் தேர்தலில் வாக்களித்த தகுதிவாய்ந்த வாக்களர்களின் சதவீதம்



11th Std Political Science Tamil Medium Vol-2_Chapter 11_22-09-18.indd 108 29-09-2018 12:41:52

## மதிப்பிடுதல்

**I சரியான பதிலை தேர்வுசெய்யவும்**

1 .'வாக்குரிமை' என்னும் சொல் _____ ஆகியவற்றிலிருந்து தோன்றியதாகும்.

(அ) ஆங்கிலோ-பிரெஞ்சு (ஆ) ஆங்கிலோ –இந்தியன்

(இ) ஆங்கிலோ –ஜெர்மன் (ஈ)ஆங்கிலோ–இத்தாலியன்

2. இந்திய அரசமைப்பின் பகுதி XV __________ பற்றியதாகும்.

(அ) தேர்தல்கள் (ஆ) குடியுரிமை

(இ) அடிப்படை உரிமைகள் (ஈ)அரசுவழிகாட்டி நெறிமுறைகள்

3. "தேர்தலியல்" என்பது __________ பற்றிய கல்வியாகும்.

(அ) தேர்தல்கள் (ஆ) அரசமைப்பு

(இ) அரசு (ஈ) உரிமைகள்

PNPVGE

4. __________ என்பது பன்மைத்துவ/பெரும்பான்மை தேர்தல் முறைகளின் எளிமையான வடிவமாகும்.

(அ) முதலில் நிலையைக் கடந்து செல்லுதல் (ஆ) தொகுப்பு வாக்கு

(இ) கட்சி தொகுப்பு வாக்கு (ஈ) வரையறுக்கப்பட்ட வாக்கு முறை

5. முதலாவது வரையறை ஆணையச் சட்டம் நிறைவேற்றப்பட்ட ஆண்டு __________ ஆகும்.

(அ) 1952 (ஆ) 1963

(இ) 1973 (ஈ) 2002

6. தகுதியுள்ள வாக்களார்களின் பட்டியல்__________ என அழைக்கப்படுகிறது

(அ) வாக்காளர் பட்டியல் (ஆ) பரப்புரை பட்டியல்

(இ) வாக்களிப்பு பட்டியல் (ஈ ) நியமனப் பட்டியல்

7. இந்திய குடிமக்களின் வாக்களிக்கும் வயதினை 21 லிருந்து 18 ஆக குறைந்த அரசமைப்பு சட்டத்திருத்தம் எது?

(அ) 61 (ஆ) 42

(இ) 91 (ஈ) 73

8. இந்தியாவிற்கு ஒரே தேர்தல் ஆணையம் வேண்டும் எனக்கூறும் அரசமைப்பு உறுப்பு எது?

(அ) உறுப்பு 324 (ஆ) உறுப்பு 256

(இ) உறுப்பு 370 (ஈ) உறுப்பு 360

9. 52வது அரசமைப்புச் சட்டத்திருத்தம், 1985 __________ பற்றியதாகும்.

(அ) கட்சித்தாவல் தடைச்சட்டம் (ஆ) தேர்தல் முறைகள்

(இ) தேர்தல் சீர்த்திருத்தங்கள் (ஈ) தேர்தல் பரப்புரை

10. ஓர் உறுப்பினரின் மறைவு அல்லது பதவி விலகலால் வரும் தேர்தல் __________ என அழைக்கப்படுகிறது,



11th Std Political Science Tamil Medium Vol-2_Chapter 11_22-09-18.indd 109 29-09-2018 12:41:52

(அ) இடைத்தேர்தல் (ஆ) மறுதேர்தல்
(இ) தேர்தல் ரத்து (ஈ) வார்டு தேர்தல்

11. பஞ்சாயத்து அமைப்புகளில் பெண்களுக்கு __________ இடங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.
(அ) 1/3 (ஆ) ¼
(இ) 2/3 (ஈ) ¾

12. இந்தியாவின் தலைமைத் தேர்தல் ஆணையாளரை __________ நியமிக்கிறார்
(அ) இந்தியக் குடியரசுத் தலைவர் (ஆ) உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி
(இ) பிரதமர் (ஈ) தலைமைச் செயலாளர்

13.இந்திரஜித் குப்தா குழு, 1998 __________ தொடர்பானதாகும்.
(அ) தேர்தல் சீர்த்திருத்தங்கள் (ஆ) கட்சித்தாவல்
(இ) FPTP முறை (ஈ) ரகசிய வாக்கெடுப்பு

14. இந்தியாவில் முதலாவது பொதுத் தேர்தல்கள் __________ ஆண்டு நடைபெற்றது.
(அ) 1952 (ஆ) 1951
(இ) 1950 (ஈ) 1947

15. அரசின் நிதியுதவியுடனான தேர்தல்களை__________ குழு ஆதரித்தது.
(அ) இந்திரஜித் குப்தா குழு (ஆ) வோரா குழு
(இ) தார்குந்த் குழு (ஈ) டங்கா குழு

16, கூற்று (A)-இந்திய நாடாளுமன்றம் ஈரவைகளைக் கொண்டதாகும்.
காரணம் (R)- கீழவையாக மக்களவையும், மேலவையாக மாநிலங்களையும் உள்ளன.
(அ) (A) மற்றும் (R) இரண்டு உண்மையாகும். (R) என்பது (A) என்பதன் சரியான விளக்கமாகும்.
(ஆ) (A) மற்றும் (R) இரண்டும் உண்மையாகும். (R) என்பது (A) யின் சரியான விளக்கம் அல்ல.
(இ) (A) என்பது உண்மையாகும். (R) என்பது தவறாகும்.
(ஈ) (A) என்பது தவறாகும். (R) என்பது உண்மையாகும்.

## II கீழ்க்காணும் வினாக்களுக்கு மிக சுருக்கமாக விடையளிக்கவும்

16. வாக்குரிமை என்றால் என்ன?
17. தேர்தலியல்-வரையறு
18. FPTP என்பதனை விரிவாக்கம் செய்க.
19. 'தேர்தலுக்கான தொகுதிகள்' என்றால் என்ன?
20. வாக்காளர் பட்டியல் என்றால் என்ன?.
21. 'தேர்தல் பரப்புரை' என்றால் என்ன?
22. கட்சித்தாவல் தடைச் சட்டம் என்றால் என்ன?

## III. கீழ்க்காணும் வினாக்களுக்கு சுருக்கமாக விடையளிக்கவும்.

23. ஒரு மக்களாட்சியில் உள்ள தேர்தல் முறையின் சிறப்பியல்புகள் எவை?

24. சிறுபான்மையினர் பிரதிநிதித்துவத்திற்கான பல்வேறு முறைகளைக் குறிப்பிடுக
25. 'எல்லைகளை வரையறுத்தல்' என்றால் என்ன?
26. தேர்தல் சீர்திருத்தங்கள் தொடர்பான குழுக்கள் யாவை?
27. இந்தியா ஏன் FPTP முறையை ஏற்றுக் கொண்டுள்ளது?
28. இந்தியாவில் நடைபெற்ற முதலாவது பொதுத்தேர்தலைப் பற்றி எழுதுக?
29. வெளிப்படையான வாக்கு மற்றும் ரகசிய வாக்கினை விளக்குக.

## IV. கீழ்க்காணும் வினாக்களுக்கு விரிவாக விடையளிக்கவும்.

30. இந்திய அரசமைப்பின் பகுதி XV எதனைப் பற்றி கூறுகிறது?
31. பிரதிநிதித்துவத்தின் பல்வேறு வகைகளை விளக்குக
32. சுதந்திரமான மற்றும் நேர்மையான தேர்தல்களின் தேவையை விளக்குக.
33. இந்திய தேர்தல் ஆணையத்தின் அதிகாரங்கள் மற்றும் பணிகளை வெளிக்கொணர்க.
34. இந்தியாவின் பல்வேறு தேர்தல் சீர்திருத்தங்களை வெளிக்கொணர்க.

## மேற்கோள் நூல்கள்


1. J.C. Johari, Indian Polity, Lotus Press, New Delhi.
2. R.C. Agarwal, Political Theory, S. Chand and Company, New Delhi.
3. B.S. Raman, Indian Constitution, United Publishers, Mangalore.
4. Subash C Kashyap, Our Constitution, National Book Trust , India.
5. The New International IDEA Handbook
6. Democratic Politics-II, Class X Political Science Textbook.
7. Democratic Politics-I, class IX Political Science Textbook
8. Lakshmikant, Indian Polity, Tata Mcgraw and Hills.


## இணையதள வளங்கள்

- www.britannica.com
- www.quora.com
- Search.my.way.com
- Hindustan times.com.India
- India.seminar.com

## ICT CORNER

### அலகு–11 தேர்தல் மற்றும் பிரதிநிதித்துவம்

*யார் நம்முடைய பிரதிநிதிகளாக இருக்கிறார்கள்.... அறிந்து கொள்வோமா*



**படிகள்**

*படி 1:* கீழ்க்காணும் உரலி / விரைவுக் குறியீட்டைப் பயன்படுத்தி "indiavotes" பக்கத்திற்குச் செல்க.

*படி 2:* **நாடாளுமன்றத்திற்கு** "year", "states" and Click "GO"ஆகியவற்றை தேர்வு செய்க. : **சட்டமன்றம் (மாநில தேர்தல்) பற்றி விவரம் அறிய** "year", "states" and Click "GO"ஆகியவற்றை தேர்வு செய்க.

*படி 3:* சரியான விவரம் அறிந்த பின், "Advanced search" ஐ தேர்வுசெய்து மேலும் விவரங்களை அறிக.

*படி 4:* **முகப்பு பக்கத்தில்** உள்ள "Election Maps" ஐ சொடுக்கி தேவையான தரவுகளை கொடுத்து வரைபடத்துடன் சரி பார்க்க.

படி 1



படி 3



படி 2



படி 4



**உரலி :**

*படங்கள் அடையாளத்திற்கு மட்டும்.


இப்பக்கத்திற்கு தேவைப்பட்டால் Flash Player or Java Script ஐ அனுமதிக்கவும்

URL : http://www.indiavotes.com/

B146_11_PSCI_TM

அலகு 12

# உள்ளாட்சி அரசாங்கங்கள்



## கற்றலின் நோக்கங்கள்

PNRH68

- இப்பாடத்தில் இந்தியா மற்றும் தமிழ்நாட்டில் உள்ளாட்சி அரசாங்கங்கள் பற்றிய ஒரு உட்பார்வையை மாணவர்கள் அறியலாம்.
- உள்ளாட்சி அரசாங்கங்களின் முக்கியத்துவம் பற்றி இப்பகுதியில் அறியலாம்.
- இப்பாடம், உள்ளாட்சி அரசாங்கங்களின் இன்றைய பரப்பெல்லையை விளக்குகிறது.
- உள்ளாட்சி அரசாங்கங்களின் வரலாற்று ரீதியிலான வளர்ச்சி, அதன் பணிகள் மற்றும் அதிகாரங்களில் சுதந்திரத்திற்கு பின்பு ஏற்பட்ட மாற்றங்கள் போன்றவற்றை இப்பாடம் விளக்குகிறது.
- இந்தியாவில் உள்ளாட்சி அரசாங்கங்களின் அமைப்பு, பணிகள், அதன் தேர்தல் முறை, வருவாய் ஆதாரம் மற்றும் அதிலுள்ள பிரச்சனைகள் குறித்து இப்பாடத்தில் மாணவர்கள் கற்கலாம்.



### 12.1 உள்ளாட்சி அரசாங்கத்தின் பொருள், தன்மை மற்றும் முக்கியத்துவம்

உள்ளாட்சி அரசாங்கம் என்பது, நம்முடைய கிராமங்கள், நகரங்கள் மற்றும் மாநகரங்களில் மக்களுக்கான சேவைகள் மற்றும் வசதிகளை அளிப்பதற்கும், உள்ளூர் பிரச்சனைகளை நிர்வகிப்பதற்கும் ஏற்படுத்தப்பட்ட ஓர் அமைப்பாகும். உள்ளாட்சி அரசாங்கங்கள் கிராமம், நகரம், பெருநகரங்கள் மற்றும் மாநகரங்கள் என ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள் செயல்படுபவை ஆகும். ஒரு கிராமம் அல்லது நகரத்தில் உள்ள மக்களையும் அரசாங்கத்தையும் இணைக்கும் விதமாக உள்ளாட்சி அரசாங்கங்கள் செயல்படுகின்றன. மக்களுக்கு சாலை பழுது, சாலையில் நீர் தேங்கியிருத்தல், தெரு விளக்குகள் எரியாமை போன்ற அடிப்படை பிரச்சனைகளின்போதும், குளங்களை உருவாக்குதல், பூங்காக்களை அமைத்தல் போன்ற அடிப்படை தேவைகளின்போதும், உள்ளாட்சி அரசாங்கங்கள் அவற்றை மேற்கொள்கின்றன. அவசர காலங்களின் போதும், உள்ளூரில் பிறப்பு மற்றும் இறப்பு நிகழும்போதும் அவற்றை கையாளும் பொறுப்பும் உள்ளாட்சி அரசாங்களுக்கு உண்டு. ஒரு பகுதியில் இருப்பிட சான்றிதழ் மற்றும் பிறப்பு, இறப்பு, வருமான சான்றிதழ்களை வழங்கும் ஓர் அமைப்பாகவும் உள்ளாட்சி அரசாங்கங்கள் செயல்படுகின்றன.

மக்களின் அன்றாட தேவைகளை கையாளும் பொறுப்புடைய ஒரு முழுமையான அமைப்பாக உள்ளாட்சி அரசாங்கங்கள் உள்ளன. நம் அரசாங்க நிர்வாக கட்டமைப்பில் இறுதி நிலை அலகாக உள்ளாட்சி அரசாங்கங்கள் உள்ளன. உள்ளாட்சி அரசாங்கமானது ஒரு சபையை கொண்டுள்ளது. அதில் உள்ள உறுப்பினர்கள் அதன் கிராமம் அல்லது நகரத்தின் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர் ஆவர். அவர்கள் மக்களின் பிரச்சனைகளை மக்கள் சார்பாக



11th Std Political Science Tamil Medium Vol-2_Chapter 12.indd 113 29-09-2018 12:42:20

சபையில் விவாதித்து தீர்வுகளை காண வேண்டிய பொறுப்புடையவர்கள் ஆவர். அந்த சபையின் உறுப்பினர்கள் ஐந்து ஆண்டுகள் அல்லது நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறை, அந்தந்த நாட்டு சட்டப்படி, மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

உள்ளாட்சி அரசாங்கங்கள் என்பவை பிரதிநிதித்துவ அமைப்புகள், அவை சபையில் மக்களை பிரதிநிதிப்படுத்துகின்றன. உள்ளாட்சி அரசாங்கங்கள் அவைகளின் பகுதிக்குட்பட்ட மக்களின் பிரச்சனைகள் தொடர்பாக விவாதிக்கவும், அவற்றிற்கான தீர்வுகளை காணவும், மேலும் அப்பிரச்சனைகளை மாநில அரசின் கவனத்திற்கு கொண்டு செல்லவும் சட்டப்படியான உரிமை பெற்ற அமைப்புகளாகும். உள்ளாட்சி அரசாங்கங்கள் மக்களாட்சி நடைமுறையின் அடிப்படையில் ஏற்படுத்தப்பட்டுள்ளதால், சபையில் கொண்டு வரப்படும் அனைத்து பிரச்சனைகளுக்கும் விவாதம், பேச்சுவார்த்தை மூலமே அனைவரும் ஏற்கத்தக்க வகையில் தீர்வு எட்டப்பட வேண்டும். சபை உறுப்பினர்கள் இந்தியாவின் அரசமைப்பிற்கு உட்பட்டு விவாதிக்கவும் முடிவெடுக்கவும் முழு சுதந்திரம் அளிக்கப்பட்டுள்ளனர்.

உள்ளாட்சி அரசாங்கங்களின் முக்கியத்துவமே, அது கையாளுகின்ற பிரச்சனைகளின் தன்மையில் உள்ளது. இப்பிரச்சனைகள் அனைத்துமே உள்ளூர் பிரச்சனைகளாகும். உள்ளாட்சி அரசாங்கங்கள் கையாளுகின்ற பிரச்சனைகளின் உள்ளூர் தன்மையும், அவற்றின் பல்வேறு வகைகளும் மத்திய, மாநில அரசாங்கங்களினால் கையாள முடியாதவை ஆகும். ஏனெனில் உள்ளூர் பிரச்சனைகள் முழுமையாக, அப்பகுதிக்கேயுரிய தனித்தன்மையுடன் இருக்கும். அவற்றை உள்ளூர் மக்களை கொண்ட அமைப்பின் மூலமே சிறப்பாக கையாண்டு பொருத்தமான தீர்வை எட்டமுடியும். அவ்வாறு இல்லாமல் பொருத்தமற்ற தீர்வு எட்டப்படுமானால் மக்களின் வரிப்பணம் வீணடிக்கப்பட்டு, அது மக்களின் சுமையை மீண்டும் அதிகரிக்கும்.

**நிகழ் ஆய்வு**

*ஆதிலட்சுமியும், பாலாவும் விருதுநகர் மாவட்டம், சிவகாசியில் வாகனமொன்றில் பயணிக்கின்றனர். அவர்கள் அந்நகரை சுற்றி வருகையில், கீழ்க்கண்ட பிரச்சனைகளை காண்கின்றனர்.*

- குடிநீர் பற்றாக்குறை.
- மிகவும் சேதமுற்றுள்ள நகரின் உள்சாலைகள்.
- பராமரிக்கப்படாத நீர்நிலைகள்.
- சரியாக அமல்படுத்தப்படாத மழை நீர் சேகரிப்பு திட்டம்.
- வடிகால் வசதிகள் போதாமை.

மேற்கண்ட ஐந்து பிரச்சனைகளை கண்டதன் அடிப்படையில் உனது சொந்த கிராமம் அல்லது நகரத்தைப் பற்றிய உனது கருத்தை கூறு?


உனது பகுதியில் உள்ள பொது மக்களுக்கான வசதிகள் குறித்து ஒரு பத்தி எழுதவும். (200 வார்த்தைகளுக்கு மிகாமல்)

எனவே, உள்ளாட்சி அரசாங்கங்கள் என்பவை மக்களின் உள்ளூர் பிரச்சனைகளை தீர்ப்பதற்கும், உள்ளூர் தேவைகளை பூர்த்தி செய்வதற்கும் ஏற்படுத்தப்பட்ட ஓர் அமைப்பாகும். உள்ளாட்சி அரசாங்கங்கள் பொதுவாக, தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளை கொண்டுள்ளன. அவர்கள் உள்ளூர் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் ஆவர். அவர்கள் உள்ளூர் பிரச்சனைகளை சபையில் விவாதித்து அதற்கு தீர்வு காண்கின்றனர். உள்ளாட்சி அரசாங்கங்கள், அரசின் திட்டங்களும் வளங்களும் அடித்தட்டு மக்களை சென்றடைய முக்கிய வழிகளாக விளக்குகின்றன. இன்று எந்தவொரு நாடும்

உள்ளாட்சி அரசாங்கங்களை புறக்கணிக்க முடியாது, ஏனெனில் உள்ளூர் பிரச்சனைகளே இப்போது சர்வதேச பிரச்சனைகளாக மாறுகின்றன. தகவல் தொழில் நுட்ப வளர்ச்சியினால் உலகமே ஒரு கிராமமாக மாறிவிட்டது.

### 12.2 உள்ளாட்சி அரசாங்கங்களின் வகைகள்

உள்ளாட்சி அரசாங்கங்கள் கிராமங்கள் மற்றும் நகரங்கள் அடிப்படையில் வகைப்படுத்தப்பட்டுள்ளன. இந்த வகைப்பாடானது அப்பகுதி மக்களின் தொழில் (விவசாயம் சார்ந்த அல்லது விவசாயம் சாராத) அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. விவசாயம் சார்ந்த தொழிலை அடிப்படையாக கொண்ட பகுதி என்பது, அப்பகுதியின் பெரும்பான்மை மக்களோ, அல்லது அனைத்து மக்களுமோ விவசாயம் மற்றும் விவசாயம் சார்ந்த தொழில்களான கால்நடை வளர்ப்பு, பால் பண்ணை போன்ற தொழில்களை செய்வர். ஆனால் நகர பகுதிகளில் மக்கள் வர்த்தகம் மற்றும் அதுசார்ந்த தொழில்களில் ஈடுபடுவர். நகரப் பகுதிகளில் மக்களின் வாழ்வாதாரமானது வர்த்தகம் மற்றும் அது சார்ந்த நிறுவனங்களையும் தனியார் மற்றும் அரசாங்கத்தின் நிர்வாக அலுவலங்களில் உள்ள வேலைவாய்ப்பையும் அடிப்படையாக கொண்டுள்ளது. நகரப் பகுதிகள் என்பவை வெளி உலகத்திற்கும் கிராமப்பகுதிகளுக்கும் இடையே ஒரு பாலமாக செயல்படுகின்றன. கிராமப்பகுதிகளில் ஏற்படுத்தப்படும் அரசாங்கங்கள் ஊரக உள்ளாட்சி அரசாங்கங்கள் என்றும் நகர பகுதிகளில் உருவாக்கப்படும் அரசாங்கங்கள் நகர்ப்புற உள்ளாட்சி அரசாங்கங்கள் என்றும் அழைக்கப்படுகின்றன.




**விவாதம்**



- இந்தியாவின் கிராம மற்றும் நகர்புறங்களில் உள்ளாட்சி அரசாங்கங்களின் தேவை குறித்து விவாதி.
- இந்தியாவில் குடிமக்களுக்கு உள்ளாட்சி அரசாங்கங்களில் உள்ள பொறுப்பு குறித்து விவாதி

இந்தியாவில், கிராம உள்ளாட்சி அரசாங்கங்கள் 'பஞ்சாயத்து ராஜ்' என்ற பொது பெயரில் அழைக்கப்படுகின்றன. அரசாங்கங்கள் பஞ்சாயத்து செய்கிற (ஆழ்ந்து விவாதித்தல் மற்றும் பேச்சு வார்த்தை நடத்துதல்) இடமாக கருதப்படுவதால் இவ்வாறு அழைக்கப்படுகின்றன. இந்தியாவில் நகர்புற உள்ளாட்சி அரசாங்கங்கள் அவைகளின் பொருளாதார மற்றும் அரசியல் அடிப்படையை கொண்டு நகராட்சிகள், மாநகராட்சிகள், நகரியம், பாளையவாரியம் என வகைப்படுத்தப்பட்டுள்ளன.

இந்திய நகரங்கள் நகராட்சிகளாகவும் பெரு நகரங்கள் மாநகராட்சிகள் எனவும், தொழில் நகரங்கள் நகரியங்கள் எனவும், ராணுவ அமைப்புகள் உள்ள இடங்கள் பாளைய வாரியங்கள் எனவும் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

**நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் வகைகள்**

- மாநகராட்சிகள்
- நகராட்சிகள்
- நகரியங்கள்
- பேரூராட்சிகள்
- பாளைய வாரியங்கள்



11th Std Political Science Tamil Medium Vol-2_Chapter 12.indd 115 29-09-2018 12:42:21

**செயல்பாடு**


*மாணவர்கள் தங்களுக்குள் இரண்டு அல்லது மூன்று குழுக்களை ஏற்படுத்திக்கொண்டு தங்களது பகுதியில் எதிர்பாராத விதமாக பரவிய நோய்கள், பெருமழையின் போது உடைப்பெடுத்த நீர் நிலைகள் அல்லது வயதுவந்தோர் கல்வி போன்ற உள்ளூர் பிரச்சனைகள் குறித்து விவாதிக்கவும்.*

மாநகராட்சிகள் என்பவை, பத்து லட்சத்திற்கும் அதிகமான மக்கள் தொகையை கொண்ட, சேவைகளையும், வசதிகளையும் வழங்க விரிவான நிர்வாக அமைப்பு தேவைப்படுகிற பெரு நகரங்களில் ஏற்படுத்தப்படுகின்றன.

கிராமங்கள் மற்றும் சிறு நகரங்களில் இருந்து பல ஆண்டுகளாக தொடர்ந்து நடைபெறும் மக்களின் இடப்பெயர்ச்சி ஒரு நகரத்தை, ஒரு பெருநகரமாக மாற்றுகிறது.

நகராட்சிகள் என்பவை மக்கள் தொகை பத்து லட்சத்திற்கும் குறைவாக உள்ள சிறு நகரப்பகுதிகளில் ஏற்படுத்தப்படுகின்றன. நகராட்சிகளும் வகை-1, வகை-2 என வகைப்படுத்தப்பட்டுள்ளன. இந்த வகைப்பாடானது குறிப்பிட்ட கால இடைவெளிகளில் ஆய்வு செய்யப்பட்டு அதன் அடிப்படையில் நகராட்சிகளின் தர நிர்ணயம் செய்யப்படுகின்றது.

**செயல்பாடு**



*ஒன்றிணைந்த உளச்சான்றினால் பொது இடங்களில் தூய்மை வலியுறுத்தப்படும்போது மட்டுமே ஒன்றுபட்ட தூய்மை உறுதிப்படும். மகாத்மா காந்தி பிறந்த அக்டோபர் 2, அன்று நம் தேசத்தந்தைக்கு அஞ்சலி செலுத்துகிற அதே வேளையில், அனைத்து ஏழை மக்களுக்கும் அடிப்படை சுகாதார வசதிகளை ஏற்படுத்துதல் என்ற அவரின் கனவை நிறைவேற்ற நாம் பாடுபடவேண்டும்.*

### முழுமையான சுகாதாரத்தை நோக்கி

- ஒன்றிணைந்த குறைந்த செலவினத்திலான சுகாதார திட்டத்தின் திருத்தப்பட்ட வழிகாட்டுதல்கள் மூலம் மனித கழிவுகளை மனிதர்களே அகற்றும் முறையை 2010–ம் ஆண்டுக்குள் நீக்கும் நோக்கத்தில் உலர் கழிவறைகளை அமைக்க மானியங்களை உயர்த்தி வழங்குதல்
- ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புதுப்பித்தல் திட்டத்தின் கீழ் அனைத்து குடிசைப்பகுதிகளுக்கும் அடிப்படை தேவைகளை (குடிநீர், துப்புரவு, கழிவு நீரகற்றல், மின்சாரம், ஆரோக்கியம், சமூக பாதுகாப்பு மற்றும் வீடு வழங்குதல்). (நகர்புற ஏழை மக்களுக்கு அடிப்படை வசதிகளை வழங்குதல் மேலும் ஒருங்கிணைந்த வீட்டு வசதி மற்றும் வளர்ச்சி திட்டம்) மேலும் 'ராஜீவ் ஆவாஸ் யோஜனா' திட்டம் மூலம் தண்ணீர் வசதியுடன் கூடிய கழிப்பறை ஒவ்வொரு வீட்டுக்கும் வழங்குதல்.
- ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புதுப்பித்தல் திட்டத்தின் கீழ் வடிகால், சுகாதாரம் மற்றும் உலர் கழிவு மேலாண்மை வசதிகளை மேம்படுத்துதல் (சிறு மற்றும் நடுத்தர நகரங்களுக்கான கட்டமைப்பு, ஆளுகை மற்றும் நகர்ப்புற கட்டமைப்பு வளர்ச்சி திட்டம்).
- முழுமையான சுகாதார கொள்கை அரசாங்கத்தால் அறிவிக்கப்பட்டது.



11th Std Political Science Tamil Medium Vol-2_Chapter 12.indd 116 29-09-2018 12:42:21

புதிய தொழிற்சாலைகள் அமைகின்ற இடங்களில் நகரியங்கள் ஏற்படுத்தப்படுகின்றன. அங்குள்ள குடிமக்கள் விவசாயம் சார்ந்த தொழில்களிலிருந்து விவசாயம் சாரா தொழில்களுக்கு மாறுகின்றனர். இராணுவ, பயிற்சி மையங்கள் அமைந்திருக்க கூடிய இடங்களில், இராணுவ தளவாடங்கள் உற்பத்தி தொழிற்சாலைகள் அமைந்திருக்கும் இடங்களில் பாளைய வாரியங்கள் ஏற்படுத்தப்படுகின்றன. கிராமப்புற உள்ளாட்சி அரசாங்கங்களும், நகர்ப்புற அரசாங்கங்களும், அரசாங்க படிநிலையில் இறுதி நிலையில் உள்ளவை ஆகும்.

**செயல்பாடு**

உனது பகுதியில் குடிநீர், மின்சாரம், சாலை பொது போக்குவரத்து, துப்புரவு போன்ற பொது சேவைகள் போதுமான அளவிலும், நியாயமாகவும் உள்ளதா? உனது சொந்த உதாரணம் ஒன்றைக் கூறு.

உலகின் பல்வேறு நாடுகளில் ஊரக மற்றும் நகர்ப்புற அரசாங்கங்கள் வெவ்வேறு விதங்களில் ஏற்படுத்தப் பட்டுள்ளன. ஆனால் உள்ளாட்சி அரசாங்கங்கள் எற்படுத்தப்பட்டதன் நோக்கம் எல்லா நாடுகளிலும் ஒன்றே. உள்ளாட்சி அரசாங்கங்கள் என்பவை உள்ளூர் மக்களுக்காக, உள்ளூரிலிருந்து கிடைக்கும் வருவாயையே பிரதானமாக கொண்டு ஏற்படுத்தப்பட்டவை.

**செயல்பாடு**

சொத்து வரி, குடிநீர் வரி, தொழில் வரி போன்ற பல்வேறு வரிகளை உள்ளாட்சி அரசாங்கங்கள் விதிக்கின்றன. அவ்வரிகள் பற்றி ஒரு மாத ஊதியம் பெறும் நபர், தொழிற்சாலை நடத்தும் ஒருவர் மற்றும் ஒரு வியாபாரி போன்றோரிடம் நீ கேட்டு நேரிடையாக தெரிந்து கொள். நீ அறிந்தவற்றை வகுப்பறையில் பகிர்ந்து கொள்.

அரசாங்க படி நிலையில், மேல் நிலையில் உள்ள அரசாங்கம் உள்ளாட்சி அமைப்புகளை கண்காணித்தல் மற்றும் மேற்பார்வையிடுதல் பணியை மேற்கொள்கிறது.

## 12.3 பல்வேறு நாடுகளில் உள்ளாட்சி அரசாங்கங்கள்

உள்ளாட்சி அரசாங்கங்கள் மனித நாகரிகம் தோன்றிய காலத்திலிருந்து காணப்படும் பழமையான ஒன்றாகும். பல்வேறு உலக நாடுகளில் அவர்களின் நவீன அரசுகளே உள்ளாட்சி அரசாங்கங்களின் அடிப்படையில் அமைந்துள்ளன. பல்வேறு நாடுகளில் அமைந்துள்ள உள்ளாட்சி அரசாங்கள் தொடர்பாக அறிய தொடங்கினால், அனைத்து நாடுகளிலும், அவை சிறிய நாடோ அல்லது பெரிய நாடோ, வளர்ச்சியடைந்த நாடோ அல்லது வளர்சியுறா நாடோ ஏதோ ஒரு வகையில் உள்ளாட்சி அரசாங்கங்கள் செயல்படுவதும் அதன் மூலம் பொது சேவைகள் மற்றும் வசதிகள் அடித்தட்டு மக்கள் வரை சென்றடைவதையும் காணலாம்.

ஆனால், கட்டமைப்பு, அதிகாரம், பணி வரம்பு, நிதி ஆதாரங்கள் போன்றவற்றில் அவை பெருமளவு வேறுபடுகின்றன. பல்வேறு ஐரோப்பிய நாடுகளின் அரசாங்கங்களே தங்களின் முயற்சியால் மையப்படுத்தப்பட்டு இருந்த அதிகாரத்தை பரவலாக்கம் செய்கின்றன. வளர்ச்சி அடைந்த நாடுகளில் நிதி பகிர்வு, காவல் பணி வரம்பு, போக்குவரத்து, மாநிலங்களுக்கிடையேயான வர்த்தகம் போன்றவை இன்னமும் தீர்க்கப்படாத பிரச்சனைகளாகவே உள்ளன. ஆனால் வளரும் நாடுகளில் மத்திய அரசாங்கங்கள் அதிகாரத்தையும், நிதி ஆதாரங்களையும் மையப்படுத்தும் முயற்சியை மேற்கொள்கின்றன. இந்தியாவில், மாநில மற்றும் உள்ளாட்சி அரசாங்கங்களுக்கு நிர்வாக மற்றும் நிதி தொடர்பான அதிகாரங்களை மேலும் பகிர்ந்தளிக்க மத்திய அரசாங்கத்திற்கு அழுத்தம் எப்போதுமே இருந்து வருகிறது.



11th Std Political Science Tamil Medium Vol-2_Chapter 12.indd 117 29-09-2018 12:42:21

**செயல்பாடு**

**ஒரு சுவரொட்டியை வடிவமைக்கவும்**

உனது கிராமத்தில் அல்லது நகரத்தில் நம் அலட்சியம் காரணமாக நெகிழி குப்பைகள் மற்றும் கழிவுகளால் நிரம்பியிருக்கும் ஆறுகள், ஏரிகள், குளங்கள் பற்றி குறிப்பிடு.

நம் நாட்டில் முக்கியமான சில வாழ்விடங்கள் வேகமாக அழிந்து வருகின்றன. இழந்து போன வாழ்விடங்களை மீட்டெடுக்கவும் எஞ்சியுள்ளவற்றை பாதுகாக்கும் பொருட்டும் ஒரு விழிப்புணர்வு நிகழ்ச்சியை ஏற்பாடு செய். அவற்றின் மூலமாக ஏரிகள் மற்றும் குளங்களை தூய்மைப்படுத்தி, சுத்தமான குப்பைகளற்ற இயற்கை சூழலை எல்லா உயிரினங்களுக்கும் ஏற்றதாக உருவாக்க முயற்சிக்கவும்.

**நீ செய்ய வேண்டியவை என்ன?**

- ஒரு சுவரொட்டியை வடிவமைத்து அதில் பொருத்தமான சொற்றொடரை வடிவமைக்கவும். உங்கள் ஊரின் பல்வேறு தரப்பு மக்களையும் நீர் நிலைகளின் கழிவுகளை அகற்ற அழைக்கவும்.
- சொற்றொடர்: "குப்பைகளை அகற்றுவோம். நீர்நிலைகளை காப்போம்"
- நீ எடுக்கும் எந்த ஒரு முயற்சியும் எதிர்காலத்திற்கு மிகவும் அவசியம் என்பதை நினைவில் கொள்.

**செயல்பாடு**

உங்கள் பகுதியில் உள்ள குடிநீர், மின்சாரம், துப்புரவு வடிகால் போன்ற சில பொது வசதிகள் எவ்வாறு உள்ளது என்று பார். அவற்றை மேம்படுத்த ஏதாவது வாய்ப்புள்ளதா? என்ன செய்யப்படவேண்டும் என்று நீ கருதுகிறாய்? கீழே உள்ள அட்டவணையை பூர்த்தி செய்யவும்.

| வசதிகள் | உங்கள் ஊரில் உள்ளதா? | அது எவ்வாறு மேம்படுத்தப்பட வேண்டும்? |
|---|---|---|
| குடிநீர் | | |
| வடிகால் | | |
| துப்புரவு | | |
| மின்சாரம் | | |
| சாலை | | |
| பொது போக்குவரத்து முறை | | |

## 12.4 இந்தியாவில் உள்ளாட்சி அரசாங்கங்களின் தோற்றம் மற்றும் வளர்ச்சி

இந்தியாவில் உள்ளாட்சி அரசாங்கங்களின் தோற்றத்தை பற்றி ஆராய்ந்தால், அவை கிறித்து பிறப்பதற்கு முன்பே (பொ.ஆ.மு.) இருந்ததை அறியலாம். கி.மு. (பொ.ஆ.மு.) 600 முதல் கி.பி. (பொ.ஆ.) 600 வரை உலகில் பல குடியரசுகள் தோன்றுவதும் மறைவதுமாக இருந்தன. இந்த காலத்தில் தான் ஜைன மதத்தை தோற்றுவித்த



11th Std Political Science Tamil Medium Vol-2_Chapter 12.indd 118 29-09-2018 12:42:21

மகாவீரர், புத்த மதத்தை தோற்றுவித்த கௌதம புத்தர் போன்றோர் தோன்றினர். புத்த மற்றும் ஜைன இலக்கியங்களில் கிராமங்கள் அளவு மற்றும் வாழும் முறையால் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

புத்தர் மற்றும் மகாவீரர் ஏற்படுத்திய மத அமைப்புகளில் மக்களாட்சி நடைமுறையில் முடிவுகள் எடுக்கப்பட்டன. கௌடில்யரின் அர்த்தசாஸ்திரத்தில் அப்போதைய கிராம நிர்வாகம் பற்றி விரிவாக விளக்கப்படுள்ளது. மௌரியர்களின் ஆட்சி காலத்தில் கிராமமும், மாவட்டமுமே நிர்வாக அலகுகளாக இருந்தன.

தென்னிந்திய தீபகற்பத்தில் கிறித்துவின் காலத்திற்கு முன்பே உள்ளாட்சி அரசாங்கங்கள் செயல்பட்டு வந்துள்ளன. இந்த வரலாற்று காலம் முந்தைய சோழர் காலம், களப்பிரர்கள் காலம் மற்றும் பிந்தைய சோழர் காலம், விஜய நகர பேரரசின் தோற்றம், இஸ்லாமியர்கள், மொகலாயர்கள் மற்றும் ஆங்கிலேயர்களின் வருகை என வகைப்படுத்தப்பட்டுள்ளது. முந்தைய சோழர் காலத்திலும், களப்பிரர்கள் காலத்திலும் இருந்த உள்ளாட்சி அரசாங்கங்கள் பற்றி சிறிதளவே ஆதாரங்கள் கிடைத்துள்ளன. ஆனால், தென்னிந்தியாவின் கடைக்கோடியில் ஆட்சி புரிந்த பாண்டியர்கள் காலத்திலும், தென் மத்திய இந்தியாவில் ஆட்சி புரிந்த பல்லவர் காலத்திலும் உள்ளாட்சி அரசாங்கங்கள் செயல்பட்டமைக்கான ஆதாரங்கள் கிடைத்துள்ளன. மேலும் சோழர்கள் காலத்தில் உள்ளாட்சி அரசாங்கங்கள் நன்கு மேம்பட்ட நிலையில் செயல்பட்டு வந்துள்ளன. காஞ்சிபுரம் மாவட்டம் உத்திரமேரூரில் கண்டெடுக்கப்பட்ட, முதலாம் பராந்தக சோழன் கால கல்வெட்டுகள் (கி.பி. (பொ.ஆ) 919 – கி.பி. (பொ.ஆ) 922) உள்ளாட்சி அரசாங்கங்கள் பற்றி விரிவாக விளக்குகின்றன. ஒவ்வோர் ஊரிலும் ஒரு சபை இருந்ததாகவும், அதில் அவ்வூரின் அனைத்து ஆண்களும் உறுப்பினராக இருந்ததையும், அவர்கள் அனைத்து பொதுப்பிரச்சனைகளிலும் முடிவெடுத்ததையும் இக்கல்வெட்டுகள் மூலமாக அறிய முடிகிறது. இந்த சபைகள் "ஊர்" மற்றும் "மகா சபை" என்று இரண்டு விதங்களாக அழைக்கப்பட்டன. மேலும் மூன்றாவது வகையாக நகரம் என்று வியாபார மையங்களும், நான்காவது நாடு என்றும் அழைக்கப்பட்டன. இவற்றில் நாடு என்பது கிராமங்கள் மற்றும் மற்ற பகுதிகளை உள்ளடக்கிய அமைப்பாகவும், நகரம் என்பது நகரப்பகுதிகளை உள்ளடக்கிய ஓர் அமைப்பாகவும் இருந்தன. பொதுவாக பார்த்தோமேயானால், 9–ஆம் நூற்றாண்டுக்கு முந்தைய காலங்களில் உள்ளாட்சி அரசாங்கங்கள் செயல்பட்டமைக்கான சான்றுகள் குறைவாகவே கிடைத்துள்ளன. "நாடு" மற்றும் "நகரம்" என்ற இரு அமைப்புகளுமே, நிலங்கள் தொடர்பான கட்டுப்பாடுகள், கோவில்கள் மற்றும் நீர்பாசனங்களை நிர்வகித்தல், வரி வசூலித்தல், பெரிய மூலதனம் தேவைப்படுகின்ற பணிகளுக்கு கடன் வழங்குதல் மற்றும் தொண்டு நிறுவனங்களை நிர்வகித்தல் போன்ற பணிகளை செய்கின்றன. "ஊர்" மற்றும் "மகாசபை" என்ற இரு அமைப்புகளும் அரசனின் கட்டளைகளை அமல்படுத்தும் அதிகாரிகளுக்கு துணைபுரிந்தன.

முதாலாம் ராஜராஜ சோழன், வீர நாராயண சதுர்வேதி மங்கலம் என்ற ஊரின் மகாசபைக்கு நாட்டுக்கு துரோகமிழைத்த துரோகிகளின் சொத்துக்களை பறிமுதல் செய்ய உத்தரவிட்டதை அறிய முடிகிறது. சர் சார்லஸ் மெட்கேப், சர் ஜார்ஜ் பேர்டு வுட் மற்றும் எல்பின்ஸ்டோன் போன்ற பல வரலாற்றாசிரியர்கள் பண்டைய மற்றும் இடைக்காலத்தில் தென்னிந்தியாவில் உள்ளாட்சி அரசாங்கங்கள் வளமையுடன் செயல்பட்டு வந்ததை குறிப்பிடுகின்றனர். ஆனால் மிக விரிவான முறையில் அனைத்து பகுதிகளிலும் செயல்பட்டு வந்தது என்பதில் சில வரலாற்றாசிரியர்களுக்கு சந்தேகம் உள்ளது.

மொகலாயர்கள் காலத்தில் (கி.பி. (பொ.ஆ) 1500 முதல் கி.பி. (பொ.ஆ) 1777)

அரசுகள் மாறினாலும், மத்திய அரசுக்கும் உள்ளூர் நிர்வாகத்துக்குமிடையேயான உறவில் அடிப்படை விதிகள் மாறவில்லை. மொகலாய பேரரசு அதன் உச்சத்தில் இருந்தபோது, அது பல மாகாணங்களாக (பராக்னாஸ்) பிரிக்கப்பட்டிருந்தது, மாகாணங்களில் உட்பிரிவுகள் (சர்க்கார்) ஏற்படுத்தப்பட்டிருந்தன. சர்க்கார்கள் பல கிராமங்களை கொண்ட தொகுதிகளாக (பராக்காஸ்) பிரிக்கப்பட்டிருந்தன. ஒவ்வொரு படிநிலையிலும் அரசாங்கங்கள் அமைக்கப்பட்டிருந்தன. அதற்கென அதிகாரிகள் பேரரசால் நியமிக்கப்பட்டிருந்தனர். கிராமப்பகுதிகளில் மொகலாய பேரரசின் இறுதிக் காலங்களில், உள்ளாட்சி அமைப்புகள் வீழ்ச்சியடையத் தொடங்கின. ஆனால் அவை பற்பல தாக்குதல்களை கண்டாலும், தொடர்ந்து இயங்கின. பிளாசிப்போருக்கு பின் (கி.பி. (பொ.ஆ) 1757), ஆங்கிலேய கிழக்கிந்திய கம்பெனி, வங்காள நவாபிடமிருந்து நில வரி வசூல் உரிமைகளை பெற்றது. இதுவே, இந்தியாவில் ஆங்கிலேயே ஆட்சிக்கு வழிகோலியது. ஆங்கிலேயர் ஆட்சி காலத்தில் மாகாண தலை நகரங்களான கல்கத்தா, பம்பாய் மற்றும் சென்னை தவிர மற்ற கிராம மற்றும் நகர வியாபார மையங்கள் எந்த ஒரு கட்டுப்பாட்டின் கீழும், மேற்பார்வையின் கீழும் இயங்கவில்லை. மாவட்ட நிர்வாகமானது மாவட்ட ஆட்சியரின் கீழ் இயங்கியது. ஆங்கிலேயர் ஆட்சியில் மாவட்ட நிர்வாகம் முக்கியமானதொரு நிர்வாக அமைப்பாகவும், நாட்டின் ஊரக பகுதிகள் அனைத்தும் அதன் கட்டுப்பாட்டிலும் இருந்தன.

கல்கத்தா (கொல்கத்தா) பம்பாய் (மும்பாய்) மற்றும் மெட்ராஸ் (சென்னை) நகரங்களில், மாநகராட்சி நிர்வாகத்தை ஏற்படுத்தியது ஆங்கிலேயர் ஆட்சியின் ஒரு முக்கியமான நிகழ்வாக கருதப்படுகிறது. 1882–ஆம் ஆண்டு ரிப்பன் பிரபு ஒரு தீர்மானத்தை முன் மொழிந்தார். அதன்படி ஊரக உள்ளாட்சி அமைப்புகளை ஏற்படுத்தவும் அதை மேற்பார்வையிட மாவட்ட அளவில் வாரியங்களை ஏற்படுத்தவும் நடவடிக்கை எடுத்தார்.

ரிப்பன் பிரபுவின் தீர்மானம், உள்ளாட்சி அமைப்புகளில் பெரும்பாலும் அதிகாரிகளல்லாதோரை கொண்டிருக்க வேண்டும் எனவும், அவர்கள் முடிந்தவரை தேர்ந்தெடுக்கப்பட்டவர்களாக இருக்க வேண்டும் எனவும் கூறியது. ஏறத்தாழ 500 உள்ளாட்சி அமைப்புகள் மூன்றில் இரண்டு பங்கு அதிகாரிகளல்லாதோரை கொண்டு தொடங்கப்பட்டன. அவர்களின் பெயர்களை மாவட்ட ஆட்சியர் பரிந்துரைத்தார். மாவட்ட வாரியங்களின் பணிகள் 1909–ஆம் ஆண்டு வரை காவல், கல்வி மற்றும் கிராம துப்புரவு முதலியவையாக மட்டுமே இருந்தன.

ரிப்பன் பிரபுவால் ஏற்படுத்தப்பட்ட உள்ளாட்சி அரசாங்கங்கள் பலரால் விமர்சிக்கப்பட்டன. ஆங்கிலேய அரசாங்கம் 1907–ஆம் ஆண்டு மத்திய அரசிற்கும், மாகாண மற்றும் அதன் கீழ் உள்ள அமைப்புகளுக்குமிடையே நிர்வாக மற்றும் நிதி உறவுகளைப் பற்றி விசாரிப்பதற்கு ஒரு விசாரணை ஆணையத்தை அமைத்தது. அப்போதைய நிர்வாக அமைப்பை நிர்வாக பகிர்வின் மூலம் மேம்படுத்தும் நோக்கத்துடன் அமைக்கப்பட்டது. இந்த ஆணையம் இந்திய அரசாங்க சட்டம் 1919–ன் படி மாகாண அரசாங்கங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர் எனும் அம்சம் அரசின் இரட்டை ஆட்சி முறையின் கீழ் ஏற்படுத்தப்பட்டது.

தமிழ்நாட்டின் கிராம உள்ளாட்சி அமைப்புகளின் எண்ணிக்கை 1926–ஆம் ஆண்டில் 1417 ஆகவும், 1937–ஆம் ஆண்டில் 6250 ஆகவும் அதிகரித்தது. இங்கு மூன்றடுக்கு உள்ளாட்சி அமைப்புகள் உள்ளன. அவை மாவட்ட வட்டார மற்றும் கிராம அளவில் உள்ளன. மாவட்ட மற்றும் வட்டார அமைப்புகளில் 1923—ம் ஆண்டு மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டன. மாகாணங்களில் இருந்த அலுவலரல்லாத தலைவர்கள் மாற்றப்பட்டு அலுவலர்கள் தலைவர்களாக



11th Std Political Science Tamil Medium Vol-2_Chapter 12.indd 120 29-09-2018 12:42:22

நியமிக்கப்பட்டனர். தமிழ்நாட்டில் பெரும்பாலான மாவட்ட நிர்வாக அமைப்புகளில் நீதிக்கட்சியின் உறுப்பினர்கள் 1927 ஆம் ஆண்டில் 545 பேர்கள் நியமிக்கப்பட்டனர். 1937-ல் முதல் 1947 ஆம் ஆண்டு வரை தேச சுதந்திர பிரச்சனை உட்பட பல பிரச்சனைகளை உள்ளாட்சி அமைப்பின் உறுப்பினர்கள் சந்தித்தனர்.

உங்களுக்குத் தெரியுமா?

இரட்டை ஆட்சி முறை மூலமாக நிர்வாக துறைகள் மத்திய அரசுக்கு ஒதுக்கப்பட்ட துறைகள் எனவும், மாகாண அரசுகளுக்கு மாற்றி தரப்பட்ட துறைகள் எனவும் இரு பிரிவுகளாக பிரிக்கப்பட்டது. காவல், சட்டம் ஒழுங்கு, நிதி போன்ற துறைகள் ஒதுக்கப்பட்ட துறைகள் எனப்படும். அவை ஆளுநரின் வசம் இருக்கும். கல்வி மற்றும் பிற துறைகள் மாற்றித் தரப்பட்ட துறைகளாகும். அவை தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளிடம் இருக்கும்.

இந்தியா 1947-ஆம் ஆண்டு சுதந்திரமடைந்த பின்பு, உள்ளாட்சி அரசாங்களுக்கு புத்துயிரூட்ட பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இந்தியாவில் பரவலாக்கப்பட்ட அதிகார அமைப்பு இருத்தல் வேண்டும், கிராமபுற பஞ்சாயத்துக்கு ஆளுகையில் பொறுப்புகள் அளிக்கப்பட வேண்டும் (தன்னிறைவு பெற்ற கிராம சுயராஜ்ஜியம்) என்று மகாத்மா காந்தி வலியுறுத்தினார்.

ஷர்மா நாராயணன் என்பவர் சுதந்திர இந்தியாவுக்கான காந்திய அரசியலமைப்பு தொடர்பான ஒரு திட்ட வரைபடத்தை தயாரித்தார். அதில் குடிமக்களின் சமூக, பொருளாதார அரசியல் நடவடிக்கைகளுக்கான அடிப்படை அமைப்பாக பஞ்சாயத்துகள் இருக்கும்படி அமைத்தார்.

கிராம பஞ்சாயத்துகள் குடிமை, அரசியல் மற்றும் நிர்வாகப்பணிகளைப் போல் உற்பத்தியை ஒருங்கிணைத்தல் மற்றும் வளங்களின் விநியோகம் தொடர்பான பொருளாதார பணிகளையும் மேற்கொள்ள வேண்டியுள்ளது. இந்த பொருளாதார நடவடிக்கையின் மூலமே கிராம சமூகங்கள் தன்னிறைவு அடைவதுடன் தங்களது அடிப்படை தேவைகளையும் பூர்த்தி செய்து கொள்ள முடியும்.

இதனால், நவம்பர் 26, 1949-ஆம் நாள் இந்திய அரசால் ஏற்றுக் கொள்ளப்பட்ட இந்திய அரசமைப்பின் பகுதி நான்கில் அமைந்துள்ள அரசின் வழிகாட்டு நெறிமுறைகளில், விதி 40 ஏற்படுத்தப்பட்டது. "அரசு கிராம பஞ்சாயத்துகளை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். அவைகள் சுய ஆட்சியின் அலகுகளாக பணிபுரிய தேவையான அதிகாரங்களையும், திறனையும் வழங்க வேண்டும்" என அரசியலமைப்பு பிரிவு 40 கூறுகிறது.

அரசின் வழிகாட்டு நெறிமுறைகளின் விதிகளின் படி செயல்படுவதற்காக 1952-ஆம் ஆண்டு பேரார்வத்துடன் சமூக மேம்பாட்டு திட்டம் தொடங்கப்பட்டது. இதன் முக்கிய நோக்கமாக மக்களின் கூட்டு முயற்சியின் மூலம் கிராமங்களின் சமூக பொருளாதார மாற்றத்தை உறுதி செய்வதாகும். இதற்கு தொழில் நுட்ப ஒத்துழைப்பையும், நிதி பங்களிப்பையும் அரசு செய்யும். இந்த திட்டமானது, தேசிய விரிவாக்க பணியாக பல்வேறு ஊரக பகுதிகளுக்கு விரிவாக்கம் செய்யப்பட்டது. அறிவியல் மற்றும் தொழில் நுட்ப அறிவை விவசாயம், கால்நடை வளர்ப்பு மற்றும் ஊரக கைவினை தொழில்களில் புகுத்துவது இதன் நோக்கமாக இருந்தது. இரண்டாவது ஐந்தாண்டு திட்ட காலமான 1956-ல் (1956-61) கிராம பஞ்சாயத்துகள் அமைப்பு ரீதியாக உயர்நிலைகளில் உள்ள மக்கள் நிர்வாக அமைப்புகளுடன் இணைக்கப்பட வேண்டும் என்று பரிந்துரைக்கப்பட்டது. 1957-ஆம் ஆண்டு, திட்ட வடிவமைப்பு குழு ஒன்றை, பல்வந்த்ராய் மேத்தா தலைமையில் மத்திய அரசாங்கம் அமைத்தது. மேத்தா குழு முக்கியமான இரண்டு பரிந்துரைகளை கூறியது

அவை: நிர்வாகம் பரவலாக்கப்பட வேண்டும் மற்றும் நிர்வாகம் உள்ளாட்சி அமைப்புகளின் கட்டுப்பாட்டில் இருக்க வேண்டும். இரண்டாவதாக, ஊரக வளர்ச்சி வட்டங்கள் மக்களாட்சி நிர்வாக அலகுகளாக மாற்றப்பட வேண்டும். அங்கு தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளை கொண்ட ஊராட்சி ஒன்றியம் மூலம் அப்பகுதியில் மேம்பாட்டு திட்டங்களை செயல்படுத்த வேண்டும். மேலும் மாவட்ட அளவில் ஊராட்சி ஒன்றிய தலைவர்கள், சட்ட மன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாவட்ட அளவிலான சுகாதாரம், விவசாயம், கால்நடை, கல்வி அலுவலர்கள் மற்றும் மாவட்ட ஆட்சியரை உறுப்பினர்களாக கொண்ட மாவட்ட மேம்பாட்டு குழு ஏற்படுத்தப்பட வேண்டும் என்றும் இக்குழு பரிந்துரைத்தது. இந்த மாவட்ட அமைப்பு ஒரு ஆலோசனை வழங்கும் அமைப்பாக மட்டுமே செயல்படும். மேத்தா குழுவின் பரிந்துரைகள் பெரும்பாலும் அனைவராலும் வரவேற்கப்பட்டன. பல்வேறு மாநிலங்களில் பஞ்சாயத்து ராஜ் சட்டங்கள் இயற்றப்பட்டன. ஏறத்தாழ 90 சதவீத இந்திய மக்கள் 1960 வாக்கில் பஞ்சாயத்து ராஜ் அமைப்புக்குள் கொண்டுவரப்பட்டனர்.

பஞ்சாயத்து அமைப்புகளின் செயல்பாடுகளை பற்றி ஆராயவும், அதனை செம்மைப்படுத்தவும் இந்திய அரசாங்கம், 1977-ஆம் ஆண்டு அசோக் மேத்தா தலைமையில் ஒரு குழுவை அமைத்தது. இக்குழு, பஞ்சாயத் ராஜ் அமைப்பு மக்களாட்சி பண்புகளை கொண்ட ஒரு உள்ளாட்சி அரசாங்க அமைப்பாக மாறவேண்டும், மேம்பாட்டு திட்டங்களை செயல்படுத்த வேண்டும். மேலும், அனைத்து பணிகளையும் ஒருங்கிணைத்து தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்க வேண்டும் என்றது. எனவே, இது தனது முதல் பரிந்துரையாக மாவட்ட பஞ்சாயத்து நேரிடையாக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்பாக இருக்க வேண்டும் என்றது. ஒரு தற்கால தீர்வாக, வட்டார அளவில் பஞ்சாயத்து ஒன்றியம் நீடிக்க பரிந்துரைத்தது. இது உள்ளாட்சி அரசாங்கத்தின் ஒரு அலகாக இல்லாமல், மாவட்ட பஞ்சாயத்திற்கு ஒரு இடைநிலை ஆதரவு கரமாக செயல்பட வேண்டும் என்றது. அசோக் மேத்தா குழு, 1978-ஆம் ஆண்டு தனது பரிந்துரையை சமர்பித்தது. இதன் எதிரொலியாக கர்நாடகா, மகாராஷ்டிரா, ஆந்திர பிரதேசம், மேற்கு வங்காளம் மற்றும் குஜராத் போன்ற மாநிலங்கள் தங்கள் மாநில பஞ்சாயத்து சட்டங்களில் திருத்தங்களை கொண்டு வந்தன.

உள்ளாட்சி அரசாங்கங்களை வலுப்படுத்த 1978 முதல் 1986 வரை, சி.எச். அனுமந்த்ராவ் குழு, ஜி.வி.கே. ராவ் குழு மற்றும் எல்.எம். சிங்வி குழு போன்ற பல குழுக்கள் ஏற்படுத்தப்பட்டன. இவையாவுமே அசோக் மேத்தா குழுவின் பரிந்துரைகளில் சிறுசிறு மாற்றங்களையே பரிந்துரைத்தன. ராஜீவ் காந்தி அரசாங்கத்தால் 1989-ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட 64-வது மற்றும் 65-வது சட்ட திருத்தம் மிக முக்கியமான ஒரு நிகழ்வாகும். ஆனால், இது மாநிலங்களவையில் நிறைவேற்றப்படவில்லை.

பின்பு, பல்வேறு முயற்சிகளின் விளைவாக 1992-ஆம் ஆண்டு, முந்தைய பல முயற்சிகளின் சிறப்பம்சங்களையும் உள்ளடக்கி, அரசாங்கம் 73-வது மற்றும் 74-வது சட்டத்திருத்த மசோதாவை 1992-ல் நாடாளுமன்றத்தில் அறிமுகப்படுத்தி இறுதியில் அது 1993-ஆம் ஆண்டு இரு அவைகளிலும் நிறைவேற்றியது.

இந்த 73-வது சட்ட திருத்தமும் 74-வது சட்ட திருத்தமும் இந்திய அரசமைப்பில் பகுதி IX மற்றும் IX(A) என்ற இரு பகுதிகளை இணைத்தது. அதில் அரசியல் சட்ட பிரிவுகள் 243 முதல் 243(ZG) வரை உள்ளது.

## 12.5 73-வது அரசமைப்பு சட்ட திருத்தம் - அமலாக்கம் மற்றும் அதன் விளைவுகள்

மக்கள்தொகை இருபது லட்சத்துக்கும் மிகாமல் உள்ள மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்கள் கிராமம், ஒன்றியம் மற்றும் மாவட்டத்தைக் கொண்ட மூன்றடுக்கு பஞ்சாயத்து அமைப்பு ஒன்றை ஏற்படுத்த வேண்டும் என 73-வது அரசமைப்பு சட்ட



11th Std Political Science Tamil Medium Vol-2_Chapter 12.indd 122 29-09-2018 12:42:22

திருத்தத்தின் மூலம் சேர்க்கப்பட்ட அரசமைப்பு சட்ட பிரிவு 243(B) கூறுகிறது. மாவட்டம் என்பது சாதாரணமாக வழக்கில் உள்ள ஒரு மாநிலத்தின் மாவட்டத்தை குறித்தாலும், கிராம மற்றும் ஒன்றிய பஞ்சாயத்துகளின் எல்லை பற்றி இந்த சட்ட திருத்தம் குறிப்பிடவில்லை. ஒரு கிராம பஞ்சாயத்தின் எல்லையை மாநில ஆளுநர் ஒரு அறிக்கை மூலமாக தீர்மானிக்கலாம். அது ஒன்றுக்கு மேற்பட்ட கிராமங்களை உள்ளடக்கியதாக இருக்கலாம். இதைப் போலவே இடைநிலையில் உள்ள பஞ்சாயத்தான ஒன்றிய பஞ்சாயத்தையும் ஆளுநர் தன் அறிக்கை மூலம் தீர்மானிக்கிறார். இது மாநில அரசுக்கு பஞ்சாயத்துகளை அமைப்பதிலும், பஞ்சாயத்து ஒன்றியங்களை அமைப்பதிலும் முழு சுதந்திரத்தை வழங்குகிறது.

அரசமைப்பில் ஒரு புதிய அட்டவணையாக 11-வது அட்டவணை சேர்க்கப்பட்டது. அது கட்டாய பணிகள் மற்றும் விருப்ப பணிகளை பஞ்சாயத்தின் மூன்றடுக்குகளுக்கும் தருகிறது.

(அ) கிராம அளவில் கிராம பஞ்சாயத்து உள்ளது.

(ஆ) மாவட்ட அளவில் மாவட்ட பஞ்சாயத்து உள்ளது.

(இ) 20 லட்சத்துக்கு மேல் மக்கள் தொகையைக் கொண்ட மாநிலங்களில் கிராம மற்றும் மாவட்ட பஞ்சாயத்துகளுக்கு இடைப்பட்ட அளவில் இடைநிலை பஞ்சாயத்துக்கள் உள்ளன.

ஒரு பஞ்சாயத்தில் உள்ள அனைத்து இடங்களும், தொகுதி மக்களின் நேரிடையான தேர்தல் மூலம் நிரப்பப்பட வேண்டும். ஒரு கிராம பஞ்சாயத்தின் வாக்காளர்களை கொண்ட அமைப்பு "கிராம சபை" என்று அழைக்கப்படுகிறது. ஒரு கிராம பஞ்சாயத்தின் வாக்காளர் பட்டியலில் உள்ள அனைவரும் கிராம சபை உறுப்பினர்கள் ஆவர்.

ஒவ்வொரு பஞ்சாயத்திலும், பஞ்சாயத்து தலைவர் அம்மாநில சட்டப்படி தேர்ந்தெடுக்கப்படுகிறார். அந்த சட்டப்படியே கிராம பஞ்சாயத்தின் தலைவருக்கும், ஒன்றிய பஞ்சாயத்தின் தலைவருக்கும் மாவட்ட பஞ்சாயத்தில் பிரதிநிதித்துவம்






11th Std Political Science Tamil Medium Vol-2_Chapter 12.indd 123 29-09-2018 12:42:22

## பதினோராவது அட்டவணை (பிரிவு 243G)

- விவசாயம் மற்றும் விவசாய விரிவாக்க பணிகள்
- நில மேம்பாடு, நிலச்சீர்த்திருத்தங்களை அமல்படுத்துதல், நிலங்களை ஒருங்கிணைத்தல் மற்றும் பேணுதல்.
- சிறிய நீர் பாசனங்களை நிர்வகித்தல், நீர் ஆதாரங்களை மேம்படுத்துதல்
- கால்நடை வளர்ப்பு, கோழி வளர்ப்பு மற்றும் பால் பண்ணை
- மீன் வளம்
- சமூக காடுகள் மற்றும் பண்ணை காடுகள்
- சிறு காடுகளின் மூலமான உற்பத்தி
- சிறு தொழில்கள், உணவு பதப்படுத்தும் தொழில்கள் உட்பட.
- காதி, கிராமம் மற்றும் குடிசைத் தொழில்கள்
- ஊரக வீட்டு வசதி
- குடிநீர்
- எரிபொருள் மற்றும் கால்நடை தீவனம்
- சாலைகள், சிறுபாலங்கள், பெரிய பாலங்கள், படகு, நீர்வழிகள்.
- ஊரக மின்மயமாக்கல் மற்றும் மின் விநியோகம்
- மரபு சாரா எரிசக்தி ஆதாரங்கள்
- வறுமை ஒழிப்பு திட்டங்கள்
- தொடக்க கல்வி மற்றும் மேல் நிலைக் கல்வி
- தொழில்நுட்ப பயிற்சி மற்றும் தொழில் கல்வி
- நூலகங்கள்
- கலாச்சார நடவடிக்கைகள்
- சுகாதாரம் மற்றும் துப்புரவு; மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார மையங்கள் மற்றும் மருந்தகங்கள் உட்பட
- குடும்ப நலன்
- பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாடு
- சமூக நலம்; மாற்றுத்திறனாளிகள் மற்றும் மன நலம் குன்றியோர் நலம் உட்பட
- நலிவடைந்த பிரிவினரின் நலம் குறிப்பாக பட்டியலினத்தவர் மற்றும் பழங்குடியினர்.
- பொது விநியோக முறை
- சமுதாய சொத்துக்களை நிர்வகித்தல்

அளிக்கப்படுகிறது. அது போலவே சட்டமன்ற உறுப்பினர்களும், நாடாளுமன்ற உறுப்பினர்களும் கிராம பஞ்சாயத்துக்கு மேல் உள்ள பஞ்சாயத்துகளில் உறுப்பினர்களாக உள்ளனர். இந்த சட்ட திருத்தம் சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் ஒன்றிய பஞ்சாயத்திலும், மாவட்ட பஞ்சாயத்திலும் பங்கு பெறுகிற வாய்ப்பை வழங்குகிறது. மேலும், பஞ்சாயத்தின் மூன்றடுக்குகளிலும் தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினருக்கு இடஒதுக்கீடு அளிக்கிறது. மேலும், பெண்களுக்கு மொத்த இடங்களில் மூன்றில் ஒரு பங்குக்கு மிகாமல் இடஒதுக்கீடு வழங்கப்படுகிறது. பஞ்சாயத்துகளின் பதவிக்காலம் ஐந்து ஆண்டுகள்.

**உங்களுக்குத் தெரியுமா?**

இந்தியாவின் 2011-ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி ஏறத்தாழ 2,50,000 கிராம பஞ்சாயத்துகள் உள்ளன.

மாநில சட்டமன்றத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட என்ன தகுதிகள் தேவையோ, அதே தகுதிகள் தான் ஒருவர் பஞ்சாயத்து தேர்தலில் போட்டியிட தேவைப்படும் தகுதிகள் ஆகும். பஞ்சாயத்தின் பொறுப்புகள் எவை என்று தெளிவாகவும் விரிவாகவும் அரசமைப்பின் பதினோராவது அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது. தேசிய நிதிக்குழு போலவே, மாநில நிதிக்குழு

ஒன்று உள்ளாட்சி அரசாங்கங்களுக்கு மாநில நிதியை பகிர்ந்து கொடுப்பதற்கும், அதில் பரிந்துரைகளை கொடுப்பதற்கும் அரசமைப்பு சட்டத் திருத்தத்தினால் ஏற்படுத்தப்பட்டது.

73-வது சட்டத்திருத்தத்தின் விளைவாக உச்ச நீதிமன்றம் அனைத்து உள்ளாட்சி அதிகாரிகளும் அரசாகவோ அல்லது அரசாங்கமாகவோ தான் கருதப்பட்டு அவ்வாறே நடத்தப்பட வேண்டும் என்று கூறியது. இதன் விளைவாக பஞ்சாயத்துகள் சட்டப்பூர்வ தன்மை பெறுகின்றன. அவை அரசின் கருவியாக அங்கீகரிக்கப்பட்டு மக்களின் பங்களிப்பு அமைப்புகளை கீழ்நிலைகளில் உருவாக்குகின்றன. அரசமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள அமைப்புகளான மாநில தேர்தல் ஆணையம், மாநில நிதிக்குழு போன்றவை பஞ்சாயத்துகளுக்கு நிலைத்தன்மையையும், நிரந்தர தன்மையையும் அளிக்கின்றன. அடிப்படை சேவைகளான குடிநீர், ஊரக துப்புரவு, சுகாதாரம், தொடக்க கல்வி போன்றவை உள்ளாட்சி அமைப்புகளின் பிரதான பணியாக இருந்த போதிலும் பெரும்பாலான பஞ்சாயத்துகள், மாநில அரசின் திட்டங்களை அமல்படுத்தும் நிறுவனங்களாகவே நடத்தப்படுகின்றன.

உங்களுக்குத் தெரியுமா?

**பஞ்சாயத்து ராஜ் (1959-2009)**

பொன் விழா ஆண்டு- அக்டோபர் 02,1959 ஆம் நாள் பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் ராஜஸ்தான் மாநிலம் நகவுரில் பஞ்சாயத்து ராஜ்-க்கு அடிக்கல் நாட்டினர். ஊரக இந்தியாவை ஆள்வதில் இது ஒரு புரட்சிகரமான படியாகும். கிராமங்களின் முழுமையான வளர்ச்சி மற்றும் மக்களின் கைகளில் அதிகாரத்தை அளித்தல் என்ற நோக்குடனான இந்த பயணம் அன்று தொடங்கியது.

மாவட்ட ஆட்சியரின் கீழ் செயல்படும் மாவட்ட நிர்வாகமானது, உத்தரவுகளை நிறைவேற்றும் நிர்வாக அமைப்பாக உள்ளது. இதில், கிடைமட்ட ஒருங்கிணைப்பு கீழ்நிலையில் இல்லாமல் இயங்கும் படியாக நம்முடைய மக்களாட்சி கட்டமைப்பு உள்ளது.

உள்ளாட்சி நிர்வாகமானது மேலும் பொறுப்புடனும், வெளிப்படை தன்மையுடனும் மற்றும் மக்களுக்கு பதிலளிக்கும் கடமை உணர்வுடனும் செயல்பட மத்திய மற்றும் மாநில அரசுகளில் மட்டுமல்லாது மாவட்ட மற்றும் கிராம அளவிலும் பிரதிநிதித்துவ அரசாங்கங்கள் ஏற்படுத்தப்பட வேண்டும். அவைகளுக்குள் நியாயமான வகையில் பணிகள் பிரிக்கப்பட்டிருக்க வேண்டும்.

**73-வது அரசமைப்பு சட்ட திருத்தத்தினால் (1991) ஏற்படுத்தப்பட்ட மூன்றடுக்கு பஞ்சாயத் ராஜ் அமைப்பு**

- மாவட்ட பஞ்சாயத்துகள் (தேர்ந்தெடுக்கப்பட்டோர் மற்றும் நியமிக்கப்பட்டோர்)
- ஊராட்சி ஒன்றிய குழு (தேர்ந்தெடுக்கப்பட்டோர்)
- கிராம பஞ்சாயத்து (தேர்ந்தெடுக்கப்பட்டோர்)
- கிராம சபை (ஒரு கிராமத்தின் அனைத்து வாக்காளர்களும்) (ஆலோசனை அமைப்பு)

## 12.6 74-வது அரசமைப்பு சட்ட திருத்தம் – அமலாக்கம் மற்றும் அதன் விளைவுகள்

74-வது அரசமைப்பு சட்ட திருத்தத்தின் படி நகர பகுதிகள் என்பவை வெவ்வேறு விதமான அளவுகள், குணம் மற்றும் முக்கியத்துவம் கொண்ட நகரங்களையும் பெரு நகரங்களையும் உள்ளடக்கியவை. மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகள், நகரியங்கள் மற்றும் பாளைய வாரியங்கள் என்பவை பொதுவான நகர்ப்புற உள்ளாட்சி அரசாங்க வகைகளாக உள்ளன. இதில் முதல் நான்கு வகைகளும் மாநில நகராட்சி சட்டங்களின் அடிப்படையிலும், பாளைய வாரியம் மட்டும் மத்திய சட்டமான, பாளைய வாரியங்கள் சட்டம், 1924-ன் அடிப்படையிலும் செயல்படுகின்றன.



11th Std Political Science Tamil Medium Vol-2_Chapter 12.indd 125 29-09-2018 12:42:22

அரசமைப்பின் 74-வது அரசமைப்பு சட்ட திருத்தம் 1922-ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்டு, ஜூன் 1993-ஆம் ஆண்டு அரசிதழில் வெளியிடப்பட்டது. இந்த 1992ம் ஆண்டு சட்டம் அனைத்து மாநிலங்களுக்கும் ஓர் ஆண்டு காலம் கால அவகாசம் வழங்கியது. அதற்குள் ஒவ்வொரு மாநிலமும், யூனியன் பிரதேசமும் தங்கள் சட்டங்களை தேவையான அளவு திருத்துவதன் மூலமோ மாற்றுவதன் மூலமே மத்திய சட்டத்தின் விதிகளை தங்கள் சட்டங்களில் ஏற்படுத்தி அதன் மூலம் நகர உள்ளாட்சி அரசாங்கங்களை அமைத்திட வேண்டும் என இச்சட்டம் கூறுகிறது. உதாரணமாக பஞ்சாப் நகராட்சிகள் சட்டம் 1911 மாற்றப்பட்டு பஞ்சாப் நகராட்சிகள் மசோதா 1998 கொண்டு வரப்பட்டதை கூறலாம்.

உங்களுக்குத் தெரியுமா?

கிராம சபை கூட்டங்கள் ஆண்டிற்கு நான்கு முறை ஜனவரி 26 குடியரசு தினம், மே 1 உழைப்பாளர் தினம், ஆகஸ்ட் 15 சுதந்திர தினம் மற்றும் அக்டோபர் 2 காந்தி ஜெயந்தி ஆகிய நாட்களில் நடத்தப்படுகிறது.

74-வது அரசமைப்பு சட்ட திருத்தத்தில் நகர உள்ளாட்சி அமைப்புகளில் மூன்றடுக்கு முறை பரிந்துரைக்கப்பட்டது. அவை பேரூராட்சிகள், நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகள். இவற்றைப் பற்றி விரிவாக காணலாம்.

### பேரூராட்சிகள்

ஒரு பகுதி, ஊரக பகுதியிலிருந்து நகர பகுதியாக உயரக்கூடிய நிலையில் இருந்தால், அப்பகுதி பேரூராட்சி என அழைக்கப்படும். இது நகராட்சிக்கும், ஊராட்சிக்கும் இடைப்பட்ட ஓர் நிலையாகும். இதன் மக்கள் தொகை 5,000-க்கு மேலும் 15,000-க்கு மிகாமலும் இருக்கும். அதன் வருவாய் ஈட்டலும் வருவாய் ஆதாரங்களும் ஊராட்சிக்கென்று அரசு நிர்ணையித்துள்ள வரம்பை விட அதிகரித்து இருக்கும். ஒரு பேரூராட்சியின் உறுப்பினர்கள் எண்ணிக்கை 3க்கு குறையாமலும் அதே சமயத்தில் 15-ஐ விட மிகாமலும் அம்மாநில சட்டம் கூறும் எண்ணிக்கையில் இருக்கும். இந்த பேரூராட்சி எந்த சட்டமன்ற தொகுதியின் எல்லைக்குள் வருகிறதோ அந்த சட்டமன்ற உறுப்பினர் மற்றும் மாநில அரசால் நியமிக்கப்படும் நகராட்சி நிர்வாகத்தில் அனுபவம் பெற்ற அல்லது சிறப்பு நிபுணத்துவமுடைய இரண்டு உறுப்பினர்கள் பேரூராட்சியின் தேர்ந்தெடுக்கப்படாத உறுப்பினர்களாக இருப்பர். இந்த நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள் பேரூராட்சி கூட்டங்களில் கலந்து கொண்டாலும் வாக்களிக்கும் உரிமை கிடையாது. ஒரு பேரூராட்சியின் பதவிக்காலம் ஐந்து ஆண்டுகளாக இருக்கும்.

இந்த பேரூராட்சியின் பகுதிகள் பல சிறு தொகுதிகளாக பிரிக்கப்பட்டு, அவை வார்டுகள் என அழைக்கப்படுகிறது. ஒவ்வொரு வார்டும் ஒரு வார்டு உறுப்பினரை தேர்ந்தெடுக்கும். அந்த பேரூராட்சியின் பட்டியலினத்தவர் மற்றும் பழங்குடியினர் எண்ணிக்கைக்கும் ஒட்டு மொத்த மக்கள் தொகை எண்ணிக்கைக்கும் உள்ள விகிதாசாரத்தின் அடிப்படையில் பட்டியலினத்தவருக்கும் பழங்குடியினருக்கும் வார்டுகள் இட ஒதுக்கீடு அடிப்படையில் ஒதுக்கப்படுகிறது. மேலும் ஒட்டு மொத்த வார்டுகள் எண்ணிக்கையில் மூன்றில் ஒரு பங்கு பெண்களுக்கு இட ஒதுக்கீடு அடிப்படையில் ஒதுக்கப்படுகிறது.

பேரூராட்சியில் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் ஒருவரை தலைவராகவும், மற்றொருவரை துணைத்தலைவராகவும் பேரூராட்சியின்கூட்டத்தில்தேர்ந்தெடுக்கின்றனர். இந்த கூட்டத்தை துணை ஆணையர் கூட்டுகிறார். ஒவ்வொரு பேரூராட்சிக்கும் கட்டாயம் செய்ய வேண்டிய பணிகளாக குடிநீர் வழங்கல், வடிகால், தூய்மை போன்றவை உள்ளன. ஒவ்வொரு பேரூராட்சிகளுக்கும் அரசு ஒரு செயல் அதிகாரியை நியமிக்கிறது.

### நகராட்சி

மக்கள் தொகை 15,000-க்கு மேலும் மூன்று இலட்சத்திற்கு கீழும் உள்ள சிறு நகரப் பகுதிகளில் நகராட்சிகள் ஏற்படுத்தப்படுகின்றன. அதே போல் அதன் வரி

வருவாய், மற்ற வருவாய்கள் அரசு நிர்ணயித்த அளவுக்குள் இருத்தல் வேண்டும். இதை அவ்வப்போது அந்தந்த மாநிலங்கள் தீர்மானிக்கும்.

| நகராட்சி நிலை | மக்கள் தொகை |
|---|---|
| **வகையினம் அ** | ஒரு லட்சமும் அதற்கு மேலும் |
| **வகையினம் ஆ** | 50,000 முதல் 1 லட்சம் வரை |
| **வகையினம் இ** | 50,000 க்கு கீழ் |

நகராட்சியின் வகையினம் அ-ல் 20 எண்ணிக்கைக்கு குறையாமலும், 50 எண்ணிக்கைக்கு மிகாமலும் தேர்ந்தெடுக்கப் பட்ட உறுப்பினர்கள் இருப்பர். அதேபோல் வகையினம் ஆ-ல் 15 முதல் 30 வரை, வகையினம் இ-ல் 10 முதல் 15 வரை தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர் இருப்பர். சட்ட மன்ற தொகுதி எல்லைக்குள் வருகின்ற நகராட்சிகளில், அந்த தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர் பதவி வழி உறுப்பினராக நகராட்சியில் இருப்பார். மூன்று உறுப்பினர்கள் வரை அரசாங்கம் நகர சபைக்கு நியமிக்கலாம். தலைவர் மற்றும் துணைத் தலைவர் தேர்தலில் நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள் பங்கு பெற்று வாக்களிக்க முடியாது. நகராட்சி உறுப்பினர்கள் மக்களால் ரகசிய வாக்கெடுப்பு முறை மூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

ஒட்டுமொத்த நகராட்சி பகுதியும், எத்தனை உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமோ அத்தனை வார்டுகளாக பிரிக்கப்பட்டுள்ளது. சட்டமன்ற தொகுதியின் வாக்காளர் பட்டியலில் நகராட்சி எல்லைக்குள் உள்ளவர்களே பொதுவாக நகராட்சியின் வாக்காளர்களாக எடுத்துக் கொள்ளப்படுவர். தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கு சின்னங்கள் ஒதுக்கப்படுகின்றன. அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் சின்னங்கள் அக்கட்சியின் வேட்பாளருக்கு வழங்கப்படும்.

தேர்தல் முடிவுகள் வெளியான 14 நாட்களுக்குள் துணை ஆணையர் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களின் கூட்டத்தை கூட்டி அவர்களுக்கு பதவி பிரமாணம் செய்து வைத்து தலைவர் மற்றும் துணைத் தலைவரை தேர்ந்தெடுக்க வகை செய்ய வேண்டும். நகர பஞ்சாயத்துகளைப் பொறுத்தவரையிலும் ஓர் நகரப் பகுதியில் உள்ள பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியினரின் மக்கள் தொகைக்கு ஏற்ற விகிதாச்சாரத்தில் அடிப்படையிலே தனி தொகுதிகள் நகர பஞ்சாயத்துகளில் ஒதுக்கீடு செய்யப்படுகின்றன. மேலும் கூடுதலாக பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியினப் பெண்கள் உட்பட மொத்த இடங்களில் 30 சதவிகிதம் பெண்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மக்கள் தொகை மூன்று லட்சத்திற்கு குறைவாக உள்ள நகராட்சிகளில் ஒன்றுக்கும் மேற்பட்ட வார்டுகளை இணைத்து வார்டு குழுக்கள் ஏற்படுத்தப்படும். அந்தந்த வார்டுகளில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள், வார்டு குழு உறுப்பினர்களாக இருப்பர். ஒவ்வொரு நகராட்சியிலும் நிலைக்குழுக்கள் ஏற்படுத்தப்படும். இதில் நகராட்சியின் தலைவர் மற்றும் துணை தலைவர், மேலும் வகையினம் அ-வாக இருந்தால் நான்கு உறுப்பினர்களையும் வகையினம் ஆ-வாக இருந்தால் இரண்டு உறுப்பினர்களையும் நகராட்சி உறுப்பினர்கள் தங்களுக்குள் தேர்ந்தெடுப்பர். இந்த நிலைக்குழுவின் பதவிக்காலம் இரண்டரை ஆண்டுகளாகும். நகராட்சியின் பதவிக் காலம் ஐந்து ஆண்டுகள். தேர்ந்தெடுக்கப்பட்ட நகராட்சி, சட்டப்படி செயல்படாத போது, அது பதவியிலிருந்து அகற்றப்படலாம்.

நகர சபை ஆண்டுக்கு ஒரு முறையாவது கூட வேண்டும். அக்கூட்டத்திற்கு நகர சபை தலைவர், அவர் இல்லையெனில் நகர சபை துணைத் தலைவர் தலைமை ஏற்பர். நகர சபை தன் பணிகளை செய்ய பல்வேறு துணை குழுக்களை அமைக்கிறது. இதில் நகர்மன்ற உறுப்பினர்கள் உறுப்பினர்களாக இருப்பர். அவர்கள் பிரச்சனைகளை ஆராய்ந்து, தீர்வுக்கான பரிந்துரைகளை அளிப்பர். இந்த குழுக்கள் இரண்டு வகைப்படும். அவை சட்ட பூர்வ குழுக்கள், சட்ட பூர்வமற்ற குழுக்கள் என இரு வகைப்படும். சிறப்பு தேவைகளுக்காக நகராட்சி அமைப்புகள் சில துணைக் குழுக்களை ஏற்படுத்தலாம் .



11th Std Political Science Tamil Medium Vol-2_Chapter 12.indd 127 29-09-2018 12:42:22

### நகர் மன்றம்

நகர்மன்ற சட்டத்தின்படி தேர்வு செய்யப்பட்ட நகர்மன்ற உறுப்பினர்களில் ஒருவர் நகர்மன்றத் தலைவராக ஒரு மாதத்திற்குள் தேர்வு செய்யப்படுகின்றார். நகர் மன்றம் தேர்தல் முடிந்தவுடன் உருவாக்கப்படுகின்றது. இந்த நகர்மன்ற தலைவரின் பதவிக்காலம் ஐந்து ஆண்டுகளாக இருக்கிறது. நகர்மன்றம் ஒன்று அல்லது இரண்டு துணை தலைவரையும் தேர்வு செய்கின்றது. இந்தியாவில் பல்வேறு மாநிலங்களில் உள்ள நகர்மன்றத் தலைவர்கள் பயணப்படி மற்றும் மாத ஊதியம் பெறுகின்றனர்.

நகர் மன்ற கூட்டங்களை கூட்டுவதும், அதற்கு தலைமை வகிப்பதும் நகர் மன்றத்தலைவரின் பணியாகும். மேலும் தவறு செய்யும் நகர்மன்ற உறுப்பினர் மேல் ஒழுங்கு நடவடிக்கையையும் எடுக்கிறார். நகர் மன்றத்தின் முதன்மை பேச்சாளர் நகர்மன்றத் தலைவர் ஆவர், அரசுடன் தகவல் தொடர்பும் மற்றும் அரசு விழாக்களில் பங்கு கொள்வதும் இவருடைய பணியாகும்.

ஒவ்வொரு நகர்மன்றத்திற்கும் ஒரு நிர்வாக அலுவலர் உள்ளார். அவரை மாநில நிர்வாகம் நியமனம் செய்கின்றது. நகர்மன்ற அலுவலர்கள் அந்த நிர்வாக அலுவலரின் கீழ் பணிபுரிபவர்களாக உள்ளனர்.

நகர்மன்றத்தை ஆளுகின்ற அமைப்பு நகர்மன்ற குழு ஆகும். இது நகர நிர்வாகத்திற்கு பொறுப்புள்ளது. மேலும் சட்டம் இயற்றுவது, நகர்மன்ற கூட்டத்தின் நேரம், கூட்டத்தை நடத்துவது போன்ற முடிவுகளை நிர்வாக அலுவலர் மேற்கொள்கிறார்.

நகர்மன்ற உறுப்பினர்கள் குடிமக்களின் குறைகளை கேட்டறிய வேண்டும், பொதுமக்களுடன் தொடர்பில் இருத்தல், நகராட்சி அலுவலர்கள் மீதான பொதுமக்களின் புகார்களை உரிய நிர்வாக தலைமையிடம் முறையிடல், நகர்மன்ற கூட்டத் தொடரில் மக்களின் குறைகளை எடுத்துரைப்பதும் இவர்களின் பணியாகும்.

நகர்மன்றத்தின் பணிகள், பொறுப்புகள் இந்திய அரசமைப்பில் 12-வது அட்டவணையில் கூறப்பட்டுள்ளது. 74-வது அரசமைப்பு சட்டத்திருத்தம், ஒரு மாவட்டம் முழுமைக்கும் ஒரு வளர்ச்சி திட்ட வரைவை ஏற்படுத்தும் நோக்கில் மாவட்ட திட்டகுழுவை ஏற்படுத்தியது. இதன் மூலம் மாவட்டத்திற்கு திட்ட அறிக்கை தயார் செய்யப்படுகிறது. உள்ளாட்சி மற்றும் நகராட்சியில் உருவாக்கப்படும் திட்டத்தினை ஒன்று சேர்ப்பது குழுவின் பணி.

1992-ஆம் ஆண்டு சட்டத்தின் படி மாவட்ட திட்டக்குழுவில் மொத்த உறுப்பினர்களில் ஐந்தில் நான்கு பங்கிற்கு குறையாமல் இருத்தல் வேண்டும். இந்த உறுப்பினர்களை மாவட்ட பஞ்சாயத்து உறுப்பினர்கள் மற்றும் அந்த மாவட்டத்தில் உள்ள நகர்மன்ற உறுப்பினர்கள் தங்களுக்குள் தேர்ந்தெடுக்கின்றனர். இந்த எண்ணிக்கை அந்த மாவட்டத்தின் நகர்ப்புற மக்கள் தொகை மற்றும் கிராமப்புற மக்கள் தொகையின் விகிதாச்சார அடிப்படையில் அமைந்திருக்கும்.

நகராட்சி அமைப்புகள் தனது பணிகளை மேற்கொள்வதற்கான செலவினங்களுக்கு வரி, கட்டணம் மூலம் வருவாய் ஆதாரங்கள் வழங்கப்பட்டுள்ளது. நகராட்சி அமைப்புகள் தனது நிதி ஆதாரங்களை உயர்த்திகொள்ள பல வகை வரி விதிப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன (உதாரணம் – நிலவரி, கட்டட வரி, விளம்பரத்தின் மீதான வரி, நெடுச்சாலை சுங்க வரி, சாலைவரி முதலானவை). 74-வது சட்ட திருத்தத்தின் படி, மாநில அரசுகள் இந்த சட்ட திருத்தத்தை தங்கள் மாநிலய சட்டத்தில் இணைத்துக் கொண்ட ஒரு வருட காலத்திற்குள், மாநில நிதிக் குழுவை அமைத்திடல் வேண்டும்.

**செயல்பாடு**

அரசமைப்பு 11-வது மற்றும் 12-வது அட்டவணையின் படி உள்ளாட்சி அரசாங்கங்களுக்கு ஏன் முக்கிய பொறுப்புகள் வழங்கப்பட்டுள்ளது என ஆராயவும்.



11th Std Political Science Tamil Medium Vol-2_Chapter 12.indd 128 29-09-2018 12:42:22

**அரசமைப்பின் 12–வது அட்டவணை:**
**நகராட்சியின் அதிகாரமும் – பொறுப்புகளும்.**

- நகரத் திட்டங்கள், நகரத்தை வடிவமைத்தல்.
- கட்டடங்களை கட்டுதல், நிலத்தை பயன்படுத்துதலை ஒழுங்குமுறைபடுத்துதல்.
- பொருளாதார மற்றும் சமூக மேம்பாட்டிற்கு திட்டமிடல்
- சாலைகள் மற்றும் பாலங்களை பராமரித்தல்.
- வீட்டு உபயோகத்திற்கு குடிநீர் விநியோகம் செய்தல்.
- பொதுச்சுகாதாரம் மற்றும் துப்புரவு பணிகளை மேற்கொள்ளுதல்.
- தீயணைப்பு பணிகள்.
- நகர்புற காடு மற்றும் சுற்றுப்புறச்சூழலை பாதுகாத்தல்.
- சமூகத்தில் நலிவடைந்தோர், ஊனமுற்றோர், மனநிலை குன்றியவர்கள் நலன்களை பாதுகாத்தல்.
- குடிசைப்பகுதிகளை மேம்படுத்துதல், தரத்தை உயர்த்துதல்.
- நகர்புற வறுமை ஒழிப்பு.
- பூங்காக்கள்,தோட்டங்கள்,விளையாட்டு மைதானங்கள் போன்ற நகர்புற வசதிகளுக்கு ஏற்பாடு செய்தல்.
- கல்வி மற்றும் கலாச்சார அம்சங்களின் வளர்ச்சியை ஊக்குவித்தல்.
- இடுகாடு மற்றும் சுடுகாடு மைதானங்களை பராமரித்தல்.
- கால்நடைக்கான குடிநீர் குட்டைகள் அமைத்தல் மிருகவதையை தடைசெய்தல்.
- பிறப்பு, இறப்பு ஆகியவற்றின் பதிவுடன் கூடிய மிக முக்கியமான புள்ளி விவரங்களைத் சேகரித்தல்.
- பேருந்து நிறுத்துமிடங்கள், கழிவறை, சாலை விளக்கு போன்ற பொது வசதிகளை செய்து கொடுத்தல்.
- வதைகூடங்கள் மற்றும் தோல் பதனிடும் தொழில்களை ஒழுங்குபடுத்துதல்.

**மாநில நிதிக்குழு கீழ்கண்டவற்றில் பரிந்துரைகளை அளிக்கலாம்**

அ. மாநில அரசாங்கத்திற்கும் மாநகராட்சிக்குமிடையே வரி, சுங்க சட்டங்கள் போன்றவற்றின் மூலமாக வரும் வருவாயை பகிர்ந்தளித்தல்.

ஆ. அந்த வருவாயை மாநிலத்திலுள்ள நகராட்சியின் பல நிலைகளுக்கும் ஒதுக்கீடு செய்தல்.

இ. நகராட்சிகளின் வரி வகைகள், சுங்க கட்டணங்கள் போன்றவற்றை நிர்ணயம் செய்தல்.

ஈ. மாநிலங்களுக்கு நிதி வழங்க உதவும் மானியங்கள்.

உ. நகராட்சியின் நிதி நிலைமையை மேம்படுத்த தேவைப்படும் நடவடிக்கைகள்.

ஆனால், யதார்த்தத்தில், மாநில சட்டம் எந்தெந்த பணிகளை நகராட்சிகள் செய்யலாம் என வரையறுத்திருக்கிறதோ, அந்த பணிகளை மட்டுமே நகராட்சிகள் செய்கின்றன. மாறி வரும் அரசியல் சூழ்நிலைகள் மற்றும் நாட்டின் தேவைகளின் வழியே காணும் போது நகராட்சியின் பணிகள் மீதான அந்த கட்டுப்பாடு சரியான ஒரு செயல்பாடாக கருத முடியவில்லை. சிறப்பு தேவை

செயலாண்மைகளை ஏற்படுத்துவதன் மூலம் நேரிடையாகவோ அல்லது மறைமுகமாகவோ உள்ளாட்சியின் பணிகளை தனதாக்கி கொள்ளும் மாநில அரசாங்கத்தின் போக்கு அதிகரித்து வருகிறது.

**செயல்பாடு**

ஒரு நகரத்தின் வணிக மையத்தை கற்பனை செய், அங்கே சாலையின் இரு புறங்களிலும் உள்ள நடைபாதையில் மரங்கள், மின்சார கம்பங்கள், வியாபாரிகள், நிறுத்தப்பட்டுள்ள வாகனங்கள் நிறைந்திருப்பதாக கற்பனை செய்யவும். அப்போது நடைபாதையில் இடமில்லாததால், மக்கள் சாலைகளில் இறங்கி நடக்க தொடங்கினால் என்னவாகும்? இது தொடர்பாக உள்ளாட்சி அமைப்புகளுக்கு அல்லது நகராட்சிக்கு உனது ஆலோசனை என்ன? பொது வசதிகள் அனைவருக்கும் கிடைக்க என்ன செய்ய வேண்டும்? 200 வார்த்தைகளுக்கு மிகாமல் எழுதவும்.

### மாநகராட்சி

இந்தியாவில் உள்ள நகர உள்ளாட்சி அமைப்பின் உச்ச அமைப்பு மாநகராட்சி ஆகும். பாராளுமன்ற சட்டத்தின் மூலமாகவும், மாநில சட்டமன்ற மற்றும் யூனியன் பிரதேசத்தின் சட்டம் மூலம் பெரிய நகரங்களில் மாநகராட்சிகள் நிறுவப்படுகின்றன. மக்கள்தொகை அடிப்படை, மற்றும் வருமான அடிப்படையில் நகரங்கள் தீர்மானிக்கப்படுகின்றன. ஆரம்ப காலத்தில் மாநகராட்சி அமைப்புகள் மும்பை, சென்னை மற்றும் கொல்கத்தாவில் உருவாக்கப்பட்டன.

மாநகராட்சி அமைப்பு மக்கள்தொகையின் அளவு தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதியைக் கொண்டு நகரத்தை நிர்வகிக்கும் தன்மை மற்றும் வயதுவந்தோர் வாக்கு பெண்கள் மற்றும் பட்டியலினத்தவர் / பழங்குடியினர் (SC/ST) மக்களுக்கு இட ஒதுக்கீடுடன் விகிதாச்சார அடிப்படையில் பிரதிநிதிகள் தேர்தெடுக்கப்படுகின்றனர். மாநகராட்சி அமைப்பு ஓர் சட்டப்பூர்வமான நிர்வாக அமைப்பு ஆகும்.

மாநகராட்சி மன்றம் மற்றும் நிலைக்குழுக்கள் இரண்டும் விவாதிக்கும் அமைப்பாகவும் செயலாக்க அமைப்பாகவும் உள்ளன.

நிலைக்குழுவின் பணியானது மாநகராட்சிக்கு துணையாக செயல்படுவது. நகராட்சி ஆணையின் பரிந்துரையின் அடிப்படையில் தான் அனைத்து திட்டங்களும் நகராட்சி குழுவில் நிறைவேற்றப்படுகின்றன. ஆணையர் மாநகராட்சியின் தலைமை நிர்வாகி ஆவார். மாநகராட்சி மன்றத்தால் இயற்றப்படும் கொள்கைகளை செயல்படுத்துவது அவருடைய தலையாயப் பொறுப்பாகும்.

இந்தியாவில் உள்ள மாநகராட்சி அமைப்புகள் மும்பையில் அமைந்த மாநகராட்சி அமைப்பை போன்றவை, மாநகராட்சி அமைப்பின் பதவிகாலம் 5 ஆண்டுகள் ஆகும். 74-வது சட்டத்திருத்தம் வார்டு குழுக்களை ஏற்படுத்தியது. மாநகராட்சியின் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வார்டுகளுக்கு அவை பொறுப்பாக இருக்கும். இதன் தலைவர் ஒராண்டுக்கு தேர்ந்தெடுக்கப்படுகின்றார். அவர் மீண்டும் தலைவர் தேர்தலில் போட்டியிடலாம். மாநகராட்சியில் உள்ள வார்டு உறுப்பினர்கள் கண்காணிப்பில் தான் குடிநீர் விநியோகம், துப்பரவுபணி, சாக்கடை இணைப்பு, தெருக்களில் நிறைந்துள்ள நீரை வெளியேற்றுவது மற்றும் திடக்கழிவுகள் சேமிப்பதும், அகற்றுவதும் தெருவிளக்கு அமைத்தல், பூங்காக்கள் அமைத்தலும் போன்றவை நடைபெறுகின்றன.

மாநகராட்சியில் நிலைக்குழு உருவாக்கப்பட்டு அதில் மேயர், துணை மேயர், வார்டு உறுப்பினர்கள் இடம்பெறுவர். மாநகராட்சி மன்ற உறுப்பினர்கள் தமக்குள்ளிருந்து ஒருவரை துணை மேயராக தேர்ந்தெடுக்கின்றனர். மேயர் நிலைக்குழுவின் தலைவர் ஆவார். மாநகராட்சி குடிநீர் விநியோகம், கழிவு நீரகற்றல் போன்றவற்றிற்காகவும் குழுக்களை அமைக்கிறது. ஒவ்வொரு குழுவிலும் 3-க்கு குறையாமலும் 5-க்கு மிகாமலும் இருப்பர்.

## செயல்பாடு

நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பில் புனே முதல் இடத்திலும் பெங்களூர் கடைசி இடத்திலும் உள்ளது. முதல் ஐந்து நகரங்கள் மற்றும் கடைசி நிலையில் உள்ள ஐந்து நகரங்கள்.

| முதல் 5 நகரங்கள் | தரவரிசை | கடைசி 5 நகரங்கள் | தரம் |
|---|---|---|---|
| புனே | 5.1 | சென்னை | 3.3 |
| கொல்கத்தா | 4.6 | பாட்னா | 3.3 |
| திருவனந்தபுரம் | 4.6 | டேராடூன் | 3.1 |
| புவனேஸ்வர் | 4.6 | சண்டிகார் | 3.1 |
| சூரத் | 4.5 | பெங்களூர் | 3.0 |

**நகரங்கள் எதிர்கொள்ளும் ஐந்து வகை சவால்கள்**

(அ) மாநகராட்சிகளில் உள்ள பொதுப் பயன்பாடு வசதிகளான சாலைகள், நடைபாதைகள், பேருந்து நிறுத்தங்கள் மற்றும் பாதாள சாக்கடை திட்டங்கள் போன்றவற்றில் நவீன காலத்திற்கு ஏற்றவாறு திட்டமிடுதலில் குறைபாடுகள்.

(ஆ) நிதிசார் பொறுப்புடைமை மற்றும் நிதி ஆதாரங்கள் வலுவற்று இருத்தல்.

(இ) பணியாளர் எண்ணிக்கை, திறமை மற்றும் போட்டியிடும் தன்மை, நிர்வாக வடிவமைப்பு போன்ற மனிதவள மேலாண்மை தொடர்புடையவைகள் பலவீனமாக இருத்தல்.

(ஈ) அதிகாரமற்ற மேயர்கள் மற்றும் மாநகராட்சி மன்றங்கள், நகராட்சிகள் மற்றும் மாநில அரசின் துறைகளில் ஆளுகைகள் ஒன்றுக்கொன்று தொடர்பில்லாமல் இருத்தல்.

(உ) குடிமக்களின் முறையான பங்கேற்பிற்கு வழியின்மை மற்றும் வெளிப்படை தன்மையற்ற நிதி செயல்பாடு.

**ஆதாரம்:** இந்திய நகர அமைப்புகள் பற்றிய வருடாந்திர கணக்கெடுப்பு (ASICS)

**நன்றி:** தி நியு இந்தியன் எக்ஸ்பிரஸ், 15.03.2018

இந்தக்குழுவின் பதவிக்காலம் ஓராண்டுகள் ஆகும். 74-வது சட்டத்தித்தின் மூலம் நிதி ஆதாரங்கள் மாநகராட்சிக்கு கொடுக்கப்பட்டுள்ளன. இந்திய அரசமைப்பின் 12-வது அட்டவணை மாநகராட்சி மேற்கொள்ள வேண்டிய 18 பணிகளை பட்டியலிட்டுள்ளது. 73-வது சட்டத்திருத்தை போல 74-வது சட்டதிருத்தத்திலும் நகர திட்டமிடலுக்கு குழு உருவாக்கப்பட்டுள்ளது.

நகராட்சியின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் மற்றும் பெருநகர எல்லைக்குள் உள்ள பஞ்சாயத்து தலைவர்களின் மொத்த எண்ணிக்கையில் இரண்டில் மூன்று பங்கிற்கு குறையாத எண்ணிக்கையில், தங்களுக்குள் இக்குழுவின் உறுப்பினர்களை இவர்களே தேர்ந்தெடுக்கின்றனர்.

அனைத்து மாநகராட்சியிலும் மேயர் மற்றும் துணைமேயர் இடம் பெற்றிருப்பார்கள். சில மாநிலங்களில் மேயர் மக்களால் நேரிடையாக தேர்ந்தெடுக்கப்படுவர். மாநகராட்சி மேயர் மன்ற கூட்டத்திற்கு தலைமை தாங்குகிறார். அமைதியையும், ஒழுங்கமைப்பையும் நிலை நாட்டுகிறார். மன்ற கூட்டங்களில் தவறாக நடக்கும் உறுப்பினர்களை நீக்கம் செய்யும் அதிகாரத்தையும் மேயர் பெற்றுள்ளார். மன்ற கூட்டங்களில் சமமான வாக்குகள் பெற்றிருக்கும் நிலையில் மேயர் தீர்மான வாக்கை அளிக்கமுடியும். ஆணையர் மாநகராட்சியின் தலைமை நிர்வாகி ஆவார். மாநகராட்சி ஆணையர் இந்திய நிர்வாக பணியை (IAS) சார்ந்தவர் ஆவார். மாநகராட்சி ஆணையரை நியமிக்கும் அதிகாரம் மாநில அரசிடம் இருப்பது மிகுந்த சர்ச்சைக்குரிய ஒன்றாகவே உள்ளது. மாநகராட்சி ஆணையரின் பதவிக்காலம் மூன்றாண்டுகள். இந்த கால அளவை மாநில அரசாங்கம் விரும்பினால் நீடிக்கலாம். மாநகராட்சி சட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் அரசின் முழு அதிகாரம் நிறைந்தவர் ஆணையர் ஆவார்.

## 12.7 தமிழகத்தில் உள்ளாட்சி அமைப்புகள்

73-வது மற்றும் 74-வது சட்டத்திருத்தத்தின் மூலம் தமிழகத்தில் தேர்தல் ஆணையம் உருவாக்கப்பட்டது, தமிழகத்தின் உள்ளாட்சி அரசாங்கம் பற்றி சுருக்கமாக பார்க்கலாம்.

73-வது சட்டத்திருத்தத்தின் மூலம் தமிழக அரசாங்கத்தின் அரசமைப்பு கடமைகளாக, அதிகாரத்துடன் கூடிய கிராம சபைகளை அனைத்து கிராமங்களிலும் உருவாக்குதல். பொதுவான மேற்பார்வை மற்றும் பஞ்சாயத்தின் வருடாந்திர திட்டங்களுக்கு ஒப்புதல் வழங்குதல் முதலான அதிகாரங்கள் பஞ்சாயத்து, மூன்று அடுக்குகளை கொண்ட உள்ளாட்சி அமைப்பை உருவாக்குதல் மாவட்ட பஞ்சாயத்து, ஊராட்சி ஒன்றியம், கிராம பஞ்சாயத்து போன்றவை உள்ளன.

இந்த உள்ளாட்சி அமைப்பில் பெண்கள், (பட்டியலினத்தவர்/பழங்குடியினர்) மற்றும் நலிவடைந்த பிரிவினருக்கு இடஒதுக்கீடும், வரி விதிக்கும் அதிகாரமும், நிதி ஆதாரம் பெறவும் வழிவகை செய்யப்பட்டன. மேலும் மாநில அரசிடமிருந்து நிதியைப் பெற்று பயன்படுத்துவதற்கு மாநில நிதி ஆணையம் ஏற்படுத்தப்பட்டது

### செயல்பாடு

மாணவர்கள் பல குழுக்களாக பிரிக்கப்பட்டு அவர்களை அருகில் உள்ள உள்ளாட்சி அமைப்பை சென்று பார்க்க செல்லவும். அதில் உள்ள பிரச்சனைகளை புரிந்துகொள்ள செய்யவும்.

**உங்களுக்குத் தெரியுமா?**

தமிழ்நாட்டில் 12,564 கிராம பஞ்சாயத்தும், 388 ஊராட்சி ஒன்றியமும், 31 மாவட்ட பஞ்சாயத்தும் உள்ளது.

74-வது சட்டத்திருத்தத்தின் மூலம் அதிகார பகிர்வு உருவாக்கப்பட்டு வரி விதிக்கும் அதிகாரம், மாநில அரசுடன் வருமான பகிர்வு, சீரான தேர்தல் நடத்துதல், பெண்கள் மற்றும் பட்டியலினத்தவர்/பழங்குடியினர் இடஒதுக்கீடு உருவாகின. மேலும் நாடு முழுவதும் ஒரே மாதிரியான நகர அமைப்பு உருவாகவும் வழி செய்தன.

73-வது சட்ட திருத்தம் படி, மாற்றங்கள் கொண்டு வருவதற்காக, தமிழ்நாட்டில் ஏற்கனவே அமலில் இருந்த தமிழ்நாடு பஞ்சாயத்துகள் சட்டம், 1958 மாற்றப்பட்டு தமிழ்நாடு பஞ்சாயத்துகள் சட்டம், 1994 புதிதாக இயற்றப்பட்டது. பின்பு இது 1996-ஆம் ஆண்டு திருத்தப்பட்டது. இந்த திருத்தத்தின் மூலம் வளர்ச்சிக்கான திட்டங்களை ஏற்படுத்த, மாவட்ட திட்டக்குழு,மாநில தேர்தல் ஆணையம் மற்றும் மாநில நிதி ஆணையம் போன்றவை உருவாக்கப்பட்டன.

## செயல்பாடு

- உனது பகுதியின் வளர்ச்சிக்கான வழிகளாக உள்ளாட்சி அரசாங்கங்கள் உள்ளன என நீ எண்ணுகிறாயா?
- உங்கள் பகுதியில் இருக்கும் உள்ளாட்சி அரசாங்கத்தின் செயல்பாடு பற்றிய உனது மதிப்பீடு என்ன? உனது ஆசிரியரிடம் இது தொடர்பான ஓர் அறிக்கையை அளிக்கவும்.

இந்த 1994 சட்டத்தின் படி தமிழ்நாட்டில் முதலில் நடைபெற்ற உள்ளாட்சி தேர்தலில் மொத்தமாக 1,17,000 பிரதிநிதிகள் பஞ்சாயத்தின் மூன்றடுக்குகளுக்கும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

### நகர உள்ளாட்சி அரசாங்கம்

74-வது சட்டத்திருத்தம் பல்வேறு மாநிலங்களில் நகர உள்ளாட்சி அமைப்புகளை உருவாக்க வழி செய்தது. தமிழகத்தில் நகர உள்ளாட்சி அமைப்புக்கான தேர்தல் 1996, 2001, மற்றும் 2011-ஆம் ஆண்டுகளில் நடைபெற்றது.

## 12.8 தற்கால பிரச்சனைகள்

உள்ளாட்சி அமைப்பில் உள்ள பல பிரச்சனைகளை நிபுணர்கள் அவ்வப்போது சுட்டிக்காட்டியுள்ளார். நிபுணர்கள் சுட்டிக்காட்டிய பிரச்சனைகளை பின்வரும் பகுதிகளில் காணலாம். முதலில் உள்ளாட்சி அமைப்புகளுக்கு குறிப்பிடத்தக்க அளவுக்கு பொறுப்புகளை அதிகப்படுத்தப்படவேண்டும். இதற்கு முன் அவை மாநில அரசின் பொறுப்புகளாக இருந்தது.

பல்வேறு நிலைகளில் உள்ள அரசாங்கங்களின் திறன் மற்றும் அவர்களின் கட்டுப்பாட்டு எல்லை போன்றவற்றை கருத்தில் கொண்டு முழு அரசு இயந்திரம் வகைப்படுத்தப்பட வேண்டும். இரண்டாவதாக, கிராம நீதிமன்றங்கள், காவல் துறையானது முழுமையாக மாநில அரசின் கட்டுப்பாட்டில் உள்ள நிலைமையில் இது சாத்தியப்படாது. மூன்றாவதாக, உள்ளாட்சி அமைப்புகளுக்கு பல விதமான பணிகள் கொடுக்கப்பட்டுள்ளன, அவற்றில் பல மாநில அரசின் துறைகளோடு தொடர்புடையவை.

சுருக்கமாக, சொன்னால் 73-மற்றும் 74-வது சட்டத்திருத்தம் பல சீர்த்திருத்தங்களை உள்ளாட்சி அரசாங்கத்தில் கொண்டுவந்துள்ளது. ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள், சீர்திருத்தங்களுக்கு முன்பு ஆங்கிலேயர்கள் உருவாக்கிய விதத்தில் இருந்தன. பல புதுமையான மாற்றங்கள் இந்த சட்ட திருத்தங்களினால் கொண்டு வரப்பட்டன. இந்தியாவில் இதுவரை 18 மாநிலங்களில் மட்டும் தான் தங்களது சட்டசபையில் உள்ளாட்சி அமைப்புகளை ஏற்படுத்த இசைவு தந்துள்ளன. மேலும் சில மாநில அரசாங்கங்கள் சட்டத்திருத்தத்திற்கு பிறகும், உள்ளாட்சி அமைப்பு உருவாக்க சட்டம் இயற்றிய பின்னும் பல பிரிவுகளை சரிவர செயல்படுத்தவில்லை, மேற்கூறிய காரணங்களால் உள்ளாட்சி அமைப்பில் உள்ள சிக்கல்கள் உள்ளன. அவை அகற்றபடாவிட்டால் 73-வது மற்றும் 74-வது சட்டத்திருத்தத்தின் நோக்கங்களை நிறைவேற்ற முடியாது.

உங்களுக்குத் தெரியுமா?

### பஞ்சாயத்து ராஜ்(1959-2018)

தமிழ்நாடு நகர்ப்புற சட்டங்கள் (நன்காவது சட்டத்திருத்தம்) மசோதா 2018 மற்றும் தமிழ்நாடு பஞ்சாயத்துகள் (இரண்டாவது சட்டத்திருத்தம்) மசோதா 2018 இரண்டும் ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் சிறப்பு அதிகாரங்களின் பதவிக்காலத்தை மேலும் ஆறு மாதங்களுக்கு நீட்டித்தது.

## செயல்பாடு

சில முன்னணி செய்தி தாள்களை எடுத்துக்கொள்ளவும், அவற்றில் பிரசுரிக்கப்பட்டுள்ள உள்ளூர் பிரச்சனைகளை பற்றிய தகவல்களை சேகரிக்கவும். அது பற்றி வகுப்பின் மற்ற மாணவர்களுடன் விவாதித்து தீர்வுகளை காண முயற்சிக்கவும்.

**உங்களுக்குத் தெரியுமா?**

12 மாநகராட்சிகளும், 148 நகராட்சிகளும், 561 பேரூராட்சிகளும் தமிழகத்தின் நகர உள்ளாட்சி அமைப்புகளாக உள்ளன.

## அருஞ்சொற்பொருள்

மாநகராட்சி: மாநகராட்சி என்பது பெருநகரத்தில் இயங்கும் உள்ளாட்சி அரசாங்கத்துக்கான சட்டப்படியான சொற்பதம் ஆகும். பத்து லட்சத்திற்கு அதிகமான மக்கள் தொகை கொண்ட பெருநகரங்களில், இவ்வகையான உள்ளாட்சி அரசாங்கம் செயல்படும்.

நகராட்சி: நகராட்சி என்பது நகரங்களில் இயங்கும் உள்ளாட்சி அரசாங்கத்துக்கான சட்டப்படியான சொற்பதம் ஆகும். இதன் அதிகார எல்லையையும், அதிகார வரம்பையும் மாநில மற்றும் மத்திய அரசின் சட்டங்கள் தீர்மானிக்கின்றன.

பாளைய வாரியங்கள்: பாளைய மத்திய அரசின் நிர்வாகத்திற்கு உட்பட்ட ராணுவ பகுதிகளாகும். அவை பாதுகாப்பு அமைச்சத்தின் நேரடி நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் வைக்கப்பட்டுள்ளன. இதன் நிர்வாக அமைப்பில் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள், நியமன உறுப்பினர்கள் மற்றும் பதவி வழி தலைவர்கள் இடம் பெறுவர். இதனை பாளைய வாரியச் சட்டம் 2006-ஆம் தீர்மானிக்கிறது.

பேரூராட்சி: ஒரு பேரூராட்சி 20000 முதல் 25000 வரையிலான மக்கள் தொகையை கொண்ட சிறிய நகரமாகும். பஞ்சாயத்துராஜ் நிர்வாக அமைப்பின் மூலம் இந்த அமைப்பு உருவாக்கப்படுகிறது.

பஞ்சாயத்து ராஜ்: பஞ்சாயத்து ராஜ் என்பது 1992-ஆம் ஆண்டின் சட்டத்திருத்தத்தின் மூலம் கொண்டு வரப்பட்ட உள்ளாட்சி அரசாங்கத்தை குறிக்கும் சொற்பதமாகும்.

கிராம சபை: கிராம சபை என்பது கிராம பஞ்சாயத்தின் வாக்காளர் பட்டியலில் பெயர் இடம்பெற்றுள்ள அனைவரையும் உள்ளடக்கிய அமைப்பு

மேயர்: ஒரு பெருநகரத்தை ஆள்கின்ற குழுவின் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்.

வார்டு: ஒரு உள்ளாட்சி அமைப்பின் நில பகுதிகள் வார்டுகளாக பிரிக்கப்பட்டிருக்கும். ஒவ்வொரு வார்டும் ஒரு உறுப்பினரை கொண்டிருக்கும். அவர் அந்த வார்டின் பிரதிநிதியாவார்.

கவுன்சிலர்: சபையின் உறுப்பினர்

நகர்பாலிகா: இந்தியாவில் நகர்பாலிகா என்பது 1,00,000 மக்கள் தொகைக்கு மேல் உள்ள நகர உள்ளாட்சியை நிர்வகிக்கும் அமைப்பு.

இரட்டையாட்சி: சுதந்திரமான இரு அதிகாரம் பெற்ற அமைப்புகளால் நடத்தப்படும் அரசாங்கம். (இந்தியாவில் 1919-ஆம் ஆண்டு முதல் 1935-ஆம் ஆண்டு வரை நடைப்பெற்றது)

## மதிப்பிடுதல்

### சரியான பதிலை தேர்ந்தெடுக்கவும்

PNYRI2

1. எப்பொழுது சென்னை மாநகராட்சி உருவாக்கப்பட்டது?

அ) 1870 ஆ) 1882
இ) 1687 ஈ) 1992

2. எப்போது ரிப்பன் பிரபு தீர்மானம் ஏற்கப்பட்டது?

அ) 1992 ஆ) 1858
இ) 1882 ஈ) 1870

3. எதன்மூலம் இரட்டை ஆட்சி முதலில் ஏற்படுத்தப்பட்டது

அ) இந்திய அரசாங்க சட்டம்1909 ஆ) இந்திய அரசாங்க சட்டம் 1919
இ) இந்திய அரசாங்க சட்டம் 1935 ஈ) இந்திய அரசாங்க சட்டம் 1958

4. நகர்பாலிகா சட்டம் கொண்டுவரப்பட்ட ஆண்டு

அ) 1989 ஆ) 1990
இ) 1991 ஈ) 1992

5) 73, மற்றும் 74 வது சட்டத்திருத்தத்தில் உள்ளாட்சி அமைப்பில் பெண்களுக்கு எவ்வளவு இடஒதுக்கீடு வழங்கப்பட்டது?

அ) 45
ஆ) 50
இ) தொகுதியில் பெண்களின் மக்கள் தொகையின் அடிப்படையில் வழங்கப்பட்டது
ஈ) 20

6. மாநில நிதி ஆணையத்தின் பொறுப்புகள்

அ) வரி வருவாய் மாநில அரசுக்கும், உள்ளாட்சி அமைப்புக்கும் பகிர்தல் தொடர்பான பரிந்துரை
ஆ) தேர்தல் குறித்த பிரச்சனையில் மாநில அரசுக்கு பரிந்துரைகள்
இ) நிதி நெருக்கடி நிலை பிரகடணம் குறித்து இந்திய குடியரசு தலைவருக்கு பரிந்துரைத்தல்
ஈ) மாநில அரசின் சட்டம் ஒழுங்கு நிதிநிலை குறித்து முதல்வருக்கு பரிந்துரைத்தல்

7. மாவட்ட திட்டக்குழு கீழ்வருவனவற்றால் உருவாக்கப்பட்டது

அ) 73-வது அரசமைப்பு சட்டத் திருத்தம்
ஆ) 73-வது அரசமைப்பு சட்டத் திருத்தம்
இ) 89-வது அரசமைப்பு சட்டத் திருத்தம்
ஈ) 94-வது அரசமைப்பு சட்டத் திருத்தம்

8. ஜவகர் ரோஜ்கர் யோஜ்னா

அ) வேலைவாய்ப்புக்கு உத்திரவாதமளித்தல் அழித்தல்
ஆ) பொதுத்துறை வங்கியில் கடன் பெறுதல்
இ) வீடு கட்டுதல்
ஈ) வெளிநாட்டில் வேலை பெறுதல்



11th Std Political Science Tamil Medium Vol-2_Chapter 12.indd 135 29-09-2018 12:42:23

9. எவ்வாறு டெல்லி வளர்ச்சி அமைப்பு 1957 டிசம்பர் 30-ல் உருவாக்கப்பட்டது

அ) டில்லி சட்டமன்றத்தின் மூலம்
ஆ) இந்திய குடியரசு தலைவரின் நிர்வாக உத்தரவின் பேரில்
இ) பாராளுமன்ற சட்டத்தின் மூலம்
ஈ) டில்லியின் துணைநிலை ஆளுநர் மூலம்

10) கீழ் வரும் எந்த தேர்ந்தலில் அரசியில் கட்சிகளுக்கு பங்கு இல்லை?

அ) மாநகராட்சி மேயர் தேர்தல்
ஆ) நகராட்சி தேர்தல்
இ) பஞ்சாயத்துதலைவர் மற்றும் வார்டு உறுப்பினர் தேர்தல்
ஈ) மாவட்ட வார்டு உறுப்பினர் தேர்தல்

11) உள்ளாட்சி அமைப்பின் தந்தை என கருதப்படுவர் யார்?

அ) மேயோ பிரபு
ஆ) ராபர்ட் கிளைவ்
இ) வாரன் ஹெஸ்டிங்
ஈ) ரிப்பன் பிரபு

12) மாநிலங்களில் உள்ளாட்சி தேர்தலை நடத்துவது

அ) மாநில தேர்தல் ஆணையம்
ஆ) இந்திய தேர்தல் ஆணையம்
இ) தலைமை தேர்தல் அதிகாரி
ஈ) மாநில அரசாங்கம்

13) இந்தியா அரசமைப்பில் உள்ளாட்சி அரசாங்கம் குறித்த சட்டவிதிமுறைகள் யாவை?

அ) உறுப்பு 40, உறுப்பு 243 முதல் 243(O). உறுப்பு 243(P) முதல் 243 ZG
ஆ) உறுப்பு 300 உறுப்பு 300 A
இ) உறுப்பு 3 A, உறுப்பு 43A
ஈ) உறுப்பு 32, உறுப்பு 117(1)

14) அரசமைப்பு சட்டத்தின்படி மூன்று அடுக்குகளை கொண்ட பஞ்சாயத் ராஜ் அமைப்பினை பொருத்துக.

அ) கிராம பஞ்சாயத்து- இடைநிலை பஞ்சாயத்து-மாவட்ட பஞ்சாயத்து
ஆ) ஊராட்சி ஒன்றியம்- மாவட்ட பஞ்சாயத்து- கிராம பஞ்சாயத்து
இ) மாவட்ட பஞ்சாயத்து- கிராம பஞ்சாயத்து- இடைநிலை பஞ்சாயத்து
ஈ) கிராம பஞ்சாயத்து- நகர பஞ்சாயத்து-மாவட்ட பஞ்சாயத்து இடைநிலை பஞ்சாயத்து

15) அ) **கூற்று:** 73 –வது திருத்தத்தின் மூலம் உள்ளாட்சி அமைப்புகள் ஏற்படுததப்பட்டன..

ஆ) **காரணம்:** மக்களாட்சியானது உள்ளாட்சி அரசாங்கங்களின் மூலம் அடித்தட்டு மக்களை சென்றடைந்தது

அமைப்பு விளக்கம் (அ) என்றும் காரணம் (ஆ) எனவும் பின் வருவனவற்றுள் எது சரியானவை?

அ) (அ) மற்றும் (ஆ) இரண்டு சரியானது
ஆ) (அ) மற்றும் (ஆ) இரண்டு சரியானது, ஆனால் (ஆ) சரியான விளக்கம் இல்லை.
இ) (அ) என்பது சரி ஆனால் (ஆ) சரியானது
ஈ) (அ) சரியில்லை ஆனால் (ஆ) சரியானது

## II பின்வரும் கேள்விகளுக்கு குறுகிய விடையளி

16) பஞ்சாயத்து ராஜ் அமைப்பின் படிநிலையில் குறுகிய நிலையில் உள்ள அமைப்பு எது?
17) கிராம சபை கூட்டம் வருடத்திற்கு எத்தனை முறை கூடுகிறது?
18) மாநகராட்சி மேயரின் பதவி காலம் என்ன?'
19) மாநில நிதி ஆணையத்தின் அதிகாரம் மற்றும் பணியினை விளக்குக.
20) ரஷ்யாவில் உள்ள உள்ளாட்சி அமைப்புக்கு நிர்வாக அதிகாரம் எதும் இருக்கின்றதா?
21) பஞ்சாயத்து ராஜ் அமைப்பு உருவாக்க எந்த குழு பரிந்துரை செய்தது?
22) கிராம பஞ்சாயத்தின் நிதி ஆதாரங்கள் எவை?
23) இந்தியாவில் பஞ்சாயத் ராஜ் அமைப்பு தேவை என்பதற்கான இரண்டு காரணங்களை கூறு-
24) தமிழ் நாட்டில் எத்தனை மாநகராட்சிகள் உள்ளன?
25) கேளிக்கை வரி விதிப்பதும், வசூலிப்பதும் யார்?

## III பின்வரும் கேள்விகளுக்கு சிறு குறிப்பு வரைக

26) பஞ்சாயத் ராஜ் அமைப்பின் மூன்று சிறப்பு தன்மைகள் கூறு
27) நகர பகுதியை வரையறு
28) உள்ளாட்சி அமைப்பின் கருத்தாக்கத்தை விளக்குக
29) இந்தியாவின் பெரு  நகரங்களில் உள்ள முக்கிய பிரச்சனைகள் என்ன?
30) மகாசபாவின் அமைப்பினை விளக்குக
31) உள்ளாட்சி நிர்வாகத்தில் ஆங்கில ஆட்சியில் கொண்டுவரப்பட்ட மாற்றங்கள் என்ன?
32) பெருநகர வளர்ச்சிக் குழுவின் பணிகளை விளக்குக.

## IV பின்வரும் கேள்விகளுக்கு விரிவான விடை எழுது

33) இந்தியாவின் பஞ்சாயத் ராஜ் அமைப்பு பற்றி விளக்குக
34) மாநகராட்சி மேயரின் அதிகாரம் மற்றும் பணியினை விளக்குக
35) மாநில தேர்தல் ஆணையம் குறித்து கட்டுரை எழுதுக
36) 73 மற்றும் 74-வது சட்டத்திருத்தத்திற்கு பின் இந்திய உள்ளாட்சி அமைப்பின் வளர்ச்சியினை கண்டறிக
37) இந்தியாவின் உள்ளாட்சி அரசாங்கத்தின் வளர்ச்சியினை கண்டறிக



11th Std Political Science Tamil Medium Vol-2_Chapter 12.indd 137 29-09-2018 12:42:23

## Internet Sources

- ❖ TamilNadu State Election commission. Introduction.
  http://tnsec.tn.nic.in/about_us/introduction.html
- ❖ Wikipedia . Local Bodies in TamilNadu.
  https://wikipedia.org/wiki/Local_bodies_in_Tamil Nadu
- ❖ Http://www.cssforum.com.pk/cssaccessed on 1/16/2018\
- ❖ Copy right material : enquiries to Jeffrey Hays ajhays@yahoo.com
- ❖ TamilNadu state election commission,
  http://www.tnsec.tn.in/about_us/introduction.html

## மேற்கோள் நூல்கள் (Reference books)


1. Basu, Durga Das., 2013. Introduction to the constitution of India.
2. Pardeep Sachdeva. 2011. Local Government in India. Delhi: Pearson.
3. Burton Stein. 1994. Peasant State and society in medieval south India. Oxford and New York : Oxford University Press.
4. Nirvikar Singh . 1997. Issues in local government in India. Department of Economics, University of California.
5. TamilNadu social development Report 2000.
6. International Scientific Researchers (ISR) 2012. Local Government system in South Africa. International Advances in Engineering and Technology (IAET). ISSN: 000.0000 Vol.9 September 2012




11th Std Political Science Tamil Medium Vol-2_Chapter 12.indd 138 29-09-2018 12:42:23



## ICT CORNER

### அலகு12 உள்ளாட்சி அரசாங்கங்கள்

தமிழ்நாட்டில் உள்ள
கிராமங்கள் பற்றி கற்று
கொள்ளலாம் வாருங்கள்




### உள்ளாட்சி அரசாங்கங்கள்

**படிகள்**


*படி 1:* கீழ்க்காணும் உரலி / விரைவுக் குறியீட்டைப் பயன்படுத்தி "Village maps". பக்கத்திற்குச் செல்க.


*படி 2:* ஏதேனும் மாவட்டம் பற்றி அறிய "district" ஐ சொடுக்கி (உதாரணமாக கடலூர்) துணை மாவட்டங்கள் மற்றும் கிராமங்களின் எண்ணிக்கை அறிக. வலது பக்கத்தில் உள்ள "Map" ஐ சொடுக்கி செயற்கை கோள் பதிவை காண்க.

*படி 3:* "Sub-District" ஐ சொடுக்கி (உதாரணமாக விருத்தாச்சலம்) இத்துணை மாவட்டத்தில் உள்ள கிராமங்களின் எண்ணிக்கையை அறிந்து, தெரிந்துகொள்க. வலது பக்கத்தில் உள்ள 'map' ஐ சொடுக்கி தெரிந்துகொள்க.

*படி 4:* ஏதேனும் கிராமத்தை ஐ சொடுக்கி கிராமத்தின் வரை படத்தை அறிக.


படி 1





படி 3

படி 2







படி 4

**உரலி :**

*படங்கள் அடையாளத்திற்கு மட்டும்.

இப்பக்கத்திற்கு தேவைப்பட்டால் *Flash Player or Java Script* ஐ அனுமதிக்கவும்

http://villagemap.in/tamil-nadu.html


B146_11_PSCI_TM



11th Std Political Science Tamil Medium Vol-2_Chapter 12.indd 139 29-09-2018 12:42:26

அலகு 13

# சமூக நீதி



## அறிமுகம்

சமத்துவம், நீதி குறித்து சமூகங்கள் இடையிலான விவாதங்கள் இருபதாம் நூற்றாண்டு பிற்பகுதிவரைகூட நடைபெறவில்லை. அதற்கு சில வரம்புகள் பின்பற்றப்பட்டு, ஒரு சமூகத்துக்குள் மட்டும் நிகழ்ந்தன. உதாரணமாக ஜான் ராவ்ஸ் அவர்களின் நீதிக்கோட்பாடு கூட முழுமையானதாக அமைந்திருக்கவில்லை. சமூகங்கள் இடையேயான செல்வப் பகிர்வு குறித்து அவர் ஆய்வு செய்யவில்லை. 1990களின் போதுதான், தொழில்மய நாடுகளுக்கும் வளரும் நாடுகளுக்கும் அதாவது பணக்கார நாடுகளுக்கும் ஏழை நாடுகளுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள இடைவெளிகளால் உருவாகியுள்ள அற நெறிப் பாதிப்புகள் குறித்து தத்துவவியலாளர்கள் எண்ணிப்பார்க்கத் தொடங்கினர். வளரும் நாடுகளில் வறுமை அதிகரித்து வருவதற்கு வளர்ந்த நாடுகளே பொறுப்பேற்க வேண்டும் என்று கூறும் ஜெர்மன் தத்துவவியலாளர் தாமஸ் போக்கே, இதன் காரணமாக லட்சக்கணக்கான மக்கள் மடிந்து வருவதைச் சுட்டிக்காட்டுகிறார்.



அதேபோல ஒரு நாட்டுக்குள் காலம் காலமாக பின்பற்றப்பட்டு வரும் அநீதியான பாகுபாட்டால் தொடர்ந்து பாதிப்புக்குள்ளான பிரிவினருக்கும் சமத்துவ ஆட்சியில் முன்னுரிமை தருவதன் அவசியமும் உணரப்பட்டுள்ளது. இதுவே சமூக நீதியின் அடிப்படைக் கோட்பாடாகும். உறுதிப்படுத்தும் நடவடிக்கை, நேர்மறை பாகுபாடு என்றும் அழைக்கப்படுகிறது. இவ்வாறு சமத்துவம், நீதி குறித்து மாறிவரும் கருத்தாக்கங்களையும் சமூக நீதியின் வரலாறு குறித்தும் இப்பாடத்தில் காணலாம்.

## கற்றலின் நோக்கங்கள்

- சமூக நீதி என்ற கருத்தாக்கத்தின் பல்வேறு பரிணாமங்கள்
- சமூக நீதியின் முக்கியத்துவம்
- பகிர்ந்தளிப்பு நீதியின் பொருள் மற்றும் முக்கியத்துவமும் – சமூக படிநிலையில் இதன் தாக்கமும்.
- ஜான் ராவ்சின் நியாயமான மற்றும் நேர்மையான சமுதாயம்
- தமிழகத்தில் சமூக நீதி இயக்கங்கள்
- உறுதியான நடவடிக்கை நேர்மறை பாகுபாடு பற்றிய கருத்தாக்கம் / அரசியல் கொள்கை
- சாதிப்பாகுபாடுகளும் அதன் பின் விளைவுகளும்
- சமத்துவ சமுதாயம்
- இட ஒதுக்கீட்டுக் கொள்கையும் அதன் தேவையும்
- வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதில் அரசாங்கத்தின் பங்கு
- சலுகைகளும் அதன் தாக்கமும்

## 13.1 சமூகநீதி என்றால் என்ன?

சமூகம் உருவாக்கும் எதிர்மறை மதிப்பீடுகள் சமத்துவமின்மையை, ஏற்றத்தாழ்வை உருவாக்குகிறது. சட்டென்று பார்க்கும் போது சிலருக்கு ஆண்-பெண் ஏற்றத்தாழ்வு இயற்கையானதாகவே தெரியும். ஆம், பல நூற்றாண்டுகளாக வாய்ப்புகள் மறுக்கப்பட்டதால் பெண்களின் "பலவீனமான' நிலை பலருக்கு இயற்கையானதாகவும் இயல்பானதாகவும் தோன்றலாம். ஆப்பிரிக்காவின் கருப்பு இனமக்கள் மீதான காழ்ப்புணர்ச்சியும் இதே வகையைச் சேர்ந்ததே. கருப்பின மக்கள் அறிவுலகில் பெரும் பங்களிப்பைச் செய்ய முடியாது என்றே திரும்பத் திரும்பச் சொல்லப்பட்டது. பல காலமாகத் தொடர்ந்த இந்த அவலம் நமக்கு இயல்பானதாக மாற்றப்பட்டிருக்கிறது. நமது நாட்டிலும் இதே நிலைதான். சாதியின் பெயரால் வாய்ப்பு மறுக்கப்பட்ட பலரது நிலை "இயற்கையானது' என்பது போல நமக்குச் சொல்லப்படுகிறது. ஆனால், இவை அனைத்துமே செயற்கையானது; நம் கண்களுக்குப் புலப்படாத அதேசமயம் பெரும் உருவம் கொண்ட 'அதிகாரம்' அங்கு ஊடுருவியிருக்கிறது என்பதை இன்றைய அறிஞர்கள் திட்டவட்டமாக அறிவிக்கின்றனர்.

சமூக அதிகாரத்தைக் கைக்கொள்வதில் ஏற்படும் போட்டிகளே ஒடுக்குமுறைகள் தோன்றிடக் காரணங்களாகும். தங்களுக்கென உருவாக்கிக் கொண்ட இயல்பான அடையாளக் கூறுகளைத் தற்காத்துக் கொள்வதற்கு அதிகார அமைப்புகளைக் கைப்பற்றிக் கொள்ள எண்ணுகின்றனர். 'பன்மைத்துவ'மான சமூக அமைப்பில் தனித்த ஒரு குழுவினர் மட்டும் சமூகமேலாதிக்கம் பெற்றவர்களாக உருவெடுப்பது அநீதியான போக்காகும்.

சமூகமேலாதிக்க உணர்வினைப் பெற்ற இன, மத, மொழி, சாதி மற்றும் பண்பாட்டுக் குழுவினர் மற்ற குழுவினரின் சமூக உரிமைகளைப் பறித்தெடுக்க முயலும்போது அல்லது தடுக்கும்போது சமூகப் பகை முரண்கள் உருவாகின்றன. தங்கள் மீதான மேலாதிக்கத்தை மறுத்துத் தங்களுக்கு உரிய உரிமைகளைச் சமமாகப் பெற்றிட நடத்துகிற போராட்ட உணர்வினையே சமூக நீதி என்கிறோம்.

### சமூகப்படிநிலைகளின் பின்புலம்




இந்தியாவில், புராதன காலத்து மரபுசார்ந்த சிந்தனையால் உருவான வருணாசிரம தர்மா சமூகப்படிநிலை, மேல்–கீழ் என்னும் பாகுபாட்டைக் கொண்டிருக்கின்றது. வருண படிநிலை அமைப்பு 'சதுர் வருண அமைப்பு' (நான்கு வருண அமைப்பு – அந்தணர், சத்திரியர், வைசியர், சூத்திரர்) என்று அழைக்கப்படுகிறது. பிறப்பின் அடிப்படையில் பேணப்படும் இப் பாகுபாடு, தலைமுறைகளாகத் தொடர்வதால் சமூகத்தில் ஆழமான ஏற்றத்தாழ்வுகள் உருவாயின.

**இன, மத, மொழி சிறுபான்மையினருக்கான ஐ.நா. பிரகடனம் — டிசம்பர் 18, 1992**

*பிரகடனத்தின் முக்கிய அம்சங்கள்:*

- சிறுபான்மை மக்கள் தனிப்பட்ட முறையிலும் பொதுவாழ்விலும் எந்த வகையான பாகுபாடும் குறுக்கீடும் இன்றி சுதந்திரமாக தங்கள் பண்பாட்டைப் பின்பற்றவும், மதத்தைக்கடைப்பிடிக்கவும், பிரச்சாரம் செய்யவும், மொழியைப் பயன்படுத்தவும் உரிமை பெற்றவர்கள் ஆவர்.
- சிறுபான்மை மக்கள் தங்களுக்கான அமைப்புகளை உருவாக்கவும் பராமரிக்கவும் உரிமை உண்டு.



11th Std Political Science Tamil Medium Vol-2_Chapter 13.indd 141 29-09-2018 12:42:51

- சிறுபான்மையினர் தங்கள் வரலாறு, மரபுகள், மொழி மற்றும் பண்பாடு பற்றிய அறிவை வளர்த்துக் கொள்ளவும் ஒட்டுமொத்த சமுதாயம் பற்றி அறிந்து கொள்வதற்கும் சிறுபான்மை மக்களுக்கு உரிய வாய்ப்புகள் அளிக்கப்பட வேண்டும்.
- ஏற்கனவே உள்ள மனித உரிமைகள் மற்றும் அடிப்படை சுதந்திரத்திற்கு இந்தப் பிரகடனம் எந்த வகையிலும் ஊறு விளைவிப்பதாக அமையக்கூடாது.

**இந்திய அரசமைப்புச் சட்டம் 1949: பிரிவு 15(4)**

சமூக மற்றும் கல்வியில் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் அல்லது பட்டியல் சாதி மற்றும் பழங்குடியினரின் முன்னேற்றத்திற்கான சிறப்புத் திட்டங்கள் உருவாக்குவதற்கு அரசமைப்புச் சட்ட விதி 29(2) தடையாக இருக்காது.

**இந்திய அரசமைப்புச் சட்டம் 1949: பிரிவு 16(4)**

அரசுப்பணியில் போதிய அளவு பிரதிநிதித்துவம்பெறாத அனைத்து பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான பணிநியமனங்களில் இட ஒதுக்கீடு வழங்க மேற்கொள்ளப்படும் செயல்களுக்கு இவ்விதி தடையாக இருக்காது

இந்தியா பல்வேறு தட்ப, வெட்ப புவிசார் நிலவியல் அமைப்பு கொண்ட பன்மைத்துவ நாடாகும். பல்வேறு மொழிகள் பேசும் தேசிய இனங்கள் வெவ்வேறு பண்பாட்டுடன் வாழ்ந்து வருகின்றனர். எனினும், இந்திய சமூக வளர்ச்சிப் போக்கில் ஏற்றத்தாழ்வுகள் வர்ண அமைப்பின் அடிப்படையில் அமைந்த படிநிலைகளால் உருவாகியுள்ளன. இத்தகைய ஏற்றத்தாழ்வுகளால் நலிவுற்ற பிரிவினரின் வாழ்க்கை மேம்பட, அவர்களையும் அரவணைத்து வளர்ச்சிபெற்றிட, நமது அரசமைப்புச் சட்டம் பல்வேறு விதமான வழிகாட்டு நெறிமுறைகளை முன் மொழிகிறது.

இயற்கை வளங்களோ தொழில் வளர்ச்சியோ இல்லாத பகுதிகளுக்கு ஏற்ப சிறப்புத்திட்டங்களை மாநில அரசு உருவாக்கிக் கொள்ள அரசமைப்புச் சட்டம் அனுமதி வழங்கியுள்ளது. அதனடிப்படையில் சமூகத்தில் கல்வி, பொருளாதாரத்தில் பின்தங்கியுள்ள நலிந்த பிரிவினருக்குச் சிறப்புச் சட்டங்கள் மற்றும் சலுகைகளையும் அரசமைப்புச் சட்ட வழிகாட்டுதலின்படியே அரசு வழங்கியுள்ளது. அனைத்துத் தரப்பினரையும் உள்ளடக்கிய வளர்ச்சி மற்றும் தன்னிறைவு பெற்ற சமூக வளர்ச்சிக்கு என்று சமூகநீதியை அடித்தளமாகக் கொண்ட சிறப்பு ஏற்பாடுகள் இன்றியமையாத தேவையாக உள்ளன.

நமது நாட்டின் சமூக மக்களாட்சி தழைத்திடவும், பன்மைத்துவம் வலிமைபெறவும் இன, மத பிரிவினர்கள் குழுக்கள் தங்கள் அடையாளங்களுடனும், அதிகாரப் பகிர்வுடனும், சகிப்புத்தன்மை உணர்வுடனும் வாழ்வதற்கான சமூக ஏற்பாடே சம வாய்ப்பு என்பதாகும்.

தொழில் புரட்சியைத் தொடர்ந்த மேலை ஐரோப்பிய சமூக அமைப்பில் ஏற்பட்ட பிரிவினை உணர்விற்கு பொருளாதாரம் அடிப்படை காரணமாகும். இந்திய சமூக அமைப்பில் ஏற்பட்டுள்ள பாகுபாடுகள் வைதீக புராணங்கள் அடிப்படையில் நால்வருண அமைப்பாக பாகுபடுத்தப்பட்டிருக்கிறது.

சமூகத்தின் உற்பத்திக் கருவிகளான நிலம் மற்றும் இயற்கை வளங்களை உடைமையாக்கிக்கொள்ளும் வாய்ப்பைப் பெறுகிறவர் முதலாளியாகவும் அத்தகைய உற்பத்திக் கருவிகளைப் பெற முடியாமல் தடுக்கப்பட்டு ஏழ்மை நிலையை அடைந்தவர்கள் தொழிலாளிகளும் ஆவார். நிலம் மற்றும் வளங்களைப் பெறும் வாய்ப்பு ஏற்படுகிறபோது அவரின் வர்க்கமும் மாற்றம்

அடைகிறது. எனவே, பொருளாதார அடிப்படையில் முதலாளி தொழிலாளி என சமூகப் பிரிவினை ஏற்பட்ட மேலை ஐரோப்பிய நாடுகளில் தொழிலாளி முதலாளி ஆவதற்குச் சமூகத்தில் நிரந்தரத்தடைகள் ஏதும் இல்லை. ஆனால், புராதண நூல்களின் அடிப்படையில் உருவான நால்வருணப் பாகுபாட்டுமுறையில் யாரும் தத்தம் வருணங்களை மாற்றிக்கொள்ள முடியாது. பிறப்பு முதல் இறப்பு வரை ஒரே வருணத்தில் மட்டுமே இருக்க வேண்டிய சமூகத்தடை உள்ளது.

வருண அமைப்பு தனிமனித மாண்புகளையும் உரிமைகளையும் மறுக்கிறது. ஆனால், இந்திய அரசமைப்புச் சட்டம் சரியான சமூகக் கண்காணிப்பு முறைகளையும், சட்டப் பூர்வமான நீதி வழங்கும் முறையினையும் கடைபிடித்து வருகின்றது. அவ்வாறு வழங்கப்பெறும் நீதி வருண,வர்க்க வேறுபாடுகளைக் களைவதுடன் சமத்துவக் கண்ணோட்டத்துடனும் அமைந்திருக்கிறது எனலாம்.

**விவாதம்**



மக்களாட்சி என்பது எண்ணிக்கை சார்ந்து பெரும்பான்மையினரின் விருப்பம் அல்லது எண்ணப் பிரதிபலிப்பு என்று புரிந்து கொள்ளப்படுகிறது. எல்லோருக்குமான பிரதிநிதித்துவம் என்பதே உண்மையான மக்களாட்சி என்பதே வளர்ந்து வரும் புதிய கண்ணோட்டமாகும். எல்லோரையும் உள்ளடக்கிய அமைப்பு முறையில் மக்களாட்சி செழிப்படையும். அவ்வாறு உருவாகும் மக்களாட்சி அமைப்பு முறைக்குள் "பன்மைத்துவ உணர்வு" ஏற்படும். பன்மைத்துவமான சிந்தனைகளும், பிரதிநிதித்துவமும்தான் நமது இந்திய ஜனநாயத்தின் வேர்களாகும்.

இந்திய அரசமைப்புச் சட்டம் மக்களாட்சி நெறிமுறைகளின்படி பாதிக்கபட்ட அனைவருக்கும் அதிகாரத்தைப் பகிர்ந்தளித்து அவர்களின் சமூக, பொருளாதார வாழ்க்கையினைப் பாதுகாக்கிறது. இத்தகைய சமூக வளர்ச்சிக்கான மாற்று செயல்முறைகளைக் கடைபிடிப்பதன் மூலம் சமூக விடுதலையும் சமூக நீதியும் உறுதிப்படுத்தப்படுகின்றன. எனவே, உயிரோட்டமான சமூகநீதி இந்தியாவின் ஒற்றுமையையும் ஒருமைப்பாட்டு உணர்வையும் பேணிக்காத்து நீதிப்பகிர்வினையும் மக்களாட்சி மாண்பினையும் உறுதிசெய்கிறது.

## 13.2 சமத்துவம் நிலவ சமூக நீதி அவசியம்

சமத்துவம் வேண்டும் என்று அனைவருமே ஏற்றுக்கொள்ளும் அதே நேரம், ஏற்றத்தாழ்வுகளும், பாகுபாடுகளும் நம்மை நிலைகுலைய வைக்கின்றன. வசதிகளில், வாய்ப்புகளில், பணிச் சூழலில் என்று பல தளங்களில் நிலவும் சமத்துவமின்மை பற்றி நாம் என்ன சொல்லப்போகிறோம்.? இது போன்ற ஏற்றத்தாழ்வுகளும் பாகுபாடுகளும் நமது வாழ்வில் தவிர்க்கமுடியாத மற்றும் நிரந்தரமான அம்சங்கள் என்று கருதமுடியுமா? இவ்வாறு வாய்ப்புகள் இன்றித் தவிக்கும் மக்கள் நமது நாட்டின் வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் பங்களிப்பு செய்ய நாம் கூடுதலாக என்ன செய்ய வேண்டும்? இது போன்ற சமத்துவமின்மைக்கு நமது சமூகத்தில் நிலவும் பண்பாட்டு மதிப்பீடுகள் எந்த அளவிற்கு காரணமாக இருக்கின்றன? இது மாதிரியான கேள்விகள் பல ஆண்டுகளாகவே நம் நாட்டினரை மட்டுமல்ல உலகெங்கிலும் பெரும் அதிர்வுகளை உருவாக்கி வந்திருக்கின்றன. அதனால்தான், சமத்துவம் என்பது சமூக, அரசியல் கோட்பாட்டில் முதன்மையான இடத்தைப் பிடித்திருக்கிறது என்றால் அது மிகையில்லை. முதலில், சமத்துவம் என்ற கோட்பாடு எதை சுட்டிக்காட்டுகிறது? நாம் அனைவரும் சமம் என்றால் அதன் உண்மையான பொருள் என்ன? சமத்துவத்தை உறுதிசெய்வது எப்படி? அவ்வாறு உறுதி செய்வதன் வழியாக நாம் சாதிக்க நினைப்பது என்ன? வருமானத்தில் இருக்கும் ஏற்றத்தாழ்வுகளை மட்டுமே நாம்



11th Std Political Science Tamil Medium Vol-2_Chapter 13.indd 143 29-09-2018 12:42:51

சரிசெய்ய நினைக்கிறோமா? எந்த மாதிரியான சமத்துவத்தை நாம் நிலைநாட்ட முயல்கிறோம்? நாம் எத்தனிக்கும் சமத்துவம் யாருக்கானது?

### சிறப்பு முன்னுரிமைக்கான தேவைகள்

ஏழைக்குடும்பத்தில் குடிசையில் பிறந்த காரணத்தினால் ஒரு குழந்தைக்கு தரமான கல்வி, மருத்துவம் மறுக்கப்பட்டால் அதற்கு எதிராக நாம் குரல் கொடுக்கிறோம்.



காரணம், அது அநீதி என்று கருதுகிறோம். ஆக, நாம் எதை ஏற்கிறோம், எதை மறுக்கிறோம் என்பதை புரிந்துகொள்வோம். ஒருவர் பெரும் மரியாதையோடு நடத்தப்படுவதற்கு அவரது மதம், சாதி, மொழி, இனம் மட்டுமே காரணம் என்றால் அந்த மரியாதையை ஏற்பதில்லை. அதேசமயம், இசை போன்ற ஒரு துறையில் ஆர்வம் கொண்ட ஒருவர் அவரது துறையில் சாதிக்க முயலும் போது, அவரது மதம், சாதி, பாலினம், இனம் போன்ற சமூக அடையாளங்களினால் அவருக்கு வாய்ப்பு மறுக்கப்படும் போது அது அநீதிக்கு வித்திடுகிறது. மனிதர்களிடம் இருக்கும் வேறுபாடுகள் என்ன? பாகுபாடுகள் என்ன? என்பதைப் புரிந்துகொள்வது மிக அவசியம். சமூக அடையாளங்களை முன்னிறுத்தி ஒருவருக்கு வாய்ப்பு மறுக்கப்படுவது அநீதி; அதுவே சமத்துவமின்மையை உருவாக வழிகோலுகிறது.

இனம், மொழி, சாதி, பாலினம், மதம் போன்ற வேறுபாடுகள் இருந்தாலும், மனிதர்கள் அனைவரும் தங்களது தனித்துவமான திறமையினை முன்னெடுத்துச் சென்று வாழ்வில் வெற்றி பெற வாய்ப்புகள் சம அளவில் வழங்கப்பட வேண்டும்.

சமூக, அரசியல் கோட்பாடுகளில், மிக முக்கியமான அம்சமாகக் கருதப்படுவது இயற்கையாகவே மனிதர்களிடம் நிலவும் வேறுபாடுகளுக்கும் சமூக, கலாச்சார ரீதியாக இருக்கும் பாகுபாடுகளுக்குமான வேறுபாடு போல, தனிநபர் விருப்பங்கள், திறமைகள் இயல்பானவை, தனித்துவமானவை. ஒருவருக்கான அங்கீகாரமும், மதிப்பும் தனி நபர்களின் சாதனைகள், தனி நபரின் திறமைக்குமாக இருக்கவேண்டும்; ஆனால், ஒரு சமூகம் உருவாக்கி வைத்திருக்கும் கலாச்சார, அரசியல், பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் செயற்கையானவை. இவற்றை பாகுபாடுகள் எனலாம்.


மக்களாட்சி நிலவும் நாடுகளில் அரசியல் சமத்துவத்தை எளிதாகப் புரிந்துகொள்ளமுடியும். மக்களாட்சி அரசுகள் தனது நாட்டு மக்கள் அனைவருக்கும் ஒரே மாதிரியான குடியுரிமையை வழங்கி வருகின்றன. குடியுரிமை என்பது வாக்குரிமை, கருத்துரிமை, இணைந்து செயல்படும் உரிமை, சங்கம் அமைக்கும் உரிமை, வழிபாட்டுரிமை என பல அம்சங்களைத் தன்னகத்தே கொண்டது. இவை அனைத்துமே மக்களாட்சி சிறப்பாகச் செயல்பட அவசியமாகும். அப்போதுதான், குடிமக்கள் அனைவரின் பங்களிப்புடன் அரசு செயல்படமுடியும். மேலும், அரசமைப்புச் சட்டம் அனைத்து குடிமக்களுக்கும் சட்ட உரிமைகளையும் வழங்கியுள்ளது. மக்களாட்சி நிலவும் பல நாடுகளில் குடியுரிமை உறுதி செய்யப்பட்டு இருந்தாலும், சமத்துவமின்மையும், ஏற்றத்தாழ்வுகளும் நிலவத்தான் செய்கின்றன.



11th Std Political Science Tamil Medium Vol-2_Chapter 13.indd 144 29-09-2018 12:42:51

## செயல்பாடு

**விரிவாக்கப்பட்ட கல்வி**



ஃப்ரன்ட் லைன் என்ற மாத இதழின் இணையதளத்திற்கு சென்று அங்கே நோபல் பரிசு பெற்ற பொருளாதார மேதை அமர்தியா சென் எழுதிய பாலின பாகுபாட்டின் பல்வேறு முகங்கள் என்ற தலைப்பிலான சிந்தனையைத் தூண்டும் கட்டுரையை வாசிக்கவும். அதில் அவர் ஏழுவிதமான பாகுபாடுகளை பட்டியலிடுகிறார்.

- இறப்பில் பாகுபாடு
- பிறப்பில் பாகுபாடு
- அடிப்படை வசதிகளில் பாகுபாடு
- சிறப்பு வாய்ப்புகளில் பாகுபாடு
- தொழிலில் பாகுபாடு
- உடைமை கொள்வதில் பாகுபாடு
- இல்லத்தில் பாகுபாடு

ஹார்வர்ட் பல்கலைக்கழகத்தில் ரேட் சினிப் கல்வி நிறுவனத்தில் ஆற்றிய தொடக்க உரையின் அடிப்படையில் எழுதப்பட்டது இந்தக் கட்டுரை. அதில் பாலின பாகுபாட்டின் பல்வேறு முகங்கள் பற்றி விரிவாக கூறியுள்ளார். இந்த கட்டுரையை படித்த பின்பு உனது கருத்துக்களை வகுப்பறையில் விவாதிக்கவும்.

அதன்படி பின்தங்கிய வகுப்பினருள் உள்ள பொருளாதார மேம்பாடு அடைந்தவர்களுக்கு இட ஒதுக்கீட்டில் இருந்து விலக்கு அளிக்கப்பட்டது.

## செயல்பாடு

அருகே நடைபெறும் கட்டுமானப் பணிகளை சென்று பார்வையிடவும். பணியின் தன்மை ஒன்றாக இருந்தும் ஆண் மற்றும் பெண் தொழிலாளர்களிடையே ஊதிய வேறுபாடு அங்கே இருக்கிறதா என்று கண்டறி.

## 13.3 நியாயமான விநியோகம் (Justice Distribution)

ஒரு சமுதாயத்தில் உள்ள பல்வேறு மக்கள் மாறுபட்ட விதத்தில் நடத்தப்பட வேண்டும் என்பதை நாம் ஏற்றுக்கொண்ட போது, யார், எப்படி நியாயத்தை உறுதிப்படுத்த முடியும் என்ற கேள்வி எழுகின்றன. சமூகத்தில் அனைவருக்கும் செல்வம், வாய்ப்பு போன்றவை சம அளவாகப் பகிர்ந்தளிக்கப்பட அரசாங்கம் சட்டம் இயற்ற வேண்டும். நியாயமாக வளங்களை அனைவருக்கும் வழங்குவதற்கு சட்டம் வழிசெய்கின்றன. சட்டத்தை செயல்படுத்தும் அமைப்புகள் வளங்களை விநியோகிப்பதை கண்காணிக்க வேண்டும். இதில் எந்தவிதமான அநீதிகளும் இடம்பெறக்கூடாது.



நம்மை போன்ற நாடுகளில் சமூக கலாச்சார ஏற்றத்தாழ்வுகள் நன்கு ஊன்றியுள்ளது. சமூகத்தின் அனைத்து பிரிவிற்கும் சுதந்திரம், வாய்ப்பு, செல்வம் மற்றும் சுய கௌரவத்தின் அடிப்படைகள் போன்றவை, சம அளவாகப் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும். இதில் எந்தவிதமான அநீதிகளும் இடம்பெறக்கூடாது.

சட்டமானது மக்கள் அனைவரையும் ஒன்று சேர்ப்பதற்கு முன்னரே, மக்கள் சில அடிப்படை சமத்துவங்களை பெற்று வாழ்வில் தனது நோக்கங்களை தொடர தேவையான சூழ்நிலைகள் அமைய வேண்டும். அரசும், சட்டமியற்றும் அமைப்புகளும் தீண்டாமை மற்றும் பிறசாதி பாகுபாடு நடவடிக்கை அகற்றி சமூகத்தில் நீதியை முறைப்படுத்துகின்றது.

சமூகத்தில் சமத்துவத்தை உருவாக்குவதும் அதை அனைவருக்கும் உறுதிப்படுத்துவதும் அரசமைப்பின் தலையாய கடமையாகும்.

**விவாதம்**



- விளையாட்டுகளில் அனைவருக்கும் சமமான வாய்ப்பு வழங்கப்பட வேண்டும். அரசாங்கத்தை, மக்கள் கேட்க முடியுமா?
- தனியார் துறை மற்றும் இராணுவத்தில் சம வாய்ப்பு வழங்குவதில் அரசாங்கத்தின் தலையீட்டை நாம் எதிர்பார்க்கலாமா?
- நம் குற்றவியல் நடைமுறை சட்டம் அனைவரையும் ஒன்றாக நடத்தாமல், வேறுபடுத்தி நடத்துமாறு நாம் கோர முடியுமா?

வரலாற்றுரீதியாக அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்டவர்களுக்கு சட்டரீதியாகவும், தார்மீகரீதியாகவும் உரிமை கிடைக்க அரசாங்கம் முக்கிய பங்காற்ற வேண்டும். சமத்துவத்தை உருவாக்குவதில் பரந்த மனப்பான்மை என்றும் தொண்டு எனவும் அரசாங்கம் நினைக்கக் கூடாது. சமூதாயத்தில் சமூக நீதியை நிலைநாட்ட மக்களை மாறுபட்ட விதத்தில் நடத்துவது அரசின் கடமையாகும், மேலும் நலிவடைந்த பிரிவினரின் அடிப்படை உரிமையாகவும், இதனைக்கொண்டு சட்டரீதியாகவும் அரசமைப்பில் தீர்வு காண முடியும். நலிவடைந்த பிரிவினருக்கு சம வாய்ப்பும் வேலைவாய்ப்பிலும், கல்வியிலும் ஏற்படுத்துவதில் அரசு முக்கிய பங்காற்றுகிறது. அரசு வேலைவாய்ப்பிலும் வாழ்வாதாரத்தை உறுதி செய்வதிலும் நவீன கல்வி முக்கிய பங்காற்றுகிறது. இதனை நிலைநிறுத்துவதற்கு சமூகத்தில் சமத்துவத்தை ஏற்படுத்தவும், சமவாய்ப்பினை ஏற்படுத்துவதும் அரசமைப்பின் முக்கிய நோக்கமாகவும் அங்கமாகவும் இருக்கின்றது.

இதனைப் பற்றி பல கருத்துகள் சமூகத்தில் நிலவுகிறது. நலிவடைந்த பிரிவினருக்கு வளங்களையும், சமவாய்ப்புகளையும் எவ்வாறு அளிப்பது என கேள்வி எழுகின்றது. மேல்தட்டு மக்கள் அரசின் மாறுபட்ட செயல்பாடு பாகுபாட்டை ஏற்படுத்தும் என கருதினர். கல்வி மற்றும் வேலைவாய்ப்பில் சமவாய்ப்பு நலிவடைந்தோருக்கு கிடைக்காது என்ற அச்சத்தில் இட ஒதுக்கீடு முறையை அரசு உருவாக்குவதன் மூலம் சமூகத்தில் சமவாய்ப்பினை ஏற்படுத்த முடியும் என்று நம்பினர்.

இட ஒதுக்கீட்டு முறையினால் நலிவடைந்த பிரிவினருக்கு வாய்ப்புகள் ஏற்படுத்தும் போது தகுதி பாதிக்கப்படுவதாக சிலர் கருதினர். ஆகையால் தொழிற்துறையில், பணியாளர்களின் திறமையை பாதிக்கும் என கூறப்படுகிறது.

அரசியல் அறிவியல் மாணவர்களான நாம் எவ்வித தயக்கமுமின்றி நீதியில் உள்ள பிரச்சினைகளை ஆராயவேண்டும். முதலில் நீங்கள் நலிவடைந்து, முன்னேற்றமடையாத மக்களுக்கு உதவ சில தலையீடு தேவை என்பதை ஒத்துக்கொள்கிறீர்களா?

நாம் சுதந்திரம் அடைந்து குடியரசு ஆன பின்னும் கல்வி, வேலைவாய்ப்பு மற்றும் வளங்கள் அனைத்தும் மேல்தட்டு மக்கள் வசமே இருந்தால் அது என்ன விளைவை ஏற்படுத்தும்? நாம் அனைவரையும் உள்ளடக்கிய நாட்டையா அல்லது குறிப்பிட்ட சிலருக்கான நாட்டையா? எதை அடையவேண்டும் எவ்வகையான சமூக நீதியை நாம் இறுதியில் பின்பற்ற வேண்டும்?



11th Std Political Science Tamil Medium Vol-2_Chapter 13.indd 146 29-09-2018 12:42:51

## 13.4 பகிர்ந்தளிக்கும் நீதி, மற்றும் தண்டிக்கும் நீதி

நீதி என்ற கோட்பாட்டை படிக்கும் போது வளங்களை எவ்வாறு சமூகத்தில உள்ள அனைவருக்கும் வழங்கவேண்டும் என்ற பொருள் விளங்கும். நீதி பற்றிய கருத்தை முழுமையாக புரிந்து கொள்வதற்கு இதில் உள்ள முக்கியமான கருத்துக்கள் மற்றும் பிரச்சனைகளை அறிய வேண்டும். அரசியல் தொடர்பானவற்றில் மரபு ரீதியான புரிதலில் பல நீதி பற்றிய முதன்மையான கோட்பாடுகள் நீண்ட விவாதத்திற்குட்பட்டுள்ளது. அனைவருக்கும் சமமான வளங்கள் பெறுவதற்கு பொது உரிமையாளர் கோட்பாடு, உரிமை கோட்பாடு போன்றவைகள் நீதி என்ற விவாதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### அ) வளங்களில் சமத்துவம்

இது வளங்களின் விநியோகம் நியாயமான முறையில் இருக்கவேண்டும் என கூறுகிறது. ஒவ்வொரு மனிதனும் சமமான வளங்களை கொண்டிருந்தால் அது நீதியாகும். வழங்கப்பட்ட ஒரு பணிக்கு அனைவரும் சமமான ஊதியத்தையோ அல்லது வெகுமதியையோ பெறுவதே நீதியை பெறும் வழியாகும். சமத்துவமின்மைக்கு தனிமனித செயல்பாடுகளே காரணமாகின்றன. ஒருவன் உழைப்பை தேர்ந்தெடுப்பதோ? அல்லது ஓய்வை தேர்ந்தெடுப்பதோ அவனது தேர்வாகும்.

இது சுய உடமைத்துவத்தையும் வளங்களின் உடமைத்துவத்தையும் நிராகரிக்கின்றது. அதே வேளையில் கடமைகளையும் பொறுப்புகளையும் வலியுறுத்துகிறது.

### ஆ) பொது உரிமையாளர் கோட்பாடு

ஆரம்ப நிலையில் ஒவ்வொரு மனிதனும் ஒரே அளவிலான நிலங்கள் மற்றும் வளங்களை நியாயமான விநியோகத்தின் மூலம் பெற்றிருக்கவேண்டும். இது தனி மனித முன்னுரிமையிலும் மற்றும் திறமையிலும் வேறுபாடின்றியும் இருக்கவேண்டும் என்பதை தெளிவாகக் கூறுகின்றது. சமூகத்தில் உள்ள அனைத்து தனிமனிதனும் சமமான திறமையை பெற்றுள்ளனர். ஆகையால், வளங்கள் அனைத்துக்கும் அனைவரும் உரிமையாளர் என்ற நிலைமையை உறுதிசெய்வதே நீதியை உருவாக்குவதற்கான ஒரே வழி,

### இ) உரிமை அளித்தல் கோட்பாடு

நிலம் மற்றும் பிற வளங்கள் வழங்கப்படுவதை வரலாற்று ரீதியாக நியாயப்படுத்த வேண்டும், என நியாயமான விநியோகம் விளக்குகிறது. தனிமனிதன் நிலம், மற்றும் பிற வளங்களுக்கு ஒருபோதும் உரிமையாளராக இல்லாத போது தானாகவே வளங்களும், நிலங்களும் அவர்களுக்கு மாறவேண்டும். அவ்வாறு வளங்கள் அவர்களுக்கு மாறுவது முற்றிலும் தானாகவே அமையவேண்டும். மனிதனின் திறமையும், வளங்கள் இந்த இரண்டுமே முக்கிய கண்ணோட்டத்தில் பார்க்கப்படுகின்றன. வளங்கள் என்றால் உதாரணமாக நிலமும், மனிதனின் அறிவு எனவும், கோட்பாடுகளில் மனிதனின் திறமை முக்கிய பங்காற்றுகிறது.

சமூகத்தில் நீதி நிலைக்க வேண்டுமானால் நீதி தண்டிப்பை விட நியாயமான நீதி விநியோகம் இருந்தால் மட்டுமே தீர்வு என்ற பெரும் கருத்தொற்றுமை உருவானது, நாம் எவ்வாறு தண்டிக்கும் நீதியை விளக்கப்போகின்றோம் ?

### ஈ) தண்டிக்கும் நீதி

தண்டிக்கும் நீதி எனும் கருத்தாக்கம் ஆனது பல சூழ்நிலைகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த வகை நீதியின் கட்டமைப்பை சில விதிகளை பின்பற்றுவதன் மூலம் ஒருவர் அறிந்து கொள்ளலாம்.

- தவறான செயல்களை செய்தவர்கள், கடும் குற்றம் இழைத்தவர்கள், அவர்களின் குற்றத்திற்கான சரியான தண்டனை பெற வேண்டும்.



11th Std Political Science Tamil Medium Vol-2_Chapter 13.indd 147 29-09-2018 12:42:51

- சட்டப்படி தண்டிக்கும் அதிகாரம் பெற்றுள்ள ஒருவரால் குற்றவாளிக்கு, அவரின் குற்றத்திற்கு ஏற்ற தண்டனையை வழங்குவதே தார்மீக அடிப்படையில் சரியானதாகும். ஒவ்வொரு குற்றவாளிக்கும் தண்டனை வழங்கும் செயலானது, தண்டிக்கப்படுபவர்களுள் ஒப்பு நோக்கப்படுகிறதோ அல்லது ஒப்பு நோக்கப்படவில்லையோ, ஆனால் தண்டிப்பது என்பது அவசியம். அதுவே சமூக நன்மைக்கு அவசியமாகிறது.
- இது வேண்டுமென்றே அப்பாவிகளை தண்டிப்பதை ஊக்குவிப்பதில்லை. மேலும் குற்றவாளிகளுக்கு அவர்கள் இழைத்த குற்றத்தை விட அதிகமான தண்டனை வழங்குவதையும் இது கண்டிக்கிறது.

தண்டிக்கும் நீதி எனும் கருத்தாக்கமானது நீதி மற்றும் தண்டனை கோட்பாட்டை உண்டாக்குவதில் முக்கிய பங்காற்றினாலும், இதன் முக்கிய அம்சங்களான விகிதாச்சார தண்டனை, துன்பத்தின் இயல்பு நிலை மற்றும் தண்டனையை நியாயப்படுத்துதல் போன்றவை சர்ச்சைக்குரியதாகவே உள்ளன.

இந்தியா போன்ற நாடுகளில், சிலர் தண்டிக்கும் நீதியின்படி வன்முறையின் மூலமாக தவறிழைப்பவர்களை தண்டித்து அதன்மூலம் நீதியை நிலை நாட்டலாம் என்கின்றனர். இன்றைய நவீன காலத்தில் அதை நாம் ஏற்றுக்கொள்ள முடியாது. நம்முடைய அரசமைப்பு தண்டிக்கும் நீதியை முற்றிலுமாக நிராகரித்துள்ளது. நம் அரசமைப்பு சிற்பிகள் வன்முறை வழிகள் அமைதியையோ அல்லது பிரச்சனைகளுக்கான தீர்வையோ கொண்டு வராது, நிலையான நீதியை வழங்காது என்று உறுதியாக நம்பினர்.

இப்பாடத்தின் நோக்கமே, நீதி பற்றிய பல்வேறு கண்ணோட்டங்களை உங்களுக்கு அறிமுகப்படுத்துவதுதான். அவைகளை கற்றுணரும்போது, நீதி பற்றிய எந்த கண்ணோட்டம் நம் இந்திய சூழ்நிலையில் நீதியை நிலைநாட்ட பொருத்தமானதாக இருக்கும் என்பதை நாம் அறியலாம். இந்த கண்ணோட்டங்களுள் நீதி பற்றிய ஜான் ரால்சின் கருத்துக்கள் முக்கியமானவையாக உள்ளன. நீதி பற்றிய அவர் கோட்பாட்டின் முக்கிய அம்சங்களை படிக்கலாம்.

## 13.5 ஜான் ரால்சின் நீதி கோட்பாடு

இருபதாம் நூற்றாண்டின் தலைசிறந்த சிந்தனையாளர்களுள் ஒருவராக ஜான் ரால்சன் கருதப்படுகிறார். நேர்மையான நீதி என்ற கருத்தியலின் அடிப்படையில் ஓர் நீதி கோட்பாட்டை அவர் உருவாக்கியுள்ளார்.


அவரது கட்டமைப்பு அனைத்து தனிமனித பண்புகளையும் ஒழுக்க ரீதியில் தன்னிச்சையானவை என்கிறது. இவரது நீதி சமத்துவத்தை கோருகிறது. இவரைப் பொறுத்தவரை சுதந்திரம், வாய்ப்பு, வருவாய், வளம் மற்றும் சுயமரியாதை என அனைத்தும் சமமாக பகிர்ந்தளிக்கப்பட வேண்டும்.

இதையே வேறு வார்த்தைகளில் கூறினால் சமத்துவமின்மையே அநீதி ஆகும். தனிமனிதன் எந்த ஒரு செயலோ அல்லது பண்போ மற்றவருக்கு பயனளிக்காத வகையில் இருக்குமாயின் அது அந்த சமூகத்தின் அநீதியான பண்பை காட்டுவதாக அமையும்.

இந்த கண்ணோட்டமானது நீதியை பற்றிய நமது புரிதலை விரிவாக்குகிறது. ராவ்ஸ் நீதியைப் பற்றி என்ன கூறுகிறார் என்று பார்ப்போம்.

### ஜான் ராவ்ஸ் சிறந்த படைப்புகள்

- நீதி கோட்பாடு – 1971
- நேர்மையான நீதி – 1985
- அரசியல்தாராளாவியல்– 1993
- மக்களின் சட்டம் – 1993



தண்டிக்கும் நீதி எனும் கருத்தாக்கமானது நீதி மற்றும் தண்டனை கோட்பாட்டை



11th Std Political Science Tamil Medium Vol-2_Chapter 13.indd 148 29-09-2018 12:42:52

உண்டாக்குவதில் முக்கிய பங்காற்றினாலும், இதன் முக்கிய அம்சங்களான விகிதாச்சார தண்டனை, துன்பத்தின் இயல்பு நிலை மற்றும் தண்டனையை நியாயப்படுத்துதல் போன்றவை சர்ச்சைக்குரியதாகவே உள்ளன.

இந்தியா போன்ற நாடுகளில், சிலர் தண்டிக்கும் நீதியின்படி வன்முறையின் மூலமாக தவறிழைப்பவர்களை தண்டித்து அதன்மூலம் நீதியை நிலை நாட்டலாம் என்கின்றனர். இன்றைய நவீன காலத்தில் அதை நாம் ஏற்றுக்கொள்ள முடியாது. நம்முடைய அரசமைப்பு தண்டிக்கும் நீதியை முற்றிலுமாக நிராகரித்துள்ளது. நம் அரசமைப்பு சிற்பிகள் வன்முறை வழிகள் அமைதியையோ அல்லது பிரச்சனைகளுக்கான தீர்வையோ கொண்டு வராது, நிலையான நீதியை வழங்காது என்று உறுதியாக நம்பினர்.

இப்பாடத்தின் நோக்கமே, நீதி பற்றிய பல்வேறு கண்ணோட்டங்களை உங்களுக்கு அறிமுகப்படுத்துவதுதான். அவைகளை கற்றுணரும்போது, நீதி பற்றிய எந்த கண்ணோட்டம் நம் இந்திய சூழ்நிலையில் நீதியை நிலைநாட்ட பொருத்தமானதாக இருக்கும் என்பதை நாம் அறியலாம். இந்த கண்ணோட்டங்களுள் நீதி பற்றிய ஜான் ரால்சின் கருத்துக்கள் முக்கியமானவையாக உள்ளன. நீதி பற்றிய அவர் கோட்பாட்டின் முக்கிய அம்சங்களை படிக்கலாம்.

ஜான் ரால்சின் இந்தக் கேள்விக்கான பதிலை கண்டறிய முயற்சித்தார். ஒரு கற்பனை சூழ்நிலையை நம்முடைய சிந்தனைக்கு அவர் தருகிறார். ஆம், ஒரு சமுதாயத்தில் இந்த படி நிலையில் நாம் இருக்கிறோம் என்று தெரியவில்லை. ஆனால் அந்த சமுதாயம் எவ்வாறு கட்டமைக்கப்பட வேண்டும் என்ற முடிவு எடுக்கும் ஒரு முக்கிய நிலையில் நாம் இருப்பதாக கற்பனை செய்து கொள்வோம். நாம் எந்தக் குடும்பத்தில் பிறந்து இருப்போம் என்று தெரியாது. அதைப்போல் நமது சாதி இனம் மதம் பாலினம் மற்றும் எந்த இடம் என்ற எதைப் பற்றியும் நமக்குத் தெரியாது. இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில் அந்த எதிர்கால கற்பனை சமுதாயத்தில் நாம் உருவாக்கும் விதிகள் மற்றும் சட்டங்கள் அனைவருக்கும் பொதுவானதாகவும் நியாயமானவையாகவும் மட்டுமே இருக்கும் என்று 'ஜான் ரால்ஸ்' கூறுகிறார். நமது எதிர்காலம் நிச்சயமற்றதாக இருக்கும்போது நாம் ஏற்படுத்தும் அமைப்பில் அனைவருக்கும் நியாயமான வழியில் அனைத்தும் கிடைப்பதாக இருக்கும்.

இந்த தருணத்தில் ஜான் ரால்ஸ் "அறியாமை திரை" யின் கீழ் சிந்திப்பது தொடர்பாக விவரிக்கிறார். நாம் சமுதாயத்தில் நம்முடைய நிலை என்னவென்று அறிந்திருக்கவில்லை புதிய சமுதாயத்தில் அவரவர் தங்களுக்கு உகந்த அளவில் சுயநல விருப்பங்களை கொண்டிருப்பர். ஆனால், ஆச்சரியப்படத்தக்க வகையில் எவருமே தாங்கள் தயாராக இருப்போம் என்றோ இது தங்களுக்குப் பயனளிக்கும் என்றோ அறிந்திருக்க மாட்டார்கள்.

மிக மோசமான நிலையின் வழியே தான் நாம் ஒவ்வொருவரும் எதிர்காலத்தைப் பற்றி கற்பனை செய்கிறோம். நாம் நம்மை எல்லா சிறப்புகளையும் எல்லா உரிமைகளையும் கொண்டிருக்கும் ஒருவராகத்தான் நினைப்போம். இந்த புதிய கற்பனை உலகத்தில் நாம் எங்கே எவ்வாறு இருப்போம் என்பதை நாம் அறிந்திருக்கவில்லை. அப்படி ஓர் சூழ்நிலையில் நாம் எதிர்பாராத விதமாக சமூகத்தின் பின்தங்கிய வகுப்பில் வாய்ப்பு வசதிகள் அற்ற ஒரு இடத்தில் பிறந்தால் என்னவாகும்? இந்நிலையில் உடனே சமூகத்தில் நலிந்த பிரிவினருக்கும் வாய்ப்புகள் மற்றும் வளங்கள் கிடைக்கும் படியான ஓர் அமைப்பை உருவாக்க முயற்சிக்கிறோம்.

நாம் பிரியும் தருணம் வந்தாலும் நம்மால் நம் அடையாளங்களை எளிதில் அழிக்க முடியாது. அறியாமை எனும் திரையின் கீழ் இருப்பதாக கற்பனை செய்யவும் முடியாது. இதைப்போலவே மக்கள் முன்பின் அறிமுகமில்லாத ஒருவருக்கு தியாகம்

செய்வதாகவோ அல்லது தங்களின் நல்ல எதிர்காலத்தை பங்கு போடுவார்கள் என்று எதிர்பார்க்கவோ முடியாது.

இருந்தபோதிலும் அறியாமை திரையின் பலன் என்னவெனில் இது மக்களை அவர்களின் இயல்பான பகுத்தறிவுடன் இருக்கச்சொல்கிறது. அவர்கள் தங்களுக்காக சிந்திக்க வேண்டும் என்று எதிர்பார்க்கப் படுகிறார்கள். அவர்களின் விருப்பத்தில் எது உயர்வாக உள்ளதோ அதைத் தேர்ந்தெடுக்க கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

கற்பனையான அறியாமை திரையை அணிந்துகொள்வது நேர்மையான சட்டங்கள் மற்றும் கொள்கைகள் கொண்ட அமைப்பை ஏற்படுத்துவதற்கான முதல் படி. இதுவே அவசியமானதுமாகும். இந்த நவீன காலத்தில் பகுத்தறிவு கொண்ட மக்களிடம் இது நம்பிக்கை கொண்டுள்ளது.அறநெறியின் அடிப்படையிலான பகுத்தறிவு ஒரு புதிய அரசியல் கட்டமைப்பை உருவாக்கும். அதில் மக்கள் தங்கள் சுயநல விரும்பிகளின் படி இல்லாமல் ஒட்டுமொத்த சமுதாய விருப்பங்களின் படியான கொள்கைகளைப் பற்றி சிந்திப்பார்கள் என்று ராவ்ஸ் கூறுகிறார். இந்த முழுமையான அனைவரையும் உள்ளடக்கிய கண்ணோட்டம் ஜான் ராவ்சின் கட்டமைப்பில் காணப்படுகிறது. இதை தெளிவாக கூறினால் சட்டங்கள் மற்றும் கொள்கைகள் சமூகத்தின் அனைத்து தரப்பு மக்களுக்கும் பயன் அளிக்கும்படி இருத்தல் வேண்டும். குறிப்பிட்ட ஒரு பிரிவினருக்கானதாக இருக்கக்கூடாது. இந்த நியாயமானது இரக்கத்தினாலோ அல்லது பெருந்தன்மையினாலோ இல்லாமல் காரண அறிவின் வெளிப்பாடாக இருத்தல் வேண்டும். ஜான் ராவ்சின் கோட்பாடானது நவீன காலத்தின் மிகச் சிறந்த பகுத்தறிவு மனிதர்கள் நம் சமூகத்தில் நீதியின் சக்தியை உணர வேண்டும் என்கிறது. நம் போன்ற சமூகங்களில் காரண அறிவுக்கு பொருந்தாத அடையாளங்கள் மற்றும் உணர்ச்சிகருத்துக்கள் முக்கியபங்காற்றுகின்றன. அவற்றை விடுத்து ஜான் ராவ்சின் வழியே அணுகும்போது நீதியின் உண்மையான ஆற்றலை கண்டு கொள்ள முடியும்.

**உங்களுக்குத் தெரியுமா?**

வேறு நாடுகளில் இருந்து புலம் பெயர்ந்து வந்த மக்களுக்கும் சில அடிப்படை உரிமைகளை பல நாடுகள் உறுதி செய்துள்ளன. புகலிடம் கோரிய மக்கள், தஞ்சம் அடைந்த மக்கள், அகதிகளாக குடியேறியோர் என பலதரப்பட்ட மக்களுக்கும் உரிமைகள் உள்ளன. ஐக்கிய நாடுகள் மன்றத்தின் உறுப்பு நாடுகள் பலரும் அங்கீகரித்துள்ளனர்.

## 13.6 சமூக, பண்பாட்டு சமத்துவம்

சமூகத்தின் பல பிரிவினரும் தங்களது பண்பாட்டு அம்சங்களைப் பின்பற்றவும் தங்களது தனித் திறமைகளுக்கு ஏற்ற வாழ்க்கைமுறையை அமைத்துக்கொள்ளவும் சமூகத்தில் சமத்துவம் நிலவுவது அவசியமாகும். ஒவ்வொரு நபருக்கும் நியாயமான வாய்ப்புகள் உறுதி செய்யப்பட வேண்டும். அதற்கு, சமூகத்தில் நிலவும் ஏற்றத்தாழ்வுகளை எவ்வளவு முடியுமோ அந்த அளவிற்கு நீக்கிட முயலவேண்டும்; அல்லது அதன் தாக்கத்தை குறைத்திட நடவடிக்கை எடுப்பது மேற்கொள்வது மிக அவசியம். உதாரணமாக, தரமான மருத்துவ வசதிகள், கல்வி, சத்தான உணவுகள், குறைந்தபட்ச ஊதியம் என்பது போன்ற அம்சங்கள் அனைவருக்கும் பாரபட்சமின்றி கிடைத்திடச் செய்வது அவசியம். இவை இல்லாத நிலையில், சமூகத்தில் அனைவரும் சமம் என்றோ அல்லது சம வாய்ப்பு பெற்றவர்கள் என்றோ கருதமுடியாது.

### நமது நாட்டின் பிரச்சினை என்ன?

சாதி – மதம் பெயரால் நீண்டகாலமாகப் பின்பற்றப்படும் நம்பிக்கைகள் பெரும் தடையாகிவிடுகிறது. உதாரணமாக, நாட்டில் பல பகுதிகளில், பெண்களின் நிலை கவலை தருவதாகவே உள்ளது. கல்வி, வேலைவாய்ப்பு, சொத்துரிமை என பல உரிமைகள் மறுக்கப்பட்ட நிலையிலேயே பெண்களின்

நிலை உள்ளது. இவ்வாறு நடத்தப்படுவதுதான் எங்களது பண்பாடு என சொல்லத் தொடங்கினால், அதன் விளைவுகள் பெரும் அபாயத்தை விளைவிக்கக் கூடியவை. அதாவது, ஏற்றத்தாழ்வுதான் எங்களது பண்பாடு என்று சொன்னால், அல்லது பாகுபாடுதான் எங்கள் பண்பாடு என்றால் அது சமத்துவத்திற்கான நமது பயணம்.

### பொருளாதார சமத்துவம்

ஒரு சமூகத்தில் தனி நபர்களிடம் நிலவும் சொத்து மதிப்பு, வருமானம் குறித்த ஏற்றத்தாழ்வுகளை வைத்து, அந்த சமூகத்தில் பொருளாதார சமத்துவம் இருக்கிறதா என்பதை ஓரளவிற்கு நம்மால் அறுதியிட்டுக் கூறமுடியும். அல்லது பணம் படைத்தவர்களுக்கும் ஏழைமக்களுக்கும் இடையில் இருக்கும் இடைவெளி அந்த சமூகத்தின் பொருளாதார நிலையினை நமக்குத் தெளிவுபடுத்தும். நாட்டில் வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழ்வோரின் எண்ணிக்கையினை வைத்து சில தீர்மானமான முடிவுகளுக்கு நம்மால் வரமுடியும் – இது பரவலாக பின்பற்றக்கூடிய வழிமுறை.

**விவாதம்**



தடையற்ற வாணிபத்தில் அரசின் குறுக்கீடுகள் பற்றிய விவாதத்தை மேற்கொள்ளவும்.

ஆனால், சில பாகுபாடுகள் பண்பாட்டு ரீதியாக நியாயப்படுத்தப்படும் போதுதான், பிரச்சினை பெரிதாகிறது. இத்தகைய பின்னடைவுகளை மக்கள் கவனத்துக்குக் கொண்டு விழிப்புணர்வு ஏற்படுத்துவதில் காலத்தின் தேவைக்கேற்ப சீர்திருத்தவாதிகள் ஈடுபட்டனர்.

"மனிதனை மனிதனாகக் கருதமுடியாமல், அவரது சாதியை மட்டுமே வைத்து எடைபோட முயலும் சிந்தனை காட்டுமிராண்டித்தனமானது" என்று வலியுறுத்திய தந்தை பெரியார், பண்பாடு, கலாச்சாரம், நாகரீகம் என்ற பெயரில் சமத்துவத்தை மறுக்கும் அத்தனை அம்சங்களையும் கடுமையாக நிராகரித்தார். பெண்களை அடிமைப்படுத்த நாம் உருவாக்கி வைத்திருக்கும் அத்தனை சமூக அமைப்புகளையும் வன்மையாகக் கண்டிக்கும் பெரியார், சாதி, மத, பாலின பேதமற்ற சமூகமே உயரிய சமூகம் என்று அறிவித்தார். மொழி மேல் வெறியும், தங்களது பண்பாடு மேல் தீவிர பற்றும் கொண்டுள்ள நபர்களால் நவீன சமூகத்தை உருவாக்க முடியாது என்று திட்டவட்டமாக வாதாடினார். இவ்வாறு சமத்துவதின் பல்வேறு பரிமாணங்களை நமக்கு பலரும் முன்வைத்துள்ளனர்.

இதுவரை சமூகத்தில் தங்களது குடும்ப மரபு, பிறப்பு இவற்றின் அடிப்படையில் உயர் இடத்தையும் பெரும் அங்கீகாரத்தையும் பெற்ற நபர்களின் சிறப்புநிலை முடிவுக்கு வரவேண்டும். பிறப்பின் அடிப்படையில் சமூகத்தில் ஒருவரின் தகுதி நிர்ணயிக்கப்படுவது சமத்துவமின்மையில் முதன்மையான அம்சம் எனலாம். இதை நிராகரித்து அனைவரும் சமம்; எனவே எந்த ஒரு தகுதிக்கும் அங்கீகரத்திற்கும் பொதுவான தேர்வு முறையினைப் பின்பற்றிட முயல்வது சமத்துவத்திற்கான முதல்படி. இதுவரை, உலகின் பல நாடுகளில் ஏழை மக்களுக்கு வாக்களிக்கும் உரிமை மறுக்கப்பட்டு இருக்கிறது; பெண்களை கல்வி கற்கவும் பொது இடங்களில் பணி செய்யவும் தடை செய்திருக்கும் நாடுகள் பல. நமது நாட்டில், ஒருசில கடை நிலைப் பணிகளைத் தவிர, சாதி ரீதியாக பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு உயர் பதவிகளைப் பெறுவதில் இருக்கும் பெரும் தடைகள் நாமறிந்ததே.

இது மாதிரியான பாகுபாடுகளைக் களைந்திட காலம் காலமாகத் தொடரும் பல சிறப்பு தகுதிகள் முடிவுக்குக் கொண்டுவரப்பட வேண்டும். சில நேரங்களில், குறிப்பிட்ட சமூகப் பிரிவினருக்கு தொடர் புறக்கணிப்புகள் காரணமாக சிறப்பான அல்லது கூடுதல் கவனம் தேவைப்படுகிறது. அப்போதுமட்டுமே,


உண்மையான சமத்துவத்தை நாம் நெருங்குகிறோம் என்று பொருள். எனவே, வரலாற்று ரீதியாக நிகழ்ந்திருக்கும் அநீதிகளை இனம் கண்டால் மட்டுமே, சமத்துவம் என்பதன் முழுப்பொருளையும் நாம் எட்டமுடியும்.


அரசின் சமச்சீர் நடவடிக்கைகளில் முக்கியமானது இடஒதுக்கீடு. கல்வி, வேலை வாய்ப்பில் குறிப்பிட்ட அளவு இடங்களை ஒதுக்கீடு செய்து, இதுவரை வாய்ப்பு மறுக்கப்பட்ட பிரிவினருக்கு முன்னுரிமை வழங்குவதே இதன் அடிப்படை நோக்கம். ஆனால், இது பாகுபாடின் மறுவடிவமே என்று வாதிடும் சிலரும் உண்டு. இடஒதுக்கிட்டின் மூலம் திறமையின்மை புதிய அங்கீகாரம் பெற்றுவிடும் எனவும், சாதிரீதியான பாகுபாடு களையப்படாமல் உறுதிப்பட்டுவிடும் என்றும் இடஒதுக்கீட்டின் எதிர்ப்பாளர்கள் வாதிடுகின்றனர்.

பன்னெடுங்காலமாகத் தொடர்ந்துவந்த சாதி, மத பாலின ஏற்றத்தாழ்வுகளை மிக விரைவாக நம்மால் களையமுடிந்தால் அது வரவேற்கத்தக்கதே. அப்படிப்பட்ட சமூக, பண்பாட்டு மாற்றம் ஓரிரு தலைமுறைகளுக்குள்ளாகவே ஏற்பட்டுவிடும் என்று எதிர்பார்ப்பது நடைமுறை சாத்தியங்களுக்குப் பொருந்தாதது என்றே ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

### சமூக நீதியும் சமத்துவமும்

உலகெங்கும் உள்ள சமூகங்கள் அனைத்துமே தங்களுக்கென்று நீதி என்பது பற்றி வரையறை வந்திருக்கின்றன. சரி–தவறு என்ற தெளிவு இல்லாத சமூகம் வரலாற்றில் இருந்ததாகத் தகவல் இல்லை. சமூகம் ஏற்றுக் கொண்ட நல்ல செயல்கள், சமூகம் மறுக்கும் அல்லது நிராகரிக்கும் செயல்கள் அந்த சமூகத்தின் 'தர்மம்' என்று வழங்கப்படலாயிற்று. இந்த தர்மத்தை மீறும் நபர்கள் மீது தயவுதாட்சன்யமின்றி நடவடிக்கை எடுக்கவும் தண்டனை வழங்கவும் அரசன் தவறக்கூடாது என்பதே முக்கியமான தர்மம் என்று நமது நாட்டில் மட்டுமல்ல பல நாடுகளிலும் நிலவிய நியதியாக இருந்திருக்கிறது. கிரேக்கத் தத்துவ அறிஞர் பிளாட்டோ தனது மாணவர்களோடு நடத்திய பல உரையாடல்களில் நீதி என்றால் என்ன அதை நாம் ஏன் பின்பற்ற வேண்டும் என்பது குறித்து விரிவாகவே பேசியிருக்கிறார்.





அறிஞர் சாக்ரடீஸ் தமது குறிப்பில், ஒரு சமூகத்தில் சில நபர்கள் கூட நியாயத்திற்கு எதிராக இருந்தால், அது ஒட்டுமொத்த சமூகத்தையும் எவ்வாறு பாதிக்கும் என்பது பற்றி விளக்குகிறார். நீதி என்பது ஒட்டுமொத்த சமூகத்திற்கும் நன்மை பயக்கும் செயலாக மட்டுமே இருக்கமுடியும் என்று தெளிவுபடுத்துகிறார். தனி நபருக்கு மட்டும் நன்மையோ, பலனையோ தரும் செயலை நீதி என்று கருதக்கூடாது என்பதே அவரது கருத்தின் சாராம்சம். ஆம், ஒட்டுமொத்த சமூகத்தின் வளர்ச்சி, மேம்பாடு ஆகியவற்றை கருத்தில் கொள்ளாமல் நீதி பற்றிப் பேசமுடியாது; நியாயம் என்பது முழு சமூகத்திற்கும் மட்டுமானதாகவே இருக்க முடியும் அல்லது இருக்க வேண்டும் என்பதே சாக்ரடீஸ் சொல்லும் தத்துவத்தின் மையக்கருத்தாகும். இதன்படி, நமது நாட்டில் காலம் காலமாக வழங்கப்பட்டு வந்த அநீதி, பாகுபாடுகளை அகற்றுவதற்காக அந்த சமூகங்களுக்கு வழங்கப்பட்ட நீதியே இடஒதுக்கீடு எனும் சமூகநீதியாகும்.

### விகிதாச்சார நீதி

பாகுபாடு நிறைந்த சமூகத்தில் நீதியை நிலைநாட்டுவதில் நமது அரசமைப்புச் சட்டம் முன்வைக்கும் சமூக நீதி என்பது வரலாற்று ரீதியாக வாய்ப்புகள் மறுக்கப்பட்ட



11th Std Political Science Tamil Medium Vol-2_Chapter 13.indd 152 29-09-2018 12:42:52

சமூகத்தினரின் முன்னேற்றத்திற்கான உதவிக்கரம் எனலாம். அதில் யாருக்கு எவ்வளவு வழங்கப்படவேண்டும் என்பதில் கருத்து வேறுபாடுகளும் விவாதங்களும் தொடர்ந்தன. சாதியப் படிநிலையே ஏற்றத்தாழ்வுக்கான முதன்மையான கூறாக இருக்கும் நமது நாட்டில், அதனடிப்படையிலேயே சமூகநீதி நிலைநாட்டப்பட வேண்டும். ஆகவேதான், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், பட்டியல் பிரிவினர், பழங்குடியினர் என பலதரப்பாக ஒவ்வொருவரின் சமூக நிலைக்கு ஏற்ப, அரசின் திட்டங்கள் அமைந்திருக்கின்றன.

உங்களுக்குத் தெரியுமா?

நாட்டில் இருக்கும் பிற்படுத்தப்பட்ட பிரிவினரின் மேம்பாட்டிற்காக முதல் ஆணையம் 1953 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. காகா காலேல்கர் அவர்களின் தலைமையில் அமையப்பெற்ற இதுவே சுதந்திர இந்தியாவின் முதல் பிற்படுத்தப்பட்டோர் ஆணையம்.

## 13.7 பாகுபாடு – சமூக அடிப்படைக் கோட்பாடு

மனிதர்கள் தாங்கள் சார்ந்துள்ள குழுவின் உறுப்பாகத் தம்மை அடையாளம் காண்கின்றனர். தமது குழுவைச் சார்ந்தவர்கள் எவ்வளவுதான் புகழ்ந்தாலும் தமது குழுவைச் சார்ந்து இருப்பதையே கவுரவமாகவும் ஆற்றல் மிக்கதாகவும் கருதுவர். பாகுபாடு என்பது ஒருவர் தாம் சார்ந்த குழுவின் உறுப்பினர் என்ற அடிப்படையை இல்லாமலாக்குவது அல்லது இயற்கை மூல வளங்களை அணுகுவதில் இருந்து தடுப்பது. மேலும், இதில் செல்வம் முக்கியப் பங்கு வகிக்கிறது. ஒரு குழுவில் ஒருவரின் தகுதி அல்லது சுய – மரியாதையை உருவாக்குவதில் மறைமுகமான ஊக்கம் அவரது செல்வத்தால் ஏற்படுகிறது என்று பாகுபாடு எனும் புறக்கணிப்பு அல்லது ஒதுக்கல் குறித்து சமூக – உளவியலாளர்கள் மதிப்பிடுகிறார்கள். இதை சமூக – அடையாளக் கோட்பாடு எனலாம்.

குறைவான சமூக ஏற்பு அளிக்கப்படும் மனிதர்கள் வெளிக்குழுவினர் போல மதிப்பிழப்பதாகவும் சமத்துவமின்மை அடிப்படையில் அத்தகைய மனிதர்கள் எதிரிகளாகப் பார்க்கப்படுவதாகவும் தொடக்கட்ட ஆய்வுகள் உறிதிப்படுத்துகின்றன. வேறுபட்ட குழுவினர் (இன, மத சிறுபான்மையினர், பெண்கள், இயலாமையில் இருப்பவர்கள், வீடற்றவர்கள்) மீது காட்டப்படும் எதிர்மறை அணுகுமுறைகள் ஒன்றுடன் ஒன்று வலுவான தொடர்புகளைக் கொண்டுள்ளன.

## 13.8 உறுதிப்படுத்தும் நடவடிக்கை

சமூக – பொருளாதார அடிப்படையில் பின் தங்கிய மக்களுக்கு முன்னுரிமை அளிப்பதன் வழியாக சமூக சமத்துவத்தினை உருவாக்குவது உறுதிப்படுத்தும் நடவடிக்கை எனப்படுகிறது. இந்த மக்கள் காலம் காலமாக வரலாற்றுப்பூர்வமாக அடிமைகளாகவும் ஒடுக்கப்பட்டவர்களாகவும் வாழ நிர்பந்திக்கப்பட்டவர்கள். இதனால் உருவாகியுள்ள சமுதாய, பொருளாதார இடைவெளிகளை இணைக்க வேலைவாய்ப்புகள் மற்றும் ஊதியங்களில் நிலவும் ஏற்றத்தாழ்வுகளை அகற்றுதல், கல்வி வாய்ப்புகளை அதிகரித்தல், கடந்த காலங்களில் ஏற்பட்ட வலி, காயங்கள் மற்றும் தவறுகளுக்கு நிவாரணம் காணுதல், குறிப்பாக அடிமை மற்றும் அடிமை சட்டங்களால் கடந்த காலங்களில் ஏற்பட்ட சமூக ஏற்றத்தாழ்வுகளுக்கு முன்னுரிமை அளித்தல் ஆகியன உறுதிபடுத்தும் நடவடிக்கைகளில் அடங்கும்.

உதாரணமாக, அமெரிக்காவில் ஐந்து ஆண்டுகளில் அமலான உறுதிப்படுத்தும் நடவடிக்கைகள் மீது 2017–இல் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் " கருப்பினத்தவர் வேலைவாய்ப்பு பெறுவது அதாவது பணிகளில் கருப்பினத்தவர் பங்கு குறிப்பிடத்தக்க அளவு (0.8%) அதிகரித்துள்ளது என தெரியவந்தது.



11th Std Political Science Tamil Medium Vol-2_Chapter 13.indd 153 29-09-2018 12:42:52

## அமெரிக்க ஐக்கிய மாநிலங்கள் (யு. எஸ். ஏ)

சுதந்திரம், பொருளாதாரம், தொழில்நுட்பம் போன்ற துறைகளில் அமெரிக்க ஐக்கிய மாநிலங்கள் முன்னேறி வந்தபோதும் அங்கு நிறத்தின் அடிப்படையில் பாகுபாடு காட்டுவது இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதி வரை நீடித்தது. இதை எதிர்த்து அங்கு குடிமை உரிமைப் போராட்டங்கள் நடந்தன.

இதைத்தொடர்ந்து உறுதிப்படுத்தும் நடவடிக்கைகள் 1960களில் அமெரிக்க ஐக்கிய மாநிலங்களில் அறிமுகப்படுத்தப்பட்டது. முதல் உறுதிப்படுத்தும் ஆணை குடியரசு தலைவர் ஜான் எஃப் கென்னடி அவர்களால் 1961 இல் வெளியிடப்பட்டுது. இது நிர்வாக ஆணை 10925 என்று அழைக்கப்படுகிறது. இதன்படி வேலை வாய்ப்புகளில் எந்த தொழிலாளரும் அல்லது விண்ணப்பதாரரும் நிறம், மொழி, இனம், தேசிய பூர்விகம், அடிப்படையில் பாகுபாடு காட்டக்கூடாது என அரசு கேட்டுக்கொண்டது.

1965 இல் மற்றொரு ஆணையால் (11246) இது மாற்றப்பட்டது. இதன்படி தனியான நிர்வாகத் துறை மூலம் தொடர்ச்சியான நேர்மறை செயல்பாடுகளை மேற்கொண்டு வேலை வாய்ப்புகளில் சமத்துவத்தை ஏற்படுத்துவதில் மைய கூட்டாட்சி அரசின் கடமை உறுதிபடுத்தப்பட்டது. இதன்படி பாலினம் பாதுக்காக்கப்பட்ட இனங்களில் கீழ் கொண்டுவரப்பட்டது. 1964ல் நிறைவேற்றப்பட்ட சிவில் உரிமை சட்டத்தில் நிறுவனங்களில் பாகுபாடற்ற நிலையை உருவாக்க அழுத்தம் கொடுப்பது என்ற உறுதிப்படுத்தும் நோக்கம் சட்டப்பூர்வமாக்கப்பட்டது. 1967ல் பெண்களுக்கு உறுதிப்படுத்தும் நடவடிக்கை விரிவுபடுத்தப்பட்டது.

## ஐக்கிய நாடுகள்

அனைத்து வகையான இனப் பாகுபாடுகளை ஒழிக்கும் உலகளாவிய சிறப்பு கருத்தரங்கம் அமைப்பு ரீதியாக பாகுபாட்டுக்கு உள்ளான சமூகங்களுக்கு நிவாரணம் அளிக்க உறுதிப்படுத்தும் நடவடிக்கை அவசியத் தேவை என கையொப்பமிட்ட உறுப்பு நாடுகளைக் கேட்டுக்கொண்டது. இந்த நடவடிக்கை அமலாக்கம் செய்யப்பட்ட பின்னர் எந்த ஒரு இனக்குழுக்கள் இடையிலும் சமத்துவமின்மை நிகழாத வகையில் திட்டங்களை உருவாக்குமாறு அக் கருத்தரங்கம் வலியுறுத்தியது.

சில அரசுகளால் கடைப்பிடிக்கப்பட்ட பாகுபாட்டுக் கொள்கைகளால் பாதிப்புக்குள்ளான சமுதாயங்களுக்கு உறுதிப்படுத்தும் நடவடிக்கைகள் அமலாக்கம் செய்வது அந்நாடுகளின் சமத்துவக் கொள்கையில் தேவைப்படுகிறது என்று ஐக்கிய நாடுகள் மனித உரிமை குழு வலியுறுத்தி கேட்டுக்கொண்டுள்ளது.

## தென்னாப்பிரிகாவில் சமூக நீதி சட்டம்

1994-ல் தென் ஆப்பிரிகா சமூகம் மக்களாட்சிக்கு மாறியதைத் தொடர்ந்து முன்னர் நிலவிய இன ஒதுக்கல் ஆட்சியின் பாதிப்புகளை அகற்றி சமூகங்கள் இடையே சமத்துவம் ஏற்படும் வழிவகைகளை ஆய்வு செய்து பாதிக்கப்பட்ட சமூகங்களுக்கு ஆதரவாக உறுதிப்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ள முடிவு செய்யப்பட்டது. இதன்படி முன்னர் சட்டத்தின் அடிப்படையில் இன ஒதுக்கல் செய்யப்பட்ட பூர்வீக கருப்பினத்த வர்கள், இந்தியர்கள், பழுப்பு நிறத்தவர்கள் ஆகியோருக்கும் வெள்ளை இனத்தவர் உள்ளிட்ட பெண்கள், மாற்றுத்திறனாளிகளுக்கும் முன்னுரிமை அளித்து வேலைவாய்ப்பில் சமத்துவம் அளிக்க சட்டம் இயற்றப்பட்டது. இதன்படி 50 பேருக்கு அதிகமாகப் பணியாற்றும் நிறுவனங்களில் மேற்கூறிய பாதிக்கப்பட்ட வகுப்பினர்க்கு பிரதிநிதித்துவம் அளிக்கும் வகையில் தமக்குத் தாமே திட்டம் வகுத்து அரசுக்கு அளித்து ஒப்புதல் அளிக்க வேண்டும். இது கருப்பினத்தவர்களுக்கு பொருளாதார ஆற்றல் அளிக்கும் சட்டத்தின் ஒரு உறுப்பாக வகுக்கப்பட்டிருந்தது. இது குறித்த வழக்கில் கருப்பினத்தவருக்கு முன்னுரிமை வழங்குவதில் தவறில்லை என்று தென் ஆப்பிரிக்க உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

### சீனா

சீனாவில் வாழும் சிறுபான்மை தேசிய இனங்களுக்கு கல்வியில் முன்னுரிமை வழங்குவதை உறுதிப்படுத்தும் நடவடிக்கைகள் அமலில் உள்ளன.

### ரஷ்யா

சோவியத் ஒன்றியம் இருந்தபோது இனக்குழு சிறுபான்மையினருக்கும், பெண்களுக்கும் தொழிற்சாலை தொழிலாளர்களுக்கும் பல்கலைக்கழக நுழைவு மற்றும் அரசு பதவிகளில் ஒதுக்கீடு வழங்கப்பட்டிருந்தது.


### புதிய கல்வியும் புதிய தேவைகளும்

பண்டைக்காலத்தில் நமது நாட்டில் நிலவிவந்த கல்விமுறை சமத்துவ கல்வி முறை அல்ல. அவரவர் வர்ணம் / சாதி சார்ந்த தொழில்களை மட்டுமே கற்க அனுமதிக்கப்பட்டனர். பிற்காலத்தில் நவீன கல்விமுறை அறிமுகப்படுத்தப்பட்ட போதும் அங்கும் அவர்கள் அனுமதிக்கப்படவில்லை.

இந்தியாவில், குறிப்பாக தென்னிந்தியாவில் நவீன கல்வி, ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்த கிறித்துவ மிஷனரி அமைப்புகளால் அறிமுகப்படுத்தப்பட்டது. 19 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இந்தியாவின் பெரும்பாலான பகுதிகள் ஆங்கிலேய காலனி ஆட்சியின் கீழ் வந்த பின்னர் இங்கிலாந்து நாட்டின் கிறித்துவ மிஷனரிகள் பல இடங்களில் பள்ளிகள் தொடங்கினர். கல்வி மறுக்கப்பட்டு வந்த பல சமுதாயங்களுக்கு இவை நல் வாய்ப்பாக அமைந்தன.

## 13.9 சென்னை மாகாணத்தில் சமூகநீதி

இதே காலகட்டத்தில் அன்றைய சென்னை மாகாணத்தில் இங்கிலாந்து அரசின் நேரடி நிர்வாகம் விரிவடைந்தது. ரயத்துவாரி போன்ற சட்டங்கள் இயற்றப்பட்டன. வரி வசூல் செய்யும் நிர்வாக அமைப்புகள் உருவாயின. சென்னையில் ராணுவ அமைப்புகள் உருவாயின. 1835 இல் இந்தியா முழுவதும் அரசு நிர்வாக மொழியாக ஆங்கிலம் மட்டுமே பின்பற்றப்படும் என்று அறிவிக்கப்பட்டது.




அங்கிலேயரால் ஏற்படுத்தப்பட்ட இந்திய ராணுவத்தில் இந்தியர்கள் சேர்க்கப்பட்டனர். பெரும்பாலும் பிராமணரல்லாதவர்கள்,, தாழ்த்தப்பட்ட வகுப்பினரே ராணுவத்தில் சேர்ந்தனர். ராணுவத்தில் அனைவரையும் சேர்த்துக்கொண்ட காலனி அரசு பள்ளிகளில் இந்திய மொழிகளை அனுமதிக்கவில்லை. 19 ஆம் நூற்றாண்டின் இறுதிவரை இந்நிலை நீடித்தது.

நவீன கல்விமுறையின் கீழ் ஆங்கிலம் கற்றவர்கள் இப் பணிகளில் அமர்த்தப்பட்டனர். ஐரோப்பியர்கள் தவிர இந்திய – ஆங்கிலேயர்கள், பிராமணர்கள் ஆகியோரே அரசு பணிகளில் நிறைந்திருந்தனர்.

இதேபோல, 19 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஜமீன்தாரி, ராயத்துவாரி முறைகள் அமலாக்கம் செய்யப்பட்டதைத் தொடர்ந்து ஜமீன்தார்கள், மிராசுதாரர்கள், நிலச்சுவாந்தார்கள் உருவாயினர். இவர்கள் அனைவரும் உயர்சாதியினர் என்பது குறிப்பிடத்தக்கது. இது கிராம நில உறவுகளில்



11th Std Political Science Tamil Medium Vol-2_Chapter 13.indd 155 29-09-2018 12:42:53

பெரும் தாக்கத்தினை ஏற்படுத்தியது. குறிப்பாக, தாழ்த்தப்பட்ட மக்கள் நிலத்தின் மீது எந்த உரிமை ஆனார்கள்.





இதைத் தொடர்ந்து ராயத்துவாரி முறை மீது ஆய்வு செய்யுமாறு அன்றைய ஆங்கிலேய அதிகாரி பிரான்ஸிஸ் எல்லீஸ் பணிக்கப்பட்டார். இதேபோல் தாமஸ் மன்றோ எனும் அதிகாரியும் ராயத்துவாரி முறை மீது ஆய்வு செய்து அறிக்கை தாக்கல் செய்தார்.

அவர்கள் அறிக்கைகளில் 'காலம் காலமாக நிலத்துடன் தொடர்பு கொண்டிருந்த மக்களிடமிருந்து நிலம் பறிக்கப்பட்டு மேல்தட்டு வகுப்புகளைச் சேர்ந்த ஜமீன்தார்கள், மிராசுதாரர்களிடம் நிலம் அளிக்கப்பட்டதால் வேளாண்மையின் தரமும் விளைச்சலும் குறைந்துவிட்டதாகவும் இதனால் நில வரி வருவாய் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் கூறியிருந்தனர். மேலும், ஏராளமான நிலங்களை தரிசாகப் போட்டுள்ளதாகவும் குறிப்பிட்ட அவர்கள் தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு உதவிகள் செய்ய வேண்டும் என்று கோரினர்.

இவ்வாறு காலனிஆட்சியில் நிலங்களில் இருந்து விரட்டப்பட்டு கல்வியும் மறுக்கப்பட்ட நிலையில் தாழ்த்தப்பட்ட வகுப்பாரின் குழந்தைகள் பள்ளிகளில் சேர்வதை உயர் வகுப்பார் எதிர்த்து தடுத்தனர். பள்ளிகளில் தாழ்த்தப்பட்ட குழந்தைகள் அனுமதிக்கப்படுவதைத் தடுக்கக்கூடாது என்று 1854 இல் நீதிமன்றம் ஆணையிட்டது. நீதிமன்ற ஆணைகளுக்கும் உயர்வகுப்பார் பணியவில்லை. 1865 இல் இங்கிலாந்தில் உள்ள இந்தியாவுக்கான அமைச்சரே ஆணையிட்டார். அப்போதும் நிலைமையில் மாற்றமில்லை.

### தாழ்த்தப்பட்டோருக்கான முன்னுரிமைகள்

சென்னை மாகாண அரசு தாழ்த்தப்பட்ட மக்களுக்கான நிதி உதவித்திட்டங்களை 1885 இல் அறிவித்தது. சில இடங்களில் தாழ்த்தப்பட்டோருக்கான பள்ளிகளை அரசே திறந்தது.

இதற்கிடையே, செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியர் திரிமென்கீரே என்பவர் செங்கல்பட்டு மாவட்ட தாழ்த்தப்பட்ட மக்கள் குறித்து ஒரு அறிக்கை தாக்கல் செய்தார்.

அதன் சுருக்கம் வருமாறு:தாழ்த்தப்பட்ட மக்கள் சமூக, பொருளாதார, கல்வி ரீதியாக மிகவும் மோசமடைந்துள்ளனர். அவர்களுக்கு நிலம் மறுக்கப்படுகிறது. வீடு கட்டிக்கொள்ளக்கூட அனுமதிக்கப்படுவதில்லை. கல்வி நிராகரிக்கப்படுகிறது. தாழ்த்தப்பட்ட மக்கள் அடிமைகளாக விற்கப்படுகிறார்கள். ஏராளமான நிலம் வேண்டுமென்றே தரிசாகப் போடப்பட்டுள்ளது. இதனால் அரசுக்கு வருவாய் குறைகிறது. இந்த நிலங்களை தாழ்த்தப்பட்ட மக்களுக்கு பிரித்து வழங்கலாம்.

அவரது அறிக்கையில் மேலும் பல பரிந்துரைகளும் இருந்தன. இந்த அறிக்கையை பரிசிலித்த அரசு 1892இல் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு 12 லட்சம் ஏக்கர் நிலத்தை பிரித்து வழங்கியது. இது பஞ்சமி நிலம் என அழைக்கப்பட்டது. இதேபோல தாழ்த்தப்பட்டோரின் குழந்தைகளுக்கான பள்ளிகளை அரசு பஞ்சமர் பள்ளிகள் என அழைத்தது.

'பஞ்சமர்' என்பது, வைதீக மதத்தின்படி நான்கு வர்ணங்களுக்கும் வெளியே நிறுத்தப்பட்ட மக்களைக் குறிக்கும் பெயர் ஆகும். எனவே பஞ்சமர் பள்ளிகள் என அழைப்பதை ஆதிதிராவிடர் பள்ளிகள் என அழைக்கப்படவேண்டும் என்று அயோத்திதாச பண்டிதர், ம. சிங்காரவேலர் போன்றோர் கூறினர்.

இவ்வாறு, 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் காலனி ஆட்சியின் கீழ் சமூகம், பொருளாதாரம், அதிகாரம், வேலை வாய்ப்புகள் ஆகிய துறைகளில் ஒருபக்கம் பிராமணர்கள் ஆதிக்கம் செலுத்திய நிலையில் சமூகத்தில் பெரும்பான்மையாக இருந்த பிராமணரல்லாதவர்கள், சிறுபான்மை மதத்தினர் மிகுதியாகப் புறக்கணிக்கப்பட்டிருந்தனர்.

இக் காலகட்டத்தில் தொடங்கப்பட்ட பள்ளிகள் மூலம் நவீன கல்விகற்ற பிரமணரல்லாத வகுப்பினம் சிறுபான்மை மத்தினர் மத்தியில் இது பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியது. தங்களுக்கும் அரசுப்பணிகளின் பிரதித்துவம் வேண்டும் என்று கோரினர்.









குறிப்பாக கல்விகற்ற அயோத்திதாச பண்டிதர், ம. சிங்காரவேலர், இரட்டைமலை சீனிவாசன், பிட்டி தியாகராயர், பனகல் அரசர் போன்றோர் முன்னணியில் நின்றனர்.

இவ்வாறு எழுந்த கோரிக்கைகளைத் தொடர்ந்து 1892 ஆம் ஆண்டில் சென்னை மாவட்ட அனைத்துத் துறைகளில் வகுப்புவாரி பிரதிநிதித்துவம் அளித்து ஆணை வெளியிட்டது. இது 128(2) என்று அழைக்கப்பட்டது. இதனை சென்னை மாகாணம் முழுவதும் விரிவுபடுத்த வேண்டும் என்று அமைக்கப்பட்டது.




தமிழகத்தில் ஒடுக்கப்பட்டோர் மற்றும் பிற்படுத்தப்பட்டோர் முன்னெடுத்த கல்வி முயற்சிகளைப் போலவே மகாராஷ்டிராவிலும் கல்வி விழிப்புணர்ச்சியை ஏற்படுத்திட மகாத்மா ஜோதிராவ்பூலே, அன்னை சாவித்ரிபாய்பூலே போன்றோர் பெரும் முயற்சிகளை மேற்கொண்டனர்.

## நீதிக்கட்சி



1913 ஆம் ஆண்டில் அலெக்சாண்டர் கார்டியு தலைமையிலான ராயல் ஆணையம் வந்தபோது அதனிடம் ஏராளமான விண்ணப்பங்கள் அளிக்கப்பட்டன. சென்னை மாகாணம் மட்டுமல்லாமல் ரங்கூன் திராவி சங்கம் உள்பட பல அமைப்புகள் விண்ணப்பங்களை அளித்தன. அவற்றில் பிற்படுத்தப்பட்டவர்கள், தாழ்த்தப்பட்டவர்கள், சிறுபான்மை மதத்தினருக்கு உரிய பிரதிநிதித்துவம் வேலை வாய்ப்புகளில் வழங்க வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டன.





டாக்டர் சி. நடேசன், சர். பி. தியாகராயர், டாக்டர் டி. எம். நாயர் ஆகியோர் அறிக்கை ஒன்றினைத்தயாரித்து வெளியிடும் முயற்சியில்



11th Std Political Science Tamil Medium Vol-2_Chapter 13.indd 157 29-09-2018 12:42:55

ஈடுபட்டனர். சர்.பி. தியாகராயர் எழுதிவெளியிட்ட அந்த அறிக்கை 'பிராமணரல்லாதார் அறிக்கை' என்று அழைக்கப்படுகிறது. 1916ஆம் ஆண்டு பிராமணரல்லாதோர் நலன் காக்க சர்.பி. தியாகராயர், டாக்டர் டி.எம். நாயர் ஆகியோர் 'தென்னிந்தியர் சுதந்திர சங்கம்' (South Indian Liberal Federation) என்ற இயக்கத்தைத் தொடங்கினர். இவ்வியக்கத்தின் சார்பில் 'ஜஸ்டிஸ்' என்னும் இதழ் வெளியானது. எனவே, இவ்வியக்கம் மக்களிடையே 'நீதிக்கட்சி' (Justice Party) என வழங்கப்பெற்றது. இவ்வியக்கம் பிராமணரல்லாதார் மக்கள் மத்தியில் கல்வி, வேலைவாய்ப்பு பெறுவதற்கான 'வகுப்புவாரி உரிமை' குறித்த விழிப்புணர்வை உருவாக்கியது.



EIGHT PAGES

Regd. No. M. 1363

Justice

TENDER NOTICE

The Perfect complexion soap

ADVERTISE

MYSORE Sandal SOAP

FOR SALE

Rapid Changes in Temperature

Colds & Sore Throat

உயர்கல்வியில் ஆங்கிலம், சமஸ்கிருதம் மட்டும் அனுமதிக்கப்படுவதைக் கண்டித்தும் தமிழ் உள்ளிட்ட பழமையான மொழிகளையும் அனுமதிக்க வேண்டும் என்றும் நீதிக்கட்சி சார்பில் 1915 இல் அரசுக்கு மனு அளிக்கப்பட்டது.

1917 இல் இந்தியா வந்த தூதுக்குழுவை சென்னை மாகாணத்தைச் சேர்ந்த 54 அமைப்புகள் சந்தித்து பிராமணரல்லாதோர் மற்றும் சிறுபான்மை மதத்தினருக்கு உரிய பிரதிநிதித்துவம் வழங்க வேண்டும் என்று கோரினர். அதுமட்டுமல்லாமல் வகுப்புவாரி பிரதிநிதித்துவம் கோரி ஆங்காங்கு மாநாடுகள் நடத்தப்பட்டன.

### முதல் வகுப்புவாரி பிரதிநிதித்துவ அரசாணை

சென்னை மாகாண சட்டமன்றத்தில் நீதிக்கட்சி ஆட்சியின் அமர்ந்ததைத் தொடர்ந்து இக் கோரிக்கைகள் சட்டமன்றத்திலும் எதிரொலித்தன. தொடர்ந்து நீதிக்கட்சி உறுப்பினர்கள் எழுப்பிய கோரிக்கைகள் மட்டுமல்லாமல் இவற்றுக்கு மக்கள் ஆதரவு அதிகரித்ததன் காரணமாக ஏற்பட்ட அழுத்தத்தின் காரணமாக அரசு அனுமதி அளித்ததன் பேரில் அரசு பணியிடங்களில் வகுப்புவாரி இட ஒதுக்கீடு அளித்து 1921 இல் தீர்மானம் நிறைவேறியது. இது வகுப்புவாரி பிரதிநிதித்துவ அரசாணை என்று அழைக்கப்படுகிறது.

இந்திய வரலாற்றில் இது குறிப்பிடத்தக்க வளர்ச்சி ஆகும். காலம் காலமாக ஒடுக்கப்பட்டு வந்த பிரிவினர்கள் தாங்களும் சமூக, பொருளாதார இழிவுகளில் இருந்து விடுதலை பெற்று சுயமரியாதையுடனும் சமத்துவத்துடனும் எதிர்காலத்தில் வாழ முடியும் என்ற நம்பிக்கையை அளித்தது.

"எல்லா அரசு பணிகளிலும் பிராமணர் அல்லாதவர்களை அவர்களுக்குக் குறைந்தபட்ச கல்வித்தகுதி இருந்தாலே போதும் என்று கருதி வேலைவாய்ப்பு வழங்க வேண்டும். கிறிஸ்தவர்கள், முகமதியர்கள், தாழ்த்தப்பட்டவர்கள் என அனைவரும் அரசுப்பணிகளில் அமர்த்தப் படவேண்டும். இதற்கான ஒரு நிலையான ஆணை வெளியிட வேண்டும். நூறுரூபாய்க்கு மேல் சம்பளம் வாங்கும் உத்தியோகமாக இருந்தால் 75% அளவு மக்களை அது அடையும்வரை ஏழாண்டுகாலம் வரை அமலில் இருக்கும் வண்ணமும் இவ்வாணை அமலில் இருக்க வேண்டும்" எனும் தீர்மானத்தினை சட்டசபையின் உறுப்பினரான முனுசாமி கொண்டுவந்தார்.

இத்தீர்மானத்தை முன்மொழிந்து பேசிய சர். ஆர். கே. சண்முகம் "இந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தீர்மானத்தை நாம் நிறைவேற்றினால் நம் எதிர்கால சந்ததி நம்மையெல்லாம் நமது நாட்டுக்கு உரிமை வாங்கித் தந்தவரென்றே கொண்டாடும்" என்று குறிப்பிட்டார். அத்தீர்மானத்தை வழிமொழிந்த

டாக்டர் சி. நடேசனார் 'எங்கள் மக்களுக்கு வேலைகளில் சரியான பிரிதிநிதித்துவம் தரப்படாவிட்டால், நாங்கள் வரி கொடுக்க மாட்டோம்' என்று பேசினார்.

காங்கிரஸ் கட்சியில் தீவிரமாக இயங்கி வந்த தந்தை பெரியார், ஜஸ்டிஸ் கட்சியினரின் கருத்துக்களை ஆதரித்தார். காங்கிரஸ் கட்சிக்குள்ளும், வகுப்புவாரி பிரதிநிதித்துவம் கோரிக்கையை எழுப்பினார். 1925ஆம் ஆண்டு காஞ்சிபுரத்தில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டில் அரசு கல்வி, வேலைவாய்ப்புகளில் வகுப்புவாரி பிரதிநிதித்துவம் கோரும் தீர்மானத்தை பெரியார் கொண்டுவந்தார். இதற்கு காங்கிரஸ் தலைமை அனுமதி மறுத்ததைத் தொடர்ந்து அவர் காங்கிரஸில் இருந்து வெளியேறினார்.

1928 வாக்கில் இரா. முத்தையா அவர்களின் தலைமையில் நீதிக்கட்சி செயல்பட்டபோது அரசின் எல்லாத்துறைகளிலும், பணிநியமனங்கள் முறைப்படுத்தப்பட்டு அரசாணையின் மூலம் வகுப்புவாரி பிரதிநிதித்துவம் நிரந்தரமாக்கப்பட்டது.


### முதல் சட்டத்திருத்தம்

இந்தியா சுதந்திரம் அடைந்து இந்திய அரசமைப்புச் சட்டம் நடைமுறைக்கு வந்தபின் அதில் குறிப்பிடப்பட்டிருந்த சட்டப்பிரிவுகளைக் காட்டி, தமிழகத்தில் வகுப்புவாரி ஆணை பின்பற்றப்படுவதால், மருத்துவக் கல்லூரியில் தனக்கு இடம் கிடைக்கவில்லை எனக்கூறி செண்பகம் துரைராஜன் என்பவர் 1951ஆம் ஆண்டு உயர்நீதிமன்றத்தில் வழக்கு ஒன்றினைத் தொடர்ந்தார்.



இவ்வழக்கினை விசாரித்து தீர்ப்பு வழங்கிய உயர்நீதிமன்றம் தமிழகத்தில் பின்பற்றப்படும் வகுப்புவாரி ஆணையானது அரசமைப்புச் சட்டத்திற்கு முரணானது என்று தீர்ப்பளித்தது. உச்சநீதிமன்றமும் அத் தீர்ப்பினை உறுதி செய்தது. எனவே தமிழகத்தில் பின்பற்றப்பட்டு வந்த வகுப்புவாரி (இடஒதுக்கீடு) முறை ரத்து செய்யப்பட்டது.

வகுப்புவாரிமுறை ரத்து செய்யப்பட்டதை எதிர்த்து தமிழகத்தில் போராட்டங்கள் எழுந்தன. எனவே, தந்தை பெரியார் உடனடியாக அரசமைப்புச் சட்டம் திருத்தம் செய்யப்பட வேண்டும் என்று கோரிக்கை விடுத்தார். தமிழகத்தில் தந்தை பெரியார், தமிழக காங்கிரஸ் தலைவராக இருந்த கு. காமராஜ், பிரதமர் ஜவஹர்லால் நேரு, இந்திய அரசமைப்புச் சட்ட சிற்பி டாக்டர். பி.ஆர். அம்பேத்கர் ஆகியோர் முயற்சியால் வகுப்புவாரி பிரதிநிதித்துவம் நீடிக்கும் வகையில் அரசமைப்புச் சட்டத்தில் திருத்தப்பட்டது. இந்திய அரசமைப்புச் சட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட முதல் திருத்தம் ஆகும். இதன்மூலம் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மீண்டும் இடஒதுக்கீடு பெறும் வாய்ப்பு ஏற்பட்டது.









அரசமைப்புச் சட்டம், பிரிவு 15 மற்றும் 16 ஆகிய பிரிவுகள் "சமூக ரீதியிலும் பொருளாதார ரீதியிலும் பின் தங்கியவர்களுக்குச் சில சிறப்புச் சட்டங்கள் மற்றும் சலுகைகள் வழங்கலாம்" என அரசுக்கு அதிகாரம் வழங்கியுள்ளது. அதன் அடிப்படையில் பிரதமர் நேரு முதலாவது சட்டத் திருத்தத்தினை நாடாளுமன்றத்தில் கொண்டுவந்தார். அத் திருத்தத்தின்படி அரசமைப்புச் சட்ட பிரிவுகள் 15 (4) & 16(4) என்னும் உட்பிரிவுகள் இணைக்கப்பட்டன.

இந்திய அரசமைப்புச் சட்டத் திருத்தத்திற்குப் பின் தமிழ்நாட்டில் 1951 ஆம் ஆண்டு முதல் பிற்படுத்தப்பட்டோருக்கு 25%, தாழ்த்தப்பட்டோருக்கு 16% என இடஒதுக்கீடு நடைமுறைப்படுத்தபட்டது.

## இட ஒதுக்கீடு விரிவாக்கம்



மு. கருணாநிதி முதலமைச்சராக இருந்தபோது பிற்படுத்தப்பட்டோர் நலன் குறித்து ஆராய்ந்திட சட்டநாதன் தலைமையில் ஒரு ஆணையம் அமைக்கப் பட்டது. அந்த ஆணையத்தின் பரிந்துரைகளின் அடிப்படையில் 1971 ஆம் ஆண்டு பிற்படுத்தப்பட்டோருக்கு 31%, தாழ்த்தப்பட்டோருக்கு 18% என இட ஒதுக்கீட்டு வரம்பு மாற்றியமைக்கப்பட்டது.

1979 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநில அரசின் சமூக நலத்துறை அரசாணை (G.O. Ms.No. 1156, 02.02.1979) ஒன்றினைப் பிறப்பித்தது. அவ்வாணையின்படி பிற்படுத்தப்பட்ட வகுப்பினரின், குடும்ப ஆண்டு வருமானம் ₹ 9000 நிர்ணயிக்கப்பட்டது. பின் அந்த அரசாணை திரும்பப் பெறப்பட்டு புதிய ஆணை பிறப்பிக்கப்பட்டது. அப்புதிய ஆணையின் படி பிற்படுத்தப்பட்டவர்களுக்கான இடஒதுக்கீட்டு வரம்பு 31% லிருந்து 50% ஆக உயர்த்தப்பட்டது. எனவே, அன்றைய காலகட்டத்தில் தமிழகத்தில் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு 50%, தாழ்த்தப்பட்டவர்கள்& பழங்குடியினருக்கு 18% என்று மொத்த இடஒதுக்கீடு 68% நடைமுறைக்கு வந்தது.

1989 ஆம்ஆண்டு பழங்குடியினருக்குத் தனியிட ஒதுக்கீடு கோரி தொடரப்பட்ட வழக்கில் வழங்கப்பட்ட உச்சநீதிமன்றத் தீர்ப்பின் அடிப்படையில் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு 30%, மிகவும் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு 20%, தாழ்த்தப்பட்டவர்களுக்கு 18%, பழங்குடியினருக்கு 1% என இடஒதுக்கீட்டு வரம்புகள் மாற்றியமைக்கப்பட்டு இடஒதுக்கீடு 69% என நடைமுறைக்கு வந்தது.

## மத்திய அரசில் இட ஒதுக்கீடு: மண்டல் ஆணையம்

வி.பி. சிங் ஆட்சியின் போது மண்டல்ஆணையத்தின் பரிந்துரைகளை ஏற்றுக் கொள்வதாக அறிவித்தார். அதன் அடிப்படையில் மத்தியஅரசின் வேலைவாய்ப்புகளில் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு 27% இடஒதுக்கீடு வழங்கி மத்திய அரசு ஆணை பிறப்பித்தது. அதனை எதிர்த்து, இந்திரா சகானி இடஒதுக்கீட்டு முறையானது, சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்னும், அரசமைப்புச் சட்ட விதிகளை மீறும் வகையில் அமைந்துள்ளது. எனவே, இடஒதுக்கீட்டு முறையினை ரத்து செய்திட வேண்டும் என உச்சநீதிமன்றத்தில் வழக்குத்தொடுத்தார்.



அவ்வழக்கினை விசாரித்த நீதிமன்றம் வி.பி.சிங் தலைமையிலான அரசு பிற்படுத்தப்பட்டோருக்கு வழங்கிய 27 சதவீதம் இடஒதுக்கீடு செல்லும் என்று தீர்ப்பளித்தது.

மேலும், இடஒதுக்கீட்டின் அளவு 50 சதவீதத்திற்கு மிகாமல் பார்த்துக்கொள்ள வேண்டும் எனவும், தீர்ப்பில் குறிப்பிட்டிருந்தது. அரசியல் சட்டத்தில் உச்ச வரம்பு குறித்துக் குறிப்பிடப்படாத நிலையில் உச்சநீதிமன்றம் 50 சதவீதம் என்று உச்சவரம்பினை நிர்ணயித்தது. எனினும் உச்சநீதிமன்றம் தனது தீர்ப்பின் ஒரு பகுதியில் உச்சவரம்பிற்கும் விலக்கு உண்டு என்பதைப் பின்வருமாறு குறிப்பிட்டிருந்தது.

"உச்சநீதிமன்றத்தில் மண்டல் ஆணைய உத்தரவு பற்றிய தீர்ப்பில்" 50% என்பது விதியாக இருந்த போதிலும் கூட பலதரப்பட்ட மக்கள் பல்வேறு வகையில் பரந்துப்பட்ட இந்நாட்டில் வேரூன்றி உள்ள சில அசாதாரணமான நிலைமைகளைக் கணக்கில் எடுத்துக்கொள்ளக்கூடாது என்பது நமது வாதமல்ல. நாட்டின் தொலை தூரத்தில் உள்ள பகுதிகளிலோ அல்லது தள்ளியிருக்கும் பரப்புகளிலோ வாழ்வதன் மூலம் தேசிய நீரோட்டத்தில் தம்மை இணைத்துக்கொள்ள வாய்ப்பற்ற மக்களுக்கு அவர்களுக்கே உரியதனித்தன்மை காரணமாக அவர்களுக்கு வேறுவகையில், விதிகளிலிருந்து விலக்கு என்பது மிகவும் அவசியமாகும்". 50% இட ஒதுக்கீட்டிற்கு விலக்கு உண்டு எனத் தீர்ப்பளித்த நீதிபதிகளே ஏற்றுக் கொண்டுள்ளனர், என்பதை மேற்கண்டத் தீர்ப்பின் ஒருபகுதி உறுதி செய்துள்ளது. எனினும் தமிழகத்தில் நடைமுறையிலிருந்த 69% இடஒதுக்கீடு, உச்சநீதிமன்ற தீர்ப்புக்கு முரணானது என்றும் அதனை ரத்து செய்திட வேண்டுமென்றும் நுகர்வோர் அமைப்பின் அறக்கட்டளை உறுப்பினரான கே.என்.விஜயன் உச்சநீதிமன்றத்தில் தொடர்ந்த வழக்கில் மருத்துவம் மற்றும் பொறியியல் கல்லூரிகளில் 50%மேல் இடஒதுக்கீடு அளிக்க உச்சநீதிமன்றம் இடைக்காலத் தடைவிதித்தது.

எனினும் 1951 ஆம் ஆண்டு எழுந்ததைப் போன்ற சட்ட நெருக்கடிகள் எழுந்ததால் அரசியல் சட்டத்தில் உள்ள மாநில அரசுகளுக்கான அதிகார வரம்பு என்னும் வாய்ப்பினைப் பயன்படுத்தி அப்போதைய முதல்வர் ஜெ.ஜெயலலிதா அவர்களின்



தலைமையிலான தமிழ்நாடு அரசு அரசியல் சட்ட பிரிவு 31(C) (Directive principles of state policy) -யினைப் பயன்படுத்தித் தனிச்சட்ட மசோதா ஒன்றினை 30.12.1993 அன்று தமிழ்நாடு சட்டமன்றத்தில் நிறைவேற்றியது. அதன்பின் தமிழ்நாட்டில் பின்பற்றப்பட்ட 69% இடஒதுக்கீடு குறித்த தமிழ்நாடு அரசின் தனிச்சட்டமசோதாவிற்கு 19.07.1994 அன்று அன்றைய குடியரசுத் தலைவர் ஒப்புதல் அளித்ததால் தமிழகத்தில் பின்பற்றப்படும் 69% இடஒதுக்கீடு உரியசட்டப் பாதுகாப்பினைப் பெற்றுவிட்டது.


தமிழக அரசின் இச்சட்டத்தினை எதிர்த்தும் வழக்குத்தொடரும் சூழலைத் தவிர்க்க இந்திய அரசமைப்புச் சட்டத்தின் IX ஆவது அட்டவணையில் சேர்க்க தமிழக அரசு பெரும் முயற்சி எடுத்தது. நாடாளுமன்றத்தில் மேற்கொள்ளப்பெற்ற 76-வது அரசியல் சட்டத்திருத்தத்தின் மூலம் தமிழக அரசின் இடஒதுக்கீட்டுச் சட்டம் இந்திய அரசியல் சட்டத்தின் IX ஆவது அட்டவணையில் இணைக்கப்பெற்றது. அத்துடன், 1992 நவம்பர் 16ஆம்தேதி முதல் இச்சட்டம் முன்தேதியிட்டு நடைமுறைக்கு வந்ததாகவும் அறிவிக்கப்பட்டது. இடஒதுக்கீட்டு முறை என்பது அரசு அதிகாரங்களைப் பெறுவதற்கான தற்காலிக முயற்சியே ஆகும். சமூக மாற்றம் நிகழ்ந்திடவும், உண்மையான சமூக நன்மதிப்பு உருவாகிடவும், சாதிய அடுக்கு முறைகள் ஒழிந்து சமத்துவம் பிறந்திட வேண்டும். அத்தகைய சமத்துவம் பிறப்பதற்கான வழிமுறைகளுள் ஒன்று 'சாதிக்கலப்பு திருமணங்களாகும்'. சாதிகளுக்குள்ளேயே நடைபெறும் திருமணங்களே சாதிக்கட்டமைப்பை வலிமைப்படுத்தி வருவதுடன் சமத்துவம் உருவாவதற்கானத் தடைக்கல்லாகவும் இருக்கின்றன. எனவே "சாதிமறுப்புத் திருமணங்களும்" முற்போக்கான உயர் எண்ணங்களுமே உண்மையான சமூகமாற்றத்தை முன்னெடுக்கும் கருவிகளாகும்.



11th Std Political Science Tamil Medium Vol-2_Chapter 13.indd 161 29-09-2018 12:42:56

### பிற்படுத்தப்பட்டோர் ஆணையம்

இந்திய அரசியல் சட்டப் பிரிவு 340 இன்படி "சமூக அடிப்படையிலும் கல்வி அடிப்படையிலும் பிற்படுத்தப்பட்ட வகுப்புகள்" எவை என அடையாளம் கண்டிடவும் மற்றும் அவர்களின் நிலை குறித்து ஆய்வு செய்து அரசுக்குப் பரிந்துரைகளை வழங்கவும் பிற்படுத்தப்பட்டோர் ஆணையம் அமைத்திடவும் குடியரசுத்தலைவருக்கு அதிகாரம் அளிக்கிறது.




அதனடிப்படையில் இந்திய அரசு பின்வரும் இரண்டு பிற்படுத்தப்பட்டோர் ஆணையங்களை இதுவரை அமைத்துள்ளது.

#### 1. திரு. காகா கலேல்கர் ஆணையம்

காகா கலேல்கர் ஆணையம் என்றழைக்கப்படுகிற முதலாவது பிற்படுத்தப்பட்டோர் ஆணையம் 29.01.1953 அன்று அமைக்கப்பட்டது. இவ்வாணையத்தில் காகா கலேல்கர் உட்பட 11 பேர் இடம் பெற்றிருந்தனர். இக்குழுவின் அறிக்கையினை அன்றைய பிரதமர் ஜவஹர்லால் நேரு நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்தார்.

#### 2. மண்டல் ஆணையம்

பிரதமர் மொரார்ஜிதேசாய் தலைமையிலான மத்திய அரசு பிந்தேஸ்வரி பிரசாத் மண்டல் கமிஷன் என்றழைக்கப்படுகிற மண்டல் ஆணையத்தினை 1979 ஆம் ஆண்டு அமைத்தது. இது பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான இரண்டாவது ஆணையமாகும். இவ்வாணையத்தின் செயலராக எஸ்.எஸ்.கில் செயல்பட்டார்.

பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் குறித்து ஆய்வு செய்திட 1979 ஆம் ஆண்டு பி.பி. மண்டல் தலைமையிலான குழு ஒன்று அமைக்கப்பெற்றது. அக்குழு இந்தியா முழுவதிலும் சுற்றுப்பயணம் மேற்கொண்டது. இவ்வாணையம் 11 காரணங்களை அடிப்படையாகக் கொண்டு சமூக அடிப்படையிலும் கல்வி அடிப்படையிலும் 3743 சாதிகள் பிற்படுத்தப்பட்ட வகுப்புகளாக உள்ளன என அடையாளம் கண்டது.

மண்டல் தன் அறிக்கையின் முகப்புரையில் "வகுப்பு வாரி பிரதிநிதித் துவத்திற்கு மெட்ராஸ் முன்னோடியாக இருப்பதுடன் அம்மாநிலமே பிற்படுத்தப்பட்ட வகுப்பார்களுக்கு பிரதிநிதித் துவத்தை வழங்கியுள்ளது" என்று குறிப்பிட்டிருப்பதன் மூலம் தமிழ்நாடு சமூகநீதியின் பிறப்பிடமாகவும் முகவரி ஆகவும் இருப்பதை அறியலாம்.

மக்கள்தொகையில் 52% உள்ள பிற்படுத்தப்பட்ட வகுப்பார்க்கு மத்தியஅரசுப் பணிகளில் 27% வழங்கிட மண்டல் ஆணையம் பரிந்துரைத்தது. இவ்வாணையத்தின் பரிந்துரையை ஏற்றுக்கொண்டு 13.08.1990 ஆம் ஆண்டு பிரதமர் வி.பி.சிங் தலைமையிலான தேசிய முன்னணி அரசு மத்திய அரசுப் பணிகளில் மட்டும், பிற்படுத்தப்பட்ட வகுப்பாருக்கு 27% இடஒதுக்கீடு வழங்கி ஆணை பிறப்பித்தது. இவ்வாணை 13.08.90 ஆம் தேதி முதல் அமல் செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் மத்திய அரசுப்பணிகளில் சமூக அடிப்படையிலும், கல்வி அடிப்படையிலும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மத்திய அரசுப் பணிகளில் வேலைவாய்ப்பு பெறும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

### சமூக நீதியை மேம்படுத்துதல்

சமூக நீதியை ஏற்படுத்துவதில் இட ஒதுக்கீடு முக்கியமான கருவியாக உள்ளது, கல்வி மற்றும் வேலை வாய்ப்புகளில் இட ஒதுக்கீட்டு முறை சமூக நீதியை நிலை நாட்டுகிறது என்பதை உணரவேண்டும். பிறப்பின் அடிப்படையில் யாவரும் யாருக்கும் உயர்ந்தவர் மற்றும் தாழ்ந்தவரும் இல்லை என்பன சமதர்ம

தத்துவத்தின் அடிப்படையாகவும் சமூக நீதிக்கு இன்றியமையாத ஒன்றாகவும் கருதப்படுகின்றன. தன் பிறப்பின் அடிப்படையில் பயன்பெறுபவர்கள் அது இந்த நவீன உலகத்திற்கு பொருந்தாது என உணரவேண்டும். சமூகத்தில் உள்ள அனைவருடனும் உணர்வுபூர்வமாகவும், சமத்துவத்துடன் இருப்பதே நவீன மனிதனாக இருப்பதற்கு அவசியமாகும். சமீப காலத்தில் சொத்துக்கள் மற்றும் ஆடம்பர பொருள்களை கொண்டும் ஒருவரை மதிப்பிடும் போக்கு அதிகரித்து வருவது வருத்தம் அளிக்கக்கூடிய ஒன்றாகும். சமீபகால நோக்கங்கள் நம்மை நவீனமாக்குகின்றன. நவீன இந்தியாவை உருவாக்க அனைத்து துறைகளிலும் முழுமையான மாற்றம் தேவை. ஆகையால்தான் நவீன இந்தியா எனும் கருத்தாக்கம் சமூகநீதியை இயற்கையாகவே உள்ளடக்கியதாக இருக்கிறது.

## செயல்பாடு

### சிந்தித்து இணை சேர்ந்து பகிர்தல்

**தலைப்பு:** "மதசார்பின்மை மற்றும் சமூக நீதி" ஆகியவை இந்திய அரசியலை வரையறுக்கும் இரு கொள்கைகளாகும். மாணவர்கள் இத்தலைப்பினை பற்றி மூன்று தலைப்பு உங்களுக்கு தனித்து சிந்தித்து பின்னர் தனது இணையுடன் கருத்தினைப் பகிரவும். பிறகு அந்த இணையாக இருக்கும் மாணவர் தனது கருத்துகளை மற்ற மாணவர்களுடன் பகிர வேண்டும். ஏதேனும் மூன்று இணைகளை வகுப்பறையில் தமது கருத்துகளை பகிருமாறு அசிரியர் கூற வேண்டும்.

### உங்களுக்குத் தெரியுமா?

*1979-ஆம் ஆண்டு இந்திய அரசாங்கத்தால் பின்தங்கிய வகுப்பிற்கான இரண்டாவது ஆணையம் பி.பி. மண்டல் தலைமையில் உருவாக்கப்பட்டது. பின்தங்கிய மக்களின் சமூக, கல்வியினை மேம்படுத்த வழிமுறைகள், திட்டங்கள் பற்றிய பரிந்துரைகள் கேட்கப்பட்டன. இந்த ஆணையம் அரசு பதவிகளில் 27 சதவிகிதம் சமூக மற்றும் பொருளாதாரத்தில் நலிவடைந்த பின்தங்கிய வகுப்பை சேர்ந்த மக்களுக்கு அளிக்கப்பட வேண்டும் என்று பரிந்துரைத்தது.*

*1980-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் மண்டல் ஆணையம் அதன் அறிக்கையை உள்துறை அமைச்சராக இருந்த ஜெயில் சிங்கிடம் சமர்பித்தனர் அப்போது பி.பி. மண்டல் "இந்த அறிக்கையை தயார் செய்வதில் அதிகமான உழைப்பை கொடுத்துள்ளோம். மிக சரியாக கூறினால் நாம் உன்னதமான சடங்கை செய்துள்ளோம்" என்று கூறினார்.*

*அடுத்த பத்தாண்டுகளுக்கு இந்த மண்டல் ஆணைய அறிக்கை உள்துறை அலுவலகத்திலேயே இருந்தது. அதை தேசிய முன்னணி அரசில் பிரதமராக இருந்த வி.பி. சிங் (1938-2001) 1990-ஆம் ஆண்டு நடைமுறைப்படுத்தினார். அந்த நேரத்தில் மண்டல் ஆணைய பரிந்துரைகள் பெரும் விவாதங்களை நாடு முழுவதும் ஏற்படுத்தியது. தேசிய அரசியலில் பெரும் குழப்பங்கள் ஏற்பட்டன. சந்தர்ப்பவாத அரசியலை செய்வதாக வி.பி.சிங் குற்றஞ்சாட்டப்பட்டார். எந்த ஒரு பெரிய தேசிய கட்சியும் மண்டல் ஆணைய பரிந்துரைகளுக்கு ஆதரவாக இல்லை.*

*சில அமைப்புகள் மற்றும் பிரிவினர் இந்த பரிந்துரைகளை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்தனர். இரு தரப்பு வாதங்களையும் பதினோரு நீதிபதிகளைக் கொண்ட உச்சநீதிமன்ற அமர்வு கேட்ட பின்பு உச்சநீதிமன்றம் இந்த மண்டல் ஆணையத்தின் பரிந்துரைகள் செல்லும் என தீர்ப்பளித்தது. அந்த அமர்வின் பெரும்பான்மை நீதிபதிகள் இந்த 1992-ஆம் ஆண்டு தீர்ப்பை வழங்கினர். ஆனால் அதே சமயத்தில் பரிந்துரைகளில் சில மாற்றங்களை செய்ய அரசை உச்சநீதிமன்றம் கேட்டுக்கொண்டது.*

*1993 ஆம் செப்டம்பர் 8 ஆம் தேதி பணியாளர் மற்றும் பயிற்சி துறையின் ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. இதன்பின் அறிக்கை பற்றிய சர்ச்சை முடிவிற்கு வந்து, திட்டம் தொடர ஆரம்பித்தது.*



11th Std Political Science Tamil Medium Vol-2_Chapter 13.indd 163 29-09-2018 12:42:57

### இந்திரா சகானி V. இந்திய யூனியன் AIR 1993 SC 477

- இது மண்டல குழு வழக்கு எனவும் அழைக்கப்படும்.
- பிரதம மந்திரி மொரார்ஜிதேசாய் தலைமையில் 1979-ஆம் ஆண்டு ஜனவரியில் பி.பி. மண்டல் தலைமையில், சட்டபிரிவு 340-ன் படி பின்தங்கிய வகுப்பினருக்கான இரண்டாவது ஆணையம் ஏற்படுத்தப்பட்டது.
- பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியினர்(SC/ST) மக்களை தவிர்த்து, இதர பிற்பட்ட வகுப்பினர் மொத்த மக்கள் தொகையில் 52% இடம் பெற்றுள்ளனர், அரசு பதவியில் 27 சதவிகிதம் இட ஒதுக்கீடு செய்தால்தான் அது பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியினர்(SC/ST) இதர பிற்பட்ட வகுப்பினருக்கான (OBC) மொத்த 50 சதவிகித இட ஒதுக்கீடு ஆகும் என இந்த ஆணையம் பரிந்துரை செய்தது.
- மண்டல ஆணைய அறிக்கை சமர்பித்த பிறகு எந்த ஒரு நடவடிக்கையும் மற்றும் செயல்பாடும் இல்லை, பாராளுமன்றத்தில் இருமுறை 1982 மற்றும் 1983-ஆம் ஆண்டுகளில் மண்டல் ஆணையம் அறிக்கை மீது விவாதம் மட்டுமே நடைபெற்றது.
- 1990-ஆம் ஆண்டு ஆகஸ்ட் 13-ஆம் தேதி வி.பி. சிங் அரசாங்கம் ஒரு ஆணையின் மூலம் மண்டல் ஆணையம் அறிக்கையின் பரிந்துரையை ஏற்றுக்கொண்டு 27 சதவிகித இட ஒதுக்கீடு சமூகத்தில் பிற்பட்ட வகுப்பினருக்கு இந்திய அரசுப் பணிகளில் வழங்கியது.

## அருஞ்சொற்பொருள்:

**சகோதரத்துவம்:** சாதி, இன, மதம், மொழி என்ற பேதங்களில்லாமல் அனைத்து மனிதர்களையும் சகோதர சகோதரிகளாக பாவிக்கும் மனப்பாங்கு.

**சுரண்டல்:** வளங்களை தேவைக்கதிகமாக பயன்படுத்துவதும், குறைந்த ஊதியத்திற்கு அதிக உழைப்பை பணியாளர்களிடம் பெறுவதும்.

**சமத்துவ சமுதாயம்:** வர்க்க, இன, பொருளாதார, மொழி, மத பேதங்களில்லாமல் அனைவரையும் சமமாக நடத்தும் சமுதாயம்.

**தனிச்சலுகைகள்:** ஒரு சில குறிப்பிட்ட நபர்களுக்கு, அவர்களின் பதவியின் காரணமாவோ, சிறப்பு திறமைகளின் காரணமாகவோ, சாதியின் காரணமாகவோ வழங்கப்படும் சிறப்பு சலுகைகள்.

**சமூக அடையாளம்:** சமுதாயத்தின் ஒரு பிரிவில் உறுப்பினராக இருப்பதன் மூலம், ஒரு நபருக்கு கிடைக்கும் அடையாளம்.

**நிறவெறி:** ஒருவரையோ அல்லது ஒரு குழுவினரையோ, அவர்களது நிறத்தின் அடிப்படையில் பாகுபாடாக நடத்துவது.

**வர்ண அமைப்பு:** பிறப்பின் அடிப்படையில் மனிதர்களை வகைப்படுத்திய பழங்கால நடைமுறை

**சிறுபான்மையினர்:** நாட்டின் அல்லது ஒரு பகுதியில் உள்ள மொத்த மக்கள் தொகையில் மத, இன, சாதி அடிப்படையில் குறைவான எண்ணிக்கையில் உள்ளோர்.

**இடஒதுக்கீடு:** அரசின் கல்வி மற்றும் வேலைவாய்ப்புகளில் சமூகத்தின் நலிந்த பிரிவினருக்கு வாய்ப்பளிக்கும் வகையில், அரசமைப்பால் ஏற்படுத்தப்பட்ட ஒரு முறை.

**பன்மை சமூகம்:** பல்வேறு மொழி, மத, இன மற்றும் கலாச்சாரங்களைக் கொண்ட மக்கள் ஒன்றாக வாழும் சமூகம்.

**சமூக மாற்றம்:** ஒரு சமூகத்தில் வாழும் பெரும்பான்மை மக்களின் மன மற்றும் நடவடிக்கைகளில் ஏற்படும் மாற்றம்.

**குடிமை உரிமைகள்:** ஒரு சமூகத்தில் கண்ணியத்துடன் வாழ்வதற்காக அரசமைப்பினால் உத்திரவாதமளிக்கப்பட்ட உரிமைகள்.

**பொருளாதார சமத்துவம்:** ஏழை, பணக்காரன் என்ற வேறுபாடின்றி அனைத்து மக்களும் சமமான பொருளாதார நிலையில் இருத்தல்.

**நிலப்பிரபுத்துவம்:** அதிக அளவு, நிலங்களை உடைமையாக கொண்டவர்கள்.

**பஞ்சமர்:** வர்ணாசிரம முறையில் குறிப்பிடப்படாத வர்க்கத்தை சேர்ந்த ஒடுக்கப்பட்ட மக்கள்.



11th Std Political Science Tamil Medium Vol-2_Chapter 13.indd 164 29-09-2018 12:42:57

## மதிப்பிடுதல்

### I சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்

1. தகுதி இருப்பவை உயிர் வாழும் என்ற கோட்பாட்டை உருவாக்கியவர்.

அ)டெனிம் ஆ) ருஸ்வெல்ட் இ) டார்வின் ஈ) மேற்கூறிய அனைத்தும்

2. அடிமை வாணிபம் என்பன

அ) பெண்கள் கடத்தல் ஆ) குழந்தைகள் கடத்தல்

இ) மனிதர்கள் கடத்தல் ஈ) அனைத்தும்

PP8HJP

3. இனவெறி ஆட்சி என்பன

அ) ஒரு இனம் மற்றொரு இனத்தை அடக்குதல்

ஆ) கருப்பர் இனம் வெள்ளையர் இனத்தை அடக்குதல்

இ) சித்ரவதை

ஈ) உயர்குடி சமூகம்

4. முதலாளித்துவத்திலிருந்து சமதர்மத்துவத்துக்கு மாறும் சமூக இயக்கத்தின் மாற்றத்தை …………………………. எனலாம்.

அ) கட்டமைப்பு மாற்றம் ஆ) நிறுவன அமைப்பில் மாற்றம்.

இ) அ மற்றும் ஆ ஈ) ஏதுமில்லை

5. நம் இரத்தத்தையும் வேர்வையையும் தவிர இழப்பதற்கு ஏதுமில்லை என்று கூறியவர்

அ) மார்க்ஸ் ஆ) மாவோ

இ) ஸ்டாலின் ஈ) லெனின்

6. நாராயண குரு எந்த மாநிலத்தை சார்ந்தவர்?

அ) ஆந்திர பிரதேசம் ஆ) மேற்கு வங்காளம்

இ) மகாராஷ்டிரா ஈ) கேரளா

7. வைக்கம் இயக்கத்தை தலைமை தாங்கி நடத்தியவர்.

அ) பெரியார் ஆ) ராஜாஜி

இ) நேரு ஈ) காந்தியடிகள்

8. தேசங்களின் வளம் பற்றிய ஒர் ஆய்வு என்ற நூலை எழுதியவர்

அ) கீன்ஸ் ஆ) ஆதம் ஸ்மித்

இ) ரூசோ ஈ) போடின்

9. "தோட்டாக்களால் அல்ல வாக்குச் சீட்டினால்" என கூறியவர்

அ) கேஸ்ட்ரோ ஆ) மாவோ

இ) சுபாஷ் சந்திர போஸ் ஈ) பகத் சிங்

10. "எனக்கு ஒரு கனவு இருக்கிறது" என்ற புகழ்பெற்ற உரையை ஆற்றியவர்

அ) லிங்கன் ஆ) தோரு

இ) காந்தியடிகள் ஈ) மார்ட்டின் லூதர் கிங்

11. இட ஒதுக்கீடு கொள்கையின் மூலம்

அ) உயர்த்துதல் ஆ) மேம்படுத்துதல்

இ) நீதி வழங்குதல் ஈ) அனைத்தும்

12. சாதி அமைப்பு மிகப் பெரிய அளவில் இருந்த மதம்.

அ) கிறிஸ்துவ மதம் ஆ) இந்து மதம்

இ) புத்த மதம் ஈ) ஜைன மதம்

13. அம்பேத்கர் எந்த மதத்திற்கு மாறினார்

அ) கிறிஸ்துவ மதம் ஆ) இந்து மதம்

இ) புத்த மதம் ஈ) ஜைன மதம்

14. ஒரு நியாயமான சமூகத்தில்

அ) பாகுபாடு இருக்காது ஆ) சாதிகள் இருக்காது

இ) மதங்கள் இருக்காது ஈ) மேற்கூறிய அனைத்தும்

15. மண்டல் அணையம் அமைக்கப்பட்டது

அ) பட்டியலினத்தவருக்காக ஆ) பழங்குடியினருக்காக

இ) இதர பிற்பட்ட வகுப்பினருக்காக ஈ) பிற்பட்ட வகுப்பினருக்காக

16. **கூற்று:** பிராமணரல்லாதோர், ஆங்கிலேயர் காலத்தில் அரசு பதவிகளில் பணியமர்த்தப்பட்டனர்.

**காரணம்:** 1921-ம் ஆண்டு வகுப்புவாரி பிரதிநிதித்துவ சட்டம் இயற்றப்பட்டது.

அ) கூற்றும்காரணமும் சரி, கூற்றுக்கான சரியான விளக்கம்

ஆ) இரண்டுமே சரி, ஆனால் காரணம் சரியான விளக்கம் இல்லை

இ) கூற்று சரி ஆனால் காரணம் தவறு

ஈ) கூற்று தவறு, காரணம் சரி

## II. பின்வரும் வினாக்களுக்கு குறுகிய விடையளி.

17. சமூகம், அரசாங்கம் மற்றும் சாதி – வரையறு.

18. சாதிகளற்ற சமுதாயம் – வரையறு.

19. சாதி பாகுபாடு என்று நீ கருதுவது என்ன?

20. சமத்துவம் என்றால் என்ன?

21. சுரண்டல் என்றால் என்ன?



11th Std Political Science Tamil Medium Vol-2_Chapter 13.indd 166 29-09-2018 12:42:58

*22. சாதி கலவரம் பற்றி வரையறுத்து கூறு?*

*23. கோவில் நுழைவு போராட்டம் பற்றி விளக்குக.*

## III. கீழ்க்காணும் வினாக்களுக்கு சுருக்கமாக விடையளிக்கவும்.

*24. இட ஒதுக்கீடு கொள்கை பற்றி சிறு குறிப்பு வரைக.*

*25. இந்திய அரசமைப்பில் கூறப்பட்டுள்ள சமத்துவம் பற்றி கூறு.*

*26. சாதி அமைப்புகள் பற்றி சிறு குறிப்பு வரைக.*

*27. இந்தியாவில் சாதி பாகுபாடு முறைகள் பற்றி விவரி.*

*28. மண்டல் அணையத்தின் பரிந்துரைகள் பற்றி விளக்கு.*

## IV. கீழ்க்காணும் வினாக்களுக்கு விரிவாக விடையளிக்கவும்.

*29. ஒரு நாட்டிற்கு லட்சியவாதத்தின் தேவை குறித்து விளக்குக.*

*30. சமத்துவ சமுதாயத்தின் அடிப்படை அம்சங்கள் குறித்து விவாதி.*

*31. பெரியாரின் அரசியல் கருத்துகள் பற்றி விரிவாக கூறு.*

*32. சமத்துவத்திற்கு பல்வேறு தலைவர்கள் ஆற்றிய பங்கினை பற்றி கூறு.*

*33. தற்கால இயக்கங்கள் தலைமையின் அவசியம் குறித்து விவாதி.*

*34. புதிய சமூக இயக்கங்கள் பற்றி விளக்குக.*

### மேற்கோள் நூல்கள் (Reference books)


1. Gauba. O.P, 'Dimension of Social Justice', National Publishing Co, New Delhi, 1983.
2. Rawls, John, 'A Theory of Justice', Universal Law Publishing Co. Pvt, Ltd, Delhi, 2000.
3. Rao, Priya, 'Development & Social Justice - A Legal Perspective'; Kalpaz Publications, Delhi, 2012.
4. Purohit . B.R; 'Social Justice in India', Rawat Publications, New Delhi, 2003.
5. Barry, Brain, 'Why Social Justice Matters' 1st Edition, Polity Publishers, 2005

PPA99I

| நிகழ்வுகளின் நாட்குறிப்பு | | |
|---|---|---|
| 1914 | – | திடாவிடர் கழகத்தின் தோற்றம் |
| 1916 | – | தென்னிந்திய விடுதலைக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது |
| 1917 | – | நீதிக் கட்சி |
| 1919 | – | மாண்டேகு செம்ஸ் போஃர்டு சீர்திருத்தங்கள் |
| 1925 | – | பெரியார் சுயமரியாதை இயக்கத்தைத் தோற்றுவித்தார். |
| 1937 | – | ராஜாஜியின் தலைமையில் காங்கிரசு அமைச்சரவை உருவாக்கப்படுதல் |
| 1937 | – | இந்தி எதிர்ப்புப் போராட்டம் |
| 1944 | – | சேலம் மாநாட்டில் நீதிக் கட்சி திராவிடர் கழகம் என பெயர் மாற்றம் செய்யப்பட்டது |
| 1949 | – | திராவிட முன்னேற்றக் கழகம் பிறந்தது |
| 1946 | – | சென்னை மாகாணத்தில் த.பிரகாசம் தலைமையிலான காங்கிரசு அரசாங்கம் அமைந்தது. |
| 1947 | – | ஓ.பி. ராமசாமி முதலமைச்சரானார். |
| 1949 | – | பி. குமாரசாமி ராஜா தலைமையிலான அமைச்சரவை அமைந்தது. |
| 1952 | – | முதல் பொதுத் தேர்தல் நடைப்பெற்றது |
| 1956 | – | மாநில மறுசீரமைப்புச் சட்டம் |
| 1965 | – | இந்தி – எதிர்ப்புப் போராட்டம் |
| 1967 | – | சி.என். அண்ணாதுரை தலைமையின் கீழ் தி.மு.க அரசாங்கம் அமைக்கப்பட்டது. |
| 1969 | – | சி.என். அண்ணாதுரை காலமானார் |
| 1969 | – | மு. கருணாநிதி மாநிலத்தின் முதலமைச்சரானார் |
| 1972 | – | அ.இ. அ.தி.மு.க., எம்.ஜி.இராமச்சந்திரனால் (எம்.ஜி.ஆர்) நிறுவப்பட்டது |
| 1974 | – | மாநில தன்னாட்சித் தீர்மானம் சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்டது. |

## கற்றலின் நோக்கங்கள்

- 1900-களில் சென்னை மாகாணத்தில் நடைபெற்ற அரசியல் விவாதங்களின் தன்மையைப் பற்றி புரிந்துகொள்ளுதல்
- பிராமணரல்லாதோர் இயக்கம் எவ்வாறு தோன்றியது பின்னர் தமிழ்நாட்டில் திராவிட கட்சிகளின் ஆட்சிக்கு எங்ஙனம் வழியமைத்தது என்பது பற்றி விளக்குதல்
- மாநிலத்தில் பல்வேறு அரசியல் கட்சிகளின் ஆட்சியின் பொழுது மத்திய-மாநில உறவுகளின் தன்மை பற்றி விரிவாக விளக்குதல்
- திராவிட கட்சிகளின் மக்கள்நலக்கொள்கை, அவற்றின் முக்கியத்துவம், பொது மக்கள் மீதான அதன் தாக்கங்களைப் பற்றிய அறிவைப் பெறுதல்
- ஏதேனும் மாநிலங்களின் அரசியல் விருப்பமானது தேசிய அரசியலின் மீது தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதா என்பதை ஆய்வு செய்தல்
- இந்த படிப்பின் முதன்மையான நோக்கமானது மாநிலத்தில் தொடர்ந்து வந்த அரசாங்கங்களின் சமூகநலக் கொள்கைகளின் அனைத்து பரிணாமங்களையும் அறிந்து கொள்வது.
- மாநிலத்தில் திராவிட அரசியலில் ஏற்பட்ட பல்வேறு பிளவுகள் மற்றும் அதன் விளைவுகளை கண்டறிதல்.

### 14.1 தமிழக அரசியல் வரலாறு

இந்தியாவின் பிற பகுதிகளுடன் ஒப்பிடும்போது, தமிழ்நாடானது, ஆரோக்கியமான நிர்வாக மற்றும் அரசியல் பண்பாடும், கிட்டத்தட்ட நிலையான பொருளாதார வாழ்வு மற்றும் மிக தொன்மையான காலத்திலிருந்து தற்காலம் வரை தொடர்ச்சியான மரபுகளையும் கொண்டதாகும். தென்னிந்தியாவின் சென்னை மாகாணம் என்பது (The Madras presidency) ஆங்கிலேயரின் அரசியல், நிர்வாக தேவைகளுக்காக தோற்றுவிக்கப்பட்டது. சென்னை மாகாணம் கி. பி. (பொ.ஆ) 1801-இல் உருவாக்கப்பட்டது. இந்த மாகாணமானது, 18 மற்றும் 19ஆம் நூற்றாண்டுகளில் தற்பொழுதுள்ள மாநிலங்களான ஆந்திரா, கேரளாவின் மலபார் பகுதி, தெற்கு கர்நாடகா, ஒடிசாவின் வடபகுதி முழுவதும் மற்றும் லட்சத்தீவு ஒன்றிய பிரதேசம் ஆகியவை உள்ளடக்கிய பகுதிகளாகும்.


இருபதாம் நூற்றாண்டின் ஆரம்ப காலத்தில் சென்னை மாகாணத்தின் அரசியலானது பிராமணர் -பிராமணரல்லாதோரின் மோதல் தொடர்பான ஆதிக்கம் கொண்டதாக இருந்தது. அறிஞர்களும், அரசியல் சிந்தனையாளர்களும் இந்த பிராமணர் – பிராமணரல்லாதோர் என்ற இரு பிரிவினரிடையே உள்ள மோதல்கள் பற்றி புரிந்து கொள்வது என்பதுதான் தென்னிந்தியாவின் அரசியல் மற்றும் சமூக வாழ்வை புரிந்து கொள்வதற்கு அவசியமானது என்று நம்பினார்கள்.

### சென்னை மாகாணம்

அதே நேரத்தில், சில பிராமணரல்லாத சாதி குழுக்களின் உறுப்பினர்கள் தொழிற்துறை வாணிபம் நிறுவனங்களில் வேலை வாய்ப்பினை கோரினர். கணிசமான அளவிற்கு, பிராமணரல்லாத சாதிபிரிவினர்கள் கிராமப் புறங்களில் இருந்து மாகாணத்தின் நகர்புறத்திற்கு புலம்பெயர்ந்தனர்,

அவர்கள் தங்களின் அடையாளத்தை உறுதி செய்ய விரும்பினார்கள் மற்றும்

படிப்படியாக சமூகத்தில், அரசியலில், நிர்வாகத்தில் பிராமணர்கள் அனுபவித்த ஏகபோக அதிகாரம் மற்றும் தனி உரிமை சலுகைகளை சவாலாக நின்று எதிர்த்தனர்.




"திராவிடன்" என்ற வார்த்தை, அறிஞர்கள் மற்றும் தமிழரல்லாதோர்/ ஆரியரல்லாததமிழ்பேசுவோரை அடையாளம் கண்டுகொள்ள பயன்படுத்தப்பட்டது. அதே நேரத்தில் பிராமணர்கள் "ஆரியர்கள்" எனவும் வடமொழி நாகரிகத்தின் பாதுகாவலர் எனவும் அடையாளப்படுத்தப்பட்டனர் மற்றும் பிராமணரல்லாதோர் "திராவிடர்கள்" எனவும் அவர்கள் தமிழ்மொழி, பண்பாடு மற்றும் நாகரீகத்தின் பாதுகாவலர் எனவும் கருதப்பட்டனர்.

## 14.2. திராவிட இயக்கத்தின் தோற்றம்

சென்னை மாகாணத்தில் பிராமணரல்லாதோரின் தமிழ் அடையாளம், சமூக அரசியல் மற்றும் பொருளாதார நலன்களை பாதுகாப்பிற்காக ஓர் பிராமணரல்லாத குழுவால் துவங்கப்பட்டதே "திராவிட இயக்கமாகும்."


### திராவிடர்கள் மற்றும் பிராமணரல்லாதோர்

1801 ஆம் ஆண்டு பன்மொழி கொண்ட சென்னை மாகாணமானது (தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் மற்றும் துலு) காலனிய ஆட்சியால் உருவாக்கப்பட்டது. இந்தியாவினுடைய பன்மைத் தன்மையை சென்னை மாகாணத்தின் அரசியல் வளர்ச்சியில் காணமுடியும். வங்காளத்திலும், வடஇந்தியாவின் பிற பகுதிகளிலும் சமஸ்கிருதம் மற்றும் வேதங்களை மையப்படுத்திய இந்திய பண்பாடு முன் எடுக்கப்பட்டது. இவற்றோடு இந்தோ–ஆரிய (அ) இந்தோ– ஜெர்மன் மொழிக் குடும்பம் அங்கீகரிக்கப்பட்டது. வேதமல்லாத, சமஸ்கிருதம் அல்லாத பண்பாடு அங்கீகரிக்கப்படவில்லை.



தமிழ் ஆர்வலர்களால் எல்லிஸ் தமிழை நேசிப்பவராகவும், வள்ளுவரின் குறளை மிகவும் விரும்புவராகவும் பாராட்டப்படுகிறார். இவர் பிற தமிழ்ப் படைப்புகளையும் நேசிப்பவராக இருப்பினும், எல்லிசின் காலனிய மற்றும் மதப் பின்னணி அறியப்படவில்லை.

பிரான்சிஸ் ஒயிட் எல்லிஸ்



**பிறப்பு:** மே 7, 1814 கிளாடி, இங்கிலாந்து.

**இறப்பு:** ஆகஸ்ட் 28, 1891, கொடைக்கானல், இந்தியா.

ராபர்ட் கால்டுவெல்

1837 ஆம் ஆண்டு ஜேம்ஸ் பிரின்சிபே மற்றும் இதர ஆய்வாளர்களால் பிராமண மூல ஆவணங்கள் மற்றும் தென்னிந்திய மொழிகளின் மீதான ஆய்வுகள் (எல்லிஸ் 1816 மற்றும் கால்டுவெல்– 1856) போன்றவைகள் இந்திய கலாச்சாரம் என்பது ஒரே மாதிரியானத் தன்மையைக் கொண்டது அல்ல என்றும், புத்த, திராவிட மரபுகள் கூட இந்தியாவில் இருந்தன என்பது நிரூபிக்கப்பட்டது. தென்னிந்தியாவில், குறிப்பாக, பன்மொழி கொண்ட சென்னை மாகாணத்தில், பிராமணரல்லாதோர் இடத்தில்,



11th Std Political Science Tamil Medium Vol-2_Chapter 14.indd 170 29-09-2018 12:43:24

திராவிட மொழிக்குழுக்கள் மற்றும் திராவிட பண்பாட்டுத் தொன்மை ஆகியவை, திராவிட அடையாள எழுச்சிக்கு இட்டு சென்றது.



(1) பிராமணர்கள், பிராமணரல்லாதோர் மீது தங்களது மேன்மையை கோருவது மற்றும் (2) பிராமணர்கள் கல்வி மற்றும் வேலைவாய்ப்புகளை ஏகபோகமாக்கியது ஆகிய இரண்டு திராவிட அடையாளத்தை பிராமணரல்லாதோர் அடையாளமாக மாற்றியமைத்தது. மகாராஷ்டிராவில் கூட மகாத்மா ஜோதிபா புலே இதே போன்று ஓர் பிராமணரல்லாதோர் இயக்கத்தைத் துவக்கினார் இவ்வாறு திராவிடம் என்பது தென்னிந்தியாவில் பிராமணரல்லாதோர் என்பதைக் குறிப்பதாயிற்று.


சென்னை மாகாண பிராமணரல்லாதோரின் பிரச்சனையை புதியதாக தேசியத் தலைவர்கள் கவனத்தில் கொள்ளவில்லை என்பதாகக் குறைபாடு இருந்தது. 1852 ஆம் ஆண்டு கங்காலு லட்சுமி நராஷ் என்பவர் இதனை வெளிப்படுத்தி, ஆங்கிலேய இந்திய கழகத்திலிருந்து வெளியேறி, சென்னை வாழ் மக்கள் சங்கம் என்ற பெயரில் ஓர் அமைப்பை தொடங்கினார். சிப்பாய்க் கலகத்திற்கு பிந்தைய காலங்களில் பிராமணரல்லாத தலைவர்கள் அரசியல் சீர்திருத்தங்களைக் காட்டிலும் சமூக சீர்திருத்தத்தின் மீது கவனம் செலுத்தினார். 1909 ஆம் ஆண்டு மிண்டோ மார்லி சீர்திருத்தம் அறிமுகப்படுத்தப்பட்ட பிறகு, சென்னை மாகாணத்தைச் சார்ந்த பிராமணரல்லாதோருக்குக் கல்வி மற்றும் வேலைவாய்ப்பில் போதிய பிரதிநிதித்துவம் இல்லை என்று எதிர்ப்பு காட்ட துவங்கினர்.



1913 ஆம் ஆண்டு ஆளுனரின் செயற்குழு உறுப்பினர், திரு. சர். அலெக்சாண்டர் ஜோர்டன் கார்டிவ் என்பவர் அளித்த புள்ளியியல் விவரமானது, மக்கள் தொகையில் மூன்று சதவீதம் மட்டும் அங்கம் வகிக்கும் பிராமணர்கள் வாய்ப்புகளையும் எடுத்துக் கொண்டார்கள் என்பதை நிரூபித்தது.

## 14.3. நீதிக் கட்சி

அக்காலத்தில் இருந்த முதன்மையான அரசியல் கட்சியான இந்திய தேசிய காங்கிரசானது பிராமணர்களின் ஆதிக்கத்தில் இருந்தது. எனவே பிராமணரல்லாத உறுப்பினர்களின் கோரிக்கைகளை அவர்கள் கருத்தில் கொள்ளவில்லை.எனவேசென்னைமாகாணத்தில் உள்ள பிராமணர் அல்லாத தலைவர்கள் பிராமணரல்லாதோர் அரசியல் அமைப்பு ஒன்றினை துவங்க நினைத்தனர். முதலாவது உலகப் போருக்கு பிறகு ஏற்பட்ட அரசியல் சீர்திருத்தங்கள் மற்றும் நிறுவனங்களில் பிரதிநிதியாகும் வாய்ப்பு போன்றவை இவர்களின் செயல்பாடுகளை ஊக்குவித்தன.






1916 ஆம் ஆண்டு டாக்டர். டி.எம். நாயர், சர் பிட்டி தியாகராயர் மற்றும் டாக்டர். சி. நடேசனார் போன்றோர்கள் பிராமணரல்லாதோரின் சமூக அரசியல் மற்றும் பொருளாதார நலன்களை முன்னேற்றுவதற்காக தென்னிந்திய விடுதலை கூட்டமைப்பை நிறுவினர். இவ்வாறு உருவான பின்னர் தென்னிந்திய விடுதலை கூட்டமைப்பு (SILF) புகழ் பெற்ற நீதிக்கட்சியானது. "நீதிக்கட்சி" என்ற பெயர் ஆங்கில இதழான "நீதி" என்பதன் அடிப்படையில் பெயரிடப்பட்டது. இவர்களின் ஓயாத முயற்சியால்

பிராமணரல்லாதோருக்கு மாகாண சட்டமன்ற தேர்தலில் இடஒதுக்கீடு பெற்றுத்தந்தனர்.

### நீதிக் கட்சியின் முக்கிய நோக்கங்கள்

அ. தென்னிந்தியாவின் அனைத்து பிராமணரல்லாதோரின் கல்வி, சமூக, பொருளாதார மற்றும் செல்வ மேம்பாட்டினை உருவாக்கி முன்னேற்றுதல்.
ஆ. அரசமைப்பிலான அரசாங்கத்தைக் கொண்டு பிராமணரல்லாதோரின் முன்னேற்றத்திற்குப் பாடுபடுதல்.
இ. அரசமைப்பிலான உண்மையான பிரதிநிதித்துவ அரசாங்கமாக ஆக்குதல்
ஈ. பிராமணரல்லாதோரின் கோரிக்கைகளுக்கு ஆதரவாக பொதுக்கருத்தை உருவாக்குதல்.











1919 ஆம் ஆண்டு மாண்டேகு – செம்ஸ்போஃர்டு சீர்திருத்தமானது மாகாணங்களில் இரட்டை ஆட்சி முறையைக் கொண்டு வந்ததன் மூலம் சில துறைகள் தேர்ந்தெடுக்கப்பட்டு இந்திய அமைச்சருக்கு என ஒதுக்கப்பட்டது. இரட்டை ஆட்சியின் கீழ் 1920 ஆம் ஆண்டு நடந்த முதல் தேர்தலில், இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி ஒத்துழையாமையின் ஒரு பகுதியாக தேர்தலை புறக்கணித்தது. ஆனால் பல்வேறு அடையாளங்களில் காங்கிரசைச் சேர்ந்த பலர் தேர்தலில் போட்டியிட்டனர்.

நீதிக் கட்சி பெரும்பான்மை இடங்களில் வெற்றி பெற்று சென்னை மாகாணத்திற்கு ஏ. சுப்பராயலு முதலமைச்சரானார், அவரின் இறப்பிற்கு பிறகு பனகல் ராஜா முதலமைச்சரானார்.




### 14.4. நீதிக் கட்சியின் பங்களிப்பு

அடுத்தடுத்த தேர்தல்களில் நல்வாய்ப்புகளில் பல்வேறு ஏற்ற இறக்கம் இருந்த போதிலும் நீதிக் கட்சி 1921 முதல் 1937 வரை தொடர்ச்சியாக அதிகாரத்தில் இருந்தது. அவர்கள் பல சீர்திருத்தங்களை அறிமுகப்படுத்தினார்கள். வகுப்புவாரி அரசாணை மூலம் ஒவ்வொரு பிராமணரல்லாத பிரிவினருக்கும் அனைத்து துறைகளிலும் போதுமான வாய்ப்புகள் உறுதிப்படுத்தப்பட்டது.

அவர்கள் சூத்திரர்களுக்கு மற்றும் பஞ்சமர்களுக்கு எதிராக இருந்த பொது வழி, போக்குவரத்து, உணவு விடுதிகள் மற்றும் பொது கிணறுகளைப் பயன்படுத்துதல் போன்றவற்றில் இருந்த பாகுபாடுகளை நீக்கினர். இந்து சமய அறநிலைய வாரியத்தை அமைத்ததின் மூலம் ஆலய விவகாரங்களை ஒழுங்குபடுத்தினர். பஞ்சமர்களுக்கு நிலத்தை ஒதுக்கீடு செய்து கொடுத்தனர் (பஞ்சமி நிலம்). புதிய நகரங்களையும்,




11th Std Political Science Tamil Medium Vol-2_Chapter 14.indd 172 29-09-2018 12:43:27

தொழிற்பேட்டைகளையும் அறிமுகப்படுத்தினர். ஒடுக்கப்பட்டோரின் குழந்தைகளுக்கு கல்வி வழங்குவதற்கு சிறப்பு முயற்சிகள் எடுத்துக்கொள்ளப்பட்டது. அதனால் சில பள்ளிகளில் "மதிய உணவு திட்டத்தை" பரிசோதனை முறையில் கொண்டுவந்தனர். மருத்துவ கல்விக்கு சமஸ்கிருதம் அறிவு அடிப்படைத் தகுதி என்பது நீக்கப்பட்டு பிராமணரல்லாத மாணவர்கள் மருத்துவக் கல்வியில் நுழைவதற்கு வழி செய்யப்பட்டது. டாக்டர். முத்துலட்சுமி அவர்களின் முயற்சியால் இந்தியாவில் முதல் முறையாகதேவதாசி முறைஒழிக்கப்பட்டதுடன், பெண்கள் வாக்குரிமையைப் பெற்றனர்.



கூட்டுறவு சங்கங்கள் மேம்படுத்தப்பட்டன. மிராசுதார் முறை ஒழிக்கப்பட்டதுடன் மற்றும் 1923 ஆம் ஆண்டு நீர்ப் பாசனத்திட்டங்களும் உருவாக்கப்பட்டன. மேலும் இந்த ஆட்சிக்காலத்தில் தான் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் மற்றும் ஆந்திரா பல்கலைக் கழகம் ஆகியவை உருவாக்கப்பட்டன. சில துறைகள் ஒதுக்கப்பட்டாலும் நீதிக் கட்சி மட்டுமே மிகவும் சிறப்பான அரசாங்கத்தை கொடுத்தது.

## 14.5 பெரியார் ஈ.வெ.ராமசாமி



ராஜாஜி அரசாங்கம் இந்தியைக் கட்டாயப் பாடமாக்குவது என முடிவெடுத்ததை தமிழ் மொழி மற்றும் பண்பாட்டை அழித்து "வட இந்திய ஏகாதிபத்தியத்தை" நிறுவும் முயற்சி என பெரியார் கருதினார். மேலும் இந்தி திணிப்பு என்பது திராவிடர்களை அடிமைப்படுத்தி ஆரியர்களின் மேலாதிக்கத்தை நிறுவுவதற்கான முயற்சி என்று பெரியார் கூறினார்.

சென்னை மாகாணத்தில் மாபெரும் இந்தி எதிர்ப்புப் போராட்டம் நடைபெற்றதன் விளைவாக மாகாண அரசாங்கத்தால் பெரியார் சிறையில் அடைக்கப்பட்டார். பதினைந்து ஆண்டுகளில் இருபத்து மூன்று முறை சிறை சென்றார் என்பதனால் 'சிறைப்பறவை' என்றும் அடைமொழியிட்டு அழைக்கப்பட்டார். 1938 ஆம் ஆண்டு இந்தி எதிர்ப்புப் போராட்டத்திற்காக சிறையில் அடைக்கப்பட்டிருந்த போது அவர் நீதிக் கட்சியின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார். அதே ஆண்டு நீதிக் கட்சியானது ஆங்கிலேய அரசாங்கத்தின் கீழ் தமிழ்நாடு தனிநாடாக வேண்டும் என்ற தீர்மானத்தை இயற்றியதுடன் இது ஆங்கிலேய அரசாங்கத்தின் இந்தியாவிற்கான அமைச்சருடைய நேரடி கட்டுப்பாட்டின் கீழ் இருக்க வேண்டும் என்றது. சென்னை மாகாண காங்கிரசில் பெரியார் முன்னோடியாக இருந்ததால் அரசியல் அரங்கில் பிராமணரல்லாதோர் அரசியலில் பங்குபெறுவதற்கான விகிதாச்சார பிரதிநிதித்துவத்திற்குச் சாதகமாக காங்கிரசில் தீர்மானம் கொண்டு வந்ததில் மிகச் சிறப்பாக தனது முயற்சியை செய்தார். வைக்கம் சத்தியாகிரக போராட்டத்திற்கு தனது சிறப்பான தலைமையை அளித்ததுடன் காங்கிரஸ் கட்சி நிறுவிய சேரன்மா தேவி குருகுலத்தில் நடந்த சாதிப்பாகுபாட்டிற்கு எதிராக பிரச்சாரம் செய்தார்.

பெரியார் தன்னுடைய திட்டங்களை காங்கிரசு கட்சி ஏற்றுக்கொள்ளச் செய்வதில் எடுத்த முயற்சிகள் அனைத்தும் தோல்வி அடைந்தபோது காங்கிரசை விட்டு விலகி 1925 ஆம் ஆண்டு சுயமரியாதை இயக்கத்தை தொடங்கினார். இவ்வியக்கம் தேர்தல் அரசியலை தவிர்த்ததுடன் சமூக சீர்திருத்தம், சாதிமுறையை ஒழிப்பது, மாண்பற்ற தன்மையை நீக்குவது, பெண்கள் மீதான பாலின அடிப்படையிலான தடை நீக்கம்,

பரம்பரை அர்ச்சகர் உரிமையை எதிர்ப்பது போன்றவற்றிற்காக பிரச்சாரம் செய்தது. சுயமரியாதை இயக்கம் மிக தீவிரமான பிரச்சாரத்தை மேற்கொண்டு பழங்காலம் முதலான மூடநம்பிக்கைகளையும், பழக்கவழக்கங்களையும் எதிர்த்ததுடன் பகுத்தறிவற்ற மரபுகள் மற்றும் சமத்துவமற்ற தன்மைகள் நீடித்திருப்பதை நியாயப்படுத்திக் கொண்டிருக்கும் மதத்தின் பங்குப்பற்றியும் வினா எழுப்பியது. இந்த சுயமரியாதை இயக்கம், பகுத்தறிவு மாண்பு மறுப்பினை எதிர்த்தல் மற்றும் தனிமனித சமத்துவம் (பெண்கள் உட்பட) போன்றவை மரபு மற்றும் மதத்தின் கோரப்பிடியின் கீழ் இருப்பதை எதிர்த்து பிரச்சாரம் செய்தது.

சுயமரியாதை இயக்கம் அதன் இயக்க உறுப்பினர்களுக்கு சாதி துணைப்பெயர்களை துறப்பதுடன், சாதி-மத அடையாளங்களையும் கைவிட ஆணையிட்டது. அது சாதியற்ற, புரோகிதர்அற்ற தவிர சம்பிரதாய சடங்குகள் அற்ற ஒப்பந்தத் திருமணங்களை அறிமுகம் செய்தது. இது சுயமரியாதைத் திருமணம் எனப்பட்டது. இவ்வியக்கம் தீண்டாமைக்கு எதிராக மட்டும் போராடவில்லை, மாறாக சாதிமுறை அமைப்பு மற்றும் சாதி அடிப்படையிலான பலவீனங்கள், தனிமனிதர்கள் மீது திணிக்கப்படும் மாண்பு குறைவு நடவடிக்கைகள் ஆகியவற்றினையும் எதிர்த்து போராடியது.




சுயமரியாதை இயக்கம் வெறும் பெயருக்காக மட்டும் பெண்ணுரிமை பற்றி பேசவில்லை. அது பெண்களின் சம உரிமை, சமநிலை மற்றும் சம வாய்ப்புக்காக பிரச்சாரம் செய்தது. பெண் விடுதலையில் சுயமரியாதை இயக்கத்தின் பங்குப்பணி ஓர் ஈடு இணையில்லாதது, என்பதால் அதன் காரணமாகவே பெண்கள் மாநாட்டில் ஈ.வெ. ராமசாமிக்கு "பெரியார்" என்ற பட்டம் வழங்கப்பட்டது. பெரியாரின் நாளேடுகளான "குடியரசு," " புரட்சி", பின்பு 'விடுதலை' போன்றவை சுயமரியாதைக் கருத்துக்களை சிறப்பான முறையில் பிரச்சாரம் செய்தன.

### 14.6 சுயமரியாதை இயக்கம்

1929 ஆம் ஆண்டு செங்கல்பட்டில் முதலாவது சுயமரியாதை மாநாடு நடந்தது. 1937ஆம் ஆண்டு ராஜாஜி என்று புகழ்பெற்ற C.ராஜகோபாலாச்சாரியின் தலைமையில் வழிநடத்தப்பட்ட காங்கிரசு கட்சி ஓரிடத்தை தவிர அனைத்து இடங்களிலும் வெற்றிப் பெற்றது. ஆனால் காங்கிரசு கட்சியின் வெற்றியானது நீதிக்கட்சியின் வீழ்ச்சினால் கிடைத்ததாகும். காங்கிரசு அரசாங்கம் அமைக்கப்பட்டு, சென்னை மாகாணத்தின் முதன்மை அமைச்சராக ராஜாஜி ஆனார்.

அதிகாரத்திற்கு வந்த உடனே காங்கிரசு அரசாங்கம் பள்ளிக் கூடங்களில் இந்தியினை கட்டாயப்பாடமாக அறிமுகப்படுத்தியது. பெரியார் இந்தி எதிர்ப்பு போராட்டத்தினை தொடங்கினார்.



இக்கால கட்டத்தில் பொதுவுடைமைக் கட்சி(முன்னதாக 1925-இல் உருவாக்கப்பட்டது) சமதர்மத் திட்டங்களுக்காக தொழிலாளர் இயக்கங்களை ஒன்றிணைத்து தீவிரமாக பரப்புரை செய்து கொண்டிருந்தது. M. சிங்காரவேலர் மற்றும் அவரின் உடன்

இருந்தோர் சுயமரியாதை இயக்கத்தின் சமூக சீர்திருத்த திட்டங்களால் கவரப்பட்டனர். இதன்படி சமூகங்களின் பொருளாதார திட்டங்களுக்கான ஆதரவை விரிவுபடுத்துபடுவதுடன், ஓர் பொதுத் திட்டத்தின் அடிப்படையில் செயலாற்ற ஒத்துக்கொண்டனர். (ஈரோடு திட்டம்).

### சுயமரியாதை இயக்கத்தின் நோக்கங்கள்

அ. திராவிட சமுதாயத்தை சீர்திருத்துவது மற்றும் அதனை உண்மையான பகுத்தறிவுடையதாக்குதல்.

ஆ. திராவிடர்களின் பண்டைய தமிழ் பண்பாட்டினை அவர்களுக்குக் கற்பித்தல்.

இ. ஆரிய பண்பாட்டின் ஆதிக்கத்தில் இருந்து திராவிட சமூகத்தைக் காப்பாற்றுதல்

ஈ. மூடநம்பிக்கையான நடவடிக்கைகளை நீக்குவதன் மூலம் இந்து மதத்தை சீர்திருத்துவதுடன் பிராமணர்களின் செல்வாக்கினைக் குறைத்தல்.

பெரியார் பொதுவாக பிராமணரல்லாதவர்களிடம் குறிப்பாக இளைஞர்களிடம் சமூக விழிப்புணர்வை ஏற்படுத்துவதன் மூலம் தொன்மையான திராவிட பண்பாட்டின் புகழை மீட்டெடுக்க விரும்பினார். பிராமண புரோகிதர்கள் இல்லாத சுயமரியாதைத் திருமணத்தை மேற்கொள்ள ஆதரவு தெரிவித்தார். அவர் மத விழாக்களை மக்கள் பின்பற்றுவதை ஆதரிக்கவில்லை. எந்த ஒரு சமூக நிகழ்வுகளிலும் பிராமணர்களின் சேவைகளை பயன்படுத்தாமல் இருக்கச் செய்தார்.

### நீதிக் கட்சியின் வீழ்ச்சி

1929-ஆம் ஆண்டு வரை சுயமரியாதை இயக்கமானது சென்னை மாகாணத்தில் ஓர் முன்னோடி இயக்கமாக இருந்தது. 1930 ஆம் ஆண்டுகளில் சென்னை மாகாணத்தில் அதன் புகழ் மங்கத்தொடங்கியது. இந்த வீழ்ச்சிக்கு மூன்று முக்கிய காரணங்கள் இருந்தன. ஒன்று, இந்த இயக்கமானது ஒடுக்கப்பட்ட மற்றும் சிறுபான்மை பிரிவு மக்களிடையே ஆதரவை இழந்தது. இரண்டாவதாக, பெரியார் தலைமையில் இருந்த சுயமரியாதை இயக்கம் மிகவும் புரட்சிகரமான சீர்திருத்த இயக்கமானது. இறுதியாக உயர்குடியின மற்றும் ஆங்கில ஆதரவு கண்ணோட்டம் ஆகியவை பெருமளவு அதன் வீழ்ச்சிக்கு குறிப்பிடத்தக்க பங்களித்தன.

## 14.7. இந்தி எதிர்ப்பு போராட்டம்

நீதிக் கட்சியின் வீழ்ச்சியும், தேர்தல் அரசியலில் நுழைய பெரியார் மறுத்ததும், வளர்ந்து வந்த மகாத்மா காந்தியின் புகழும், இந்திய தேசிய காங்கிரசை 1937 ஆம் ஆண்டு சென்னை மாகாண தேர்தலில் வெற்றிபெற செய்தது. ராஜாஜி முதல் அமைச்சரானார்.




அவர் முழுமையான மது விலக்கு (மது விற்கத் தடை) மற்றும் ஜமீன்தாரி முறை ஒழிப்பை நடைமுறைப்படுத்தினார். மேலும் ஒடுக்கப்பட்டோர் ஆலய நுழைவுக்கு இருக்கும் தடையை நீக்குவதற்கு சட்டம் கொண்டுவந்தார். இருந்தபோதிலும், இந்தி மொழியை கட்டாயமாக பள்ளியில் அறிமுகப்படுத்திய நடவடிக்கையானது பல பள்ளிக் கூடங்களை மூடுவதற்கு காரணமானது. இது சுயமரியாதைக்காரர்கள் மற்றும் தேசியவாதிகளான மறைமலை அடிகள் போன்றோரை ஆத்திரமடையச் செய்தது. இதனால் 1937 ஆம் ஆண்டு இந்தி எதிர்ப்பு போராட்டத்திற்கு அனைவரும் ஒன்று சேர்ந்தனர். பெரியார் உள்ளிட்ட ஆயிரக் கணக்காண போராட்டக்காரர்கள் கைதானார்கள், மேலும் பல பேர் சிறையிலேயே இறந்தனர்.

உங்களுக்குத் தெரியுமா?

| வ.எண். | சென்னை மாகாணம் முதலமைச்சர்கள் | ஆண்டு |
|---|---|---|
| 1 | அ. சுப்பராயலு | 1920 – 1921 |
| 2 | பனகல் ராஜா | 1921-1926 |
| 3 | பி. சுப்புராயன் | 1926 1930 |
| 4 | பி. முனுசாமி | 1930 1932 |
| 5 | பொப்பிலி ராஜா | 1932 -1937 |
| 6 | பி.டி. இராசன் | 1936 |
| 7 | கே.வி. ரெட்டி | 1937 |
| 8 | சி. இராஜாஜி | 1937 - 1939 |
| (குறிப்பு: தமிழ் நாடு அரசு மாநில ஆளுநரின் கட்டுப்பாட்டின் கீழ் செயல்பட்ட வருடம் 1946 அக்டோபர் 20 முதல் ஏப்ரல் 30) | | |
| 9 | த. பிரகாசம் | 1946 -1947 |
| 10 | ஓ.பி. இராமசாமி | 1947 – 1949 |
| | முதலமைச்சர்கள் (தேர்தல் நடைமுறைக்குப் பிறகு) | |
| 11 | பி.எஸ். குமாரசாமி ராஜா | 1949-1952 |
| 12 | சி. இராஜாஜி | 1952 - 1954 |
| 13 | கு. காமராஜ் | 1954-1957 |
| 14 | கு. காமராஜ் | 1957-1962 |
| 15 | கு. காமராஜ் | 1962-1963 |
| 16 | எம். பக்தவச்சலம் | 1963-1967 |
| 17 | சி.என். அண்ணாதுரை | 1967-1969 |
| 18 | மு. கருணாநிதி | 1969-1971 |
| 19 | மு. கருணாநிதி | 1971-1976 |
| 20 | எம்.ஜி. இராமச்சந்திரன் | 1977-1980 |
| 21 | எம்.ஜி. இராமச்சந்திரன் | 1980-1984 |
| 22 | எம்.ஜி. இராமச்சந்திரன் | 1985-1987 |
| 23 | ஜானகி இராமச்சந்திரன் | 1988 |
| 24 | மு. கருணாநிதி | 1989-1991 |
| 25 | ஜெ. ஜெயலலிதா | 1991-1996 |
| 26 | மு. கருணாநிதி | 1996-2001 |
| 27 | ஜெ. ஜெயலலிதா | 2001-2001 |
| 28 | ஓ. பன்னீர்செல்வம் | 2001-2002 |
| 29 | ஜெ. ஜெயலலிதா | 2002 -2006 |
| 30 | மு. கருணாநிதி | 2006 - 2011 |
| 31 | ஜெ. ஜெயலலிதா | 2011 |
| 32 | ஓ. பன்னீர்செல்வம் | 2012 (இடைக்கால) |
| 33 | ஜெ. ஜெயலலிதா | மே 16, 2016 – டிசம்பர் 5 2016 |
| 34 | ஓ. பன்னீர்செல்வம் | டிசம்பர் 2016 – பிப்ரவரி 2017 |
| 35 | க. பழனிசாமி | பிப்ரவரி 2017 - தொடர்கிறார் |



11th Std Political Science Tamil Medium Vol-2_Chapter 14.indd 176 29-09-2018 12:43:28

### 1944 –சேலம் மாநாடு

1944–ஆம் ஆண்டு பெரியார் தலைமையில் நடைபெற்ற சேலம் மாநாட்டில், ஏற்கெனவே பெரியாரின் தளபதியாகிவிட்ட திறமையான சொற்பொழிவாளரான சி.என். அண்ணாதுரை நீதிக் கட்சியின் பெயரை திராவிடர் கழகம் (தி.க) என்று வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்மானத்தை கொண்டுவந்தார். பெரியார் "திராவிட நாடு" மாநாட்டைக் கூட்டி திராவிடர்களுக்குத் தனி "திராவிட நாடு" கோரினார். மேலும் அவரின் புகழ் பெற்ற வாசகமான "திராவிட நாடு திரவிடர்களுக்கே" எனவும் முழக்கமிட்டார்.

தனித் "திராவிட நாடு" கோரிக்கையைத் தவிர திராவிடர் கழகமானது சாதியற்ற சமூகத்தை ஏற்படுத்துதல், மதச் சடங்குகளைக் கண்டித்தல், பழமை மற்றும் மூடநம்பிக்கைகள் அற்ற சமூகத்தை அமைத்தல் ஆகியவற்றை விரும்பியது.

திராவிடர் கழகமானது கிராம மற்றும் நகர் புறங்களில் குறிப்பாக மாணவர்களிடத்தில் மிகவும் புகழ்பெற்றது, பல பிராமணர் அல்லாத தலைவர்கள் மற்றும் மாணவர்கள் தங்களுடைய பெயர்களை தூய தமிழில் மாற்றி கொண்டனர்.

### இந்தி எதிர்ப்புப் போராட்டம் –1965

1965 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 26ஆம் நாள் இந்திய அரசு அமைப்புச் சட்டத்தின் உறுப்பு 313–ன் படி இந்தி மொழி இந்திய நாட்டின் அலுவலக மொழியாக ஆக்கப்பட்டது. மத்திய அரசாங்கத்தின் இந்த முடிவை எதிர்த்து 1965 ஆம் ஆண்டு ஜனவரி 26ஆம் நாளை தி.மு.க. துக்க தினமாக அனுசரிக்கத் தீர்மானித்தது. அதன் பல தலைவர்கள் மற்றும் தொண்டர்கள் கைது செய்யப்பட்டார்கள்.




தமிழ்நாடு பெருமளவிலான இந்தி எதிர்ப்பு போராட்டங்களை சந்தித்தது. இந்த கிளர்ச்சியால் தி.மு.க. மாணவர் சமூகத்திடம் இருந்து பெருமளவு ஆதரவை பெற்றது. இதன் மற்றொரு பக்கம் காங்கிரசு கட்சி தமிழ்நாட்டில் தனது ஆதரவையும், தளத்தையும் இழந்தது. இதற்கிடையில் தி.மு.க. "திராவிட நாடு" கோரிக்கையை திரும்ப பெற்றுக்கொண்டு தமிழ் நாட்டின் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்ற தேர்தல் அரசியலில் ஊக்கத்துடன் பங்கெடுத்தது.

## 14.8. திராவிட இயக்கம்: இரண்டாம் உலகப்போர் காலத்திலும் அதன் பின்னரும்



1939ஆம் ஆண்டு இந்தியா இரண்டாம் உலகப்போரில் ஆங்கிலேய அரசாங்கத்தால் ஈடுபடுத்தப்படுவதை விரும்பாத காங்கிரசு அமைச்சரவை பதவியை துறந்தது. பெரியார் திராவிட நாடு கோரிக்கையை எழுப்பினார். 1944 ஆம் ஆண்டு நீதிக்கட்சி பெரியார் தலைமையிலான சேலம் மாநாட்டில் அதன் பெயரை "திராவிடர் கழகம்" என மாற்றியும், திராவிட நாடு அடைவதே தனது லட்சியம் என்றும் அறிவித்து, சமூக பண்பாட்டு சமத்துவத்திற்கு முன்பாக விடுதலை அடைவது தமிழர்களின் நலன்களுக்குத் தீங்கு விளைவிக்கும் என்று கூறினார். 1949 ஆம் ஆண்டில், திராவிட கழகத்தை விட்டு பிரிந்து திராவிட முன்னேற்றக் கழகம் அண்ணாதுரையால் ஆரம்பிக்கப்பட்டது.


1951 ஆம் ஆண்டில் உச்ச நீதி மன்றமானது உயர்கல்வியில் சாதிவாரி இடஒதுக்கீட்டை உடைத்து எறிந்தது. உடனடியாக பெரியாரின்

திராவிடர் கழகம் மீண்டும் சாதிவாரி இடஒதுக்கீட்டைத் திரும்ப பெற போராட்டத்தை துவக்கியது.




சட்டமும் விதிமுறைகளும் மக்களுக்காகவே ஏற்பட்டவை. சட்டத்துக்காகவும், விதிமுறைக்களுக்காகவும் மக்கள் இல்லை.

–பெருந்தலைவர் காமராஜ்.



திராவிட முன்னேற்ற கழகமும் கூட இந்த போராட்ட இயக்கத்தில் சேர்ந்து கொண்டது. காங்கிரசு தலைவர் காமராஜர் இந்த சிக்கலை மத்தியில் இருக்கும் தலைவர்களின் கவனத்திற்கு கொண்டு சென்றார். இதனைத் தொடர்ந்து சமூக மற்றும் கல்வி அடிப்படையில் பின்தங்கிய பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்குச் சாதகமாக இடஒதுக்கீடு அளிக்கும் முதலாவது நாடாளுமன்ற சட்டத் திருத்தம் இயற்றப்பட்டது.

### 14.9. ராஜாஜி ஆட்சி:– (1952–54)



சென்னை மாகாண அரசியலானது குடியரசு இந்தியாவில் பழமை மாறா சக்திகளுக்கும், சீர்திருத்தவாதிகளுக்கும் இடையே தொடர்ந்து நடக்கும் போராட்டத்தின் சாட்சியாகவே இருந்தது. சென்னை மாகாணத்தின் முதல் தேர்ந்தெடுக்கப்பட்ட அமைச்சரவையை வழிநடத்திய திரு. சி. ராஜகோபாலாச்சாரி, மீண்டும் குடியரசினுடைய அரசமைப்பின் கீழ் பள்ளிக்கூடங்களின் எண்ணிக்கையை குறைத்தார். பள்ளிகளில் இந்திய மொழியை திணித்தார், புதிய பள்ளிக் கூடங்களில் பகுதி நேரமாக கற்பதற்கு பரம்பரைத் தொழில் எனப்படும் (குலக்கல்வி) புதிய தொடக்க கல்வி திட்டத்தை அறிமுகப்படுத்தினார்.

உங்களுக்குத் தெரியுமா?

*தண்டி யாத்திரை பற்றிய அருந்ததி ராயின் கருத்து……*



அரசியல் களத்தின் வழியே எதிர்ப்புகள் பிரதிபலிக்கப்படுவதற்கு ஓர் வரலாறு இருக்கிறது. 1930–இல் தண்டிக்கு காந்தி மேற்கொண்ட உப்பு யாத்திரை மிகவும் சிறப்பான உதாரணமாகும். ஆனால், உப்பு யாத்திரை என்பது ஓர் களம் மட்டுமல்ல. அது உண்மையில் சட்டமறுப்பு செயல்பாட்டினைப் பெருமளவில் உணர்த்துவதாகும். காந்தியின் தலைமையில் பல சுதந்திரப் போராட்ட வீரர்கள் குஜராத் கடற்கரைக்கு நடந்து சென்று கடல் நீரிலிருந்து உப்பெடுக்க முனையும் போது ஆயிரக்கணக்கான இந்தியர்கள் நாடு முழுவதும் ஆங்கிலேயரின் உப்பு வரிச் சட்டங்களுக்கு எதிராக தாங்களே சட்டத்தினை மீறி உப்பெடுக்கும் செயலை மேற்கொண்டனர். ஆங்கிலேய ஏகாதிபத்ய உப்புச் சட்டத்தினால் உள்நாட்டு உற்பத்தி தடைபடுவதுடன் ஆங்கிலேய இறக்குமதிகளுக்கும் ஆதரவாக அமைந்தது. இச்செயல் ஆங்கிலேய பேரரசின் பொருளதார அடித்தளத்தின் மீதான நேரடித் தாக்குதலாக இது அமைந்தது.

*(அருந்ததி ராய், பேரரசிற்கான ஓர் சாமானியனின் வழிகாட்டி, பக்கம் 307)*


ராஜாஜியின் இந்த நடவடிக்கைகளை எதிர்த்து திராவிடத் தலைவர்கள் மாநிலம் முழுவதும் போராடத் தொடங்கினார். காங்கிரசு தலைவர்களின் ஒரு பகுதியினரும் ராஜாஜியின் திட்டத்தால் கோபம் அடைந்தனர். இதுவே ராஜாஜி பதவி விலகுவதற்கு காரணமாக அமைந்தது. அவரைத்தொடர்ந்து காமராஜர் முதலமைச்சரானார்.



11th Std Political Science Tamil Medium Vol-2_Chapter 14.indd 178 29-09-2018 12:43:29

## 14.10 காமராஜர் காலம் (1954–1963)

காமராஜர் தொடக்கக் கல்வித்திட்டத்தில் மாற்றங்களைக் கொண்டுவந்ததுடன் குலக்கல்வித் திட்டத்தை ஒழித்தார். பள்ளிகளின் எண்ணிக்கையை பன்மடங்கு உயர்த்தினார், பல அணைகளைக் கட்டி நீர்பாசன வசதியை உயர்த்தினார். நிறைய தொழிற்பேட்டைகளை (Industrial Estates) அமைத்தார். அதன் மூலம் மாநிலத்தில் வியக்கத்தக்க அளவிற்கு தொழில்வளர்ச்சியை உறுதிசெய்தார். ஏழை கிராமபுற குழந்தைகளும் கல்வி பெறச் செய்தார். அவர் குழந்தைகளுக்கு மதிய உணவுத்திட்டத்தைஅறிமுகப்படுத்தினார்.





### திராவிட கட்சிகளின் ஆட்சி

1967–ஆம் ஆண்டு பொது தேர்தலில் காங்கிரசு கட்சி தோற்கடிக்கபட்டது. தி.மு.க. வெற்றி பெற்று சி.என்.அண்ணாதுரை முதலமைச்சரானார்.







**உங்களுக்குத் தெரியுமா?**

1956–இல் மாநில மறுசீரமைப்புச் சட்டத்தின் மூலமாக சென்னை மாகாணத்தில் இருந்து மலையாளப் பகுதிகள் கேரளாவிற்கும், தெலுங்கு பகுதிகள் ஆந்திரப் பிரதேசத்திற்கும், கன்னடப் பகுதிகள் மைசூர் மாநிலத்திற்கும் தரப்பட்டது. இங்ஙனம் சென்னை மாகாணம் தமிழர்களின் மாநிலமாக உருவானது.

காமராஜர் ஓர் நிலையான ஆட்சியைத் தந்தார்.

அனைத்து ஏழைகளுக்குமான வீட்டு வசதி, படியரிசி திட்டத்தின் மூலம் உணவு பாதுகாப்பிற்கு முன்னோடியாக இருந்தது மற்றும் குடிசை மாற்றுவாரியம் அமைத்தது போன்றவற்றால் நகர்புற ஏழை மக்களிடம் போதுமான அளவு அண்ணாவிற்கு ஆதரவு பெருகியது. மிகவும் முக்கியமாக 1969 ஆம் ஆண்டு சி.என். அண்ணாதுரையின் தலைமையிலான அரசாங்கம் "மெட்ராஸ்" மாநிலத்தின் பெயரை "தமிழ்நாடு" என பெயர்மாற்றம் செய்தது. அக்கட்சியின் இதர முக்கிய சாதனைகள்.

1. 75 மைல் தொலைவிற்கு மேல் உள்ள பேருந்து தடங்களை தேசியமயமாக்கியது.
2. அனைத்து சாதி ஏழை மாணவர்களும் பல்கலைக்கழகத்திற்கு முந்தைய கல்வி மற்றும் தொழிற்கல்விக்கு முந்தைய படிப்புகளுக்கு கல்வி கட்டண விதிவிலக்கு அளிக்கப்பட்டது.
3. இரண்டாவது உலக தமிழ் மாநாடு நடத்தப்பட்டது.
4. தமிழக ஏழை மக்களுக்கு மானிய விலையில் அரிசி வழங்கப்பட்டது.

## 14.11. தமிழ்நாட்டில் சுதந்திரத்திற்குப் பிறகு திராவிட ஆட்சி









கடந்த 62 ஆண்டுகளாக தமிழகத்தை திராவிட கட்சிகள் ஆட்சி செய்து வருகின்றன. 1957–ஆம் ஆண்டு தி.மு.க. தேர்தல் அரசியலில் நுழைய தீர்மானித்தது. இந்திய பகுதிகளை சீனா ஆக்கிரமிப்பு செய்ததின் விளைவாகவும், புதிதாக திருத்தம் செய்யப்பட்ட தேர்தல் விதிகளை கடந்து வரவும், தனது "திராவிட நாடு" கோரிக்கையைக் கைவிட்டது. 1967–ஆம் ஆண்டு தேர்தலில் பெரும்பான்மையுடன் வெற்றி பெற்றது. அண்ணாதுரை சிறிது காலமே ஆட்சி புரிந்தார்.(1967–1969), இருந்த போதிலும், சென்னை மாநிலத்தை தமிழ்நாடு என்றும், திருமணச் சட்டத்தை இயற்றியது, மத்திய அரசாங்கத்தின் மும்மொழிக் கொள்கையை எதிர்த்தது. தமிழகத்தில் இரு மொழி கொள்கையை (ஆங்கிலம் மற்றும் தமிழ்) நடைமுறைப்படுத்தியது ஆகியவை அவரின் குறிப்பிடத்தக்க சாதனைகள் ஆகும்.

சி.என். அண்ணாதுரை முதன்முறையாக, மலிவு விலை அரிசி திட்டத்தை அறிமுகப்படுத்தினார். (படி அரிசி, ஒரு ரூபாய்) அவருக்கு பின் வந்த திரு. மு. கருணாநிதி அம்மரபினைத் தொடர்ந்தார்.

1972 ஆம் ஆண்டு எம்.ஜி. ராமச்சந்திரன் தன்னுடைய திராவிட கட்சியை தொடங்கினார். (அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் –அ.இ.அ.தி.மு.க) 1977– ஆம் ஆண்டு நடந்த தேர்தலில் ஆட்சியைக் கைப்பற்றினார். இதனை 1987–இல் தனது இறப்பு வரை தக்கவைத்துக் கொண்டார். அதன்பிறகு மு.கருணாநிதி தலைமையில் தி.மு.கவும் செல்வி. ஜெ. ஜெயலலிதா தலைமையில் அ.இ.அ.தி.மு.க–வும் அடுத்தடுத்த தேர்தல்களில் மாறிமாறி வெற்றி பெற்று அமைச்சரவையை ஏற்படுத்தினர். மேலும், இவை இரண்டோடு, மறுமலர்ச்சி திராவிட முன்னேற்ற கழகம் போன்ற உடைப்பின் வழி திராவிட கட்சிகளும் சில இருக்கின்றன.



அறுபது வருடங்களுக்கும் மேலாக தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு குறிப்பிட்டுச் சொல்லும் அளவிற்கு திராவிட ஆட்சி பங்களித்துள்ளது. அவர்கள் தமிழ் மொழியின் நலன்,தமிழக மக்கள்,தமிழ்நாடு ஆகியவற்றின்



நலனை உறுதியுடன் பாதுகாத்தனர். சாதாரண மக்களின் துன்பங்களை போக்குவதற்காக பல்வேறு சமூக நலத்திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. அவை மலிவு விலையில் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்தது. பின்னர் இலவச அரிசித்திட்டம், சத்துணவுத் திட்டம், பட்டபடிப்பு வரை இலவச



11th Std Political Science Tamil Medium Vol-2_Chapter 14.indd 180 29-09-2018 12:43:30

கல்வி, விவசாயத்திற்கு இலவச மின்சாரம், "சைக்கிள் ரிக்ஷா ஒழிப்பு", "கையால் மலம் அள்ளுவது ஒழிப்பு", கைவிடப்பட்ட குழந்தைகளுக்கான "தொட்டில் குழந்தை திட்டம்", அமைப்பு சார பணியாளர்களுக்கு பல்வேறு நலவாரியங்கள், இன்னும் கூறினால் மாற்றுப்பாலினத்தவர் நலன் போன்றவற்றை உறுதி செய்தன. ஒருவரை ஒருவர் அழிக்கும் சாதி சண்டைக்கும் "சமத்துவபுரமும்", "உழவர் சந்தையும்" உருவாக்கப்பட்டன.

குடிசைகளுக்கு இலவச மின்சாரம் கொடுக்கப்பட்டது. குடிசைவாசிகளின் குடியிருப்புத் தேவைக்கு குடிசை மாற்று வாரியம் ஏற்படுத்தப்பட்டது. இளைஞர்களின் வேலை வாய்ப்பிற்காக வியக்கத்தக்க அளவு தொழில் வளர்ச்சி அதிகரிக்கப்பட்டது. இந்த வளர்ச்சியின் விளைவாக தமிழ்நாடு மனித வள மேம்பாட்டுக் குறியீட்டில் (HDI) உயர்ந்த மதிப்பைப் பதிவு செய்தது. இன்று தமிழ்நாடு மோட்டார் வாகனத்தொழில், (தானியங்கி), மின்னணு, மற்றும் மருந்து உற்பத்தி துறைகளில் முன்னணி நிலையில் இருக்கிறது. அதன் புதிய பொருளாதார மண்டலங்கள் பெருமளவு முதலீடுகளை ஈர்த்துள்ளன. தமிழ்நாட்டின் உள்கட்டமைப்பு மேம்பாட்டின் சாதனைகள் அனைவராலும் புகழ்ந்து பேசப்படுகிறது. சாலைகள், துறைமுகங்கள், மின்சாரவசதி, திறன் பெற்ற தொழிலாளர்கள் கிடைப்பது போன்றவைகள் தொழில் வளர்ச்சியை எளிமைப்படுத்தியுள்ளன.

பல்வேறு வகைகளில் பன்மடங்கு பள்ளிக்கூடங்களின் எண்ணிக்கைகள் உயர்ந்துள்ளன. இங்கு பல்கலைக் கழகங்களின் எண்ணிக்கையும் பலமடங்கு அதிகரித்துள்ளது. இவற்றுள் தனித்தன்மையான பல்கலைக் கழகங்களும் உள்ளன. தமிழ்நாட்டில் பெண்களுக்கென்று தனியாகப் பெண்கள் பல்கலைக் கழகம் உள்ளதுடன் பொறியியல் மற்றும் தொழில்நுட்பம், சட்டம், மருத்துவம், சித்த மருத்துவம், விளையாட்டு போன்றவற்றிற்கும் தனியாகப் பல்கலைக்கழகம் உள்ளன. தமிழ்பல்கலைக்கழகம் மூலம் தமிழ்மொழி மேம்பாடு, தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், உலகத் தமிழ்மாநாடு, செம்மொழி மாநாடு, எழுத்து சீர்திருத்தம் என தமிழ்மொழியை அனைத்து வகையிலும் முன்னேற்றுவதற்கு நடிவடிக்கைகள் எடுக்கப்பட்டது.

திராவிட கட்சிகள், அண்ணாதுரையின் காலத்தில் இருந்து மதச்சார்பற்ற தன்மை மாநில தன்னாட்சி போன்றவற்றிற்காகப் பாடுபட்டிருக்கிறது. திராவிடக் கட்சிகள் தேசிய அரசியலின் நீடித்த தன்மைக்குக் கூட பங்காற்றியிருக்கின்றன. தமிழகத்தில் திராவிட அரசியல் செல்வாக்கு தொடர்ந்து வல்லமை பெற்றதாக இருக்கிறது.

### அருஞ்சொற்பொருள்:

**கூட்டணி:** அரசியல் கட்சிகள், குறிப்பாக தேர்தல் நேரத்தின் பொழுது உருவாக்கி கொள்ளும் தற்காலிக உடன்படிக்கை ஆகும்.

**பொதுவுடைமை:** ஓர் சமூக நிறுவனம், அங்கு அனைத்து சொத்துக்களும் சமூகத்திற்கு சொந்தமாக இருக்கும். மேலும், ஒவ்வொரு மனிதனும் தங்களின் திறமைகளுக்கு ஏற்ப பங்களிப்பர், தேவைகளுக்கு ஏற்ப பெறுவர்.

**திராவிடர்:** தென்னிந்திய பகுதிகளில் பேசப்படும் குடும்ப மொழிகளின் பதத்தினை குறிக்கும். குறிப்பாக தமிழ்நாடு, கர்நாடகா, கேரளா, ஆந்திரா பிரதேசம் மற்றும் இலங்கை ஆகிய பகுதிகளில் வாழும் திராவிடமொழி பேசும் மக்கள்.

**மின்ஆளுகை:** மின்–ஆளுகை என்பது பொதுமக்களுக்கு தகவல் தொடர்பு மற்றும் தொழில்நுட்பத்தின் பயன்பாட்டின் மூலம் சேவை வழங்குதல் ஆகும் (ICT).

**கூட்டாட்சி:** இது ஓர் அரசாங்க முறையாகும். இங்கு அதிகாரங்கள் அரசாங்கத்தில் பல்வேறு அலகுகளுக்குப் பிரித்துக் கொடுக்கப்பட்டிருக்கும்.

**அரசியல் கூட்டணி:** அரசியல் கூட்டணிகள் என்பது பிற கட்சிகள் ஆட்சிக்கு வராமல் தடுப்பதற்காக ஏற்படுத்தப்படுவதாகும்.



11th Std Political Science Tamil Medium Vol-2_Chapter 14.indd 181 29-09-2018 12:43:31

**மக்கள் ஈர்ப்புவாதம்:** பொதுமக்களுக்கு நலகத் திட்டங்களை வழங்க அவர்களின் ஆதரவை பெறும் நோக்கத்துடன் செய்யப்படும் அரசியல் நடவடிக்கை ஆகும்.

**முற்போக்குவாதம்:** தங்கள் கொள்கைகளை, திட்டங்களை மிகவும் தீவிரமான வழிகளில் ஆதரித்து பேசுவோர்.

**பிராந்தியவாதம்:** இது ஒரு அரசியல் கொள்கை. இது ஒரு குறிப்பிட்ட பகுதி அல்லது மாநிலத்தின் நலனில் குறிப்பாக ஆவணம் செலுத்தும், தேசத்திற்காக அல்ல.

**இடஒதுக்கீடு:** இது முக்கியமாக, ஒதுக்கி வைக்கப்பட்ட சமூகத்தினரை சமூக-அரசியல்-பொருளாதார அரங்கில் அதிகாரமளிப்பதைக் குறிக்கும். நேர்முக பாகுபாடு என்பது இதன் பொருளாகும்.

**சமூகநீதி:** இது ஒரு அரசியல் கருத்து எல்லா மக்களும் செல்வம் சுகாதாரம் நலம், நீதி வாய்ப்பு, ஆகியவற்றை சமமாக பெறும்படியாக செய்ய வேண்டும் என்பதை தாங்கிப் பிடிக்கிறது.

**சமூக நலம்:** ஏழைகள், தேவை உடையோர், ஒதுக்கப்பட்ட மக்கள் ஆகியோருக்கு அரசாங்கத்தால் வழங்கப்படும் உதவி, சேவைகளைக் குறிக்கும்.

**சமதர்மம்:** உற்பத்தியானது அரசால் கட்டுபடுத்தப்பட வேண்டும். தனியார்கள் அல்ல என்று கூறும் முக்கியமான அரசியல் கோட்பாடாகும்.

**மாநில சுயாட்சி:** மாநில சுயாட்சி என்பது அரசாங்கங்கள் அரசியல் மற்றும் பொருளாதார அரங்கில் முழுமையான தன்னாட்சியுடன் இருப்பதற்கான நிலைப்பாட்டைக் கொண்ட ஒரு கோட்பாடாகும்

## மதிப்பிடுதல்

### I. சரியான விடையை தேர்ந்தெடுக்க

1) எந்த ஆண்டில் சென்னை மாகாணம் 'தமிழ்நாடு' என பெயர் மாற்றப்பட்டது?

அ) 1969 ஆ) 1975 இ) 1950 ஈ) 1965

2) 'சென்னை வாழ் மக்கள் சங்கம்' நிறுவப்பட்ட ஆண்டு

அ) 1947 ஆ) 1849 இ) 1862 ஈ) 1860

3) தமிழகத்தில் குலக்கல்வித் திட்டத்தை அறிமுகப்படுத்தியவர் யார்?

அ) ராஜாஜி ஆ) ராமசாமி இ) காமராஜ் ஈ) கருணாநிதி

4) சென்னைப் பல்கலைக்கழகம் எந்த ஆண்டு நிறுவப்பட்டது?

அ)1885 ஆ) 1947 இ) 1857 ஈ) 1965

5) மக்கள் தொகை அடிப்படையில் தமிழகம் இந்தியாவின்______________ வது பெரிய மாநிலமாக உள்ளது?

அ) 15 ஆ) 7

இ) 3 ஈ) 14



11th Std Political Science Tamil Medium Vol-2_Chapter 14.indd 182 29-09-2018 12:43:31

PPHILC

6) நீதிக்கட்சியின் முதல் தலைவர் யார்?

அ) சுப்பராயலு ஆ) தியாகராயர்

இ) பி.டி.ராஜன் ஈ) பொப்பிலி ராஜா

7) 'வைக்கம் வீரர்' என அழைக்கப்படும் தலைவர் யார்?

அ) கு.காமராஜ் ஆ) ராஜாஜி

இ) வரதராஜீலு ஈ) ஈ.வெ.ரா. பெரியார்

8) தமிழகத்தில் சுயமரியாதை இயக்கத்தை தோற்றுவித்தவர்

அ) ராஜாஜி ஆ) திரு.வி.க

இ) காமராஜ் ஈ) ஈ.வெ.ரா. பெரியர்

9) பொருத்துக

அ) இந்தி எதிர்ப்பு போராட்டம் – 1949

ஆ) தி,மு.க வின் தோற்றம் – 1937

இ) மாநில மறுசீரமைப்புச் சட்டம் – 1919

ஈ) இரட்டையாட்சி –1956

10) 'பிராமணரல்லாதோர் கூட்டறிக்கையினை' வெளியிட்டவர்

அ) சி. நடேசனார் ஆ) பி. தியாகராயர்

இ)டி.எம். நாயர் ஈ) பனகல் ராஜா

11) 'தென்னிந்திய விடுதலைக் கூட்டமைப்பு' பிற்காலத்தில் எவ்வாறு அழைக்கப்பட்டது?

அ) நீதிக்கட்சி ஆ) திராவிடர் கழகம்

இ) தமிழ் கழகம் ஈ) திராவிடக் கட்சி

12) **கூற்று** : 1957 பொதுத்தேர்தலில் குளித்தலையில் வெற்றி பெற்று தமிழக சட்டமன்றத்தில் உறுப்பினராக கருணாநிதி நுழைந்தார்.

**காரணம்:** கருணாநிதி தமிழக முதலமைச்சரானர்.

அமைப்பு விளக்கம் (அ) என்றும் காரணம் (ஆ) எனவும் பின் வருவனவற்றுள் எது சரியானவை?

அ) (அ) மற்றும் (ஆ) இரண்டும் சரியானது

ஆ) (அ) மற்றும் (ஆ) இரண்டும் சரியானது, ஆனால் (ஆ) சரியான விளக்கம் இல்லை.

இ) (அ) என்பது சரி ஆனால் (ஆ) சரியானது அல்ல.

ஈ) (அ) சரியில்லை ஆனால் (ஆ) சரியானது

13) **கூற்று:** ஈ.வெ.ரா. ராமசாமி சுயமரியாதை இயக்கத்தைத் தொடங்கினார்.

**காரணம்:** சுயமரியாதை இயக்கம் என்பது பிராமணர் அல்லாத சாதிகள் சமமான மனித

உரிமைகளால் பெறும் நோக்கத்துடன் தொடங்கப்பட்ட இயக்கமாகும்.

அமைப்பு விளக்கம் (அ) என்றும் காரணம் (ஆ) எனவும் பின் வருவனவற்றுள் எது சரியானவை?

அ) (அ) மற்றும் (ஆ) இரண்டும் சரியானது

ஆ) (அ) மற்றும் (ஆ) இரண்டும் சரியானது, ஆனால் (ஆ) சரியான விளக்கம் இல்லை.

இ) (அ) என்பது சரி ஆனால் (ஆ) சரியானது அல்ல.

ஈ) (அ) சரியில்லை ஆனால் (ஆ) சரியானது

## II. கீழ்கண்ட வினாக்களுக்கு சுருக்கமாக விடையளி

14. திராவிடர்" என்ற சொல்லை வரையறுக்கவும்
15. தென்இந்திய விடுதலைக் கூட்டமைப்பின் நோக்கங்கள் யாவை?
16. சுயமரியாதை இயக்கத்தை பற்றி சிறுகுறிப்பு வரைக.
17. "திராவிட நாடு" கோரிக்கையின் முக்கியத்துவத்தை வெளிக் கொணர்க.
18. மாநில சுயாட்சி என்ற சொல்லை வரையறு.
19. மாற்றுப்பாலினத்தவர் நலனுக்காக நடவடிக்கைகளைப் பற்றி சிறு குறிப்பு எழுதுக.

## III. கீழ்வரும் வினாக்களுக்கு சுருக்கமாக விடையளி:–

20. நீதிக் கட்சியின் தோற்றம் பற்றி கணக்கிட்டு கொடுக்கவும்
21. "பிராமணரல்லாதோர் கூட்டறிக்கையின் முக்கியத்துவத்தை ஆராய்க.
22. 1944 ஆம் ஆண்டு சேலம் மாநாட்டின் முக்கிய முடிவுகளை விவாதிக்கவும்
23. "மும்முனைக் கிளர்ச்சி" என்பது பற்றி உமது பொருள் என்ன?
24. எம்.ஜி.ஆர். தலைமையிலான அ.இ.அ.தி.மு.க வின் சமூக நலக் கொள்கைகளைப் பற்றி விவரி.
25. ராஜமன்னார் குழு பற்றி குறிப்பு வரைக.
26. அ.இ.அ.தி.மு.க அரசாங்கத்தின் (1991–1996) மக்கள் நலன் சார்ந்த (populism) சமூக நலக் கொள்கைகளை விளக்குக.

## IV. கீழ்கண்ட வினாக்களுக்கு விரிவான விடையளி:–

27. சென்னை மாகாணத்தில் பிராமணரல்லாதோர் இயக்கம் தோன்றியதற்கான காரணங்களைக் கண்டறிக.
28. இந்தி–எதிர்ப்புப் போராட்டம் பற்றி ஓர் கட்டுரை வரைக.
29. அ.இ.அ.தி.மு.க தோன்றியதற்கான சூழ்நிலையைப் பற்றி விவரி.
30. தி.மு.க. வின் 2006 முதல் 2011 வரையிலான அரசாங்கத்தின் ஆண்டு சமூக நலக் கொள்கைகளை வெளிக்கொணர்க.
31. மாநிலக் கட்சிகளின் தோற்றம் மற்றும் தமிழக அரசியலில் அவற்றின் தாக்கம் பற்றி மதிப்பீடு செய்க.



11th Std Political Science Tamil Medium Vol-2_Chapter 14.indd 184 29-09-2018 12:43:31

## மேற்கோள் நூல்கள்


1. Baker, C.J. (1976). The Politics of South India 1820-1937, Cambridge: Cambridge University Press.
2. M.S.S.Pandian, Brahmin and Non-Brahmin: Genealogies of the Tamil Political Present, 2007.
3. V.Geetha, and S.V. Rajadurai, Towards a Non Brahmin Millenium - From Iyothee Thass to Periyar, Calcutta, Samya, 1998.
4. Hardgrave, R.L. Jr. The Dravidian Movement, Bombay: Popular Prakashan, 1965.





11th Std Political Science Tamil Medium Vol-2_Chapter 14.indd 185 29-09-2018 12:43:31

## ICT CORNER

### அலகு – 14 : தமிழக அரசியல் வளர்ச்சி

தமிழ்நாடு தேர்தல் முடிவுகளை அறிந்துகொள்ளலாம் வாருங்கள்....




### தமிழ்நாடு அரசு மற்றும் அரசியல்

**படிகள்**

படி 1: கீழ்க்காணும் உரலி / விரைவுக் குறியீட்டைப் பயன்படுத்தி "*Tamilnadu maps elections*" பக்கத்திற்குச் செல்க.

படி 2: வரைபடத்தில் சுட்டியை உருட்டி ஒவ்வொரு தொகுதியின் சட்டமன்ற உறுப்பினரை அறிந்து கொள்க.

படி 3: இடது பக்கம் உள்ள "*Assembly Constituencies of Tamil Nadu*" ஐ சொடுக்கி ஒவ்வொரு சட்டமன்ற தொகுதியின் எல்லைகளை தெரிந்து கொள்க.

படி 4: முகப்பு பக்கத்தின் இடது பக்கம் உள்ள "*Chief Ministers of Tamilnadu*" சொடுக்கி முதல் அமைச்சரின் காலத்தை தெரிந்து கொள்க


படி 1




படி 3




படி 2




படி 4



**உரலி :**

*படங்கள் அடையாளத்திற்கு மட்டும்.

இப்பக்கத்திற்கு தேவைப்பட்டால் *Flash Player or Java Script* ஐ அனுமதிக்கவும்

B146_11_PSCI_TM

https://www.mapsofindia.com/assemblypolls/tamil-nadu/election-results.html

அலகு 15

# தமிழக அரசியல் சிந்தனைகள்

## 15.1 வரலாற்றுப் பின்னனி

PPJ5B6

அடிப்படையில் செம்மொழியான தமிழின் தாய்நாடு (தமிழகம்) என்பதை தமிழ்நாடு என்று அழைக்கின்றோம். இதன் அருகில் உள்ள சில பகுதிகளாக கேரளா, ஆந்திரா மற்றும் கர்நாடகாவை உள்ளடக்கியதாகதமிழகம்இருந்தது.ஸ்டராபோ (கி.மு. (பொ.ஆ.) 63-முதல் கி.பி. (பொ.ஆ) 24 வரை). வாழ்ந்த கிரேக்க வரலாற்று சிந்தனையாளர் மற்றும் புவியியலாளர்ஆவார். இவர் தமிழ் முடியாட்சியின் பாண்டியர்கள் காலத்தில் உள்ள இராஜதந்திர வரலாற்றை உற்றுநோக்கியிருந்தார். கடல் பயணங்களின் மூலமாக சோழ, சேர மற்றும் பாண்டியர்கள் கடலருகில் வாழும் மக்களிடம் தமிழரின் தாக்கத்தை ஏற்படுத்தினார்கள். இந்தியா மற்றும் தென்கிழக்கு ஆசிய நாடுகள், இந்தியா



மற்றும் மத்தியத்தரைக்கடல் பகுதிகளில் வர்த்தகத்தை வளர்ப்பதற்காக தமிழக கரையோரங்களில் இருந்த துறைமுகங்கள் முக்கிய மையமாக செயல்பட்டன. குறிப்பாக கி.மு. (பொ.ஆ.மு.) 200 முதல் காலகட்டத்தைச் சார்ந்த கி.பி. (பொ.ஆ.) 300 வரையானது ஆகும். பண்டையகால துறைமுகங்களான கொற்கை,

### கற்றலின் நோக்கங்கள்

- மாணவர்கள் எளிதில் தமிழத்தின் பண்டைய அரசியல் கருத்துக்களைக் கற்பர்
- திருவள்ளுவரின் அரசியல் கருத்துக்களைத் தெளிவாகப் புரிந்துகொள்ளுதல்.
- பாரதியாரின் மூலமாகத் தேசியவாதத்தை புரிந்துகொள்ளுதல்.
- தமிழ்நாட்டில் தோன்றியுள்ள பொதுவுடைமைவாத கருத்துக்கள் பற்றி தெரிந்து கொள்ளுதல். குறிப்பாக சிங்காரவேலரின்பொதுவுடைமைவாத படைப்புக்களைப் பற்றித் தெரிந்து கொள்ளுதல்.
- திராவிடக் கொள்கையைப் பற்றி புரிந்துகொண்டு மற்றும் தமிழ்நாட்டின் அரசியல், சமுதாயம் மற்றும் பொருளாதாரத்தில் ஏற்படுத்தியுள்ளதாக்கத்தை பற்றி அறிந்துகொள்ளுதல். குறிப்பாக ஈ.வெ.ரா. பெரியாரின் பங்களிப்பின் மூலமாக சமூகநீதி, சமத்துவம் மற்றும் உயர் சாதியினரின் ஆதிக்கத்திலிருந்து விடுதலை போன்றவற்றை புரிந்துகொள்ளுதல்.
- தமிழ் இயக்கம் மற்றும் திராவிட இயக்கத்தின் முக்கிய விளக்கங்களைத் தெளிவாக விவரித்தல் மற்றும் இவற்றின் அரசியல் போக்கினை விவரித்தல்.

பூம்புகார், வசவசமுத்திரம், பெரிமுளா, அரிக்கமேடு, அழகன்குளம், மாமல்லபுரம் போன்றவை சிறந்தமுறையில் செயல்பட்டன. குறிப்பாக வர்த்தகம், வாணிபம் மற்றும் பண்பாட்டுப் பரிமாற்றங்கள் தென்கிழக்கு ஆசிய நாடுகள், இலங்கை, சீனா எகிப்து, கிரேக்க மற்றும் ரோமாபுரி போன்ற நாடுகளுடன் திறம்பட மேற்கொள்ளப்பட்டது. கப்பல் கட்டுதலில் பாரம்பரியமிக்க தமிழர்கள் சிறந்த கடலோடிகளான நமது முன்னோர்கள் உலகின் அடிப்படை தன்மைகளின் தாக்கங்களாக அரசியல், சமுதாயம், பண்பாடு, வர்த்தகம் மற்றும் வாணிபத் தொடர்புகளை உலகின் மற்ற நாடுகளுடன் ஏற்படுத்தினர்.

ஏறத்தாழ கி.மு. (பொ.ஆ.மு.) 300 முதல் கி.பி. (பொ.ஆ.) 300. வரையிலான சங்க இலக்கியங்களில் முக்கிய ஆதாரங்களாக விளங்குவதுடன் அக்கால சமுதாயம், பொருளாதாரம், பண்பாடு மற்றும் அரசியலை பிரதிபலித்திருக்கின்றன. சங்கப்பாடலின் வகைப்பாட்டியலில் அகம் (அன்பு சார்ந்து இருத்தல்) மற்றும் புறம் (போர், நன்மை மற்றும் தீமை, சமூகம், நீதி மற்றும் முடியரசு) போன்றவற்றால் தமிழ் அரசியல் முறைமை பற்றி கூறியிருக்கின்றன. சங்க இலக்கிய புத்தகங்கள் (எட்டுத்தொகை) எட்டு நூல் திரட்டு ஆகும். அவையாவன: (1) நற்றினை (2) குறுந்தொகை (3) ஐங்குறுநூறு (4) பதிற்றுப்பற்று (5) பரிபாடல் (6) கலித்தொகை (7) அகநானூறு மற்றும் (8) புறநானூறு, இவை தவிர மேலும் ஒன்பதாவது குழுவாக விளங்கும் பாட்டுகளான பத்துப்பாட்டும் காணப்பட்டது. ஆரம்ப காலத்தில் தொல்காப்பியத்தின் முதல் இரண்டு புத்தகங்களும் தமிழ் இலக்கணமாகக் கருதப்பட்டதும் இக்காலக்கட்டத்தில்தான் என்பது நினைவு கூறத்தக்கதாகும்.

சங்க இலக்கியங்களுக்கு பிறகு சேகரிக்கப்பட்ட பிரபலமான நூற்கோவை/ பாடல் திரட்டு என்பது 'கீழ்கணக்கு' என அழைக்கப்படுகிறது. இப்பதினெட்டு நூல்களின் ஒரு பகுதிதான் மிகவும் பிரபலமான சிலப்பதிகாரம், மணிமேகலை மற்றும் பதினெட்டு சிறிய நூல்கள் (பதிணென் கீழ்க்கணக்கு, இது திருக்குறளையும் உள்ளடக்கியதாகும்.) அக்காலகட்டத்தில் எழுதியதாகும். பிரபந்த இலக்கியம் பல்வேறு வகையான பாடல்களைக் கொண்டிருந்தது அவை: 'கோவை', என்பது குறிப்பிட்ட கருத்திலான வரிகளைக் கொண்டிருப்பதுடன் (பொதுவாக அன்பைப் பற்றியதாகும்) 'கலம்பகம்' என்பது ஓர் பத்தியின் முடிவு என்பது அடுத்த வரிக்கு ஆரம்பமாக வழி இருப்பதுடன் (பொதுவாக அரசன் மற்றும் வீரத்தை குறிப்பிடுதல்) மேலும் 'பரணி' என்பதற்கும் வழி வகுக்கிறது. இது பாரம்பரியத்தின் சிறந்த எடுத்துக்காட்டாக பாண்டிக்கோவை, நந்திக்கலம்பகம் மற்றும் கலிங்கத்துப் பரணி ஆகியவற்றைக் குறிப்பிடலாம்.

பண்டைய கால தமிழ் இலங்கியங்களை திருக்குறள், சிலப்பதிகாரம், மணிமேகலை போன்றவை பல சங்க கால அரசியலின் தன்மை, சமுதாயம் மற்றும் பண்பாட்டினைப் பற்றிய ஆழ்ந்த நுண்ணறிவுடன் படைக்கப்பட்டு இருந்தன. தமிழ் மொழியானது தமிழ் அடையாளம், பண்பாடு, பாரம்பரியம் மற்றும் மரபுகளின் அடிப்படியாக உள்ளதாகும். நிலம், புவியமைப்பு, ஆட்சியாளர்கள் மற்றும் தலைவர்களால் வேறுபட்டு இருந்தாலும் தமிழ் பேசும் பகுதிகளில் தமிழரின் நாடு மற்றும் தேசக் கூட்டமைவு என்பது இருந்தது. கலிங்க அரசன் காரவேலா கி.மு. (பொ.ஆ.மு.) 165 காலத்தின் கல்வெட்டுகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. இவர்தான் 132 வருடமாக இருந்த 'தமிழ் கூட்டமைவு' என்பதை அழித்தார்' என்று அக்கல்வெட்டில் கூறப்பட்டுள்ளது. இதுபோன்றே தமிழ் அரசர்களின் கூட்டமைவின் பிறநாட்டு படையெடுப்பிற்கு எதிராக சண்டையிட்டதை சங்க கால இலக்கியமான 'அகநானூறு' விவரித்துள்ளது. ஆனால் தமிழ் தேசியவாதம் என்பது காலனி ஆதிக்கத்தின் விளைவினால் தோன்றியது என்று சாதாரணமாக கூறிவிட முடியாது.

தமிழ் தேசியத்தின் மூல ஆதாரங்கள் தமிழ் மொழி மற்றும் பண்பாட்டினுடைய



11th Std Political Science Tamil Medium Vol-2_Chapter 15_updated.indd 188 29-09-2018 12:45:13

உங்களுக்குத் தெரியுமா?

### கண்ணகியின் சிறப்புகளாக எரிக்மில்லர் கூறுவது

கண்ணகி என்பவர் ஓர் அறிமுகமற்ற ஊரில் ஆதரவிற்கு யாருமற்ற நிலையில் கைச்செலவிற்கு ஏதுமின்றி இருந்த சூழ்நிலையிலும் அரசவையில் தனது வழக்கினை உரைத்து வெற்றி கண்டது அனைவருக்கும் உத்வேகம் அளிக்கக்கூடியதாகும்

நான் அவர் உலகளாவிய நீதி மற்றும் தனிமனித மாண்பிற்கும் அடையாளமாக திகழ்கிறார். இந்த கதை அவருடைய சிலப்பதிகாரம் எனப்படும் காவியத்தின் மூலமாக அறியப்படுகிறது. எனக்குத் தெரிந்தவரையிலும் கோவலன் மற்றும் கண்ணகிக்கு கிழக்கு கடற்கரையோரம் உள்ள பூம்புகாரில் திருமணம் நடைபெற்றது. சில காலத்திற்கு பின்னர், கோவலன் மாதவி எனப்படும் நாட்டிய மங்கையுடன் வாழ்ந்து வரலானார். ஒரு வருடத்திற்கு பிறகு அவர் வீடு திரும்பினார். அவரும் கண்ணகியும் 250 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள மதுரைக்கு சென்றனர். அங்கே அவர்கள் புதிய வாழ்க்கையைத் தொடங்கினர். கோவலன் நீதி நியாயமற்ற முறையில் பாண்டிய அரசரால் கொல்லப்படுகிறார். கோவலன் அரசியாரின் கால் சிலம்பைத் திருடியதாக பொய்யான முறையில் குற்றம் சாட்டப்படுகிறார். கண்ணகி அரசவைக்கு வந்து தன்னுடைய கணவன் நிரபராதி என்பதுடன் ஒன்றும் அறியாதவர் என்று வாதிட்டு உண்மையை நிரூபிக்கிறார். அரசர் நீதி தவறியதற்காக 'யானோ அரசன்; யானே கள்வன்' என ஓலமிட்டவாறு தரையில் வீழ்ந்து மடிந்தார். பின்னர் கண்ணகி மூன்று முறை மதுரையை வலம்வந்து அரசன் நீதி தவறியதற்காக மதுரையையே எரிக்கின்றார். ஆனால் நல்ல மனிதர்கள், விலங்குகள் பாதிக்கப்படாமல் இருக்குமாறு அக்னி கடவுளை வேண்டுகிறார். அவரும் இதை ஏற்றுக்கொள்கிறார். பின்னர் மேற்கு தொடர்ச்சி மலைகளுக்கு சென்ற கண்ணகியை மக்கள் தெய்வமாக வழிபடுகின்றனர்.



எரிக் மில்லர் நாட்டுபுறவியலில் தன்னுடைய முனைவர் பட்டத்தை அமெரிக்காவில் உள்ள பென்சில்வேனியா பல்கலைக்கழகத்தில் பெற்றார். இவருடைய ஆய்வோடு தமிழ் குழந்தைகளின் பாடல், விளையாட்டு மற்றும் மொழியினைக் கற்றல் பற்றியதாகும். சிலப்பதிகாரத்தினை ஆராய்ச்சி செய்வதற்காக இவர் கண்ணகியின் அடியொற்றிய பூம்புகாரிலிருந்து மதுரை வரை நடை பயணத்தினை, குறிப்பாக அதிலும் மேற்குத் தொடர்ச்சி மலை வரை மேற்கொண்டார்.

ஆர். பார்த்தசாரதியின் மூல செந்தமிழில் இருந்து மொழி மாற்றம் செய்யப்பட்ட இளங்கோவடிகளின் சிலப்பதிகாரம்; காற்சிலம்பின் கதை கொலம்பியா பல்கலை பதிப்பகம், 1993 என்னும் நூலிலிருந்து மேற்கோள் பெறப்பட்டது.

நன்றி : தி இந்து 16.06.2006

எரிக் மில்லரின் ஆய்வு கட்டுரை

விரிவாக்க கற்றல்

தி இந்து இணைய தளத்தில் எரிக் மில்லரின் ஆய்வு கட்டுரையினை படிக்கவும். வகுப்பறையில் உங்கள் கருத்தைப் பகிரவும்.



11th Std Political Science Tamil Medium Vol-2_Chapter 15_updated.indd 189 29-09-2018 12:45:13

வரலாற்றுடன் தொடர்புடைய பங்கு வகிப்பதாகும் இதனால் அரசியல் வரையறுக்கப்பட்டிருப்பதனை சங்க காலம் முதல் காணலாம்.

இங்கே அரசு கருத்தாக்கமும், லட்சிய அரசன் எனும் பதமும், கிரேக்கத்தில் நில எல்லைகளில் அடிப்படையில் பிரிக்கப்பட்டிருந்த நகர அரசை போன்று இருந்தது. பண்டைய தமிழ்நாடு என்பது தமிழகம் என்று அழைக்கப்பட்டது. இது மேற்கு மலையைச் சார்ந்த திருப்பதியிலிருந்து கன்னியாகுமரியின் நுனிவரை உள்ளடக்கியதாகும். இந்த நிலமானது பாரம்பரியமாக ஐந்து புவியியல் சார்ந்த பிராந்தியமாக (திணை) இயற்கைத் தன்மையுடன் பிரிக்கப்பட்டுள்ளது. மலையை சார்ந்த பகுதி (குறிஞ்சி), காடுகளை சார்ந்த பகுதி (முல்லை), வயல் சார்ந்த பகுதி (மருதம்), கடல் சார்ந்த பகுதி (நெய்தல்), மணல் சார்ந்த பகுதி (பாலை) ஆகியன ஐந்திணைகள் ஆகும்.

தமிழ் மொழி பேசும் பகுதிகள் சோழர்கள் (தலைநகரம் உறையூர்), பாண்டியர்கள் (தலைநகரம் மதுரை), சேரர்கள் ( தற்போதைய கொங்கு நாடு மற்றும் கேரளா), பல்லவர்கள் (தலைநகரம் காஞ்சிபுரம்) என பலவாறு பிரிக்கப்பட்டு இருந்தது. தமிழ்நாடு பல்வேறு அரசர்கள் மற்றும் குறுநில மன்னர்களால் ஆளப்பட்டது. கடை ஏழு வள்ளல்கள் புலவர்களுக்கு வாரி வழங்கியதை பற்றி சங்கபுலவர்கள் புகழ்ந்து பாடியுள்ளனர். கபிலர் மற்றும் ஔவையார் கடை ஏழு வள்ளல்களான ஆய், பாரி, ஓரி, காரி, அதியமான், பேகன் மற்றும் நல்லியை பற்றி குறிப்பிடுகின்றனர். ஓர் சிறந்த அரசனின் குணங்களாக அவன் பாகுபாடற்ற நீதி வழங்கும் அரசனாகவும், மக்களிடத்தில் அன்பு உடையவனாகவும், போர்களத்தில் எதிரிகளிடம் வீரத்தை வெளிப்படுத்துபவனாகவும் இருக்க வேண்டும் என குறிப்பிடப்படுகிறது.

சபை அல்லது மன்றம் மன்றம் எனப்படுவது அரசன் தலைமையேற்று நடத்தும் நாட்டின் உயர்ந்த நீதிமன்றம் ஆகும். இதை போலவே ஒவ்வொரு கிராமத்திற்கும் ஒரு மன்றம் உண்டு. அது அந்த கிராமத்தின் பொது இடத்தில் கூடி அந்த கிராமத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகள் குறித்து விவாதிக்கும். போர் வீரர்கள் மிகவும் மதிப்புடன் நடத்தப்பட்டனர். போரில் அவர்கள் இறக்க நேரிட்டால் அவர்களின் நினைவாக, நினைவுத்தூண் ஒன்று ஊரில் எழுப்படும். ஆனால் போரில் ஒரு வீரன் தன் பின்புறம் காயப்பட்டு அதனால் இறந்தால் சங்க இலக்கிய காலங்களில் அது அவமானமாக கருதப்படும்.

போரின் நல்ல நடைமுறைகள் பலவற்றை சங்க இலக்கியங்கள் நிறைய தெரிவிக்கின்றன. புறநானூறு என்பது ஒரு சங்க இலக்கியம் ஆகும். இது பாண்டிய அரசனை புகழ்கிறது. அவன் பெண்கள், குழந்தைகள், நோயாளிகள் மற்றும் வயோதிக மக்கள், கால்நடைகள் இவைகள் அனைத்தையும் பாதுகாப்பான இடங்களில் போர்காலங்களில் இடம் பெயரச் செய்தான். நீதி என்பது அரசு மற்றும் அரசனின் மனசாட்சிக்கு உட்பட்டதாக இருக்க வேண்டும். நீதி என்பது அரசனின் ஆட்சியில் ஒரு முக்கியமான கூறாக இருக்க வேண்டும். ஒரு நல்ல அரசன் எந்த சூழ்நிலையிலும் நீதியை தியாகம் செய்யக் கூடாது. அரசனின் நல்லாட்சி மற்றும் நற்செயல்கள் எப்பொழுதும் நிலையான நீடித்த புகழை கொண்டு வரும். இவைகள் தான் முக்கிய அரசியல் கொள்கைகளாக சங்க காலங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மன்னராட்சி/முடியாட்சி தன்மையைக் கொண்டிருந்தாலும் அரசனின் சட்டப்படியான முடிவுகள் மக்களின் ஒப்புதலைச் சார்ந்தே இருந்தது. அரசன் மக்களின் ஆதரவு இருக்கும் வரை சட்டப்படியான முடிவுகளை அனுபவிப்பவராகவும் அதே சமயம் அவற்றை தவறாக பயன்படுத்தினால் மக்கள் ஆதரவை இழக்கவும் நேரிடும். சங்க இலக்கியம் (பட்டினப்பாலை) பல்வேறு வகையான வரிகளைப் பற்றி கூறுகின்றது. அவைகள் சுங்கவரி, வருமானவரி, பொருள் மீதுள்ள வரி

மற்றும் பல வரிகள் அரசின் வருவாய்களை பெருக்கும் ஆதாரமாக கூறப்பட்டுள்ளன. எளிமையான நிர்வாக கட்டமைப்பின் வழியே (அமைச்சர்கள்,அதிகாரிகள்) தமிழ் அரசர்கள் தமிழகத்தை ஆட்சி புரிந்தனர் வெளிநாட்டு வர்த்தகம், சுங்க வரி முதலானவை அரசின் வருவாயில் பெரும் பங்கு வகித்தன. பாண்டியர் கல்வெட்டில் முத்துக்குளித்தல் (கலாத்திகர்) பற்றியும் மற்றும் முதன்மை எழுத்தர்(கணத்திகன்) பற்றியும் கூறப்பட்டுள்ளது. சோழர்களின் கொடியிலும் மற்றும் நாணயங்களிலும் புலி சின்னத்தை பொறித்து இருந்தார்கள், சேரர்கள் வில் மற்றும் அம்புகளையும், பாண்டியர்கள் மீன் சின்னத்தையும் மற்றும் பல்லவர்கள் சிங்கத்தை சின்னமாக பெற்று இருந்தனர்.

ஒற்றர்கள் மூலம் உளவு பார்த்தல் என்பது நிறுவனப்படுத்தப்பட்டு நாட்டின் முக்கியமானதொரு அங்கமாக இருந்தது. நாட்டின் நிலைத்தன்மையும் அமைதியும் இதன் செயல்பாட்டை பொறுத்தே அமைந்திருந்தது. நிறுவனப்படுத்தப்படாமல் இருந்தாலும் அடிமைகள் இல்லாமலில்லை அடிமைகளை படையெடுத்தபின் பிடிப்பதும், அடிமைகளை வர்த்தகத்திற்கு பயன்படுத்தவும், பரிசுக்காக பரிமாற்றம் செய்யவும் அரசாட்சியாளர்களால் நடைமுறைப்படுத்தப்பட்டது. குறிப்பாக கட்டுமானம் மற்றும் கட்டிட வேலைகளுக்கு அடிமைகள் பயன்படுத்தப்பட்டனர்.

பண்டைய தமிழில் சாதி முறை என்பது காணப்படவில்லை. வர்க்க கொள்கை மற்றும் வர்க்க கருத்து வேறுபாடுகள் அவரவர்களின் தொழில் சார்ந்த முறையில் காணப்பட்டன. சங்ககால சமுதாயத்தில் சாதிய முறை என்பது வெளியிடத்திற்குரியதாகவும் மற்றும் அறியப்படாததாகவும் இருந்தது. சமுதாயப் பிரிவுகளை வர்க்கத்தின் அடிப்படையில் சங்க புலவர்கள் தரம் பிரித்தினர்.

அவைகள்: (குடி) துடியன், பாணன் மற்றும் கடம்பன் அல்லது அரசர்(ஆட்சிபுரிபவர்), வைசியர்(வர்த்தகர்கள்) மற்றும் வேளாளர் (விவசாயிகள்) என்று குறிப்பிட்டுள்ளனர். தகுதிநிலைகளில் காணப்பட்ட வித்தியாசங்கள் தவிர்க்க முடியாததாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஆனால் வர்ண முறை எனும் சாதி அமைப்பு சங்ககால சமுதாயத்தில் சிறிதளவே காணப்பட்டன.

பண்டைய தமிழ் சமூக அமைப்புகளில் மனுதர்மம் மூலமாக சட்டமாக்கப்படவில்லை. ஆரம்பக்கால ஆரிய-பிராமண சாதிய அமைப்புகள் சங்க காலத்தில் குறிப்பிடப்படவில்லை. இதுபோன்ற அமைப்புகள் சங்க காலத்திற்கு பிறகே தோன்றின. பண்டைய தமிழ் மதங்கள் நாட்டுபுற கலையை சார்ந்தே இருந்தது. இயற்கையை வழிபடுதல் மற்றும் இயற்கை காரணிகளே பொதுவாக காணப்பட்டன. முருகக்கடவுளை வழிபடுவதே தமிழ்நாடு பழங்குடியினரின் வழிபாட்டு மரபு ஆகும். முருகக் கடவுளை போராளிகளின்/மாவீரர்கள் கடவுளாக நாட்டுப்புற கலாச்சாரமாக செயல்படுத்தினர். உலகில் பற்றுடைய கடவுளாக தமிழ்-திராவிட மரபுகளின் கட்டுரைகளில் வேர் ஊன்ற ஆரம்பித்தது. கி.பி. (பொ.ஆ.) ஆறாம் நூற்றாண்டுக்கு பிறகே தமிழ் மற்றும் சமஸ்கிருதம் போன்ற எழுத்துகள் தோன்ற ஆரம்பித்தது.

சமஸ்கிருதமயமாதல் மெதுவாக பொது வெளிக்கு பரவ ஆரம்பித்தது. பிராமணர்கள் அரசனுக்கு ஆசி வழங்குபவர்களாகவும், மற்றவர்களை விட உயர்ந்தவர்களாகவும் கருதும் மனப்பாங்கு தொடங்கியது. இக்கால கட்டத்திற்கு பின் பிராமணர்களிடம் ஆசி பெறுவது சட்டபூர்வ வழியாக துவங்கியது. சமஸ்கிருதமயமாதலுடன் சேர்ந்து, வேத சடங்குகள், மனு கொண்டு வந்த வர்ணாசிரமம் அமைப்பு போன்றவை, ஏற்கனவே தொழில் ரீதியாக பிரிக்கப்பட்டு இருந்த திராவிட சமூகத்தை மேலிருந்து கீழாக சாதி ரீதியாக பிரித்தது.

மரபு வழி கொள்கையும் இயற்கை வழிபாடும் தமிழ் மன்னர்களிடம் பொதுவாக

காணப்பட்டது. முடியாட்சியும் கலாச்சார மையத்திலிருந்து அதிகார மையத்தை நோக்கி நகர்ந்தது. இதனால், சங்க காலத்துக்கு பிந்தைய காலத்தில் அரசனின் அதிகாரங்கள் அதிகரித்து நாட்டின் மொத்த அதிகாரமும் பெற்ற ஒரே அமைப்பாக அரியனை உயர்ந்தது

அரசுரிமையானது புனிதத் தன்மையுடையதாகவும், மரபு வழியானதாகவும் பல்லவர்கள் கூறினர். பல்லவர் காலத்தில் வட இந்தியாவில் இருந்த ஆரிய கலாச்சாரம் தமிழ்நாட்டில் ஊடுறுவியது. இரண்டு கலாச்சாரங்களிலும் உள்ள கருத்துக்கள், அமைப்புகள், சில ஒன்றிணையும் முரண்பட்ட சில வழக்கொழிந்து போகவும் இந்த ஊடுறுவல் வழி வகுத்தது. இந்த கலப்பின் விளைவாக தமிழ் பக்தி கலாச்சாரம் தோன்றியது.

பெண்கள் மிகவும் உயரிய மரியாதையுடன் நடத்தப்பட்டனர் மற்றும் இவர்கள் அரசர்களுக்கு பாதுகாவல் மற்றும் பல்வேறு வகையான பணிகளையும் செய்தனர். ஆனால் அதிகாரங்கள் அனைத்தும் ஆண்களிடம் மட்டுமே இருந்தது. பெண்கள் பொது அவையில் பங்கேற்கலாம். ஆனால் ஆண்களே நிர்வாகிகளாகவும் மற்றும் ஆட்சியாளர்களாகவும் இருந்தனர். பெண்கள் சமூக சடங்குகளில் முக்கிய பங்கு வகித்தனர். மேலும் மரபு வழி உரிமைகள் மற்றும் அதிகாரங்கள் ஆண்களிடம் இருந்தாலும், குடும்பத்தில் பெண்ணின் பங்கு முக்கியமானதாக இருந்தது.

தமிழகச் சமூகத்தில் பெண்களின் பங்கை பற்றி விவாதிக்கையில் ஔவையார் பற்றி குறிப்பிடுவது அவசியமாகிறது. (ஔவையார் என்றால் மதிப்புக்குரிய பெண் என்று பொருள்) தமிழ் இலக்கியத்திற்கு எந்த பெண்மணிகளெல்லாம் முக்கிய பங்களித்தனரோ, அவர்கள் ஔவையார் என்று பட்டப்பெயரிட்டு அழைக்கப்பட்டனர். வெவ்வேறு காலத்தில் வாழ்ந்த ஆறு பெண் தமிழ் புலவர்களுக்கு இப்பட்டப்பெயர் வழங்கப்பட்டது.

சங்க காலத்தில் வாழ்ந்த ஔவையாரும் மற்றும் சோழர்களும் சிறந்த சிறப்புத்தன்மை வாய்ந்தவர்களாக கருதப்பட்டனர். இலக்கியம், கலாச்சாரம், உலகளாவிய அறநெறி, அரசியல் தன்மை, போர், அமைதி மற்றும் இராஜதந்திரம் போன்றவற்றில் இவர்கள் பெரிய தாக்கத்தினை ஏற்படுத்தினர். இந்த ஔவையார் ஒன்றாம் மற்றும் இரண்டாம் நூற்றாண்டு (பொ.ஆ) காலத்தில் வசித்தவர். இவர் அதியமானின் அவையில் இருந்தார். இவர் திருவள்ளுவர் மற்றும் கபிலரின் சம காலத்தவர் ஆவார். நற்றினை குறுந்தொகை, அகநானூறு, புறநானூறு இவற்றில் குறிப்பிடத்தக் பங்களிப்பை செய்துள்ளார். இவர் சிறந்த ஒரு தூதராகவும் இருந்தார். அதியமானுக்காக பலமுறை பல அரசர்களிடம் தூதுவனாக சென்றுள்ளார். அதியமான் அவையில் புலவராகவும், அதியமானின் உற்ற தோழராகவும் இருந்தார். தன் தூது திறமையின் மூலம் போர்களைக்கூட இவர் தவிர்த்துள்ளார்.

ஒரு முறை காஞ்சியை ஆண்ட தொண்டைமான், அதியமான் ஆண்ட தகடூரை தாக்கி போர்புரியும் எண்ணத்துடன் இருந்தான் இதை அறிந்த ஔவையார் காஞ்சி சென்று தொண்டைமானை சந்தித்து பின் வருமாறு கூறினார்.

"தொண்டைமான் அரசரே உங்களுக்கும் அதியமானுக்கும் தான் எவ்வளவு வேறுபாடு உங்களது ஆயுதக்கிடங்கில் ஆயுதங்கள் சுத்தமாகவும் பளபளப்பாகவும் நெய் பூசப்பட்டு அழகாக அடுக்கி வைக்கப்பட்டுள்ளன. ஆனால் பாவம் அதியமானின் ஆயுதங்கள் உடைந்தும், ரத்தக்கரை படிந்தும், பட்டறைகளில் பழுது நீக்கும் பணியிலும் உள்ளன" என்றார். தொண்டைமானை புகழ்வது போல், ஔவையார் அவனது போர் அனுபவமின்மையும், அதியமானின் தொடர்ந்த போர்களையும், போர் திறனையும் தெரிவித்து போர் வந்தால் தொண்டைமான் வெற்றி பெறுவது கடினம் என்பதையும் உணர்த்தினார்.

சோழர் காலத்தில் பத்தாம் நூற்றாண்டில் இன்னொரு புகழ்பெற்ற ஔவையார் இருந்தார்.



11th Std Political Science Tamil Medium Vol-2_Chapter 15_updated.indd 192 29-09-2018 12:45:14

இவரே குழந்தைகளுக்கான நீதி கதைகளையும் ஆத்திச்சூடியையும் கொன்றைவேந்தனையும் எழுதியவர். சற்றே வளர்ந்த குழந்தைகளுக்காக மூதுரை மற்றும் நல்வழி என்ற இரண்டு நூல்களை இவர் எழுதியுள்ளார்.

## திருக்குறள்

நம் பண்டைய இலக்கியங்கள் நம் கலாச்சாரம் மற்றும் இலக்கிய மரபுகளை பற்றி குறிப்பிடுகிற அதே வேளையில் நம் தமிழ் கலாச்சாரத்தின் வரலாற்றை குறிப்பாக தமிழ் சமூக அமைப்பு மற்றும் மத நம்பிக்கைகள், வாழ்வாதாரம், விதிமுறைகள், தொழிற்கல்வி மற்றும் பெண்களின் தகுதிநிலை, திருமணம், பாலினம், வர்க்க கட்டமைப்பு, சாதி அமைப்பின் தோற்றம், அமைதி, ஆட்சி முறை, கடற்படை, மீன்பிடித்தொழில் பாரம்பரியம், வர்த்தகம், வணிகம், கப்பல் கட்டும் பணி, மற்றும் கடற்பயணங்கள் பொருளாதாரம், நிலம், அமைப்பு, விவசாயம், கலை, நாட்டியம், பாடல்கள், இசை, கட்டடக்கலை மற்றும் அயல் நாடுகளுடன் உறவு மற்றும் தொலை தூர தேசங்களைப் பற்றியும் கூறுகின்றன.

## அறிமுகம்

அரசியல் என்பது சமுதாயத்தின் நடைமுறைச் செயல்பாடுகளை அப்படியே கிரகித்துக் கொள்வதற்கு மாறாகச் சமுதாயத்தின் விழிப்புணர்வை மாற்றுவதற்கான நடவடிக்கை ஆகும். இத்தகைய நடவடிக்கைகள் எழ பல காரணிகள் உள்ளன. சமூக, பொருளாதார, தொழில்நுட்ப வளர்ச்சிக் கட்டங்களில் பழைய சிந்தனைகளால் இடையூறுகளுக்கு உள்ளாகும். சமூகத்தில் புதிய காரணிகள் நெருக்கடிகளை உருவாக்குகின்றன. இவை சமூகத் தளத்தில் புதிய சிந்தனையாளர்களை தோற்றுவிக்கின்றன. இவர்களில் நீண்டகாலத் தாக்கங்களை உருவாக்குபவர்கள் அரசியல் சிந்தனையாளர்களாக உருவாகிறார்கள்.

**இப்பாடப்புத்தகத்தில் கொடுக்கப்பட்டுள்ளதைப் போல மூன்று பத்திகளை உனது குறிப்பேட்டில் வரைக.**

## K–W–L செயல்பாடு

**K–W–L – (என்றால் என்ன என்பதை அறிந்து கொள்ளுங்கள்)**




கீழ்கண்டவாறு ஒரு அட்டவணையை உனது குறிப்பேட்டில் வரைந்துகொள்

| அரசியல் | | |
|---|---|---|
| எனக்கு என்ன தெரியும்? | நான் என்ன தெரிந்து கொள்ள விரும்புகிறேன்? | நான் என்ன தெரிந்து கொண்டேன்? |
| | | |
| | | |
| | | |
| | | |



11th Std Political Science Tamil Medium Vol-2_Chapter 15_updated.indd 193 29-09-2018 12:45:15

**அரசியல் சிந்தனையாளருக்கான வரையறைகளாக கீழ்க் காண்பவற்றைக் கூறலாம்:**

- சமூகத்தில் சமூக மாற்றத்தை ஏற்படுத்திய கொள்கைகள், நிகழ்வுகளுக்குக் காரணியாக இருத்தல்; மக்களின் பொதுப் புத்தியில் மாற்றத்தை உருவாக்குதல்
- சமூகத்தில் திருப்புமுனை ஏற்படுத்திய அரசியல் முடிவுகளை எடுத்தல்
- சமூகத்தின் பல பிரிவுகளைச் சேர்ந்த பயனாளர்களுக்கும் பலன்கள் அளித்த அரசு முடிவுகளுக்குக் காரணமாக இருத்தல்
- சமூகத்தின் பல பிரிவு மக்களின் முன்னேற்றத்துக்குக் காரணமான அரசியல் கருத்துகளை பொதுக் கருத்தாக உருவாக்குதல்

அரசியல் சிந்தனையாளர்களின் நடவடிக்கைகள் புதிய அரசியல் சிந்தனைகளுக்கு ஆதரவாக மக்களின் ஈடுபாட்டினையும் பகுத்தறிவினையும் உருவாக்குகின்றன. சமகால அரசியல் களங்களில் அவர்கள் ஊடாட்டம் கொள்வதால் புதிய சமூக விழுமியங்கள் உருவாகின்றன. அடுத்த காலகட்டத்துக்கு அறைகூவல் விடுக்கும் அரசியல் மாற்றத்துக்கான அரசியல் முடிவுகளை அவர்கள் மேற்கொள்கிறார்கள். அவர்களது அரசியல் முடிவுகள் அநேக மக்களின் அன்றாட வாழ்வில் நீண்டகால மாற்றங்களை உருவாக்குகின்றன.

உலகம் முழுவதிலும் இத்தகைய அரசியல் சிந்தனையாளர்கள் அரசியல், சமூக மாற்றங்களை உருவாக்கியுள்ளனர். இந்தியாவிலும் தமிழகத்திலும் பண்டைய காலத்திலிருந்து இத்தகைய அரசியல் சிந்தனையாளர்கள் உருவாகியுள்ளனர்.

நவீன அரசியல் கருத்தாக்கங்களின் படி தேசிய அரசியல் சிந்தனையாளர்கள், பொதுவுடைமைவாத் அரசியல் சிந்தனையாளர்கள், திராவிடப் பண்பாட்டு அரசியல் சிந்தனையாளர்கள், ஒடுக்கப்பட்ட மக்கள் சிந்தனையாளர்கள் என நாம் பகுக்கலாம்.

இதன்படி தமிழகத்தில் தோன்றிய அரசியல் சிந்தனையாளர்கள் இப்பாடத்தில் அறிமுகம் செய்யப்படுகிறார்கள்.

## 15.2 பண்டைய அரசியல் சிந்தனைகள்

### திருவள்ளுவர்



திருவள்ளுவர் தம் நூலின் முதல் பகுதியாகிய அறத்துப் பாலில் அறத்தின் சிறப்பைத் திடமாக எடுத்துரைத்துக் கற்பவரின் நெஞ்சில் பதியுமாறு செய்கிறார்: இங்கே நெறி தவறாத ஓர் அறவோராக விளங்கி, உணர்ச்சி வயப்படாமல், கற்பனைக்கு இடம் தராமல், நடுநிலையில் நின்று தாம் உணர்ந்த உண்மைகளைத் தெளிவாக விளக்குகிறார். இரண்டாம் பகுதியாகிய பொருட்பாலில் உலக வாழ்க்கையின் இயல்புகளையும் நடைமுறைகளையும் அலசி ஆராயும் ஓர் அனுபவம் நிறைந்த அறிஞராகத் திகழ்கிறார்: பல காலத்தும் பல துறைகளிலும் கண்டும் கேட்டும் அறிந்தவற்றை எல்லாம் தம் சிந்தனைத் திறத்தால் தெளிவாக உணர்ந்து வகைப்படுத்திக் கூறுகிறார். மூன்றாம் பகுதியாகிய காமத்துப் பாலில் படைப்புத் திறன் மிக்க ஒரு கவிஞராக நின்று குறள் மணிகளை இயற்றியுள்ளார்; தாம் மறைந்திருந்து, நாடகப் போக்கில் காதலனையும் காதலியையும் பேசச் செய்துள்ளார்.



11th Std Political Science Tamil Medium Vol-2_Chapter 15_updated.indd 194 29-09-2018 12:45:16

## பொருட்பாலின் ஏழு பகுதிகள்

"அரசியல் ஐந்து; அமைச்சியல் ஈரைந்து;

உருவவல் இரண்டு; ஒன்று ஒண்கூழ் – இருவியல்

திண்படை; நட்புப் பழனேழ்; குடி பதின்மூன்று

எண்பொருள் ஏழாம் இவை."

என்பது போக்கியார் என்னும் புலவர் பெயரால் அமைந்த பழைய வெண்பா. இதன் படி, பொருட்பால் ஏழு பகுதிகளை உடையது; அரசியல் 25, அமைச்சியல் 10, அரண் 2, கூழ் 1, படை 2, நட்பு 17, குடி 13 ஆக பொருட்பாலின் எழுபது அதிகாரங்கள் ஏழு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

**"படைகுடி கூழ்அமைச்சு நட்புஅரண் ஆறும்**
**உடையான் அரசருள் ஏறு" (குறள் : 381)**

என வரும் பொருட்பாலின் முதல் குறட்பாவிலேயே இந்த வேறுபாட்டிற்கான அடிப்படையும் காணப்படுவது குறிப்பிடத்தக்கது. இக் குறட்பாவில் உள்ளவாறு அரசாங்கம் (அரசின் அங்கம்) என்பதன் அமைச்சு, அரண், கூழ், படை, நட்பு, குடி என்னும் ஆறு அங்கங்களையும் தனித்தனியே வகுத்து, இந்த ஆறு அங்கங்களையும் உடைய ஆட்சித் தலைவனைப் பற்றித் தனியே சில அதிகாரங்களில் கூறி ஏழு வகையாக வேறுபாடு செய்வது திருக்குறளின் அமைப்பு முறைக்கு ஏற்றதாக உள்ளது.

## அரசனது இயல்பு கூறும் இருபத்தைந்து அதிகாரங்கள்

பொருட்பாலின் முதலில் அரசனது இயல்பு கூறும் அரசியலை மிக விரிவாக இருபத்தைந்து அதிகாரங்களில் கூறியுள்ளார் திருவள்ளுவர். 'இறைமாட்சி' (அதிகாரம் 39) தொடங்கி 'இடுக்கண் அழியாமை' (அதிகாரம் 63) வரையிலான இருபத்தைந்து அதிகாரங்களில் 'அரசர்', 'வேந்தர்', 'நிலன் ஆண்டவர்', 'மன்னவர்' முதலான பெயர்களால் நாற்பத்தாறு முறை அவர் ஆட்சித் தலைவனைச் சுட்டிக் கூறியிருப்பது நோக்கத்தக்கது. கல்வி வேண்டும் (40), கேள்வி வேண்டும் (42), அறிவு வேண்டும் (43), குற்றம் கடிந்த வாழ்வு வேண்டும் (44), பெரியாரைத் துணைக்கொள்ள வேண்டும் (45), சிற்றினம் சேராமல் வாழ வேண்டும் (46), தெரிந்து (ஆராய்ந்து) செய்யும் இயல்பு வேண்டும் (47), வலியும் காலமும் இடமும் அறிந்து வினை செய்யும் திறம் வேண்டும் (48–50), தெரிந்து தெளியும் ஆற்றல் வேண்டும் (51), தெரிந்து வினையை ஆளும் வன்மை வேண்டும் (52), சுற்றம் தழுவ வேண்டும் (53), மறதி(சோர்வு) இல்லாமல் கடமைகளைச் செய்ய வேண்டும் (54), செங்கோன்மை (நேர்மை) வேண்டும் (55), கொடுங்கோன்மையை வெறுக்க வேண்டும் (56), வெருவந்த (பிறர் அஞ்சி நடுங்கும் செயல்கள்) செய்யாமை வேண்டும் (57), கண்ணோட்டம் (இரக்கம்) வேண்டும் (58), ஒற்று (உளவு) ஆளும் முறை வேண்டும் (59), ஊக்கம் வேண்டும் (60), சோம்பலை ஒழிக்க வேண்டும் (61), முயற்சி வேண்டும் (62), இடுக்கணைப் (துன்பத்தைப்) பொருட்படுத்தாத உறுதி வேண்டும் (63): இவைகளே அரசியலில் ஆட்சித் தலைவர்களுக்குத் திருவள்ளுவர் வலியுறுத்தும் இயல்புகள். இவை யாவும் நன்மக்கள் எல்லோருக்கும் வேண்டும் பண்புகளே என்பது நெற்றித் திலகம்.

## குடியாட்சிக் காலத்திற்கும் பொருந்தி வரும் அறிவுரைகள்

அரசனைப் பற்றியும், அரசியல் அமைப்பினைப் பற்றியும் திருவள்ளுவர் பொருட்பாலில் கூறியுள்ள கருத்துக்கள் இன்றும் பொன் போல் போற்றத்தக்கனவாக விளங்குகின்றன. திருவள்ளுவர் வாழ்ந்த காலம் முடியாட்சிக் காலம். எனினும், அந்தக் காலத்தில் அவர் அரசனுக்குச் சொன்னவைகளாக அமைந்த அறிவுரைகள், இன்று குடியாட்சி முறையில் உள்ள தலைவர்களுக்கும் பொருந்தும் நன்மொழிகளாக உள்ளன. திருவள்ளுவர், அரசு எப்படி இருக்க வேண்டும் என்று முடியாட்சி எங்கும் பரவியிருந்த காலத்திலேயே அழகாக எடுத்துக்காட்டியிருக்கிறார்.



11th Std Political Science Tamil Medium Vol-2_Chapter 15_updated.indd 195 29-09-2018 12:45:16

திருவள்ளுவர் காட்டுகின்ற அரசு எந்தக் காலத்திற்கும், எந்த அமைப்பிற்கும் பொருத்தமாகக் காணப்படுகிற நிலையினை நாம் காண்கின்றோம். அவருடைய அரசியல் கருத்துக்கள் எந்தக் காலத்திற்கும் எந்த அமைப்பும் ஏற்றுக்கொள்ளக் கூடிய சிறப்பினைப் பெற்று விளங்குகின்றன.

**மக்கள் நல அரசு :**

சுருங்கக் கூறின், திருவள்ளுவருடைய அரசியல் அமைப்பு ஒரு 'மக்கள் நல அரசு' (Welfare State) அடிப்படையில் அமைந்தது எனலாம் (திருக்குறளில் அறிவுத் துறைகள், பக்.114; 118).

**"முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு இறையென்று வைக்கப் படும்"** (குறள்: 388)

என்ற குறட்பாவில், 'அரச குடும்பத்தில் பிறந்து வளர்ந்து, அரசனாகப் பொறுப்பு ஏற்றால் மட்டுமே ஒருவன் அரசனாகச் சிறக்க முடியாது' என்னும் கருத்தியலைத் தெள்ளத் தெளிவாகப் பறைசாற்றியுள்ளார் திருவள்ளுவர். ஒரு மன்னன் நீதி நெறி வழுவாமல் தன் கடமையைச் சரிவரச் செய்தால் – குடிமக்களைக் காப்பாற்றினான் என்றால் – அவன், 'இறை என்று வைக்கப்படும்' – 'முறை செய்து காப்பாற்றும்' அவனை மக்கள் காணும் கடவுளாகவே கருதுவார்கள் என்கிறார் அவர். மன்னனைக் கடவுளாக நினைத்த ஒரு காலக்கட்டத்தில், 'நீ ஒன்றும் கடவுள் அல்ல, நல்ல வண்ணம் நடந்தால், நீதி நெறி வழுவாமல் காப்பாற்றினால் உன்னை மக்கள் கடவுளாகவே கருதுவார்கள்' என்று வள்ளுவர் கூறியிருப்பது, ஆழ்ந்து சிந்திக்கத்தக்கது. இக்கருத்து, முடியாட்சிக் காலத்திற்கு மட்டுமன்றி, குடியாட்சி மலர்ந்துள்ள இக்காலக்கட்டத்திற்கும் பொருந்தி வருவதே.

திருவள்ளுவரின் கண்ணோட்டத்தில் 'அறம் வழுவாது, தீமைகளை நீக்கி, மறம் வழுவாது, மானம் காப்பது அரசு' ஆகும்.

**"அறனிழுக்கா தல்லவை நீக்கி மறனிழுக்கா மானம் உடைய தரசு"** (குறள் : 384)

என்னும் குறட்பா இவ்வகையில் கருத்தில் கொள்ளத்தக்கது.

'மன்னர் எவ்வழி; மக்கள் அவ்வழி'. நாடாளும் மன்னன் தனது குடிமக்களுக்கு வழிகாட்டியாக இருக்க வேண்டியவன் ஆவான். அவன் ஒருவன் தீய வழியில் நடந்தால், மற்றவர்களுக்கு அதுவே தூண்டுகோல் ஆகிவிடும். அவன் தலைவனாக இருப்பதால், அவனுடைய ஒழுக்கம் மற்றும் தனிவாழ்வு பற்றிய செய்திகள் நாடெங்கும் பரவுதல் எளிது. ஆகவே, அவனுக்கு அறநெறி கட்டாயம் வேண்டும் என்று திருவள்ளுவர் வலியுறுத்தியுள்ளார். மானம் வேண்டும் என்று கூறும் போதும், தனிவாழ்க்கை பற்றிய மான உணர்ச்சியைக் குறிப்பிடாமல், 'மறன் இழுக்கா மானம்' என வீரத்திற்கு ஏற்புடைய மானத்தைக் குறிப்பிட்டு, நாட்டின் மானமே தன் மானமாகக் கொண்டு மன்னன் வாழ்க்கை நடத்த வேண்டும் என அவர் அறிவுறுத்தியுள்ளார்.

'செங்கோன்மை' அதிகாரத்திலும் நல்லாட்சி பற்றி எக்காலத்திற்கும் பொருந்தி வருகின்ற அடிப்படையான கருத்துக்களை எடுத்துரைத்துள்ளார் திருவள்ளுவர். உலகத்தில் உள்ள உயிர்கள் எல்லாம் மழையை எதிர்பார்த்து வாழ்கின்றன; அது போல், குடிமக்கள் எல்லாம் அரசனுடைய செங்கோலை – நல்லாட்சியை – எதிர்பார்த்து வாழ்கின்றனர் என்கிறார்.

**"வானோக்கி வாழும் உலகெல்லாம்; மன்னவன் கோல்நோக்கி வாழுங் குடி"** (குறள்: 542)

என்ற குறட்பாவில் 'மன்னவன் கோல்' என்னும் முடியாட்சிக் காலத்திற்கான தொடரின் இடத்தில், 'நல்லாட்சி' என்ற பொதுவான இன்றைய மக்களாட்சிக்கு ஏற்ற தொடரைப் பொருத்திக் கொள்ளும் வகையில் பாடியிருப்பது திருவள்ளுவரின் தனிச்சிறப்பாகும்.

**"குடிதழீஇக் கோலோச்சும் மாநில மன்னன்
அடிதழீஇ நிற்கும் உலகு"** (குறள்: 544)

என்னும் குறட்பாவும் திருவள்ளுவரின் காலம் கடந்து நிற்கும் பொதுமை நோக்கினைத் தெற்றெனப் புலப்படுத்தி நிற்கின்றது. 'குடிமக்களை அன்போடு அணைத்துக் கொண்டு ஆட்சி புரியும் அரசனுடைய அடிகளைப் பொருந்தி நிற்குமாம் உலகம்'.

இக் கருத்தினையே 'கொடுங்கோன்மை' அதிகாரத்தில் வரும் குறட்பா ஒன்றில் எதிர்மறை வாய்பாட்டால் தெளிவுபடுத்தியுள்ளார் திருவள்ளுவர். கொடுமையைப் பொறுத்துக் கொள்ளமுடியாமல் துன்புற்றுக் குடிமக்கள் அழும் கண்ணீருக்கு மிகுந்த ஆற்றல் உண்டு; அதுவே ஆற்றல் மிக்க படையாகி முறை செய்யாத மன்னனுடைய அரசையே அடியோடு அழித்துவிடும்.

**"அல்லற்பட்டு ஆற்றாது அழுதகண் ணீரன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை."** (குறள் : 555)

இங்கே அல்லற்பட்டு ஆற்றாது குடிமக்கள் அழும் 'கண்ணீரை', கொடுங்கோல் அரசையே அடியோடு தேய்த்து அழித்துவிடும் 'படையாக' உருவகம் செய்திருக்கும் திருவள்ளுவரின் சிந்தனை புதுவது; இதுவரை யாரும் கூறாதது. ஹிட்லர், முசோலினி, ஜார் முதலான உலகின் கொடுங்கோலர்களுக்கு எதிராகத் திருவள்ளுவர் இக்குறட்பாவில் அடித்திருக்கும் சாவுமணி வலிமையானது.

### வருவாயைப் பெருக்குவதற்கான நான்கு வழிவகைகள்

ஒரு மன்னன் தனது அரசின் வருவாயைப் பெருக்கும் துறையிலும் வரவு-செலவுத் திட்டத்திலும் (Budget) வல்லவனாக விளங்க வேண்டும். இவ்வகையில் திருவள்ளுவர் 'இறைமாட்சி' அதிகாரத்தில் கூறியுள்ள ஓர் அடிப்படையான அரசியல் சிந்தனை வருமாறு:

**"இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்ல தரசு."** (குறள் : 385)

முதலாவதாக, ஒரு மன்னன் பொருள் வரும் வழிவகைகளைப் பெருக்க வேண்டும்; இதனை 'இயற்றல்' என்ற சொல்லால் குறிப்பிடுகிறார் வள்ளுவர். அடுத்து, அரசுக்குப் பல வழிகளிலே வந்த வருவாயைத் திரட்டி ஒன்றுசேர்க்க வேண்டும்; இதனை 'ஈட்டல்' என்கிறார் வள்ளுவர். மூன்றாவதாக ஒன்று சேர்த்த பொருளை அழிவு நேராமல் காக்க வேண்டும்; இது 'காத்தல்' ஆகும். மிக இன்றியமையாத நான்காவது படிநிலை, இயற்றியும் ஈட்டியும் காத்தும் வைத்துள்ளவற்றைச் செலவிடுவதற்கு உரிய துறைகள் இவை இவை, அவற்றிற்கான தொகைகள் இவ்வளவு இவ்வளவு என்று வகுத்துச் செலவு செய்தல் ஆகும். இதுவே 'வகுத்தல்' எனப்படும். இங்ஙனம் இயற்றல், ஈட்டல், காத்தல், வகுத்தல் என்னும் நான்கு வழிமுறைகளில் அரசின் வருவாயைச் சேர்த்து, பகிர்ந்து, திட்டமிட்டு, பயன்படுத்திக் கொள்வது ஒரு தேர்ந்த மன்னனின் தலையாய கடமை ஆகும் என்கிறார் திருவள்ளுவர்.

இக்கருத்து இன்று அரசியல் மற்றும் பொருளியல் சார்ந்த அறிஞர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள சமதர்மம் அடிப்படைக் கருத்துக்களில் ஒன்றாகும். ஓர் அரசு தனது வருவாயை எவ்வாறு எல்லாம் சிறந்த முறையில் திட்டமிட்டுக் கையாள வேண்டும் என்ற முற்போக்கான கருத்தினை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே நறுக்குத் தறித்தாற் போல் 'இயற்றல், ஈட்டல், காத்தல், வகுத்தல்' என நான்கே நான்கு சொற்களில் வடித்துத் தந்துள்ள பாங்கினை இங்கே நம்மால் காண முடிகின்றது.

அரசனுக்கென்று திருவள்ளுவர் பொருட்பாலில் கூறியுள்ள நல்லியல்புகள் நாட்டு மக்கள் எல்லோருக்கும் வேண்டியனவாக, பொருந்தக் கூடியனவாக இருக்கின்றன. அதனால்தான் அவர்



11th Std Political Science Tamil Medium Vol-2_Chapter 15_updated.indd 197 29-09-2018 12:45:16

அரசனுக்கு என்று கூறத் தொடங்கிய 'கல்வி' முதலாக 'இடுக்கண் அறியாமை' வரையிலான பண்பு நலன்களை 'வாழும் உயிர்க்கு' என்றும் 'மாந்தர்க்கு' என்றும் பலர்க்கும் பொதுவாக்கிக் கூறியுள்ளார். திருவள்ளுவர் பொருட்பாலில் வலியுறுத்தியுள்ள அரசியல் சிந்தனைகளில் அறநெறியே முதன்மையான இடத்தினைப் பெறுகின்றது, அவரது அரசியல் அமைப்பில் மக்கள் நலமே அடிப்படையாக விளங்குகின்றது. வேறு சொற்களில் கூறுவது என்றால், முடியாட்சிக் காலத்தைச் சார்ந்த திருவள்ளுவரின் பெரும்பாலான அரசியல் சிந்தனைகள் இன்றைய குடியாட்சிக் காலத்திற்கும் ஏற்புடையனவாகத் திகழ்கின்றன.

உங்களுக்குத் தெரியுமா?

### திருக்குறள் ஓர் மதச்சார்பற்ற நூல்

திருக்குறளை நாம் படிக்க ஆரம்பித்த உடனேயே அது ஒரு மதச்சார்பற்ற நூல் என்ற உண்மையை நாம் அறியலாம். திருவள்ளுவர் வாழ்ந்த காலத்தில் பௌத்த மதம், சீக்கிய மதம், ஜைன மதம், மற்றும் இந்து மதம் போன்ற பல மதங்கள் இருந்தன. அதைப்போலவே இறை மறுப்பாளர்களும் இருந்துள்ளனர். ஆனால் மதச்சார்பற்ற தன்மை எனும் கருத்தாக்கத்தை யாரும் அறிந்திருக்கவில்லை. வள்ளுவரே மத நம்பிக்கை உடையவர் தான். கடவுளைப் புகழ்ந்தே பத்து குறள்களை கொண்ட ஒரு அதிகாரத்தை படைத்துள்ளார். அவரும் ஒரு மதத்தில் இருந்திருக்கலாம். ஆனால் எந்த ஒரு மதத்துக்கும் ஆதாரமாக இந்நூல் இல்லை. குறிப்பாக சொல்வதென்றால் எந்த மதத்தைப் பற்றியும் குறிப்பிடக்கூட இல்லை.

## 15.3 தேசியவாதம்

### சுப்ரமணிய பாரதியார்(1882–1921)



**ஜாதி மதங்களைப் பாரோம் – உயர்**
**ஜன்மம்இத் தேசத்தில் எய்தின ராயின்**
**வேதிய ராயினும் ஒன்றே – அன்றி**
**வேறு குலத்தின ராயினும் ஒன்றே**

நாம் சாதி மதங்களைப் பார்க்க வேண்டாம், இந்த நிலத்தில் வாழும் அனைத்து மனிதர்களும் ஒன்றே அவர்கள் எந்த சாதியினரை சார்ந்திருந்தாலும் அல்லது எந்த வேதத்தை போதிப்பவராக இருந்தாலும் நாம் அனைவரும் ஒன்றே அது மனிதகுலம் ஆகும்.

– சுப்ரமணிய பாரதியார்

சி. சுப்ரமணிய பாரதியார் தமிழகத்தின் தலைச்சிறந்த கவிஞர், சுதந்திரப் போராளி மற்றும் சமூக சீர்திருத்தவாதி ஆவார். இவர் மகாகவி பாரதியார் என்று மிகவும் போற்றப்படுகிறார். மகாகவி என்றால் மிகப்பெரிய கவிஞர் எனப்பொருள்படும். இவர் இந்தியாவின் தலைசிறந்த கவிஞராகக் கருதப்படுகிறார். இவருடைய பாடல்கள் தேசிய உணர்வைத் தூண்டி தேச விடுதலைக்காக மக்களைத் திரட்ட உதவியதுடன் தமிழகத்தில் இந்திய சுதந்திர போராட்டத்திற்கு ஆதரவாகவும் இருந்தன.



11th Std Political Science Tamil Medium Vol-2_Chapter 15_updated.indd 198 29-09-2018 12:45:16

"நாம் ஆயிரம் பிரிவுகளாக வேண்டுமானாலும் பிரிந்து இருக்கலாம். ஆனால், எப்படி இருந்தாலும் அந்நிய படையெடுப்பை நியாயப்படுத்த முடியாது".

**பாரதி : ஓர் பாடலாசிரியர் மற்றும் ஓர் தேசிய வாதி**

தமிழ் இலக்கியங்களின் ஓர்புதிய சகாப்தமே சுப்ரமணிய பாரதியாரிடமிருந்து தொடங்கியுள்ளது எனலாம். இவருடைய பெரும்பாலான படைப்புகள் தேசபற்று, பக்தி மற்றும் மறைபொருள் பற்றியதாகும். பாரதியார் மிகவும் உணர்ச்சிப் பெருக்குள்ள கவிஞர் ஆவார். "கண்ணன் பாட்டு" " நிலவும், வான்மீனும் காற்றும்" "பாஞ்சாலி சபதம்" போன்றவை பாரதியாரின் மிகச் சிறந்த படைப்புகளின் வெளிப்பாடுகளாகும்.

**உங்களுக்குத் தெரியுமா?**

பாரதியாரின் "பாஞ்சாலி சபதம்" என்பது ஓர் தலைசிறந்த படைப்பாகும். இது இந்தியாவை திரௌபதியாகவும், ஆங்கிலேயரை கௌரவர்களாகவும் சுதந்திர போராட்ட வீரர்களை பாண்டவர்களாகவும், உருவகப் படுத்தியிருந்தார். திரௌபதியின் போராட்டம் மூலமாக அவர் இந்திய தாய் ஆங்கிலேயர் ஆட்சியின் கீழ் அடிமைப்பட்டுள்ளதை மறைமுகமாக வெளிப்படுத்தினார்.

பாரதி ஓர் தேசியக் கவிஞராக கருதப்படுகிறார். இவருடைய பாடல்கள் தேசப்பற்று மிக்கதாக மக்கள் மத்தியில் போற்றப்பட்டுள்ளன. இதனால் மக்கள் ஈர்க்கப்பட்டு சுதந்திரப் போராட்டத்தில் மிகுந்த ஈடுபாடுடன் பங்கேற்று நாட்டின் சுதந்திரத்திற்காகப் பாடுபட்டனர். பாரதியார் நாட்டின் பெருமையை மட்டும் கூறாமல் சுதந்திர இந்தியாவைப் பற்றிய தொலைநோக்குப் பார்வையை கோடிட்டுக் காட்டுகிறார். இவர் 1908 ம் ஆண்டு "சுதேச கீதங்கள்" எனப்படும் உணர்ச்சிமிக்க பாடல் தொகுப்பினை வெளியிட்டார்.

**ஓர் இதழாசிரியராக பாரதியார்**

பாரதியார் (பல வருடங்களைப்) தன்னுடைய வாழ்க்கையில் பத்திரிக்கையாளராக செலவிட்டார். பாரதி இளம் வயதில் தன்னுடைய வாழ்க்கையை ஓர் பத்திரிக்கையாளர் மற்றும் துணை ஆசிரியராக "சுதேச மித்திரன்" என்ற பத்திரிக்கையில் 1904-ஆம் ஆண்டு தொடங்கினர். 1906-ஆம் ஆண்டு மே மாதம் " இந்தியா" எனப்படும் ஓர் புதிய நாளிதழ் தொடங்கப்பட்டது. இது பிரஞ்சு புரட்சியின் மூன்று முக்கிய முழக்கங்களான சுதந்திரம், சமத்துவம் மற்றும் சகோதரத்துவம் போன்றவற்றை தனது குறிக்கோளாக அறிவித்தது. இது தமிழ் பத்திரிக்கை துறையில் ஓர் புதிய பாதையை ஏற்படுத்தியது எனலாம். இது புரட்சிகரமான புதிய முயற்சியாக தோன்றியது. தனது புரட்சிகரமான முனைப்புகளை வெளியிடுவதற்கு பாரதியார் அவர்கள் வார இதழை சிகப்பு தாளில் அச்சிட்டு பிரசுரித்தார். அரசியல் கேலிச் சித்திரத்துடன் வெளியிடப்பட்ட தமிழ் நாட்டின் முதல் நாளேடு 'இந்தியா' என்பதாகும். இவர் மேலும் விஜயா என்கிற தமிழ் தினசரியின் அதன் பதிப்பாசிரியராகவும் இருந்து வெளியிட்டார். "பால பாரதா" என்கிற ஆங்கில மாத இதழையும், பாண்டிச்சேரியில் "சூர்யோதயம்" எனும் உள்நாட்டு வார இதழை வெளியிட்டார்.

**உங்களுக்குத் தெரியுமா?**

"சுயராஜ்ய தினம்" கொண்டாடுவதற்காக 1908-ஆம் ஆண்டு சென்னையில் மிகப்பெரிய பொதுக் கூட்டத்திற்கு இவர் ஏற்பாடு செய்தார். "வந்தே மாதரம்" "எந்தையும் தாயும் , ஜெய பாரத்" போன்ற பாரதியாரின் கவிதைகள் அச்சிட்டு இலவசமாக மக்களுக்கு விநியோகிக்கப்பட்டன.

உங்களுக்குத் தெரியுமா?

சுப்ரமணிய பாரதியார் (டிசம்பர்) பதினோராம் நாளில் 1882-ஆம் ஆண்டு எட்டயபுரம் என்னும் கிராமத்தில் பிறந்தார். இந்த ஊர் தமிழ்நாட்டில் உள்ள திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ளது, இவருடைய குழந்தை பருவ பெயர் சுப்பையா ஆகும். இவரது தந்தையார் சின்னசாமி, தாயார் லட்சுமி அம்மாள் ஆவார்.

பாரதியார் ஏழு வயதில் தமிழ்க் கவிதைகளை எழுத ஆரம்பித்தார். தன்னுடைய பதினோராம் வயதில் அவருடைய படைப்புகள் மற்றும் திறைமைகள் கற்றறிந்த அறிஞர்களால் புகழப்பட்டது. பதினோராம் வயதில் சுப்பையா அனைத்து பெருமக்கள் மற்றும் அறிஞர்கள் கூடியிருக்கும் சபையில் ஓர் சவால் விட்டார். யாரேனும் என்னுடன் எந்தவித முன்னறிப்பு மற்றும் பயிற்சி இல்லாமல் எந்த தலைப்பில் வேண்டுமானாலும் பேச தயாரா? என சவால் விட்டார். இந்த போட்டி எட்டையபுர அரசவையில் ஓர் சிறப்பு அமர்வாக எட்டயபுர அரசரின் தலைமையில் நடைபெற்றது. சவாலில் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைப்பு'கல்வி' ஆகும். சுப்பையா பேச்சுப் போட்டியில் வென்றார். இது சுப்பையாவின் வாழ்க்கையில் ஓர் திருப்பு முனையாக அமைந்தது. இந்த மறக்க முடியாத நிகழ்வுக்கு பிறகு 'எட்டயபுர சுப்பையா' என்று அழைக்கப்பட்ட அவர் 'பாரதி' என்றும் பிற்காலத்தில் பாரதியார் என்றும் மரியாதையுடன் அழைக்கப்பட்டார். 'பாரதியார்' என்ற பெயர் அனைவராலும் குறிப்பாக தேசவாதிகளாலும் உலகெங்கிலும் உள்ள கோடான கோடி தமிழ்ப் பற்றாளர்களால் மதியாதையுடனும் நினைவு கூறப்படுகிறது.

ஜூன் 1897-இல் பாரதியாருக்கு பதினைந்து வயது நிரம்பியிருந்த போது செல்லமாளுடன் திருமணம் நடந்தது. இதன்பிறகு பாரதியார் காசிக்கு சென்றார். அங்கு தனது அத்தை குப்பாள் மற்றும் மாமா கிருஷ்ணசிவனுடன் இரண்டு ஆண்டுகள் இருந்தார். அங்கிருந்த போது தான் சமஸ்கிருதம், இந்தி மற்றும் ஆங்கில மொழியறிவினை பெற்றார். அலகாபாத் பல்கலைக்கழக நுழைவுத் தேர்வில் அவர் வெற்றி பெற்றார். காசியில் தங்கியிருந்தது பாரதியின் ஆளுமையில் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தியது. முறுக்கு மீசை, சீக்கியர்களின் தலைப்பாகை மற்றும் வீறு கொண்ட நடையினை தனக்கே உரித்தானதாக்கினார். இத்தகைய வெளிப்படையான மாற்றங்களும் பாரதியாரிடம் ஏற்பட்டன.




"இந்தியா" என்கிற இதழின் பதிப்பாசிரியராக இருந்து செயல்பட்டதனால் பாரதியாருக்கு கைது ஆணைப் பிறப்பிக்கப்பட்டது. இதனால் நிலைமை மிகவும் மோசமானதால் 1908-ஆம் ஆண்டு பாண்டிச்சேரிக்கு செல்ல முடிவு எடுத்து அவர் அங்கே சென்றார். அந்த கால கட்டத்தில் பாண்டிச்சேரி பிரெஞ்சு ஆதிக்கத்தின் கீழ் இருந்தது. அங்கு பாரதியாரின் வாழ்வில் பல்வேறு சாதகமான சூழ்நிலைகள் ஏற்பட்டன, இதன்மூலம் பல தலைவர்களை சந்திக்கவும், சுதந்திரப்போராட்டத்தில் ஆயுதமேந்திய இயக்கத்தின் தலைவர்களான அரவிந்தோ, லாலா லஜபதிராய் மற்றும் வி.வி. சுப்ரமணியம் ஆகியோரையும் பாண்டிச்சேரியில் தஞ்சம்



11th Std Political Science Tamil Medium Vol-2_Chapter 15_updated.indd 200 29-09-2018 12:45:17

புகுந்திருக்கும் பொழுது சந்தித்தார். மிகவும் ஆதாயத்திற்குரிய பாரதியாரின் வாழ்க்கை என்பது பாண்டிச்சேரியில் பத்து வருடம் அவர் தங்கியிருந்த காலமாகும். இவர் தமிழ் இளைஞர்களை ஒன்று திரட்டி தேசிய பாதைக்கு இட்டுச் சென்றார். பாரதியாரின் படைப்புகள் ஆங்கிலேய அரசுக்கு மிகவும் எரிச்சலூட்டின, இவரின் எழுத்துக்கள் மூலம் தாய் நாட்டுப்பற்றை தமிழ் இளைஞர்களிடம் விதைத்தார். பாரதியார் 1919–ஆம் ஆண்டு சென்னையில் ராஜாஜி வீட்டில் மகாத்மா காந்தியை சந்தித்தார். பாரதியார் ஆங்கிலேயர் ஆட்சிக்குட்பட்டிருந்த இந்தியாவிற்கு அருகில் 1918–ஆம் ஆண்டு கடலூரில் நெருங்கினார். அப்பொழுது அவர் கைது செய்யப்பட்டார். இவர் சிறையில் இருக்கும்பொழுது தன்னுடைய நேரத்தை சுதந்திரம், தேசியவாதம் மற்றும் நாட்டின் நலத்தைப் பற்றிய கவிதைகள் எழுதுவதற்கு செலவிட்டார். பாரதியார் தன்னுடைய இளமைக்காலத்தில் தமிழ் தேசியத் தலைவர்களிடம் நல்ல உறவுகளை ஏற்படுத்தினார், குறிப்பாக வ.உ. சிதம்பரம், சுப்ரமணிய சிவா, மண்டயம் திருமலச்சாரியார் மற்றும் சீனுவாச்சாரி போன்றவர்களிடம் நல்லுறவுகளை வளர்த்தார். இந்த தலைவர்களிடம் ஆங்கிலேயர் ஆட்சியினால் ஏற்படும் பிரச்சனைகளை பற்றி விவாதித்தார். பாரதியார் இந்திய தேசிய காங்கிரசின் வருடாந்திர மாநாட்டில் கலந்து கொள்ளும் வழக்கத்தைக் கொண்டிருந்தார் தேசிய பிரச்சனைகளை தீவிரமான இந்திய தேசியவாதத் தலைவர்களான பிபின். சந்திரபால், பாலகங்காதரதிலக் மற்றும் வி.வி.சுப்ரமணியம் போன்றோரிடம் விவாதித்தார். பாரதியாரின் பங்கேற்பு மற்றும் செயல்பாடுகளால் 1905–ஆண்டு பனாரஸ் மற்றும் 1907–ஆம் ஆண்டு சூரத் மாநாட்டில் இந்திய தேசிய காங்கிரசு தலைவர்களை இவரது தேசபற்று மிகவும் கவர்ந்து இழுத்ததுடன் பல தாய் நாட்டை நேசிக்கும் தேசத் தலைவர்களால் மதிக்கப்பட்டார். சில தேசத்தலைவர்களுடன் தேசம் பற்றிய சிந்தனைகளைப் பகிர்ந்து கொண்டார். அதுமட்டும் இல்லாமல் பல்வேறு முறையில் தேசிய இயக்கத்தை வலுப்படுத்துவதற்கு அவர் அறிவுரைகளை வழங்கினார். சந்தேக மில்லாமல் பாரதியாருடைய அறிவுரைகள் மூலமாகப் பல தேசிய தலைவர்கள் புத்துணர்வு பெற்று தேசியவாதத்திற்கு பங்காற்றினார். இவ்வாறு பாரதியார் இந்திய சுதந்திரத்திற்காக முக்கிய பங்காற்றினார் என்பதை நாம் அறிவோம்.

### ஓர் சமூக சீர்திருத்தவாதியாக பாரதியார்

பாரதியார் சாதிய அமைப்புக்கு எதிராக செயல்பட்டவர். இவர் உலகில் இரண்டு சாதிகள் உள்ளன. ஒன்று ஆண்சாதி மற்றொன்று பெண்சாதி என்பதைத் தாண்டி வேறு ஒன்றுமில்லை என்று பிரகடனப்படுத்தியிருக்கிறார். இவற்றிற் கெல்லாம் இவர் தனது பூநூலை அகற்றினார். மேலும் அட்டவணை சாதியினரையும் பூநூல் அணியச்செய்து வேதம் ஓதச் செய்தார். இவர் முஸ்லிம்கள் நடத்தும் கடையில் தேநீர் பருகினார். இவர் தன்னுடைய குடும்ப உறுப்பினர்களுடன் தேவாலாயத்திற்கு அனைத்து விழாக்களிலும் பங்கேற்றார். இவர் பட்டியல் இனத்தவரை கோயிலுக்கு அனுமதிப்பதை ஆதரித்தார். இவருடைய அனைத்து சீர்திருத்தங்களுக்கும் இவருடைய அக்கம் பக்கத்தினரிடையே பெரிய எதிர்ப்பு இருந்தது. பாரதியார் மிகவும் திறமையானவர். இந்தியர், தெளிவாக அனைவரும் பாரதத்தாயின் குழந்தைகள் என ஒன்றுபட்டு செயல்பட்டால் அன்றி இந்திய விடுதலை சாத்தியமாகாது என்று கூறினார். இவர் பெண்களின் உரிமைகள், பாலினச் சமத்துவம் மற்றும் பெண்களின் ஆற்றலாதல் ஆகியவற்றை மிகவும் நம்பினார். இவர் குழந்தை திருமணம், வரதட்சணை முறையைத் தீவிரமாக எதிர்த்தார். ஆனால் விதவை திருமணத்தை அவர் ஆதரித்தார்.

ஆணும் பெணும் சமமாகக் கருதப்பட்டால் மட்டுமே இவ்வுலகம் அறிவு மற்றும் புத்திக்கூர்மையில் சிறப்புறும்.

**– சுப்ரமணிய பாரதியார்**



11th Std Political Science Tamil Medium Vol-2_Chapter 15_updated.indd 201 29-09-2018 12:45:17

உங்களுக்குத் தெரியுமா?

விவேகானந்தரின் சீடரான சகோதரி நிவேதிதாவுடனான பாரதியாரின் சந்திப்பு பெண்களுக்கான உரிமைகள் பற்றி சிந்தனையைப் பாரதியாரிடம் எற்படுத்தின. இது சாதியப் பிரச்சனையிலிருந்து சுதந்திரம் வரைக்கும் மற்றும் ஆன்மீகம் வரை பாடுபட்டவர். இவர் தற்கால பெண்களுக்கு சக்தி என்கிற அடையாளத்தை ஏற்படுத்தியவர், குறிப்பாக நவீன பெண்களின் அதிகாரம், பலமான, சுதந்திரமான மற்றும் ஆண்களுக்கு சமமான பங்குதாரர் என்று பெண்களை குறிப்பிடுகிறார்.

### ஓர் தொலைநோக்குச் சிந்தனையாளராகப் பாரதியார்

பாரதி என்பவர் ஒரு கவிஞர், பத்திரிக்கை ஏழுத்தாளர், சுதந்திரப் போராட்ட வீரர் மற்றும் சமூக சீர்த்திருத்தவாதி ஆவார். இவர் தமிழக சமுதாயத்தில் மிகப் பெரியத் தாக்கத்தை எற்படுத்தியவர். இவர் சொன்னதைச் செய்துக் காட்டியவர் என்பது இவரின் உயர்வைக் காட்டுகிறது. இவருடைய தொலை நோக்கான முன்கணிப்பு போல அடுத்த இருபத்தைந்து ஆண்டுகளில் இந்தியா சுதந்திரம் பெற்றது. ஓர் மக்கத்தான இந்தியா பற்றிய இவரின் தொலை நோக்கு சிந்தனைகள் சுதந்திர இந்தியாவில் செயல்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றன. பாரதியார் தனக்காக வாழாமல் மக்களுக்காகவும் தேசத்திற்காகவும் வாழ்ந்தவர். ஆகையால்தான் மரியாதையுடன் இவரைப் பாரதியார் எனப் போற்றுகின்றனர். பல ஆண்டுகளுக்குப் பிறகும் சுப்ரமணிய பாரதியார் இந்திய சுதந்திரத்தின் சின்னமாகவும் தமிழ் தேசியவாத அதிர்வலையை ஏற்படுத்தியவராகவும் விளங்குகிறார்.

உங்களுக்குத் தெரியுமா?

பாரதியார் செப்டம்பர் பதினோராம் நாள் 1921–ஆம் ஆண்டு இயற்கை எய்தினார். ஆனால் இவரின் இறுதி சடங்கில் பதினான்கு நபர்கள் மட்டுமே பங்கேற்றனர், இதற்கு சாதியை விட்டு தள்ளி வைக்கப்படுவோம் என்பதுடன் ஆங்கிலேய அரசாங்கத்தின் அடக்கு முறையினால் ஏற்பட்ட பயமே காரணமாகும்.



## 15.4 பொதுவுடைமைவாதம்

### ம. சிங்காரவேலர் (1860–1946)

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் எழுச்சிபெற்ற சுதேசி மற்றும் தன்னாட்சி இயக்கங்களால் நாடு முழுவதும் விடுதலை உணர்வு பரவியது. சமூகரீதியிலும் இந்து மதத்திற்குள் சில சீர்த்திருத்தங்கள் கொண்டு வரப்பட்டன. அரசியல் ரீதியாக இந்தியத் தன்மை அல்லது தேசிய உணர்வு உருவாவதில் இந்த இயக்கங்கள் முக்கியப் பங்கு வகித்தன.

இருந்த போதும் இவை மதவாதத் தன்மையை கொண்டிருந்தன. அதேபோல இந்த இயக்கங்களில் பங்கேற்றவர்கள் பெரும்பாலும் படித்த மேல்தட்டு வர்க்கத்தினராக இருந்தனர். அவர்கள் கோரும் விடுதலை மட்டுமே அரசியல் விடுதலையாக இருந்தது. அடித்தட்டு மக்களான விவசாயிகள், தொழிலாளர்களின் பொருளாதார நலன்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படவில்லை. பெரும்பாலான விவசாயிகள் ஏழைகளாக இருந்தனர். மேலும், காங்கிரசு கட்சிக்குள் சாதிப்

பாகுபாடுகள் நிலவின. குறிப்பாக, தமிழகத்தில் பிராமணர், பிராமணரல்லாதவர் என்ற பாகுபாடு நிலவியது.

இந்த நிலைமையில் தமிழக அரசியல் இயக்கத்தில் பகுத்தறிவு கருத்துகள், அறிவியல் பார்வை ஆகியன உருவாவதிலும் விடுதலைப் போராட்டங்களுக்கு ஒரு வட்டாரத் தன்மை அளிப்பதிலும், விடுதலைப் போராட்டத்தில் விவசாயிகள், தொழிலாளர்கள் நலன்களை இணைப்பதிலும் இந்திய அரசியலில் சமதர்மக் கருத்துகள் பரவியதிலும் ம. சிங்காரவேலரின் அரசியல் சிந்தனைகள் முக்கியப் பங்காற்றின.

### காங்கிரசு அரசியலில் சிங்காரவேலருடைய சிந்தனைகளின் தாக்கம்

தொடக்கத்தில் இந்தியாவில் இருந்து இயற்கை வளங்களைக் கொள்ளையடித்து மூலப்பொருட்களாகத் தங்கள் நாட்டுக்கு ஏற்றுமதி செய்த ஆங்கிலேய அரசு, தங்கள் தேவைகள் அதிகரித்ததால் இந்தியாவிலேயே தொழிற்சாலைகளைத் தொடங்கியது. ஏற்கனவே இந்தியாவில் பாரம்பரியத் தொழில்களை காலனியாதிக்க அரசு முடக்கிவிட்டதால் மக்கள் வாழ்வாதாரங்களை இழந்து பசி, பட்டினி, வறுமையில் வாடினர். இதனால் மக்களின் வாழ்க்கை தரத்தினை மேலும் மோசமாக்கியது. இதனால கூலி வேலை கிடைத்தால் போதும் என்ற நிலைக்குத் தொழிலாளர்கள் தள்ளப்பட்டனர்.

இதனால் பின்னர் தொடங்கப்பட்ட தொழிற்சாலைகள் அனைத்திலும் தொழிலாளர்கள் மிகக் குறைவான கூலிக்கு வேலையில் அமர்த்தப்பட்டனர். அடிமைகளைப் போல் உழைத்தனர். போராடினால் கடுமையான அடக்குமுறையால் ஒடுக்கப்பட்டனர்.

இவ்வாறு பாதிக்கப்படும் தொழிலாளர்களுக்காகத் தொழிலாளர் அமைப்புகள் உருவாகத் தொடங்கின. அன்றைய சென்னை மாகாணத்தில் இந்த அமைப்புகளுக்கு திரு. வி. கல்யாணசுந்தரனார், தி. வரதராஜுலு போன்றோர் தலைமை தாங்கினர். இந்த தொழிலாளர் அமைப்புகள் உருவாக முன்முயற்சிகள் எடுத்து பாடுபட்டவர் ம. சிங்காரவேலர் ஆவார் என்பது மிகையில்லை.

இந்த தொழிலாளர்களை அரசியல்மயப்படுத்தி விடுதலை இயக்கத்தோடு இணைக்க வேண்டும் என்று ம. சிங்காரவேலர் விரும்பினார். ஆனால் காங்கிரசு கட்சி இதனை விரும்பவில்லை. ம. சிங்காரவேலர் இதனைக் கடுமையாக விமர்சித்து 1920ஆம் ஆண்டிலேயே காங்கிரசு தலைமைக்கு தந்தி அனுப்பினார். தொடர்ந்து அண்ணல் காந்திக்குப் பகிரங்கக் கடிதமும் எழுதினார். அத்துடன் ஹிந்து, சுதேசமித்திரன் உள்ளிட்ட முன்னணி நாளிதழ்களிலும் நவசக்தி போன்ற பருவ இதழ்களிலும் ஏராளமான கட்டுரைகள் எழுதினார். காங்கிரசு தொண்டர்கள் மத்தியிலும் பிரச்சாரம் செய்தார். இச் சமயத்தில் 1922–ஆம் ஆண்டு நடைபெற்ற அகில இந்திய காங்கிரசு குழுவின் கூட்டத்தில் தமிழகப் பிரதிநிதியாகக் கலந்துகொண்ட அவர் அங்கும் விவாதத்தை உருவாக்கி தமக்கு ஆதரவு திரட்டினார். அவரது கருத்துக்கள் வருமாறு:

- இந்திய விடுதலை என்பது விவசாயிகள், தொழிலாளர்களின் பொருளாதார சுதந்திரத்தை உள்ளடக்கியதாகும்.
- தொழிலாளர்கள், விவசாயிகள் நலன்களுக்காகவும் காங்கிரசு பேரியக்கம் போராட வேண்டும்.
- விடுதலைப் போராட்டத்தில் தொழிலாளர்கள், விவசாயிகளையும் இணைத்துக்கொள்ளவேண்டும்.
- பல்வேறு அமைப்புகளில் உள்ள மக்களை ஒன்று திரட்ட காங்கிரசு தலைவர்கள் உதவ வேண்டும்.

இதன்விளைவாக 1922–இல் இந்திய தேசிய காங்கிரசு தொழிலாளர்களை அமைப்பு ரீதியாக ஒன்று திரட்டத் தீர்மானம் நிறைவேற்றியதுடன் இதற்கென ஓர் குழுவினை அமைத்தது. ஆறுபேர்கொண்ட

அக்குழுவில் சிங்காரவேலரும் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும், தொழிலாளர் உரிமைகளைப் பாதுகாக்க சட்டம் இயற்ற வேண்டும் என்று போராடினார். அதனை வலியுறுத்தி அன்றைய முன்னணி நாளிதழ்களில் தொடர்ந்து எழுதினார். இதுபோன்ற முயற்சிகளின் பலனாக முதல் முறையாக 1926-இல் தொழிலாளர் நலன்களைப் பேணும் சட்டம் இயற்றப்பட்டது.

இதேபோல காங்கிரசு தலைவர்கள் அந்தந்த வட்டார மொழிகளில் பேசினால்தான் விடுதலைக்கருத்துகள் மக்களைச் சென்றடையும் என்பதுடன் மக்களுக்கும் காங்கிரசு பேரியக்கத்துக்கும் இடையே நெருக்கம் உருவாகும் என்றார். மக்கள் பிரச்சனைகளைப் பொதுமக்களிடம் பேசும்போது தமிழ் மொழியிலேயே பேச வேண்டும் என உறுதியாக இருந்தார். இதையொட்டி 1918-இல் சென்னை மாகாண சங்கத்தின் மாநாட்டில் இது குறித்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இந்த மாநாட்டில் சிங்காரவேலர் மற்றும் ஈ.வெ.ரா பெரியார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### சுயமரியாதை, பொதுவுடைமைவாதம் இயக்கங்களின் மீதான ம. சிங்காரவேலரின் தாக்கம்

பிராமணர், பிராமணரல்லாதோர் பாகுபாடு காங்கிரசு கட்சியில் நிலவுவதைக் கண்டித்து பெரியார் விலகியபோது ம.சிங்காரவேலர் அவரை ஆதரித்தார். சோவியத் ஒன்றியம் சென்று வந்த ஈ. வெ.ரா பெரியார் அதன் தாக்கத்தில் பொதுவுடைமைவாத க் கருத்துகளை ஏற்றுக்கொண்டு சுயமரியாதை இயக்கத்தினை சுயமரியாதை சமூக நீதிக் கட்சி என்று பெயர் மாற்றினார். அதற்கான கொள்கைத் திட்டங்களை வகுத்தளிப்பதில் ம. சிங்காரவேலர் உறுதுணையாக நின்றார். இந்த அமைப்பு தமிழ்நாடு முழுவதும் பரவ ம. சிங்காரவேலர் அயராது பாடுபட்டார்.

பெரியார் நடத்திய 'குடியரசு' உள்ளிட்ட இதழ்களில் மூட நம்பிக்கைகளுக்கு எதிராக ஏராளமான கட்டுரைகளையும் எழுதினார். அவரது கட்டுரைகள் எளிமையான நடையில் புரிந்துகொள்ளும் வகையில் இருந்தன.

ம. சிங்காரவேலர் பொதுவுடைமைவாதத் தத்துவத்தில் ஆழமான நம்பிக்கை கொண்டவர். காங்கிரசு பேரியக்கம் தொழிலாளர் அமைப்புகளை ஆதரிக்க வேண்டும் என்று 1920-இல் தலைமைக்குத் தந்தி அனுப்பினார். அது சென்னை சமதர்மவாதிகள் சார்பில் அனுப்பப்படுவதாக அதில் தெரிவித்திருந்தார். அகில இந்திய காங்கிரசு குழுவின் கூட்டங்களிலும், மாநாடுகளிலும் பொதுவுடைமைவாதப் பிரதிநிதியாகவே வாதிட்டார்.

தொழிலாளர்கள் பலமாகத் திகழ்ந்த சென்னை நகரில் இந்தியாவின் முதல் உழைப்பாளர் தினத்தை 1923 மே முதல் நாளன்று நடத்திக்காட்டினார். அதே நாளில் தொழிலாளர் விவசாயிகள் கட்சி அமைக்கப்படுவதாகவும் அறிவித்தார்.

அக்கட்சியின் குறிப்பிடத்தக்க கோரிக்கைகள் பின்வருமாறு:

### தொழிலாளர்களுக்கான கோரிக்கைகள்

- எட்டுமணிநேர வேலை
- சங்கம் அமைக்கும் உரிமை
- தங்கள் கோரிக்கைகளை வென்றெடுக்க கடைசி ஆயுதமாக வேலைநிறுத்தம் செய்யும் உரிமை
- கோரிக்கைகளை பரிசீலிக்க முத்தரப்பு பேச்சுவார்த்தைக் குழு
- குறைந்தபட்ச ஊதியம்
- அடிப்படை வசதிகளுடன் கூடிய சுகாதாரமான குடியிருப்பு வசதி
- மருத்துவம் மற்றும் ஆயுள் காப்பீடு



11th Std Political Science Tamil Medium Vol-2_Chapter 15_updated.indd 204 29-09-2018 12:45:17

- வருங்கால வைப்பு நிதி
- சம்பளத்துடன் கூடிய ஈட்டிய விடுப்பு
- இலவச மருத்துவ உதவி
- பேறுகால விடுப்பு
- ஒப்பந்த முறை ஒழிப்பு

**விவசாயிகளுக்கு**

- இலவச நீர்ப்பாசானம்
- சமீன்தார் முறை ஒழிப்பு

**பொது மக்களுக்கு**

- அனைவருக்கும் வாக்குரிமை
- அடித்தட்டு மக்கள், தொழிலாளர்கள், விவசாயிகள் போன்றோர் தேர்தலில் போட்டியிட அனுமதி

1925ல் கான்பூர் நகரில் இந்தியாவின் முதல் பொதுவுடைமைவாதம் மாநாடு நடந்தபோது அதற்குத் தலைமை ஏற்று நடத்தித் தந்தார். அப்போது "வன்முறையற்ற மார்க்சியப் பாதை"யை வலியுறுத்திப்பேசினார். மேலும், "இந்தியாவுக்கேற்ற மார்க்சியப் பாதையைத் திட்டமிட வேண்டும்" என்றும் கேட்டுக்கொண்டார். "காங்கிரசு கட்சியில் இருந்துகொண்டே பொதுவுடைமைவாதிகள் தனிப்பிரிவாக இயங்க வேண்டும்" என்றார். இதையொட்டி காங்கிரசு கட்சிக்குள் சமதர்ம பிரிவு உருவானது.

**ம. சிங்காரவேலரின் வாழ்வும் சமூக பணியும்**

ம. சிங்காரவேலர் இளம் வயதிலேயே இந்து மதத்தில் நிலவும் வர்ண அமைப்பிலும் மூட நம்பிக்கைகளிலும் அதிருப்தி அடைந்திருந்தார். இதன் விளைவாக 1890களிலேயே பல இடங்களில் பௌத்த சங்கம் அமைத்து வர்ண அமைப்புக்கும் மூட நம்பிக்கைகளுக்கும் எதிராகப் பரப்புரை செய்தார்.

வசதி மிக்க குடும்பத்தில் பிறந்து சட்டம் பயின்ற சிங்கார வேலர் சென்னை மாநகராட்சி மன்றத்தில் உறுப்பினராகவும் அதன் சுகாதாரக் குழுவிலும் பணியாற்றினார். அப்போது குடிசைப் பகுதிகளில் கொள்ளை நோய் தாக்கம் அதிகமாக இருந்ததால் சுகாதாரம், கல்வி ஆகிய பிரச்சனைகளுக்கு முன்னுரிமை அளித்தார்.


தொடர்ந்து குடிசைப் பகுதிகளில் வாழ்ந்த தொழிலாளர்களின் உரிமைகளுக்காகப் போராடினார். இதன் அடிப்படையிலேயே காங்கிரசு இயக்கத்தில் செயலாற்றினார். பின்னர் பெரியாரின் சுயமரியாதை இயக்கத்தில் சேர்ந்தார்.

தனது ஐம்பது வயதைக் கடந்தபின்பே அரசியலில் இறங்கினாலும் சுமார் முப்பது ஆண்டுகளுக்கும் அதிகமாக முதுமையையும் பொருட்படுத்தாமல் பகுத்தறிவு மற்றும் பொதுவுடைமைவாதக் கருத்துகளையும் விடாது பிரசாரம் செய்தார்.

ம. சிங்காரவேலர் தென்னிந்தியாவின் முதல் பொதுவுடைமைவாதி என்று நேசத்துடன் நினைவு கூறப்படுகிறார்.

## 15.5 திராவிடக்கொள்கைவாதம்

**பெரியார் (1879–1973)**



**அறிமுகம்**

தமிழக அரசியல் சிந்தனையாளர்களில் இ.வெ.ரா. பெரியார் மிகச்சிறந்த சிந்தனையாளராக கருதப்படுகிறார். ஏனெனில் இவர் தமிழகத்தின் தலைசிறந்த சீர்திருத்தவாதி ஆவார். இவரைப்பற்றி விரிவாக இப்பாடத்தில் காணலாம்.

பன்னெடுங்காலமாக தமிழகத்தைப் பீடித்திருந்த மூடப்பழக்க வழக்கங்கள், பெண்ணடிமை, சமூகப் பின்னடைவுகளுக்கு அறிவையும், சுய மரியாதையையும் அடிப்படையாகக் கொண்டு தனது நெடிய



11th Std Political Science Tamil Medium Vol-2_Chapter 15_updated.indd 205 29-09-2018 12:45:17

வாழ்நாள் முழுவதும் போராடியவர். இதற்காகத் தந்தை பெரியார் என்று தமிழக மக்களால் அழைக்கப்படுபவர். பண்பாட்டு ரீதியாக அவர் வகுத்துத் தந்த திராவிடக் கருத்துக்கள் இன்று இந்தியா முழுவதும் ஒளி வீசுகிறது என்று புகழ்பெற்ற சமூக நீதி அறிஞர்கள் கூறுகிறார்கள்.

உங்களுக்குத் தெரியுமா?

ஈ.வெ.ராமசாமி என்ற இயற் பெயரைக் கொண்ட தந்தை பெரியார் ஈரோட்டில் செல்வச் செழிப்புள்ள வணிகக் குடும்பத்தில் 1879–இல் பிறந்தார். இளமைப் பருவத்திலேயே தனது குடும்பத்திலும், சுற்றியுள்ள சமுதாயத்திலும் நிலவிய மூட நம்பிக்கையை எள்ளி நகையாடிய பெரியார், தொடக்கத்தில் தீவிர அரசியலில் ஈடுபடவில்லை. ஆனாலும், ஈரோடு நகர்மன்றத்தலைவர் போன்ற பொறுப்புகளை வகித்தார்.

காந்தியின் அரசியல் வருகையால் ஈர்க்கப்பட்ட பெரியார் காங்கிரசு இயக்கத்தில் இணைந்து சுதந்திரப் போராட்ட இயக்கத்திலும், சமூக சீர்திருத்தத்திற்காகவும் தீவிரமாகப் பங்காற்றினார். (காங்கிரசு இயக்கத்தில் மேட்டுக்குடியினரின் செல்வாக்கு கோலோச்சிய 1920–களில் அடித்தட்டு மக்களிடம் காங்கிரசு பேரியக்கத்தைக் கொண்டு சென்றதிலும், ஆலய நுழைவு போராட்டங்கள் வெற்றி பெற்றதிலும் பெரியார் பெரும் பங்காற்றினார். ஆனால், காங்கிரசு கட்சியில் வர்ணாசிரம கொள்கை கடைப்பிடிக்கப்பட்டதால் அதிலிருந்து விலகி நீதிக்கட்சியில் இணைந்து சுய மரியாதை இயக்கத்தைத் தோற்றுவித்தார். இதற்குப் பின்னர் தந்தை பெரியாரின் பங்களிப்புகள் மற்றும் செயல்பாடுகள் இந்திய மற்றும் தமிழக அரசியலில் பிரிக்க முடியாத வரலாறாயின.

தேசத்தின் பெயரால் ஓர் குழு மக்களைச் சுரண்ட நினைத்தால் அத்தேசம் போராடிப்பெற்ற உண்மையான சுதந்திரம் அதுவல்ல என்றார் ஈ.வெ.ரா.பெரியார் பல்வேறு நிலைகளில் தேசம், இனம் மற்றும் தேசியவாதம் ஆகியவற்றை பெரியர் கடுமையாக விமர்சித்தார். தேசம், தேசியவாதம், மற்றும் தேசிவாதம் ஆகியவை ஒரே மாதிரியான கருத்தாக்கங்களே என அவர் கருதினார். இவ்வேறுபாடுகளே அந்நாட்டிலுள்ள ஒட்டுமொத்த குடிமக்களின் சுயமரியாதையைக் குறிப்பதாக அவர் கூறுகிறார். அவர் மேலும் கூறுகையில் தமிழகத்தில் தேசியவாதத்தைப் பற்றி யாரேனும் பேசுகையில் அவர்கள் மக்கள் நலனில் அக்கறை கொண்டிருக்கிறார்களா? என தாம் வியப்பதாகப் பெரியார் வினவுகிறார்.

### தேசியவாதம் என்பது சுரண்டலாகும்

இந்தியர்கள் மற்றும் தமிழர்களை மட்டுமல்லாமல் மக்களின் சுயமரியாதையைப் பற்றியும் கவலைப்படாத மனிதர்களும் உள்ளனர். அவர்கள் தங்களின் சுயநலன் மற்றும் மேம்பாட்டிற்காக மக்களை தேசம் மற்றும் தேசியவாதத்தினை நம்பவைத்து ஏமாற்றுவர், தேசம் மற்றும் தேசியவாதத்திற்காக சுயமரியாதை மறைக்கப்படுமானால் அது தேசத்திற்கு எதிரான குற்றமாகும் என்றார் பெரியார்.

தேசியவாதம் என்பது ஓர் கற்பனையான உணர்வாகும். ஆகவே தேசிய உணர்வு என்பது வசதிமிக்க மற்றும் அதிகாரத்தில் உள்ளவர்களால் மக்களை ஏமாற்றி அவர்களின் எதிர்மறை உணர்வுகளைக் கட்டுப்படுத்தும் சதியாகும். அது ஓர் தவறான அனுமானமாகும். இதனை வசதிபடைத்த உயர் குடியினர் ஏழை சமுதாயத்தின் உரிமைகளைத் தடுப்பதற்காகப் பயன்படுத்துகின்றனர்.

தேசியவாதம் என்பது மக்களுக்கு ஓர் மயக்கத்தையும் உணர்வுப்பூர்வமான வெறியையும் குறிக்கும் சொல்லாகி விட்டது எனக் கூறுகிறார்.

### உலகளாவிய தேசியவாதத்திற்கு மறுப்பு

பெரியார் தனது இலங்கைப் பேருரையில்,

உங்களுக்குத் தெரியுமா?

### பெரியார் ஓர் கடவுள் மறுப்புக் கொள்கையுடைய முற்போக்கான சமூக சீர்திருத்தவாதி

#### பெரியாரின் படைப்புகள் மற்றும் மரபு

சராசரித் தமிழனுக்குப் பெரியார் ஓர் கொள்கையாக உள்ளார். சமூக சமத்துவம், சுயமரியாதை மற்றும் மொழியின் பெருமையை முன்னிறுத்தும் அரசியலை வழி நடத்தினார். ஓர் சமூக சீர்திருத்தவாதியாக அவர் சமூகம், பண்பாடு மற்றும் பாலின சமத்துவமின்மை போன்றவற்றில் கவனம் செலுத்தினார். அவர் மக்கள் தங்கள் வாழ்க்கைத் துணையை தேர்ந்தெடுக்கும் போது பகுத்தறிவின் அடிப்படையில் செயல்பட வலியுறுத்தினார். பெண்கள் அனைவரும் சுதந்திரமாக இருப்பதுடன் பிள்ளை பெற்றுக் கொடுப்பதற்காக எனும் நிலையை மாற்றி அவர்களுக்கு வேலை சுயமரியாதை இயக்கம், சடங்குகளற்ற திருமணங்களை ஊக்குவித்ததுடன் பெண்களுக்கு சொத்துரிமை மற்றும் விவாகரத்து செய்யும் உரிமைகளும் வழங்க வேண்டும் எனப் போராடினார். அவர் மக்கள் தங்களின் பெயருக்கு பின் உள்ள சாதிப் பெயரை கைவிடுமாறும் அதனைக் குறிப்பிட வேண்டாம் எனவும் வேண்டுகோள் விடுத்தார். 1930–களில் பட்டியல் இனத்தவரால் சமைக்கப்பட்ட உணவை பொதுக்கூட்டங்களின் பின்னர் சமபந்தியாக நடத்திக் காட்டினார்.

காலப்போக்கில் சாதி, மத அரசியல் வேறுபாடுகளைக் கடந்த பெருமதிப்புடன் 'பெரியார்' நவீன தமிழகத்தின் தந்தையென அழைக்கப்படுகிறார்.

நன்றி அருண் ஜனார்த்தனன், தி.நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ் 13.3.2018

தேசம், தேசியவாதம் என்பதைக் கடுமையாக எதிர்த்துள்ளார். 'இந்திய தேசியவாதம்' என்ற கருத்தை சிலர் தங்கள் ஆயுதமாகக் கையிலெடுத்த காலத்தில் தேசியவாதத்தைப் பற்றி பெரியார் எதிர்த்துப் பேசியுள்ளார். இந்திய தேசியவாதத்தை மட்டுமின்றி, உலகில் உள்ள மற்ற நாடுகளின் தேசியங்களையும் சான்றாகக் காட்டி, தேசியவாதத்தை மறுக்கிறார் பெரியார்.

"தேசியவாதம் என்பது முதலாளித்துவவாதிகள் தங்கள் தங்கள் மூலதனத்தை பெருக்கிக் கொள்ள ஏழை மக்களை பலி கடாவாக்குவதற்காகக் கற்பித்துக் கொண்ட தந்திர வார்த்தையாகும்.

உதாரணமாக, "இங்கிலாந்து நாட்டின் பணக்கார சமூகத்திற்கு அமெரிக்கா நாட்டின் பணக்கார சமூகத்துடன் மோதல் வந்தால் இங்கிலாந்து தேசத்து முதலாளிகள், அந்நாட்டின் ஏழைமக்களைப் பார்த்து "ஓ இங்கிலாந்து மக்களே! தேசபக்தர்களே! தேசத்துக்கு நெருக்கடி வந்து விட்டது, என்று கூறி ஏழை சமுதாயத்தை தூண்டுகின்றனர். இவ்வகைப் பொய்யுரைகள் மூலம் மக்களைச் சுரண்டி பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்கிறார்கள் என்று கூறுகிறார்.

பல்வேறு தேசிய இனங்களையும் – தேசங்களையும் உள்ளடக்கிய நாடு ரஷ்யா. அந்த ஒன்றுபட்ட ரஷ்யாவில் எந்த வகையான ஏற்றத் தாழ்வுகளும் இல்லை என்றுகூறி, அந்தவகையான புரட்சிக்கு ஆதரவாக நின்றவர் பெரியார்.

"கடவுள், மதம், மற்றும் தேசியவாதம் ஆகியவை அடியோடு அழிக்கப்பட்ட நாடுகளில் பணக்காரக் கொடுமையும், சோம்பேறி வாழ்க்கையும், பட்டினி கஷ்டமும், உயர்வு தாழ்வு நிலையும் காணப்படவில்லை. அதுபோன்ற நாடுகளில் கடவுள், மதம் மற்றும் தேசப்பற்று ஆகியவை இல்லை. ஆனால் மனித சமூக சமத்துவ சமுதாயமே அந்நாடுகளில் முக்கியமாக்க கருதப்பட்டது. அங்கு பணக்காரன் – ஏழை, முதலாளி – தொழிலாளி, அதிகாரி – குடிமக்கள் என்கின்ற பாகுபாடு காணப்படவில்லை. மேன்மக்களுக்கு சமத்துவ விரும்பிகளும் கடவுள் மற்றும் தேசியவிவாதத்திற்கு முன்னுரிமை தரும்



11th Std Political Science Tamil Medium Vol-2_Chapter 15_updated.indd 207 29-09-2018 12:45:18

தேசத்திற்கு சமமானவர்கள் அல்ல.

உலகில் உள்ள அனைத்து தேசங்களையும், தேசியங்களையும் கடுமையாக எதிர்த்தது போல 'இந்திய தேசம்' என்பது, பல்வேறு தேசிய இனங்களை – பல்வேறு தேசங்களை இணைத்து உருவாக்கப்பட்ட ஒன்று – அந்த இணைப்பு ஒரு சிலரின் ஆதிக்கத்திற்குக் கருவியாக இருப்பதால் அதையும் பெரியார் எதிர்க்கிறார்.

### இந்தியாவில் வேறுபாடுகளின் தேசம்

'தேசம்' என்ற கருத்தியல் இந்தியாவுக்குப் பொருந்துமா? என்ற கேள்விக்கு அவரே சிறப்பான பதில் அளித்துள்ளார்.

"மதராஸ்' என்பது ஒரு தனித் தேசம் அல்லவென்றும் அது தனித்து செயல்பட முடியாது என்றும் தோழர்கள் சிலர் சொல்கிறார்கள். மதராஸ் ஒரு தனி தேசமாக இருந்தது. இன்றும் இருக்கிறது. அதுதான் 'திராவிடம்'. அதனுடைய நாகரிகம், பண்பாடு பழக்கவழக்கங்கள் ஆகியவை வங்காளம், பம்பாயிடம் இருந்து வேறுபட்டது. ஆங்கிலேயர் ஆட்சியால் ஆங்கில மொழி அறிமுகம் ஆகி இருக்கிறது. ஆங்கிலமும் ஆங்கிலேயர் ஆட்சியும் ஒழிந்து ஹிந்தி மொழி வந்தால் அன்றே மதராசானது ஜெர்மனி, இத்தாலி, பிரான்சு முதலிய ஏதோ ஒரு நாட்டுடன் சேர்ந்துவிடும்.

"இந்தியா ஒரு 'தேசம்' என்று சொல்வதைவிட, 'திராவிடநாடு' ஒரு 'தேசம்', ஆந்திரநாடு ஒரு 'தேசம்' வங்காளநாடு ஒரு 'தேசம்' என்று சொன்னாலும் பொருந்தும். உதாரணமாக திராவிட நாட்டை எடுத்துக்கொண்டால் திராவிடநாடு என்று தனிப்பட்ட பண்பாடு கலை, மொழி, நாகரிகம், மற்றும் ஆட்சியின் கீழ் ஆயிரக்கணக்கான வருடங்கள் இருந்து வந்ததென்று சரித்திரம் கூறுவதை யாராலும் மறைக்க முடியாது.

மாறுபட்ட ஆட்சிகளின் கீழ் இருந்துவரும் ஒரு நாட்டை ஒரு 'தேசம்' என்று சொல்லி எல்லா மக்களையும் ஒன்றுபடுத்தி அன்னியனிடமிருந்து விடுதலையடைந்த பின்னர் ஒரு கூட்டத்தார் மற்றொரு கூட்டத்தாரை ஆளலாம் என்றால், இதை யார் ஒப்புகொள்வார்கள் என்று கேட்கிறார். பெரியார் முன்மொழிந்த 'திராவிட தேசியவாதம்' முற்றிலும் பெருவாரியாக மத ஆதிக்கங்களுக்கு எதிராக இருந்தது.

### மொழிக் கொள்கை

"அவரவர் மொழியைக் காப்பாற்றிக்கொள்வதற்கு அவரவருக்கு உரிமை உண்டு. இந்த உரிமை திராவிட சமதர்மக் குடியாட்சியில் பாதுகாக்கப்படும். எந்த ஒரு மொழியும், மற்றொரு மொழி பேசுபவர் மீது வலுக்கட்டாயமாகத் திணிக்கப்படக்கூடாது. பிரிவினை வாதத்திற்கான ஆயுதமாக மொழி பயன்படுத்தப்படக்கூடாது. மக்களின் அனைத்து தேவைகளுக்கும் மத்திய அரசாங்கத்தைச் சார்ந்திருப்பது எதனையும் வெளிப்படுத்தாது. ஒருவேளை மொழியானது தேசியமயமாக்கப்பட்டால் மக்களுக்கு அதனால் பட்டினியில் இருந்து விடுதலை கிடைக்குமா? தெளிவாகக் கூறுவதெனில் தமிழ் உழைப்பாளர்கள் தமிழ் பேசும் முதலாளிகளாலேயே சுரண்டப்படுகின்றனர்.

### சாதியற்ற சமுதாயம்

பெரியார் 'தமிழ்நாடு தமிழருக்கே, திராவிடநாடு திராவிடருக்கே' என்று தொடர்சியான பரப்புரைகள், போராட்டங்களை நடத்தினார். பொதுச்செயல்திட்டம், பொதுவேலைத்திட்டம், இஸ்லாமுக்கு மதமாற்றம், திராவிடநாட்டுப் பிரிவினை போன்றவற்றில் பல்வேறு வடிவங்களில் ஆதிக்க சக்திகளை எதிர்த்துப் போராடினார்.

ஆனால், ஆதிக்க சக்திகள் மிக எளிதாக, தமிழன், தமிழ்த்தேசியவாதம், தேசிய இனம் போன்ற உணர்வுகளை ஏற்றி, சில தமிழ் தேசியத் தலைவர்கள் மூலமாக மீண்டும் தங்களது ஆதிக்கத்தைத் தொடரும் முயற்சிகளில் தீவிரமாக ஈடுபட்டபோது, ஒருகால கட்டத்தில் பெரியார், இந்தத்

திராவிடநாடே கூட வேண்டாம். சாதி ஒழிப்பே முக்கியம் என்ற முடிவுக்கு வந்தார் என்பதை அவரின் சிந்தனைத் தொகுப்புகள் வழியாக அறியலாம்.

"திராவிடநாடு பெறாவிட்டாலும் சரி; சில ஆதிக்க சக்திகளை ஒழிக்க முடியாவிட்டாலும் சரி; முதலாளித்துவத்தை அழிக்க முடியாது போனாலும் சரி; சாதியை ஒழிக்கின்ற ஒரே காரியத்தை வெற்றிகரமாகச் செய்து முடித்தால் போதும் என்கிறார். இது ஒன்றே திராவிடர் கழகத்தின் லட்சிய வெற்றி என்று பெருமைப்பட்டுக் கொள்ளலாம். அந்த அளவுக்கு இந்த சாதி வெறியானது, திராவிட இனத்தைச் சின்னாபின்னப்படுத்தி ஆரியத்துக்கு அடிமையாக்கி வைத்திருக்கிறது."என்று 1950களின் தொடக்கத்தில் அவர் தனது அரசியல் கருத்துக்களை வெளியிட்டுள்ளார்.

## அருஞ்சொற்பொருள்

**அரசியல் கருத்தியல்:** இது ஒரு கருத்தின் கொள்கை, கோட்பாடுகள், போதனைத் தொகுப்புகள், ஆகியவற்றை உள்ளடக்கிய ஒன்றாகும்.

**அரசியல் இயக்கம் :** இது ஒரு சமூக கூட்டம் இது அரசியல் இலக்குகளை ஒன்றிணைத்து செயல்படுத்துவதற்காக ஏற்படுத்தப் பட்டதாகும்.

**சமூக இயக்கம் :** இது ஒரு வகையான சமூக கூட்டத்தின் செயல்பாடு ஆகும். ஒரு சமூகத்தில் உள்ள மக்கள் அனைவருமோ அல்லது ஒரு பிரிவினரோ ஒரு குறிப்பிட்ட இலக்கை அடைவதற்காக ஒன்றிணைந்து செயல்படுவது.

**திரவிட இயக்கம் :** திராவிட இயக்கம் சென்னை மாகாணத்தில் ஏற்படுத்தப்பட்டது. இது தென் இந்தியாவின் நான்கு முக்கிய இனம், மொழி உள்ளடக்கிய ஒரு பிரிவு ஆகும்.

**சுயமரியாதை இயக்கம் :** சமுதாயத்தில் பிற்படுத்தப்பட்ட அனைத்து சாதியினரும் தங்களுக்கென்று சயமரியாதையுடனும் உரிமைகளுடனும் வாழ்வதற்கு ஏற்படுத்தப்பட்ட இயக்கம்.

**தொழிளாலர் இயக்கம்:** பணியாளர்/ தொழிளாலர்களின் நல்வாழ்வுக்காக ஏற்படுத்தப்பட்ட ஒரு அமைப்பு ஆகும்.

**நீதிக்கட்சி:** இது ஆங்கிலேயர் ஆட்சி காலத்தில் சென்னை மாகாணத்தில் தோன்றிய அரசியல் கட்சியாகும். இது பிராமணரல்லோதோரை பிரதிநிதிப்படுத்துவதற்காக தோன்றியது.

**தனி தமிழ் இயக்கம்:** இந்த இயக்கம், ஒரு இயக்கமாக செயல்பட்டு தமிழ் மொழியை அன்னியநாட்டு மொழியின் தாக்கத்திலிருந்து தமிழ் மொழியை சுதந்திரமாக இருக்க செய்ய தோன்றியதாகும், குறிப்பாக சமஸ்கிருதத்தின் வார்த்தையின் தாக்கத்திலிருந்து விடுதலை பெறுவதற்காக தோன்றியதாகும்.

**சமூக சுதந்திரம்:** எந்த விதமான தலைகளுமின்றி ஒரு சமூகம் சுதந்திரமாக இயங்குதல்

**தன்னாட்சி இயக்கம்:** 1916 மற்றும் 1918ம் ஆண்டுகளுக்கு இடையேயான இந்திய சுதந்திர இயக்கம் ஆகும். இது அன்னிபெசன்ட் அம்மையரால் துவங்கப்பட்டது.

**பாகுபாடு:** சாதி, மத இன அடிப்படையில் ஒருவரை அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவர்களை சம்மாக நடத்தாமை மற்றும் அவர்களுக்கான வாய்ப்புகளை மறுத்தல்

**வன்முறை:** உடல் வலிமையை பயன்படுத்தி அதன் மூலம் சொத்துக்களுக்கோ உயிர்களுக்கோ சேதம் விளைவித்தல்

**தேசிய இயக்கம்:** இந்த இயக்கம் ஒரு சமூக மற்றும் அரசியல் இயக்கமாகும். இது தேசிய அடையாளத்துடனும் மற்றும் சுதந்திரமாக இருப்பதற்காக மக்கள் ஒரு கூட்டமாக/ இயக்கமாக தேசத்தில் இதன் உறுப்பினர்களை கொண்டு செயல்படுவதாகும்.

**இலட்சிய அரசு:** ஒரு நல்ல அரசுக்கு என்னென்ன குணங்கள் இருக்கவேண்டுமோ, அவை இருக்குமாறு ஓர் அரசை ஏற்படுத்தினால் அது லட்சிய அரசு

**நலஅரசு:** குடிமக்களின் நலங்கள் அரசில் பாதுகாக்கப்படுவதே நல அரசு ஆகும்.



11th Std Political Science Tamil Medium Vol-2_Chapter 15_updated.indd 209 29-09-2018 12:45:18

## மதிப்பிடுதல்

குறிப்பாக வளம் மற்றும் நலங்கள் ஒரு நல அரசில் பாதுகாக்கப்படும்.

PPREMZ

**I சரியான விடையை தேர்ந்தெடுக்கவும்:**

1. அறத்துப்பாடலில் வள்ளுவர் கூறுவது என்னவெனில்:

அ) கருத்துக்கள் மற்றும் அறநெறிகள் ஆ) பாடல்கள்
இ) அரசியல் தத்துவஞானி ஈ) மக்கள் நல அரசு

2. பொருட்பாலில் எத்தனை பகுதிகள் காணப்படுகின்றன ?

அ) 5 ஆ) 4 இ) 7 ஈ) 6

3. பாரதியார் பதிப்பாசிரியாக இருந்த நாளிதழ்

அ) இந்தியா ஆ) இளம் இந்தியா
இ) கேசரி ஈ) திராவிடன்

4. "பாஞ்சாலி சபதம்" என்ற நூலை எழுதியவர் யார் ?

அ) பாரதியார் ஆ) திரு.வி.க
இ) கம்பர் ஈ) பாரதிதாசன்

5. தமிழ்நாடு அரசியல் சிந்தனையாளர்களில் மிகச்சிறந்தவர் யார் ?

அ) பாரதியார் ஆ) பெரியார்
இ) திருவள்ளுவர் ஈ) மேற்கூறிய அனைவரும்

6. ஈ.வெ.ராமசாமி பிறந்த வருடம்

அ) 1879 ஆ) 1877 இ) 1878 ஈ) 1876

7. "சாதிய உணர்வுகளால், திராவிட இனம் மற்றும் திராவிடர்கள் என்ற ஆரியர்களிடம் அடிமையானார்கள்" என்று கூறியவர்

அ) சி. என். அண்ணாதுரை ஆ) ஈ.வெ.ரா.பெரியார்
இ) சிங்கார வேலர் ஈ) மறைமலைஅடிகள்

8. 1923ம் ஆண்டு முதல் இந்திய 'மே தினம்' கூட்டத்தை சென்னையில் நடத்தியவர்.

அ) பாரதியார் ஆ) ஈ.வெ.ரா. பெரியார்
இ) ம. சிங்காரவேலர் ஈ) மறைமலை அடிகள்

9. பெரியார் இறந்த வருடம்

அ) 1971 ஆ)1972 இ)1973 ஈ)1974

10. பாரதியார் பிறந்த இடம்

அ) எட்டயபுரம் ஆ) திருச்சி

இ) திருநெல்வேலி ஈ) சென்னை

11. சுய மரியாதை இயக்கத்தை தமிழ்நாட்டில் துவங்கியவர் யார் ?

அ) அண்ணாதுரை ஆ) ஈ.வெ.ரா. பெரியார்
இ) மறைமலை அடிகள் ஈ) ம. சிங்காரவேலர்

12. "தமிழ்நாடு என்பது தமிழர்களுக்கு மற்றும் திராவிட தேசம் என்பது தீராவிடர்களுக்கு " என்ற கூறியவர் யார்?

அ) இளங்கோவடிகள் ஆ) ஈ.வெ.ரா.பெரியார்
இ) ம. சிங்காரவேலர் ஈ) மறைலையடிகள்

13. எந்த வருடம் ஆங்கிலேய இந்தியாவில் தொழிலாளர் பாதுகாப்பு சட்டம் இயற்றப்பட்டது ?

அ) 1914 ஆ) 1924 இ) 1926 ஈ)1928

14. எதற்காக பெரியார் இந்திய தேசிய கங்கிரசில் இருந்து விலகினார் ?

அ) அகிம்சை ஆ) வர்ணாசிரம தர்மம்
இ) தனி விருப்ப வித்தியாசத்தினால் ஈ) இவைகள் ஏதும் இல்லை

15 **கூற்று:** பாரதியார் பாண்டிச்சேரிக்கு சென்று மறைந்து வாழ்ந்தார்.
**காரணம்:** பாரதியார் "இந்தியா" என்ற தின நாளிதழின் மூலம் தேசியவாதத்தை விதைத்தார்.

அமைப்பு விளக்கம் (அ) என்றும் காரணம் (ஆ) எனவும் பின் வருவனவற்றுள் எது சரியானவை?

அ) (அ) மற்றும் (ஆ) இரண்டு சரியானது
ஆ) (அ) மற்றும் (ஆ) இரண்டு சரியானது, ஆனால் (ஆ) சரியான விளக்கம் இல்லை.
இ) (அ) என்பது சரி ஆனால் (ஆ) சரியானது அல்ல.
ஈ) (அ) சரியில்லை ஆனால் (ஆ) சரியானது

## II கீழ்வருபவனவற்றை பொருத்தம் காண்க.

17. சோழர் - மதுரை
18. சேரர் - கொங்குநாடு
19. பாண்டியர் - காஞ்சிபுரம்
20. பல்லவர் - உறையூர்

## III கீழ்வரும் கேள்விகளுக்கு சிறிய பதில் அளிக்கவும்.

21. திருக்குறளின் முக்கியத்துவம் என்ன ?
22. பொருட்பாலில் எத்தனை பகுதிகள் உள்ளன ?
23. குயில்பாட்டின் எழுத்தாசிரியர் யார் ?
24. பெண்கள் அதிகாரம் பற்றிய பாரதியாரின் கருத்தை விளக்குக.



11th Std Political Science Tamil Medium Vol-2_Chapter 15_updated.indd 211 29-09-2018 12:45:18

25. பாரதியார் ஒரு எழுத்தாசிரியர் என்பதை விவாதிக்க.

26. கடவுள் பற்றிய பெரியாரின் கருத்தை விவாதிக்க.

27. தொழிலாளர் இயக்கத்தில் ம. சிங்காரவேலரின் பங்கு பற்றி சிறு குறிப்பு வரைக.

28. அரசியல் பற்றிய ம. சிங்காரவேலரின் கருத்து என்ன ?

29. தமிழ் சமுதாயத்திற்கான சிங்காரவேலரின் வாழ்க்கை மற்றும் பணிகளை விவரி.

## IV கீழ்வரும் கேள்விகளுக்கு சுருக்கமாக விடையளிக்கவும்.

30. திருவள்ளுவரின் நல அரசு மற்றும் அரசன் பற்றிய கருத்து என்ன ?

31. கொடுங்கோல் ஆட்சி பற்றிய வள்ளுவரின் கருத்தை விளக்குக.

32. ஆங்கிலேய ஆட்சி பற்றிய பாரதியாரின் கருத்தை விவரி.

33. தேசியவாதம் பற்றிய பாரதியாரின் கருத்தை விளக்கு.

34. காங்கிரசு கட்சி பற்றி சிங்கார வேலரின் கருத்தை ஆராய்க.

35. 1922-ஆம் ஆண்டு சிங்காரவேலரால் சமர்பிக்கப்பட்ட கோரிக்கைகளை பட்டியலிடுக.

36. திராவிட நாடு பற்றிய பெரியாரின் கருத்தை விளக்குக.

## V கீழ்வரும் கேள்விகளுக்கு விரிவாக விடையளிக்கவும்.

37. பெரியார் ஒரு சமூக சீர்திருத்தவாதி ஒரு சிறுகுறிப்பு வரைக.

38. சமுதாயம் பற்றிய திருவள்ளுவரின் கருத்தை ஒரு சிறு குறிப்பு வரைக.

39. தமிழ்நாட்டின் தொழிலாளர் தலைவர் சிங்காரவேலர் என்பதை விவாதிக்க.

40. தமிழ்நாட்டில் பாரதியாரின் சமூக-அரசியல் பங்களிப்பை பற்றி விரிவாக எழுதுக.

41. பெரியாரின் வாழ்க்கை வரலாறு மற்றும் பங்களிப்பை விவரி.

42. தமிழ்நாட்டின் அரசியல் சிந்தனையில் பின்புலத்தை எடுத்துரைக்க.



11th Std Political Science Tamil Medium Vol-2_Chapter 15_updated.indd 212 29-09-2018 12:45:18

## மேற்கோள் நூல்கள்


1. Padmaja, R, Purushothaman, V.P (2000). Sanga Kaala Mannargalin Kaala Nilai. Volume 1. International institute of Tamil Studies: Chennai.
2. Pope .G.U , "Th irukkural: English translation and commentary", Kazhagam 2017 edition.
3. Rajaram.M, " I sing the glory of this Land: Translated verses of Bharathiyar", Rupa Publica- tions, Chennai, 2018.
4. Vasanthakumaran .P , " Th e godfather of Indian labour : M. Singaravelar" , Chennai : Poorn- ima Publishers, 2003.
5. Veeramani. K , " Th oughts of Periyar", DRAVIDAR KAZHAGAM PUBLICATIONS , chennai ,(2012),
6. Palanithurai. G, " Caste Politics and Society in Tamilnadu", South Asia Books (1 July 1994)
7. Purananoru….. See 'Purananooru, moolamum thelivum', Manimegalai prasuram, pg 82


## இணையதள வளங்கள்

- http://15hsactn15.blogspot.com/2017/07/the-sangam-age-society.html
- https://allmyearthlythoughts.wordpress.com/2017/06/02/avvaiyar-the-story-of-the- many-women-who-carried-that-name/
- http://vijeejournalist.com/2016/10/avvaiyar-the-diplomat/

# சொற்களஞ்சியம்



| | |
|---|---|
| ஒத்திவைப்பு | Adjournment |
| நிர்வாக அலகுகள் | Administrative units |
| உறுதிப்படுத்துதல் | Affirm |
| மாற்று வாக்கு | Alternative vote |
| சட்டத்திருத்தம் | Amendment |
| தொன்மையான | Ancient |
| முன்னுதாரணங்கள் | Antecedents |
| கட்சித் தாவல் தடைச்சட்டம் | Anti–Defection Law |
| முறையீடு | Appeal |
| உறுப்பு | Article |
| சபை | Assembly |
| சட்டமன்ற தேர்தல் | Assembly election |
| மதிப்பீட்டு ஆண்டு | Assessment year |
| சொத்துக்கள் | Assets |
| அமைப்பெதிர்வாதம் / அரசின்மைவாதம் | Anarchism |
| வாக்குச் சீட்டு | Ballot |
| கையூட்டு | Bribe |
| இடைத்தேர்தல் | By– election |
| முதலாளித்துவம் | Bourgeoisie |
| உயிர் முதன்மை சமத்துவம் | Biocentric Equality |
| வேட்பாளர் | Candidate |
| வாக்களித்தல்/தீர்மான வாக்கு | Cast vote |
| சாதி | Caste |
| உச்சவரம்பு | Ceiling |
| குடிமகன் | Citizen |
| நடத்தை விதிமுறைகள் | Code of conduct |
| சமூகம் | Community |
| போட்டி | Competition |
| தொகுதி | Constituency |
| அரசமைப்பு | Constitution |
| சமகால | Contemporary |
| பண்பாட்டுப் புரட்சி | Cultural Revolution |
| போட்டியாளர் | Contestant |
| குற்றவியல் வழக்கு | Criminal case |
| ஒட்டுமொத்த | Cumulative |
| சமுதாயவாதம் | Communitarianism |

| | |
|---|---|
| போட்டி | Contest |
| வரையறை | Delimitation |
| வரையறை ஆணையம் | Delimitation Commission |
| மக்களாட்சி | Democracy |
| சச்சரவுகள் | Disputes |
| தகுதியிழப்பு | Disqualification |
| வாழும் இடம் | Domicile |
| தகர்ப்பமைப்பு | Deconstruction |
| ஆழச்சூழலியல் | Deep Ecology |
| மக்களாட்சி அரசு | Deomcratic State |
| தேர்தல் பரப்புரை | Election campaign |
| தேர்தல் ஆணையம் | Election Commission |
| தேர்தல் நிதி | Election fund |
| சூழலிய பெண்ணியம் | Eco–Feminism |
| தேர்தல் எந்திரம் | Election machinery |
| தேர்தல் முடிவுகள் | Election result |
| தேர்தல் | Election |
| வாக்காளர் முறைமை | Electorate |
| இயற்றுதல் | Enact |
| செயலாட்சி/ஆட்சித்துறை | Executive |
| தேர்தலுக்குப் பிந்தைய கருத்துக்கணிப்பு | Exit poll |
| பிரிவினைவாதம் | Factionalism |
| வாக்குரிமை | Franchise |
| சுதந்திரமான மற்றும் நேர்மையான | Free and fair |
| பெண்ணியம் | Feminism |
| பாலினம் | Gender |
| பொதுத் தேர்தல் | General election |
| உலகமயமாக்கல் | Globalization |
| மேலாதிக்கம் | Hegemony |
| பாரபட்சமற்ற | Impartial |
| விதித்தல் | Impose |
| ஊக்கம் | Incentives |
| வருமான வரி | Income tax |
| சுதந்திரமான அமைப்பு | Independent body |

| | |
|---|---|
| சுயேச்சை வேட்பாளர் | Independent candidate |
| தகவல் | Information |
| புதுமை | Innovation |
| அடையாள அரசியல் | Identity Politics |
| கற்பனை சமூகங்கள் | Imagined Communities |
| தலைமுறைகள் இடையிலான நீதி | Inter Generational Justice |
| ஏகாதிபத்தியம் | Imperialism |
| கருவி மார்க்சிசம் | Instrumental Marxism |
| நீதித்துறை | Judiciary |
| அதிகார வரம்பு | Jurisdiction |
| சட்டமன்றம் | Legislature |
| கடன்கள் | Liabilities |
| சுதந்திரம் | Liberty |
| வரையறுக்கப்பட்ட வாக்கு | Limited vote |
| உள்ளாட்சி அரசாங்கம் | Local government |
| மக்களவை | Lok Sabha |
| தாராளவாதம் | Liberalism |
| பெரும்பான்மை | Majority |
| சிறுபான்மையினர் | Minorities |
| நகராட்சி | Municipality |
| சந்தை பொருளாதாரம் | Market Economy |
| வேட்புமனு | Nomination form |
| அறிவிப்பு | Notification |
| எதிர்மறை தாராளவாதம் | Negative Liberalism |
| இயற்கை உரிமைகள் | Natural Rights |
| நோக்கம் | Objective |
| அமைப்பு | Organisation |
| பஞ்சாயத்து | Panchayat |
| நாடாளுமன்றம் | Parliament |
| கட்சி சின்னம் | Party symbol |
| மனுக்கள் | Petitions |
| பன்மைத்துவம் | Plurality |
| கொள்கையை உருவாக்குபவர்கள் | Policy makers |
| கொள்கை | Policy |
| அரசியல் செல்வாக்கு | Political influence |
| அரசியல் கட்சி | Political party |

| | |
|---|---|
| அரசியல்வாதி | Politician |
| வாக்களிக்கும் நடைமுறை | Polling process |
| மக்கள் விருப்பம் | Popular will |
| பிரபலம் | Popularity |
| இந்திய குடியரசுத் தலைவர் | President of India |
| முன்னேற்றம் | Progress |
| பரப்புரை | Propaganda |
| விகிதாச்சார | Proportional |
| பதிலி/பிரதிநிதி | Proxy |
| தேர்தலியல் | Psephology |
| பொது நலம் | Public interest |
| பொதுப்பதவி | Public office |
| கட்சி அரசியல் | Party Politics |
| நாடாளுமன்ற முறை அரசாங்கம் | Parliamentary Form of Government |
| நாடாளுமன்ற நடைமுறைகள் | Parliamentary Procedures |
| உயர்குலத்தோர் | Patricians |
| நாட்டுப்பற்று | Patriotism |
| தனிநபர் வருமானம் | Per–Capita Income |
| தனிநபர் சுதந்திரம் | Personal Liberty |
| ஆளுமை | Personality |
| தனிமனித வழிபாடு | Personality Cult |
| தந்தை வழி மரபு | Paternalism |
| தந்தை வழி அரசு தோற்றக் கோட்பாடு | Patriarchal Theory of State |
| இயற்பியல் சட்டம் | Physical Law |
| திட்டமிடல் | Planning |
| சாதாரண குடிமக்கள் | Plebeians |
| பொது வாக்கெடுப்பிலான மக்களாட்சி | Plebiscitary Democracy |
| பன்மைவாதம் | Pluralism |
| பன்மைத் தலைமை | Plural Executive |
| பன்முக இறைமைக் கோட்பாடு | Pluralistic Theory of Sovereignty |
| அரசியல் புகலிடம் | Political Asylum |
| அரசியல் அதிகாரம் | Political Authority |
| அரசியல் மக்களாட்சி | Political Democracy |
| அரசியல் பொருளாதாரம் | Political Economy |
| அரசியல் சமத்துவம் | Political Equality |

| | |
|---|---|
| அரசியல் லட்சியம் | Political Ideology |
| அரசியல் கடப்பாடு | Political Obligation |
| அரசியல் கட்சிகள் | Political Parties |
| அரசியல் துருவமடைதல் | Political Polarization |
| அரசியல் வலிமை | Political Power |
| அரசியல் உரிமைகள் | Political Rights |
| அரசியல் அறிவியல் | Political Science |
| அரசியல் சுய நிர்ணயம் | Political Self-Determination |
| அரசியல் சமூகவியல் | Political Sociology |
| அரசியல் இறையாண்மை | Political Sovereignty |
| அரசியல் முறைமை | Political System |
| அரசியல் கோட்பாடு | Political Theory |
| அரசியல் | Politics |
| குழுவாட்சிமுறை | Polyarchy |
| மக்களின் துவக்க முறை | Popular Initiative |
| மக்களின் கருத்துக்கணிப்பு | Popular Referendum |
| மக்கள் இறையாண்மை | Popular Sovereignty |
| நேர்மறை சுதந்திரம் | Positive Liberty |
| புரட்சிக்குப் பிந்தைய நிலை | Post-Revolutionary Stage |
| பிந்தைய நடத்தையியல் (பின் தோன்றிய நடத்தையியல்) | Post-Behavioralism |
| குடியேற்றத்திற்குப் பிந்தைய அரசுகள் | Post-Colonial States |
| வறுமை | Poverty |
| புரட்சிக்கு முந்தைய நிலை | Pre-Revolutionary Stage |
| முகப்புரை | Preamble |
| குடியரசுத்தலைவர் முறை | Presidential System |
| குடியரசுத்தலைவர் முறை அரசாங்கம் | Presidential Form of Government |
| அழுத்தக் குழுக்கள் | Pressure Groups |
| தடுப்புக் காவல் | Preventive Detention |
| ஆரம்பநிலை பொதுவுடைமை | Primitive Communism |
| சலுகைகள் | Privileges |
| முன்னேற்றவாதம் | Progressivism |
| முதன்மையான | Prominent |

| | |
|---|---|
| பாதுகாப்பிலான மக்களாட்சி | Protective Democracy |
| நடைமுறைப்படுத்துதல் | Promulgation |
| உளவியல் | Psychology |
| பொதுக் கருத்து | Public Opinion |
| பொதுத்துறை | Public Sector |
| வாங்குந்திறன் சமநிலை | Purchasing Power Parity |
| பின் நவீனத்துவ பெண்ணியம் | Post-Modern Feminism |
| ஆணாதிக்கம் | Patriarchy |
| பின் காலனிய பெண்ணியம் | Post-Colonial Feminism |
| நேர்மறை உரிமைகள் | Positive Rights |
| பின் நவீனத்துவம் | Post-Modernism |
| தனிப்பட்டவாதம் | Particularism |
| ஆதியிலிருந்து | Primordial |
| பாட்டாளி வர்க்கம் | Proletariat |
| நேர்மறை தாராளவாதம் | Positive Liberalism |
| தத்துவ அரசின்மை வாதம் | Philosophical Anarchism |
| ஒதுக்கீடு | Quota |
| தரநிலை முறைகள் | Qualitative Methods |
| தகுதிநிலை முறைகள் | Quantitative Methods |
| அரை கூட்டாட்சி அரசு | Quasi-Federal State |
| நீதிமுறை சார்புடைய | Quasi-Judicial |
| மாநிலங்களவை | Rajya Sabha |
| அங்கீகாரம் | Recognition |
| சீர்திருத்தங்கள் | Reforms |
| வட்டார/பிராந்திய | Regional |
| ஒழுங்குபடுத்துதல் | Regulate |
| மதம் | Religion |
| பிரதிநிதித்துவம் | Representation |
| இடஒதுக்கீடு | Reservation |
| ஆதாரங்கள் | Resources |
| தேர்தல் நடத்தும் அதிகாரி | Returning officer |
| உரிமை | Right |
| இனப் பாகுபாடு | Racial Discrimination |



11th Std Political Science Tamil Medium Vol-2_Chapter 15_Aa_Glossary.indd 216 29-09-2018 12:44:01

| | |
|---|---|
| தீவிர மக்களாட்சி | Radical Democracy |
| மெய்யான இறையாண்மை | Real Sovereignty |
| மெய்யான விருப்பம் | Real Will |
| மெய்மைவாதம் | Realism |
| பகுத்தறிவு | Reason |
| திரும்ப அழைத்தல் முறை | Recall System |
| ஏற்பு | Recognition |
| மக்கள் ஒப்பம் | Referundum |
| வட்டாரக் கூட்டணிகள் | Regional Alliances |
| மத அடிப்படைவாதி | Religious Fundamentalist |
| மத சிறுபான்மையினர் | Religious Minorities |
| மறுமலர்ச்சி | Renaissance |
| பிரதிநிதி | Representative |
| பிரதிநிதித்துவ மக்களாட்சி | Representative Democracy |
| பிரதிநிதித்துவ அரசாங்கம் | Representative Government |
| குடியரசு | Republic |
| தலைகீழ் பாகுபாடு | Reverse Discrimination |
| பதவி விலகுதல் | Resignation |
| பொறுப்புடைமை | Responsibility |
| புரட்சி | Revolution |
| சொல்லாட்சி | Rhetoric |
| சுரண்டலுக்கு எதிரான உரிமை | Right against Exploitation |
| சமத்துவ உரிமை | Right to Equality |
| மதச்சுதந்திரத்திற்கான உரிமை | Right to Freedom of Religion |
| சுதந்திர உரிமை | Right to Freedom |
| உயிர்வாழும் உரிமை | Right to Life |
| தனியுரிமை / அந்தரங்க உரிமை | Right to Privacy |
| வலதுசாரி லட்சியவாதம் | Rightist Ideology |
| நெகிழா அரசமைப்பு / இறுக்கமான அரசமைப்பு | Rigid Constitution |
| சட்டத்தின் ஆட்சி | Rule of Law |
| ஆளும் வர்க்கம் | Ruling Class |
| தீவிர பெண்ணியம் | Radical Feminism |
| அட்டவணை | Schedule |
| பட்டியல் இனத்தவர் | Scheduled castes |
| பழங்குடியினர் | Scheduled tribes |

| | |
|---|---|
| இடங்கள் | Seats |
| பிணைத்தொகை | Security deposit |
| சமூக செயற்பாட்டாளர் | Social activist |
| மாநில சட்டமன்றம் | State legislature |
| துணைக்கண்டம் | Sub-continent |
| கண்காணிப்பு | Superintendence |
| சத்தியாகிரகம் | Satyagraha |
| பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியினர் | Scheduled Castes and Scheduled Tribes |
| பிரிவினைவாதம் | Secessionism |
| மதச்சார்பற்ற அரசு | Secular State |
| மதச்சார்பின்மை | Secularism |
| சுயாட்சி | Self-Rule |
| இறையியல் கல்லூரி | Seminary |
| மூத்த குடிக்கள் | Senior Citizens |
| அதிகாரப் பிரிவினை | Separation of Powers |
| சேவைத் துறை | Service Sector |
| கூட்டத் தொடர்கள் | Sessions |
| சாதாரண பெரும்பான்மை | Simple Majority |
| ஒற்றைக் குடியுரிமை | Single Citizenship |
| அடிமைமுறை | Slavery |
| பரப்பெல்லை | Scope |
| சமூக செயல்முனைவு | Social Activism |
| சமூக தன்னாட்சி | Social Autonomy |
| சமூகத்தின் வலிந்த மாற்றம் | Social Coercion |
| சமூக ஒப்பந்தம் | Social Contract |
| சமூக ஒப்பந்தக் கோட்பாடு | Social Contract Theory |
| சமூக ஒப்பந்தவியலாளர்கள் | Social Contractualists |
| சமூக மக்களாட்சி | Social Democracy |
| சமூக சமத்துவம் | Social Equality |
| சமூக நீதி | Social Justice |
| சமூக ஊடகங்கள் | Social Media |
| சமூக இயக்கங்கள் | Social Movements |
| சமூக நிலை | Social Status |
| சமூக முறைமை | Social System |
| சமதர்மவாதம் | Socialism |
| சமதர்மத்திலான மக்களாட்சி | Socialistic Democracy |



11th Std Political Science Tamil Medium Vol-2_Chapter 15_Aa_Glossary.indd 217 29-09-2018 12:44:01

| | |
|---|---|
| சமுதாயம் | Society |
| மென்மை அரசு | Soft State |
| இறையாண்மை | Sovereignty |
| சபாநாயகர் | Speaker |
| உத்வேகம் | Spirit |
| அரசியல் சார்ந்த அரசுப் பதவி முறை | Spoils System |
| நிலைக்குழு | Standing Committee |
| மாநில சட்டப்பேரவை | State Legislative Assembly |
| கட்டமைப்பு | Structure |
| கட்டமைப்பு செயல்பாட்டு அணுகுமுறை | Structural Functional Approach |
| இயற்கை நிலை | State of Nature |
| அரசற்றநிலை | Statelessness |
| அரசு | State |
| வாக்குரிமை | Suffrage |
| நிலையான வளர்ச்சி | Sustainable Development |
| உச்சி மாநாடு | Summit |
| மேற்பார்வை | Supervision |
| மேற்பார்வையாளர் | Supervisor |
| வல்லரசு நாடுகள் | Super Powers |
| உயர்வுத் தன்மை | Superiority |
| முக்கூற்று ஏரணம் | Syllogisms |
| தொழிற்சங்கவாதிகள் | Syndicalists |
| முறைமை அணுகுமுறை | System Approach |
| தர்க்க முறை | System of Logic |
| மேலோட்டமான சூழலியல் | Shallow Ecology |
| சீனமயமாக்கல் | Sinification |
| பிரிவினைவாதம் | Secessionism |
| நிலையான முன்னேற்றம் | Sustainable Development |
| சமூக நல அரசு | Social Democratic State |
| கட்டமைப்பிலான மார்க்சிசம் | Structural Marxism |
| பதவிக்காலம் | Tenure |
| நிலப்பரப்பு | Territory |
| மாறுதல் | Transform |
| வெளிப்படைத்தன்மை | Transparency |
| நன்னெறிக்குப் புறம்பான | Unethical |
| நியாயமற்ற | Unfair |
| நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பு | Urban local body |
| கற்பனையிலான சமதர்மம் | Utopian Socialism |
| பிரபஞ்சவாதம் | Universalism |
| இந்திய குடியரசு துணைத் தலைவர் | Vice President of India |
| விதான் சபை (சட்டமன்ற கீழவை) | Vidhan Sabha |
| வாக்காளர் பட்டியல் | Voters₹ list |
| வாக்குகள் | Votes |
| நகரின் உட்பிரிவு (வார்டு) / குடும்பு | Ward |
| நலிவுற்ற பிரிவினர் | Weaker sections |
| திரும்பப்பெறுதல் | Withdrawal |
| சான்றாய்வு / நெறிப்படுத்தும் நீதிப்பேராணை | Writ of Certiorari |
| ஆட்கொணர்வு நீதிப்பேராணை | Writ of Habeas Corpus |
| கட்டளை / செயலுறுத்தும் நீதிப்பேராணை | Writ of Mandamus |
| தடை நீதிப்பேராணை | Write of Prohibition |
| உரிமையேது வினா நீதிப்பேராணை | Writ of Quo-Warranto |
| எழுதப்பட்ட அரசமைப்பு | Written Constitution |
| வெள்ளை மனிதனின் சுமை-கடமை | White Man Burden |

सत्यमेव जयते

# இந்திய அரசமைப்பு

இந்திய மக்களாகிய நாம் உறுதியான ஒருமனதான தீர்மானத்துடன் இந்தியாவை இறையாண்மை மிக்க, மக்களாட்சிக் குடியரசாக உருவாக்குகிறோம். மேலும் இந்தியாவின் அனைத்து குடிமக்களுக்குமான வகையில் சமூக, பொருளாதார மற்றும் அரசியல் நீதியையும், சுதந்திரமான முறையில், வெளிப்பாடு, நம்பிக்கை, விசுவாசம் மற்றும் வழிபாடு, ஆகியவற்றுடன் தகுதி மற்றும் வாய்ப்புகளில் அனைவருக்கும் சமத்துவம், மக்களிடையே சகோதரத்துவம் மற்றும் தனிமனித மாண்பையும் வளர்ப்பதுடன் நாட்டின் ஒற்றுமையை ஓங்கச் செய்வதற்கு அரசமைப்பு நிர்ணய சபையில் 1949, நவம்பர் 26-ம் நாளில் ஏற்றுக் கொண்டு இயற்றி இந்த அரசமைப்பினை எங்களுக்காக நாங்களே அளிக்கின்றோம்.

11th Std Political Science Tamil Medium Vol-2_Chapter 15_Acknowledgement_updated.indd 217 29-09-2018 12:44:42

## அரசியல் அறிவியல் – 11ஆம் வகுப்பு

### நூலாசியர்களின் பட்டியல்


பாட நூல் வல்லுநர்

**Dr. R. ராமு மணிவண்ணன்,** HOD,
அரசியல் மற்றும் பொதுநிர்வாகத்துறை,
சென்னை பல்கலைக்கழகம், சென்னை.

மேலாய்வாளர்

**Dr. A. கருணானந்தம்,** HOD (ஓய்வு),
வரலாற்று துறை, விவேகானந்தா கல்லூரி, சென்னை.

நூலாசிரியர்கள்

**Dr. R. ராமு மணிவண்ணன்,** HOD,
அரசியல் மற்றும் பொதுநிர்வாகத்துறை,
சென்னை பல்கலைக்கழகம், சென்னை.

**Dr. P. கனகராஜ்,** HOD,
அரசியில் அறிவியல் துறை,
அரசு கலைக்கல்லூரி, கோயம்புத்தூர்

**Dr. S. ஜமீலா** இணைப்பேராசிரியர்,
அரசியல் அறிவியல் துறை, J.B.A.S மகளிர் கல்லூரி, சென்னை.

**Dr. M. கென்னடி ஸ்டீபன்சன் வசீகரன்,** இணைப்பேராசிரியர்,
அரசியல் மற்றும் பொதுநிர்வாகத்துறை,
சென்னை பல்கலைக்கழகம், சென்னை.

**Dr. R. திருநாவுக்கரசு,** உதவிப்பேராசிரியர்,
சமூகவியல் துறை ஹைட்ரபாத் பல்கலைக்கழகம், ஹைதரபாத்.

**Dr. P. சக்திவேல்,** இணைப்பேராசிரியர்,
அரசியல் அறிவியல் மற்றும் பொது நிர்வாகத்துறை,
அண்ணாமலைப் பல்கலைக்கழகம், சிதம்பரம்.

**Dr. K. கோட்டைராஜன்,** உதவிப்பேராசிரியர்,
அரசியல் அறிவியல் துறை, பெரியார் அரசு கலைக் கல்லூரி,கடலூர்.

**Dr. K. செந்தில்குமார்,** உதவிப்பேராசிரியர்,
அரசியல் அறிவியல் மற்றும் பொது நிர்வாகத்துறை,
அண்ணாமலைப் பல்கலைக்கழகம், சிதம்பரம்.

**Dr. L. அமிர்தா லெனின்,** உதவிப்பேராசிரியர்,
தமிழ் துறை, லயோலா கல்லூரி, சென்னை.

**Dr. T. கிருஷ்ணகுமார்,** இணைப்பேராசிரியர்,
அரசியல் அறிவியல் துறை, மாநிலக் கல்லூரி, சென்னை.

**Dr. R. மோகன்,** பேராசிரியர் (ஓய்வு),
மொழியியல் துறை, மதுரை காமராஜர் பல்கலைக்கழகம், மதுரை.

**Dr. S. பார்த்திபன்,** உதவிப்பேராசிரியர்,
அரசியல் மற்றும் பொதுநிர்வாகத்துறை,
சென்னை பல்கலைக்கழகம், சென்னை.

**A. அப்பனசாமி** எழுத்தாளர்

**P. K. சரவணன்** எழுத்தாளர்

**Dr. ராதா லக்ஷ்மணன்** ஆராய்ச்சியாளர்,
MCC, சென்னை.

### கலை மற்றும் வடிவமைப்புக் குழு

**வரைபடம்**

சு.வெ.கோகுல கிருஷ்ணன்
R.முத்துகுமார்

வேல்முருகன், பிரமோத்
அரசு கவின் கலைக் கல்லூரி மாணவர்கள், சென்னை

**வடிவமைப்பு**

V2 இனோவேஷன்ஸ், சென்னை

**In-House**

ஜெரால்டு வில்சன்,
ப. அருண் காமராஜ்
ஏசு ரத்தினம்,
காமாட்சி பாலன் ஆறுமுகம்

**அட்டைபடம்**
கதிர் ஆறுமுகம்

**ஒருங்கிணைப்பாளர்**
ரமேஷ் முனிசாமி

தமிழ் மொழிபெயர்ப்பாளர்கள்

**Dr. P. கனகராஜ்,** HOD,
அரசியில் அறிவியல் துறை,
அரசு கலைக்கல்லூரி, கோயம்புத்தூர்

**Dr. K. கோட்டைராஜன்,** உதவிப்பேராசிரியர்,
அரசியல் அறிவியல் துறை, பெரியார் அரசு கலைக் கல்லூரி,கடலூர்.

**Dr. S. பாலமுருகன்,** உதவிப்பேராசிரியர்,
அரசியல் அறிவியல் துறை, பெரியார் அரசு கலைக் கல்லூரி, கடலூர் .

**Dr. J. சுப்ரமணியன்,** உதவிப்பேராசிரியர்,
அரசியல் அறிவியல் மற்றும் பொது நிர்வாகத்துறை,
அண்ணாமலைப் பல்கலைக்கழகம், சிதம்பரம்..

**Dr. J. ஆரியபடைக் கடந்த நெடுஞ்செழியன்,** உதவிப்பேராசிரியர்,
பொது நிர்வாகத்துறை,
அரசு கலைக்கல்லூரி, கோயம்புத்தூர்

**Dr. S. சரவணகுமார்,** உதவிப்பேராசிரியர்,
அரசியில் அறிவியல் துறை,
கோபி அரசு கலைக்கல்லூரி, ஈரோடு

**Dr. V. வீரமுத்து,** உதவிப்பேராசிரியர்,
அரசியில் அறிவியல் துறை,
அரசு கலைக்கல்லூரி, சேலம்

**M. மலரவன்,** ஆராய்ச்சியாளர்,
MCC, சென்னை.

ICT ஒருங்கிணைப்பாளர்

**Dr. A. அருணாச்சலம்,** முதல்வர்,
சின்மயா வித்யாலய P.A.C. இராமாசாமி ராஜா பதின்ம மேல்நிலைப்பள்ளி,
ராஜபாளையம்.

ஒருங்கிணைப்பாளர்

**R. மலர்கொடி,** உதவிப்பேராசிரியர்
SCERT. சென்னை

விரைவுக் குறியீடு மேலாண்மைக் குழு

**இரா. ஜெகநாதன்**
**ந. ஜெகன்**
**ஜே.எப். பால் எட்வின் ராய்**



இந்நூல் 80 ஜி.எஸ்.எம். எலிகண்ட் மேப்லித்தோ தாளில் அச்சிடப்பட்டுள்ளது.
ஆப்செட் முறையில் அச்சிட்டோர்: